ஆசிரியர் தின சிறப்பிதழ்

# நிழலி

2017



வலப்பனை அதிபர் ஆசிரியர் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலி

## ஆசிரியர் தின சிறப்பு மலர்
## 2017

## இதழ் - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் குறிப்பு


| | | |
|---|---|---|
| இதழின் பெயர் | : | நிழலி |
| வகை | : | சஞ்சிகை வகை |
| அளவு | : | 11 புள்ளி |
| பக்கங்களின் எண்ணிக்கை | : | 162 |
| வெளியீடு | : | அதிபர் ஆசிரியர் சமூகம்<br>வலப்பனை |
| பதிப்பாண்டு | : | 2017 |
| இதழாக்கம் | : | இதழாக்கக் குழு |
| அச்சுப் பதிப்பு | : | அம்ருத்தா பதிப்பகம் இராகலை |
| பதிப்புரிமை | : | இதழாக்கக் குழு |
| கணனி வடிவமைப்பு | : | செல்வநாயகம் ரதன்மகராஜ் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



நெஞ்சத்தில்
கொஞ்சமும் வஞ்சமின்றி
நாடியோர்க்கு
நற்பணியீந்து
நேசக் கரம் நீட்டி
நிழலீந்த
நிஜப் பிறவியவர்

நாட்டம்
கொண்டுழைத்து
தன்
நடிப்பாலே
நலிந்தார்தமை
ஒருசேர்த்து
கூட்டம்
பேசுந்தன் ஆற்றலால்
செழுமைமிகு
நகைச்சுவை பேசி

விமர்சன
பார்வையாலே
நிதர்சன
எழுத்தடுக்கி
நேர்த்தியாய்
செய் பணிக்கு
நகும்நல்
சான்றன்றைய
**"வீரகேசரி"**

அவரால்
வாழ்ந்தார் பலர்
அவர்
பெயருரைப்போரும்
உளர்

எடுத்த பிறவிக்கு
தொடுத்த பணியாலே
பிடித்தார் இடம்
எம் நெஞ்சத்துள்ளே
**"கெனடி"**
என்னும் பள்ளியிலே
கல்வி தந்த
இம் மண்ணின்
மைந்தன்

அமரர்
டேவிட் ரெங்கையாவின்
செல்வர்

**"டீ.ஆர்.எஸ்."எனும்**
**புனைப்பெயருக்கு**
அடையானவர்
எழுத்தாளர்
எங்கள் மனங்கொள்
செம்மல்
**"டீ.ஆர்"**
**செல்வராஜா**
ஐயா
அவர்கட்கு
இந்
**நிழலி**
சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தற்காலத்தின் அறிவு நிலைப்பட்ட உயர் இலக்கு நோக்கி நகர்ந்து செல்லும் நிலையில் பூகோள சமூகத்தின் தேவைகளுக்கான உள்ளீட்டை கல்வியே வழங்கும் மூல ஊற்றாய் உள்ளது. கல்வியின் நன் விளைபேறுகளை சமூகம் நுகர்ந்திட அதற்கான தூண்டல் இயக்க விசையின் நாண் ஆசிரியர் சமூகத்தின் செவ்வை கரங்களால் ஏந்திப்பிடிக்கப் பட்டிருக்கின்றது. வலப்பனை அதிபர், ஆசிரியர் சமூகம் தனதும் தன் சமூகம் தழுவிய கல்வி செயற்பாடுகளை விஸ்தரிப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்ற ஓர் அமைப்பாகும். அவ்வகையில் "நிழலி" ஒரு கல்விசார் சஞ்சிகையாக படைப்பாக்கம் பெற்றிருப்பது மகிழ்வுக்குரிய விடயமாகும்.

தன் சமூகத்தின் தேவைகளுக்கும், இயக்கவியலுக்கும் இசைவான வழித் தடத்ததை நோக்கி இயங்கும் பாங்கு கொண்ட படைப்பாக "நிழலி" வெளியீடு பெறுகின்றது. கல்வியின் சமகால செல் நெறிகள் போக்குகளின் விவரணங்களை, சமூக, பண்பாட்டு களங்களின் பெறுமானப் பதிவாக "நிழலி" பதிவிட முயன்றுள்ளது.

2017ம் ஆண்டில் வலப்பனை அதிபர், ஆசிரியர் சமூகத்தின் கைகோர்ப்புடன் இவ்வாண்டிற்கான ஆசிரியர் தின சிறப்பு இதழாய் "நிழலி" உங்கள் முன் மடல் திறக்கின்றது.

சுய கருத்துக்களை சமூக பொறுப்பு நிலை நின்று ஏற்கும் நியமம் கொண்டு அறிவு வெளியின் உள்ளடக்கத்தின் கருத்தேற்றங்களை படைப்பாளர்களின் சுய கருத்துக்களாக ஏற்றுக் கொண்டு "நிழலி" ஆக்கத் தொகுப்பினை அச்சேற்றுகை புரிந்திருக்கின்றது. இந் நிழலி தாங்கி வரும் அனைத்து படைப்புக்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்பாளிகளாவார்.

நழலியின் அச்சேற்றத்திற்கு துணை நின்ற வாழ்துரைகளை வழங்கிய கல்விமான்கள், கல்வியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், விளம்பரங்களை தந்துதவிய வர்த்தக பிரமுகர்கள், அதேபோன்று சமூக பங்கேற்பு செய்த வலப்பனை சமூகத்தினர் மற்றும் தொழில் நுட்ப துணை புரிந்தோர். அச்சேற்றல் பணி புரிந்து "நிழலி" வெளியீடு நிகழ உதவிய **அம்ருத்தா** அச்சகத்திற்கும் நன்றி பகிர்தலோடு. ":நிழலி" தன் அகம் அழைக்கின்றது.

**நன்றிகளுடன்**
**இதழாக்க குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் பார்வையும் பதிவும்.

நிகழ்ந்து வந்த யுகமாறுதல்களில் சமூகத்தின் இயக்கவிசையாக பல்வேறு சக்திகள் அவ்வக்காலங்களில் கோலோச்சி வந்துள்ளன. இதனை வரலாறு தெளிவாகக் காட்டுகின்றது. இதன் வழியில் 19ஆம் நூற்றாண்டுச் சமூகத்தை "செல்வமே" ஆட்சி செய்தது. 20ஆம் நூற்றாண்டில் இதன் இடத்தினை "கணினி" பிடித்துக் கொண்டது. 21ஆம் நூற்றாணடில் இந்த இடத்தினை "அறிவு" ஆக்கிரமித்து கொண்டது. ஆக அறிவினைப் பெற்றுக்கொள்ளல், அறிவினைப் பாதுகாத்தல், அறிவினைப் பிரயோகித்தல் என்பன 21 ஆம் நூற்றாண்டின் தாரகமந்திரமாகும்.

இதன் வழியில் இன்றைய சமூகம் அறிவார்ந்த சமூகமாக நகர வேண்டியதன் தேவை இன்று உணரப்பட்டுள்ளது. அந்த வகையில் அறிவு வெடிப்புகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் இவ் இருபத்தோராம் நூற்றாண்டின் எழுகோலத்தில் மையப் புள்ளிகளாகிய எழுவினாக்களுக்கு விடைகாணும் பரந்த நோக்கு விசையோடு மேற் கிளர்ந்து முகிழ்கின்ற நேரத்தில் அறிவுக்கடலில் மூழ்கி முத்தெடுக்கும் சிறு முயற்சியாக **நிழலி** யை உங்கள் கைகளில் தவழவிடுவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.

எங்கள் சுவாசமாய், வாழ்வின் ஒளியாய் எம்மோடு சுவாசிக்கப்பட்டு நேசிக்கப்பட்ட **"நிழலி"** இன்று 5வது பிரசவமாக எம்முன் பிரசவித்து தவழ்ந்து கொண்டிருக்கின்றது இது வலப்பனை ஹங்குராங்கெத்த கல்வியியலாளர் ஒன்றியத்தின் அடையாளமாக திகழ்கின்றது. என்பதில் நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும். இந்நூலை வெளியிடுவதற்கு ஊக்கம் அளித்த அனைவருக்கும் மற்றும் ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கிய அனைவருக்கும் எனது இதயங் கனிந்த நன்றிகள். அத்தோடு இம் முறை ஆசிரியர் தின நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு முன் நின்று உழைத்த அதிபர் ஒன்றியம் மற்றும் வலப்பனை சமூகம் சார் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

மேலும் இவ் இதழுக்கு வாழ்த்துச் செய்திகளை வழங்கிய பேராசிரியர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்த்திய நன்றிகள். அத்துடன் படைப்புகளை தந்து உதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வியியலாளர்கள், அனைவருக்கும் எனது உள்ளம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன். அத்துடன் உரிய வேளைகளில் ஆக்கங்களைத் தந்துதவிய அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் இந்நூலை செவ்வை பார்த்து உதவிய நண்பர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு இந்நூலை அழகுற அச்சேற்றிய **அம்ருத்தா** பதிப்பகத்திற்கும் எனது நன்றிகளை தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

நன்றி,
வணக்கம்.

**இரா. விஜயகுமார்.**
**இதழாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Wishes by
## Zonal Director of Education

It is great pleasure to wish our Zonal Teachers in this "Teachers' Day". I wish you all the best to do the teaching profession successfully. You all worked hard and dedicated to promote the educational standards in the zone. So it is my heartfelt thanks for your support and co-operation to uplift the Zonal Result.

I expect the same kind of noble service from you to educate Walapane Children in future too. Once again I feel very happy to wish you to have energetic and enthusiastic life to serve our students.

Wish you a very happy Teachers' Day.

**D.M.S. Karunarathna**
**Zonal Director of Education**
**Walapane.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

வலப்பனை அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து வெளியிடும் **"நிழலி"** என்ற சஞ்சிகை தன் ஐந்தாவது இதழாக வெளியீடு பெறுவது பாராட்டதக்கதொன்றாகும். அவ்வகையில் இச் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

இன்று உலகலாவிய ரீதியில் ஆசிரியர் தினம் பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. அவற்றுள் நான் குறிப்பிட்டு கூற விரும்பும் காரணங்கள் இரண்டை இங்கு குறிப்பிடலாம் என எண்ணுகின்றேன். அதில் ஒன்று இன்று கல்வி உலக அபிவிருத்திக்கு எத்தனை பாரிய பங்கு வகித்துள்ளது என்பதும் அதே போன்று. அது தனி மனிதனதும், சமூகத்தினதும் மேம்பாட்டிற்கும் அவசியமான பல செயன்முறைகளை உள்ளடக்கிய வகையிலானது என்பதனையும் இன்று சகலரும் ஏற்றுக் கொள்கின்றனர். இன்று கல்வியை யார் வழங்குகின்றார்கள்? யார் போதிக்கின்றார்கள்? என எண்ணுகையில் இணைய வழி மூலக் கல்வி பற்றியும் குறிப்பிட நேரிடுகின்றது. ஆனால் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் ஆசிரியர்களால் ஊட்டப்பட்டு வருகின்ற கல்வி எவ்வளவு முக்கியமானதாக இருந்துள்ளது. என்பதினை நாம் இன்று புரிந்து கொண்டிருக்கின்றோம்.

ஆசிரியர்கள் எத்தகைய பணியைப் புரிகின்றார்கள்? அது வெறுமனே கல்விப் பணி என்ற கட்டத்தில் சிறைபடுத்திட முடியாத ஒன்றாகும். அதனை தேசிய அபிவிருத்திப் பணி எனக் கூறுவதே முறையாகும். ஆனால் இத்தனை உயரிய பணியினை தற்காலத்தில் மாணவர் உலகமும், சமூகமும் எந்தளவு உள்வாங்கிக் கொண்டுள்ளனர் என்பது ஒரு கேள்வியே. சமூகம் ஆசிரியர்களின் இவ்வுயரிய பணியின் பெறுமானத்தை புரிந்து அதற்கான கௌரவத்தை வழங்குதல் வேண்டும் என்பதே என்னுள்ளான எதிர்பார்ப்பாகும். ஆசிரியப் பணியின் முக்கியத்துவத்தை அதன் பெறுமானத்தை சமூகமும் மாணவர் உலகும் உணர முற்படும் நோக்கில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட வேண்டும். ஆசிரியர்கள் தாமாகவும் ஆசிரியர் தினத்தை கொண்டாடுகின்றனர். அதனிலும் அது மாணாக்கர்களும் சமூகமுமாக இணைந்து ஆசிரியப் பணியின் பெருமை உணர்ந்து கொண்டாடுவதே வேண்டப்படுவதாகும். பாடசாலையை சார்ந்துள்ள சமூகம் ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளமையை வெளிக்காட்ட தமது பங்கேற்பை இது போன்ற ஆசிரிய தினத்தில் வெளிப்படுத்த விழைவதும் வேண்டப்படும் மற்றொரு நிகழ்வாகும்.

தற்கால இலங்கையின் அநேக கல்விக் குறிகாட்டிகள் சில வளர்முக நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்ச்சியான புள்ளி சார் பெறுமானங்களை வெளிக்காட்டி நிற்கின்றன. இத்தகைய பெருமிதங்களுக்கான காரணங்களுள் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிகு சேவைகளும் பிரதான காரணம் என்பதனை நினைவில் கொள்வது இத்தினத்தில் அவசியமானதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலப்பனை வலய அதிபர், ஆசிரியர் சமூகத்தின் இணை கூடலில் மேற்கொள்ளும் இவ்விழா சிறப்பு பெற நான் மனதார வாழ்த்துகின்றேன். அத்தோடு **"நிழலி"** தன் தொடர்ச்சியான பிரவேசத்தினை ஆசிரியர் தினம் தோறும் நிகழ்த்த வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றிகள்

**சோ.சந்திரசேகரம்**
**ஓய்வு நிலை பேராசிரியர்**
**கொழும்பு பல்கலைக்கழகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராசிரியர். மா. கருணாநிதி அவர்களின் வாழ்த்துச் செய்தி

**"நிழலி"** என்னும் ஆசிரியர் வாண்மை விருத்தியை இலக்காகக் கொண்ட இத் தொடரின் 5வது சஞ்சிகைக்கு வாழ்த்து செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்வடைகின்றேன். உலகலாவிய ரீதியிலும் இலங்கையிலும் ஏற்பட்டுவரும் கல்வியில் சமகால செல்நெறிகளை ஆசிரியர்கள் அறிந்திருப்பது அத்தியாவசியமானது. கல்வி முறைமையில் அறிமுகமாகிவரும் புதிய விடயங்கள் பற்றி அறிவும், விளக்கமும் உடையவர்களாக ஆசிரியர்கள் செயலாற்றும் போதுதான் பாடசாலைகள் வெற்றிகரமான நிறுவனங்களாக மாறுகின்றன. நிறைந்துள்ள ஆரம்ப மற்றும் இடைநிலை கல்வியில் தராதர மேம்பாடு, சமவாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் நியாயத்தன்மை மிக்க வகையில் வளங்களை பகிர்தல் என்ற வகையில் கொள்கைகள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் போது அவற்றிக்கு ஆசிரியர்கள் ஆயத்தமாதல் வேண்டும்.

பல்வேறு தரப்பினராலும் வெளியிடப்படும் மாதாந்த மற்றும் வருடாந்த சஞ்சிகைகள் இந்நோக்கில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது **"நிழலி"** சஞ்சிகையும் இத்தகைய நோக்கோடு வழித்தடம் பதித்து ஆசிரியர்களின் செயற்பாட்டிற்கு மெருகூட்டுதல் சிறப்பானதாக அமைந்துள்ளது. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வெளியிடப்படும் இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கும் அதற்கு உழைக்கும் மலர் வெளியீட்டுக் குழுவிற்கும் எனது மனமார்நத வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வணக்கம்

**மா. கருணாநிதி**
**ஓய்வு நிலை பேராசிரியர்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பேராசிரியர் மா.செல்வராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி

வலப்பனை கல்வியியலாளர்கள் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் "நிழலி" எனும் இதழுக்கு ஆசிச் செய்தியொன்றினை வழங்குவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன். தேசிய கல்வி நிறுவகத்தின் பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் உள்ளகத் திறன் விருத்தித் திட்டங்களின் மூலமாக மலையக கல்விக்கு நான் ஆற்றிய பங்களிப்பிற்கு அறுவடையை இப்போது நான் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

சென்ற ஆண்டு கௌரவ அமைச்சர் திரு மனோகணேசன் அவர்கள் மட்/ சிவானந்தா வித்தியாலயத்திற்கு வருகை தந்திருந்த பொழுது மலையக மக்களின் கலை, கலாசார பண்பாடு என்பவற்றை பேணுவதற்கு அங்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும். என்பதை அவரிடம் கூறியபொழுது அவர் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டார். மலையகம் கல்விமான்களையும், பேராசிரியர்களையும் எமக்களித்து எமது கல்வியை உயர்த்தியுள்ளது. இந்த வகையில் வரலாற்று சிறப்பு மிக்க நுவரெலியாவில் முதற் கட்டமாக ஒரு பல்கலைக்கழக கல்லூரியை நிறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். மலையக அரசியல் தலைவர்கள் கல்வியில் காட்டும் ஆர்வத்தில் ஓர் உயர் முயற்சியாக இப் பல்கலைக்கழக கல்லூரியை தாபிப்பது எமது எதிர்கால சந்ததிக்கு அவசியமான ஒன்றாகும்.

எனது மாணவன் திரு. இரா. விஜயகுமார் யாழ்ப்பாண பல்கலைகழத்தில் என்னிடம் கல்வி பயின்றவர். கல்வி ஆய்வு செயற்பாடுகளில் நாட்டம் மிகுந்த மாணவர் ஆவார். இவர் இதழாசிரியராகவிருந்து **"நிழலி"** இதழாக்கம் பெறுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

"நிழலி" சிறப்பாக வெளிவரவும், அதன் மூலம் மலையக கல்விச் சிந்தனை மலர்ச்சி பெறவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**மா.செல்வராஜா**
**ஓய்வு நிலை பேராசிரியர்**
**கிழக்கு பல்கலைக்கழகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

வலப்பனைக் கல்வி வலயத்தில் கடமையாற்றுகின்ற, கடமையாற்றிய அனைத்து ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் எனது ஆசிரிய தின நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந் நிகழ்வினை முன்னிறுத்தி வெளியிடப்படுகின்ற **"நிழலி"** நூலானது வலப்பனை வலயத்தின் அடையாளமாகத் திகழ்கின்றது என்பதை நினைக்கும் போது இம்மண்ணின் மைந்தன் என்ற வகையில் பெருமை அடைகின்றேன். எனவே தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்த இவ் இதழின் ஐந்தாவது இதழுக்கும், அதனைச் சிறப்பாக வடிவமைக்க உழைக்கும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க.பொ.த(சா/த) பெறுபேற்றில் 2016 ஆம் ஆண்டு முதன் முறையாக நுவரெலியா மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டோம். மாகாண மட்டத்தில் 6 வது இடத்தையும் தேசிய ரீதியில் 55 வது இடத்தையும் பெற்றுக் கொண்டோம். இதற்கு அர்ப்பணிப்போடு கடமையாற்றிய ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்தும் வலயத்தின் கல்வித்தரத்தை அதிகரிக்க ஒன்றாகப் பாடுபடுவோம்.

இதே போன்று எமது வலயத்தின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் நலனுக்கும் பாடுபடும் சகல ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி போன்ற துறைகளில் கற்பிக்கும் அனைவரினதும் பணியானது இன்று வலப்பனையினை பெயர்கூறும் வலயமாக மாற்றியுள்ளது. ஆகவே இதற்கு உழைத்த, உழைத்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றேன்.

நன்றி

**வே.யோகராஜா**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)**
**வலயக் கல்விப் பணிமனை**
**வலப்பனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதவிக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை

மனித சமூகத்தின் அறிவுக்கான விடியலை ஆண்டாண்டு காலமாக அகிலத்தில் ஏற்படுத்தும் அற்புதமான பணியை மேற்கொள்ளும் ஆசிரிய சமுகத்திற்கு வலப்பனை ஆசிரிய சமுகத்தினர் ஆசிரிய தின நிகழ்வின் மூலம் அதி சிறந்த கௌரவத்தினை வழங்கி வருவது அப்பணியின் சிறப்பினை மேலும் அர்த்தமுடையதாக்குகின்றது.

மேலும் உலக அளவில் உயர்ந்த கௌரவத்தைப் பெற்றிருக்கும் ஆசிரிய பணியானது ஆத்மார்த்தமான ரீதியில் அப்பணியை மேற்கொள்பவர்களால் செயலுருவம் பெறுகின்றபோதுதான் அது முழுமைப்படுத்தப்படுகின்றது. அத்தகைய ஆசிரியப் பெருந்தகையினரே ஒவ்வொருவரின் மனதிலும் அவர்களது ஆயுள் உள்ளவரை வாழ்ந்துகொண்டிருப்பார்கள். இத்தகைய சிறப்புப் பணியை மேற்கொள்ளும் எமது ஆசிரியர்களால் ஆசிரியத்துவத்தின் சிறப்பினை வெளிப்படுத்தும் இவ்வாசிரியர் தின நிகழ்வுகளில் **"நிழலி"** எனும் இதழொன்றையும் வருடா வருடம் பிரசவித்து வருவதும் இத்தின நிகழ்வுக்கும் நிகழ்வாளர்களுக்கும் பெருமை சேர்க்கும் விடயமாக அமைகின்றது.

எனவே இத்தகைய சிறப்பு பொருந்திய இந்நிகழ்வுக்கும் இதன்மூலம் வெளிவரும் நிழலிக்கும் ஆசி தெரிவிப்பதிலும், அதே பணியை சுவாசமாக எண்ணி நேசிக்கின்றவன் எனும் ரீதியிலும் பெருமைப்படுவதுடன் இவ்வனைத்து முயற்சிகளுக்கும் எல்லாம் வல்ல இறைத்துணை நிற்கவேண்டியும் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வண்ணம்

**கந்தையா-காந்தரூபன்**
**உதவிக் கல்விப்பணிப்பாளர்**
**வலயக் கல்விப் பணிமனை**
**வலப்பனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபர் ஒன்றிய தலைவரின் வாழ்த்துச் செய்தி

விளைதிறன் மிக்க பாடசாலையை அடையாளம் காட்டும் குறிகாட்டிகளில் பாடசாலையின் பெறுபேறுகள், தேசிய மட்ட அடைவுகள், சமூக உறவுகள் முதன்மை வகிக்கின்றன. அந்தவகையில் வலப்பனை வலய பாடசாலைகளின் வெற்றிக்கு தம்மை பூரணமாக அர்ப்பணித்து ஈடுபடும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். இவ் கௌரவிப்பானது சமூகத்திலிருந்து பெற்றோர்கள் மூலமாக ஏற்படுத்தப்பட வேண்டும். சமூகத்தின் ஏணியாக செயற்படும் ஆசிரியர்களின் சேவை பல்லாண்டு தொடர இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இந் **"நிழலி"** நூல் வெளியீட்டின் ஐந்தாவது பிரவசவத்தை முன்னிட்டு பெருமிதம் அடைகின்றேன். வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**சோ. சற்குணராஜா**
**அதிபர்**
**இராகலை த.ம.வி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விழாக்குழு தலைவரின் உள்ளத்திலிருந்து....

வலப்பனை ஆசிரியர் சமூகம் நடாத்தும் இந்நிகழ்வு ஒரு வரலாற்று பின்னனியை கொண்ட ஒரு நிகழ்வாகும். குறிப்பாக 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வலப்பனை ஹங்குராங்கெத்த ஒன்றியம் என்ற பெயரிலும் பின்னர் வலப்பனை ஹங்குராங்கெத்த கல்வியலாளர் சமூகம் என்ற பெயரிலும் தொடர்ச்சியாக காத்திரமாக ஆசிரியர் தின நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. அந்நிகழ்வுகள் அன்றைய கால சூழலில் வலப்பனை ஹங்குராங்கெத்த பிரதேச கல்வி சமூகத்தினை ஒன்றிணைப்பதிலும் குறிப்பாக ஆசிரியர்களின் பிரச்சினைகளை முன்னிறுத்தி தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும் பாரிய பங்களிப்பினைச் செலுத்தி வந்திருக்கின்றது. அந்த வகையில் இவ்வமைப்பைக் கொண்டு நடாத்துதலிலும் ஆசிரிய தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடாத்துவதிலும் பங்களிப்பு நல்கிய சிரேஸ்ட ஆசிரியர்கள் நன்றியுடன் நினைவு கூற தக்கவர்கள் ஆவர்.

அந்த வகையில் மேற்படி அமைப்பு தொடர்ந்து நடாத்திய ஆசிரியர் தின நிகழ்வுகளின் போது **"நிழலி"** என்ற நூலை தொடர்ந்து வெளியிட்டு வந்திருக்கிறது. இந்நூல் அக்காலக்கட்டத்தில் பணியாற்றிய ஆசிரியர்களது ஆக்கப்படைப்புக்களை தாங்கி பிரதேச மட்டத்தில் மட்டுமன்றி தேசிய ரீதியாகவும் கணிக்கப்படும் ஆண்டு மலராக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வமைப்பின் இச்செயற்பாடுகள் இடை நடுவில் தடைப்பட்டமை வருந்தக்கூடிய ஒரு விடயமாகும். எனவே இனிவரும் காலங்களில் மீண்டும் ஹங்குராங்கெத்த வலய ஆசிரியர்களை இணைத்துக் கொண்டு இந்நிகழ்வை முன்னெடுப்போம். இவ்வருடம் ஆசிரியர் தினத்தை நடாத்த வேண்டும் என எண்ணி முயற்சிகளை முன்னெடுத்த வலப்பனை அதிபர் ஒன்றியமும் நினைவு கூறத்தக்கது. இன்றைய சூழலில் எமது பிரதேசத்தில் உள்ள ஆசிரியர்களை ஒன்றினைத்து எம்மத்தியில் சுமூகமான உறவுகளையும் தொடர்புகளையும் விருத்தி செய்து கொள்வதற்கான தேவை உணரக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு இந்நிகழ்வு உதவியாக இருக்கும் என கூறலாம். எனவே இந்நிகழ்வு வருடாவருடம் மிக சிறப்பாக நடாத்த அனைத்து ஆசிரியர்களும் முயற்சிக்க வேண்டும் என்பதோடு இந்நிகழ்வு வெற்றி பெற உழைக்கின்ற அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

**வி.யோகேஸ்வரன்.**
**விழாக்குழுத் தலைவர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. அறிவுப்பொருளாதாரம் – சில வரையறைகள் 1
2. சமூக மாற்றங்களை முன்னிறுத்திய ஆசிரியரின் வகிபாகம் 6
3. மாணவர் பல்வகைமை - கற்றலும் கற்பித்தலும் 9
4. தற்கால பாடசாலை முறைமையும் ஒழுக்க விழுமிய பங்களிப்பும் 14
5. விளைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தலுக்கேற்ற வகுப்பறை முகாமைத்துவம் 18
6. புறாவின் தீர்ப்பு 22
7. What makes an effective teacher? 23
8. பாடசாலைகளில் பிரச்சினைகள் தீர்த்தலில் தலைமைத்துவத்தின் வகிபாகம். 24
9. ஆசிரியர் பணியும் அதன் முக்கியத்துவமும் 33
10. ஜோன் F கேரின் கலைத்திட்ட மாதிரியும் நடைமுறையிலுள்ள கலைத்திட்டத்தில் அதன் பிரயோகமும் 36
11. சற்குருவாகுவோம் 42
12. ஆதலால் வழிகாட்டுவீர். 45
13. கற்றல் இடர்பாடுடைய மாணவர்களை அறிதலும் அவர்களுக்கு உதவுதலும் ஓர் கண்ணோட்டம் 46
14. ஆரம்பக் கல்வி வளர்ச்சியில் கணிப்பீடும் மதிப்பீடும் 49
15. சூழலைப் பாதுகாப்போம். 51
16. விளையாட்டின் முக்கியத்துவம் 54
17. ஆசிரியர் சேவையும் நடைமுறை நோக்கும் 56
18. என் இதயம் கனக்கிறதே....... 58
19. மாணவர்களின் நடத்தைகளை விருத்தி செய்வதில் பாடசாலையின் பங்களிப்பு 59
20. கல்வி முகாமைத்துவமும் தகவல் முறைமையும். (EMIS) 64
21. பாடசாலை செயல் ஒழுங்கில் ஆலோசனை வழிகாட்டல் 71
22. இலங்கையின் கல்வித்துறையின் வரலாறு 74
23. 21ஆம் நூற்றாண்டின் வகுப்பறையும் ஆசிரியர்களின் வகிபங்குகளும் 78
24. தியாகச் செம்மல்களே!...... 84
25. பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி வேலைத்திட்டம். (SBTD) 85
26. இலங்கையில் ஆசிரியக் கல்விக்கான (Teacher Education ) வாய்ப்புகளும் சமகாலத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளும். 87


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தியும் தேவைப்பாடும் 92
28. F.W. டேலரின் முகாமைத்துவச் சிந்தனைகளும் பாடசாலைத் தலைவருக்கு அதன் பயன்பாடுகளும். 94
29. கல்வித்துறை அபிவிருத்திச் சட்டமும் நிகழ்ச்சித் திட்டமும் 100
30. மெய் - ஒரு – துளி 104
31. நான் 104
32. நினைத்துப்பார் 105
33. KEEP MOVING..... 106
34. வினைத்திறன் வாய்ந்த கற்றல் கற்பித்தலை வகுப்பறையில் உருவாக்க வேண்டும் 107
35. ஆசிரியர் என்பவர் தொடர்ச்சியாக சுயமாக கற்கின்றார் 109
36. இலங்கையில் கல்வி வீண்விரயத்தில் அண்மைக்காலப் போக்கு 111
37. இலங்கையின் தொழில்நுட்பக்கல்வி 114
38. மனிதம் மலரட்டும் 115
39. கற்றல் இடர்பாடுடைய மாணவர்களின் கற்றல் களங்களை வெற்றிகரமாக்கல் 116
40. ஆசிரியர் பணியும் வினைத்திறனும் 120
41. "சிறிதளவே அதிகமானது போதுமானது" 123
42. அறிவுத் திருட்டின் சில மேற்கோள்கள் 126
43. எதிர்கால விருத்திக்கான ஆரம்பக்கல்வி 129
44. பெருந்தோட்டத்துறை ஆசிரியர் நியமனங்களும் பட்டப்படிப்பும் ஒருபார்வை.... 133
45. உலக நாடுகள் எதிர்நோக்கும் குடித்தொகை வயது முதிர்தலின் சமூகப் பொருளாதார தாக்கங்கள் 137
46. பாடசாலை முகாமைத்துவமும் ஆசிரியர் வகிபாகமும் 143
47. பாடசாலை முகாமைத்துவத்தின் மதிநுட்பம் 146
48. ஆளுமை 149
49. அன்புள்ள அம்மாவுக்கு.....! 152
50. சமகாலத்தில் நூலக பயன்பாடும் வாசிப்பின் முக்கியத்துவம் 153
51. கற்றல் குறைபாடு Learning Desability. 156
52. அறநெறிப்பாடசாலையும் இன்றைய மாணவர்களும் 159
53. வீடியோ விளையாட்டும் பிள்ளைகளும். 161




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுப்பொருளாதாரம் – சில வரையறைகள்

**Mr. S. Sandarasegaram,**
**Formorly Deen and Professor**
**Justice of peace**
**Colombo -06**

உகண்டா, பாகிஸ்தான், இந்தியா மற்றும் வளைகுடா போன்ற வெவ்வேறு வகையான நாடுகள் அறிவு சார் பொருளாதார முறையை ஏற்படுத்துவதை ஒரு குறிக்கோளாக எடுத்துரைத்துள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலமும் பிரித்தானியாவில் ஒவ்வொரு பிராந்தியமும் அத்தகைய குறிக்கோளை ஏற்கனவே தெரிவித்துள்ளன. 2001ம்ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியமானது தனது லிஸ்பன் பிரகடனத்தில் உலகிலேயே சிறந்த போட்டித்தன்மை வாய்ந்த அறிவுசார் பொருளாதார முறையை ஏற்படுத்தும் குறிக்கோள் பிரகடனத்தில் காணப்பட்டது. (2001) ஆயினும் இந்நாடுகள் அறிவுசார் பொருளாதாரம் என்றால் என்ன? அத்தகைய குறிக்கோள் அடையப்பட்டுவிட்டால் அதனை எவ்வாறு தெரிந்து கொள்ளலாம்? என்பது பற்றி எதுவித விளக்கங்களையும் தரவில்லை. கொள்கை வகுப்பாளர்களும், பல்கலைக்கழக ஆய்வாளர்களும், தொழில் அதிபர்களும், அறிக்கைகளும் வெளியிடுகின்றன. இவ்வறிக்கைளின் ஒரு பொது அம்சம் புதிய பொருளாதாரம் பற்றிய சரியான வரையறை இல்லாமையாகும்.

அறிவுசார் பொருளாதாரம் பற்றிய குறிப்புகள் புத்தாக்கம், விஞ்ஞானம், அடிப்படைக்கல்வி மீதான முதலீடு எனப் பல விடயங்கள் பற்றியனவாகவேயுள்ளன. அறிவுசார் வேலைபற்றிய குறிப்புகளும் தகவல் தொழிநுட்ப வல்லுனர் குழுக்கள் ஆய்வுப் பணிகள் தொடக்கம் அங்கீகரிக்கப்பட்ட திறன்கள் அல்லது தகுதிகளைக் கொண்ட ஊழியர் தொகுதியின் பணிகள் பற்றியனவாக இருந்தன.

ஒரு வகையில் அறிவுசார் பொருளாதாரம் பற்றிய இத்தகைய குறிப்புகள் அதிகம் பயனுள்ளவையன்று இக்குறிப்புகளின்படி அறிவுசாராத பொருளாதாரத்தைவிட அறிவுசார் பொருளாதாரம் மேலானதாகும் எனவே அறிவுசாராப் பொருளாதாரம் தராதரம் பற்றிக் கருத்திற் கொள்ள வேண்டிய அவசியமில்லை. உண்மையில் அறிவுசார் பொருளாதாரமானது பொருளாதார அமைப்புகளில் ஏற்பட்டு வரும் ஒரு மாற்றத்தையும் எவ்வாறு நிறுவனங்களும், ஊழியர்களும் தமது பணிகளைப் புதிய முறையில் செய்கின்றார்கள் என்பதையே விளக்குகின்றது.

அறிவுசார் பொருளாதாரம் பற்றிய சரியான வரையறை ஆய்வு நூல்களில் காணப்படாமை காரணமாக அறிவுசார் பொருளாதாரம் என்ற எண்ணக்கரு பேச்சளவில் மட்டும் இருப்பதாகவும் வேறு வழிகளில் அவ்வெண்ணக்கரு பயனற்றது. என்ற கருத்தையும் சில ஆய்வாளர்கள் தெரிவித்தனர். அதன் காரணமாக அறிவுசார் பொருளாதாரம் பற்றிய திட்டவட்டமான வரையறைகளை உருவாக்கும் முயற்சிகளில் ஆய்வாளர்கள் ஈடுபட்டனர். இந்த வரையறைகளைக் கொண்டுதான் அறிவுசார் பொருளாதாரம் எத்தகைய துரித கதியில் வளர்ச்சி பெறுகிறது. அரசாங்கம், நிறுவனங்கள், சமூகம் தனியாட்கள் ஆகியோரைப் பொறுத்தவரையில் அதன் கொள்கை மற்றும் நடைமுறை விளைவுகள் என்ன என்பதைப் பகுப்பாய்வு செய்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில ஆய்வாளர்களின் கருத்தின்படி அறிவு எனும் எண்ணக்கருவை விளக்குவது கடினமாது. அறிவை விபரிப்பதும் புரிந்து கொள்ளுவதும், அளவிடுவதும் விஞ்ஞானரீதியாகப் பார்க்குமிடத்து அது முழுமை பெறாத ஒரு பணியாகவே அமையும். மற்றொரு பிரச்சினை எவ்வாறு அறிவையும், தகவலையும் வேறுபடுத்துவது என்பதாகும். தகவல் சமூகம், தகவல் பொருளாதாரம் போன்ற சொற்களும் அறிவுசார் பொருளாதாரத்திற்குப் பதிலாக பயன்படுத்தபடுகின்றன. தகவல் என்பது அறிவுசார் பொருளாதாரத்துக்கு அத்தியவசியமானதொரு கூறாகும். (Building Block)அதாவது நவீன அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான பிரதான முன்நிபந்தனை, குறைந்த செலவில் பெருமளவுக்கு தகவல்களை உருவாக்கி, நிரற்படுத்திக் களஞ்சியப்படுத்தும் ஆற்றலாகும். எனினும் அத்தகைய தகவலை நிறுவனங்களுடைய செயலாற்றத்துக்குப் பயன்படும் வகையில் மாற்றியமைக்கத் தேவைப்படுவது அறிவாகும். அறிவின் பெறுமதி அதனை அதிக அளவில் பயன்படுத்தும் போது குறைவதில்லை என்ற கருத்து தொடர்ச்சியாகப் பல அறிஞர்களால் எடுத்துக் கூறப்படுவதும் இக்கூற்று தகவலுக்கும் பொருந்தும். அறிவுக்கும் தகவலுக்குமுள்ள முக்கிய வேறுபாடு, அறிவானது அதனைப் பயன்படுத்துவோரின் ஆற்றலை வலுப்படுத்துகின்றது என்பதாகும். தகவலானது சரியான அறிவு இல்லாவிடில் பயனற்ற தன்மை கொண்டது. தகவலை விளக்கியும் வியாக்கியானம் செய்தும் அதனைப் பயன்படுத்த உதவுவது அறிவாகும்.

அறிவிலும் இரு வகைகள் உள்ளன தொகுக்கப்பட்ட அறிவானது கைந்நூல்களில் அல்லது வழிகாட்டல் பிரசுரங்களில் காணப்படுவது. ஆனால் மற்றொரு வகை அறிவானது தனியாளில் பொதிந்து காணப்படுவது. அது தனியாளின் அனுபவத்திலும் நிபுணத்துவத்திலும் தங்கியுள்ளது. அதனை எழுத்தில் வடிப்பது கடினம் அத்துடன் மற்றவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பது கடினமாகும். ஒரு வகையில் ஏடுகளில் காணப்படும் தொகுக்கபட்ட அறிவும், தகவலும் ஏறத்தாழ ஒன்றுதான் எனவே தகவலுக்கும் சொற்களால் விளக்கமுடியாத அறிவுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்பின்புலத்தில் அறிவுசார் பொருளாதாரம் பற்றிய வரையறைகளை நோக்குதல் வேண்டும்.

OECD யின் ஒரு வரையறையின் படி (1998) செல்வத்தை உருவாக்குவதில் அறிவின் உருவாக்கமும் அதன் பயன்பாடும் தலையாய இடத்தைப் பெறுகின்ற பொருளாதார முறை அறிவுசார் பொருளாதாரமாகும். சகலவிதமான பொருளாதாரச் செயற்பாடுகளிலும் சகல வகையான அறிவை மிகுந்த வினைத்திறனுடன் பயன்படுத்தும்பொழுது அறிவுசார் பொருளாதாரம் உருவாகின்றது. Charles eadbeater என்ற அறிஞர் சமர்பித்த "புதிய பொருளாதாரத்துக்கான புதிய நடவடிக்கைகள்" என்ற அறிக்கையில் (1991) தந்துள்ள வரையரையானது.

"அறிவினால் உந்தப்படும் பொருளாதாரம் என்ற சிந்தனையானது உயர் தொழில் நுட்பக் கைத்தொழில் பற்றிய விவரணம் மட்டுமன்று. சகல விதமான துறைகள்-சகல கம்பனிகள், சகல பிராந்தியங்கள், விவசாயம் தொடக்கம் மென்பொருள் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் வரையிலான சகல துறைகளையும் பொறுத்தவரையில் மிகச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய புதிய வளங்களை அறிவுசார் பொருளாதாரம் குறிக்கின்றது".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு வரையறையின்படி (ESRC, 2005) பொருளாதார வெற்றியானது அதிகளவுக்குப் புலப்படாத வளங்களான அறிவு, திறன்கள், புத்தாக்க ஆற்றல் என்பவற்றை வினைத்திறனுடன் பயன்படுத்துவதைப் பொறுத்தே அமைகின்றது. இவ்வாறான முறையில் தோற்றமும் பொருளாதார அமைப்பை "அறிவுசார் பொருளாதாரம்" என்ற சொல் விபரிக்கிறது.

இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் kok அறிக்கையின் படி "ஆராய்ச்சி அபிவிருத்தி என்பவற்றில் அதிகரித்த ஈடுபாட்டைச் சுட்டிக்காட்டும் ஒரு பரந்த எண்ணக்கருவே அறிவுசார் சமூகமாகும். சமகால பொருளாதார முறையின் சகல அம்சங்களையும் இது உள்ளடக்குகின்றது. இத்தகைய பொருளாதாரத்தில் பெறுமானம் சேர்க்கப்படுவதற்கான மையமாக அமைவது அறிவாகும். உயர் தொழில்நுட்பத் தயாரிப்புத்தொழில், தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம், அறிவுச் செறிவுள்ள சேவைகள் தொடக்கம் ஆக்கத்திறன் அடிப்படையிலான தொழில்களான ஊடகம், கட்டிடக்கலை வரையிலான சகலவற்றிலும் புதிய அறிவு பயன்படுத்தப்படும் பொழுது பொருளாதார முறை அறிவுசார் பொருளாதாரமாகின்றது.

சில அறிஞர்களின் வாதத்தின்படி அறிவினை அடிப்படையாக் கொண்ட பொருளாதார முறையின் தோற்றமானது ஒரு பிரதானத் திருப்பமாகும். இத்தகையை பொருளாதாரமானது எல்லையைற்ற முறையில் உற்பத்தித் துறைப் பயன்களையும் பணவீக்கமற்ற வளர்ச்சியையும் பங்கு சந்தைகளின் தொடர்ச்சியான வளர்ச்சியையையும் கருதுகின்றது. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பப் புரட்சியானது தொழில், நிறுவனங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப அறிவுத்தளங்களைப் பயன்படுத்தி இதுவரையில்லாத போட்டித்திறனை வழங்குகிறது. என்றும் வாதிடப்படுகிறது. இவ்வாறான போக்குகள் செலவுகளின் வீழ்ச்சிக்கு வழிகோலுகின்றன. இப்புதிய அறிவுசார் பொருளாதரமானது கம்பனிகளுக்குள்ளும் அவற்றுக்கு இடையிலும் பல புதிய நிறுவன அமைப்புகளை உருவாக்கவும் தொழிலாளர் தொழில் வழங்குவோர் தொடர்புகளில் தீவிரமாற்றங்களைக் கொண்டுவரவும் காரணமாகின்றது. ஏனெனில் புதிய அறிவுசார் ஊழியர்கள் சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழில் செய்ய முடிகின்றது. பௌதீக வளங்கள் போலன்றி அறிவு வளமானது. எங்கும் எடுத்துச் செல்லப்படக்கூடியது.

மறுபுறம் இவ்வாறானதொரு அறிவுசார் பொருளாதாரம் நடைமுறையில் உண்டா என்ற எதிர்க் கருத்தும் முன்வைக்கப்படுகிற்து பொருளாதார முறையானது எப்போதுமே அறிவினால் உந்தப்பட்டு புதிய தொழில்நுட்ப மாற்றங்களும் புத்தாக்கங்களும் இடம்பெற்றே வந்துள்ளன. பல நூற்றாண்டுகளாக அறிவை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் அறிவைப் களஞ்சியப்படுத்தி அதனைப் பகிர்ந்து கொள்ள உதவிவந்துள்ளன. தற்போது இதேபணி மிகத்துரிதமாகவும் பரந்த அளவிலும் நடைபெற்று வருகின்றது என்பதே உண்மை என்ற கருத்துமாற்றமும் இடம்பெறுகின்றது. எனவே கடந்த காலத்தோடு ஒப்பிடும் பொழுது இப்புதிய பொருளாதாரமானது திட்டவட்டமானதொரு புதிய திருப்பமெனக் கூறமுடியாது.

அறிவைக் களஞ்சியப்படுத்துதல், பகிர்ந்து கொள்ளுதல், பகுப்பாய்வு செய்தல் தொடர்பான ஆற்றல், அதற்கு புதிய தகவல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல் என்பன காரணமாக நிறுவனங்கள் அறிவைப் பயன்படுத்தித் தமது போட்டித்திறனை மேம்படுத்திக்கொள்ள உதவுகிறது. அறிவின் ஒரு பிரதான அம்சம் என்னவெனில் அது பயன்படுத்தப்படுவதால் ஏனைய வளங்கள் போலத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்வடைவதில்லை அத்துடன் அறிவானது புதுப்பிக்கப்படக்கூடிய ஒருவளம் என்பதும் முக்கியமானது. அறிவானது பிறரோடு பகிரப்படும் போதே பொருதாளார முறைக்குப் பெறுமதியுள்ள வளமாக மாறுகின்றது நிறுவனங்கள் அறிவை உள்வாரியாகவும் சில சந்தர்ப்பங்களில் தமது வாடிக்கையாளருடனும் பகிர்ந்து கொள்ளும் போதுதான் அதன் பெறுமதியைப் பெற முடிகின்றது. ஆயினும், அவ்வறிவு போட்டியாருக்கு நன்மை தருவதாக அமையும் பொழுது வெளியாருடன் பகிர்ந்து கொள்வதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த முனையலாம். இந்நிலையில் கொள்கை வகுப்போர் புலமைச் சொத்துரிமைகளை உறுதிப்படுத்தி இந்தக்ககம்பனிகள் புத்தாக்கங்களைச் செய்வதற்கு ஊக்கமளித்தல் வேண்டும் இந்த ஏற்பாடுகள் வலுவுள்ளதாக அமையாவிடில் அறிவைப் பரப்பும் முயற்சிகளில் தடைகள் எற்பட வழியுண்டு.

உலகளாவிய ரீதியில் செயற்பட்டுவரும் முன்னேறிய கைத்தொழில் பொருளாதாரங்கள் எதிர்காலத்தில் மொத்த தேசிய உற்பத்தி, மொத்த வேலைவாய்ப்பு என்பவற்றில் 50 சதவீத்தை அறிவுசார் நிறுவனங்கள், கைத்தொழில்களினூடாகவே உருவாக்கும் நிலைமையை நோக்கிச் செல்கின்றன. இப்பொருளாதார முறைகள் மிகுந்த கல்வித் தேர்ச்சியுள்ள ஊழியர் தொகுதியினைக் கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் மக்கள் தொகையில் பெரும்பாலனவர்கள் பட்டதாரிகளாக மாறும் நிலைமையும் உருவாகிவருகின்றது.

இந்நாடுகளில் தொடர் கல்வி, வாழ்க்கை நீடித்த கல்வி, பாடசாலைகாலத்தில் கற்கும் திறன்களைக் கற்றுக்கொள்ளுதல் போன்ற செல்நெறிகள் பரந்தளவில் ஊக்குவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்நாடுகள் இன்று மக்கள் மத்தியில் உயர்கல்வியை விரிவு செய்து அவர்களின் உயர்கல்வித் தேர்ச்சியில் அக்கறை செலுத்தி வருகின்றன. ஒரு புறம் உயர்கல்வியின் விரிவுக்குத் தொலைக்கல்வி மற்றும் இணையதளப் பல்கலைக்கழக முறைமைகள் விரிவுபடுத்தபடுகின்றன. மறுபுறம் உயர்கல்வியின் தராதர மேம்பாடு நோக்கிய சீர்திருத்தங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக இந்நாடுகளின் பல்கலைக்கழகங்கள் உலகளாவிய தராதரங்களை (world class) எட்டவேண்டும் என்ற முறையில் அதற்கான தகுதி விதிகள் (Criteria) தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலைநாடுகளில் ஏற்பட்டுவரும் அறிவுசார் பொருளாதாரம் நோக்கிய இவ்வாறான நடவடிக்கைகள் வளர்முக நாடுகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. ஐக்கிய அமெரிக்கா முதல் உகண்டா, இலங்கை போன்ற வளர்முக நாடுகள் வரை அறிவுசார் பொருளாதாரமுறைமையை ஏற்படுத்தும் முயற்சிகள் விரிவுடைந்து வருவதாக உலகவங்கி அறிக்கைகள் தெரிவிக்கின்றன. OECD அமைப்பானது அறிவின் மீதான முதலீடு பற்றிய கூட்டுக் குறிகாட்டியொன்றினைத் தந்துள்ளது. இக்குறிகாட்டிகள் ஒவ்வொரு நாடும் அறிவுசார் பொருளாதாரம் நோக்கி எந்தளவுக்கு முன்னேறியுள்ளன என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. இக்குறிகாட்டிகளில் அடங்கும் விடயங்கள்

1. ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் செய்யப்பட்டுவரும் முதலீடு
2. உயர்கல்வியில் இடப்படும் முதலீடு
3. தகவல் தொழில் நுட்பத்திலான முதலீடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய குறிகாட்டிகளின் அடிப்படையில் பொருளாதார முறைகள் மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றன.

1. உயர்ந்த அறிவுசார் முதலீடுகளைக் கொண்ட பொருளாதார முறைகள், மொத்த தேசிய உற்பத்தியில் 6 சதவீதத்தை முதலீடு செய்யும் வட அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகள்
2. நடுத்தர அறிவுசார் முதலீட்டைக் கொண்ட பொருளாதாரம், மொத்த தேசிய உற்பத்தியில் 3–4 சதவீதத்தை முதலீடு செய்யும் வட ஐரோப்பிய மற்றும் ஐரோப்பிய பொருளாதாரம்
3. 2–3 சதவீத்தை முதலீடு செய்யும் தென் ஐரோப்பிய குறைந்த முதலீட்டுப் பொருளாதாரம்.

பௌதீக வளங்களின் (கட்டிடங்கள், இயந்திரங்கள் போன்றவை) மீதான முதலீடுகளைவிட அறிவின்மீதான முதலீடு இவ்வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான அறிவின் மீதான முதலீடு பௌதீக வளங்களின் மீதான முதலீட்டை விட தற்பொழுது அதிகரித்துச் செல்வதாகக் கூறப்படுகின்றது. மரபுவழி பொருளாதார வளர்ச்சியானது காலங்காலமாக பௌதீக மூலதனத்தில் தங்கியிருந்தது. என்பது குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் பெரும்பாலன OECD நாடுகளின் தரவுகளின் படி அறிவின் மீதான முதலீடு பௌதீக மூலதனத்தை இன்னும் மிஞ்சிச் செல்லவில்லை.

“அறிவு ஒரு பொருளாதார வளம்” என்று கூறும் பீட்டர் டிரகர் (Peter Drucker) – முகாமைத்துவ, எதிர்காலவியல் நிபுணர் “இன்றைய கால கட்டத்தில் கருத்துள்ள ஒரு பிரதான வளம் அறிவாகும். பொருளியல் சிந்தனையாளர்களின் நோக்கில், மரபுவழியான உற்பத்திக்காரணிகள் நிலம், முதல், உழைப்பு என்பன. இவை இன்னும் மறைந்து விடவில்லை ஆனால் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன. அறிவானது கிடைக்கத் தக்கதாக இருந்தால் இந்த மரபு வழி வளங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்” “எனினும் அறிவானது எவ்வாறு ஒரு பொருளாதார வளமாகச் செயற்படுகின்றது என்பதை நாம் இன்னும் விளங்கிக் கொள்ளவில்லை. அதற்கான ஒரு புதிய கொள்கை (Theory) ஒன்று தேவை என்றும் மட்டுமே கூறமுடியும். அத்தகைய ஒரு புதிய கொள்கையைக் கொண்டே இக்கால அறிவுப் பொருளாதாரம் பற்றிய விளக்கங்களைப் பெறமுடியும். அறிவினுடைய பொருளாதார நடத்தை மற்றும் பயன்பாடுபற்றிய ஆய்வுகள் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன”.

●●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மாற்றங்களை முன்னிறுத்திய ஆசிரியரின் வகிபாகம்

**S.சற்குருநாதன்**
**பிரதி அதிபர்,**
**அரசினர் ஆசிரியர் கல்வி கலாசாலை**
**கொட்டகலை.**

சமூகத்தின் விளைப் பொருளின் தேவையாக ஆசிரியர் காணப்படுகின்றார். சமூக இசைவாக்கத்தில் ஆசிரியரின் பங்கும் அளவும் மதிப்பிட முடியாத நீண்ட பயணமாக ஆசிரியம் அமைகின்றது. வளர்ச்சியடைந்த சமூகங்களிலும் ஆசிரியரின் வகிபாகமானது வெவ்வேறு பரிணாமங்களில் தன்னை வடிவமைத்துக் கொள்கின்றது. ஆசிரியரின் பணி என்பது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இற்றைப்படுத்திக் கொள்வதாக அமைந்து விடுகின்றது.

ஆசிரியருக்கு வழங்கப்படுகின்ற பொறுப்புக்கள், அதிகாரங்கள், ஒழுங்குகள் ஆகியன முதன்மையான விடயங்களை முன்வைக்கின்றன. மாணவர்களின் எதிர்பார்ப்புக்கள்,பெற்றோரின் எதிர்பார்ப்புக்கள் ,மேற்பார்வையாளரின் எதிர்பார்ப்புக்கள் என்பன முக்கிய கருப்பொருளாக கொண்டு இயங்குகின்றன. வெறுமனே வகுப்பறைக்கு அல்லது பாடசாலைக்கு உட்பட்டு செயலாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டை தவிர்த்து புதியதொரு சமூக நியாயத் தன்மையினை நோக்கிய பயணமாக அமைந்து விடுகின்றது. ஆசிரியரின் வகிபாகமானது நிலை பேரான நன்மை உடையது அல்ல. ஆசிரியரின் வகிபாகமானது வெவ்வேறு பண்புகள், பாத்திரங்கள், பல வார்ப்புக்களையும் கொண்டுள்ளது. மறைமுகமாகவும் நேரடியாகவும் குறுகியகால, நீண்டகால ரீதியிலும், தனியாள் விருத்தியிலும், சமூக விருத்தியிலும் பங்களிப்புச் செய்வது ஆசிரியரின் வகிபாகமாக அமைந்துவிடுகின்றது.

பாடசாலை வகுப்பறையில் மாத்திரம் ஆசிரியரின் பணியானது செல்வாக்கு செலுத்துவதிலும் பார்க்க வேறுபட்ட தனியாட்கள், நிறுவனங்கள், குழுக்கள் என்பவற்றில் ஆசிரியரின் தொடர்புகள் வலுவானதாக காணப்படுகின்றன. அரசாங்கம், கல்வி அமைச்சு, ஆசிரிய தொழிற்சங்கங்கள், தொடர்புசாதனங்கள், சர்வதேசஅமைப்புக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நண்பர்கள், கல்வியியலாளர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், தத்துவவியலாளர்கள், குடும்ப உறுப்பினர்கள், மன்றங்கள், பெற்றோர், அரசியல்வாதிகள், என பல் தரப்பு குழுரீதியாக, தனிப்பட்ட ரீதியாக ஆசிரியரின் இடைவினை தொடர்பான பரந்துபட்டதாக அமைவது தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகின்றது.

இவ்வாறான ஆசிரியரின் வகிபாகமானது பரந்து விரிந்து காணப்பட்டாலும் சமூக மாற்றங்களை நோக்கிய பயணத்தில் ஆசிரிய வகிபாகமானது எவ்வாறு அமையப்போகின்றது? உலகநாடுகளில் பல மாற்றங்களை கொண்டுவந்து சமூக மாற்றத்திற்கான தரிசனமிக்க தலைமைத்துவத்தினை உருவாக்கியவர்கள் ஆசிரியர்களே. சீனபுரட்சியினை வெற்றிகரமாக வழி நடத்தி பண்பாட்டு அடிப்படையில் மக்களை சிந்திக்க தூண்டிய மவோசேதுங்கன் ஓர் ஆசிரியர் பின் தங்கிய ஆபிரிக்கநாடான தன்சானியாவினை முன்னோக்கிய நாடாக மாற்றிய ஜூலியஸ் நியாரரே ஓர் ஆசிரியர். ஒடுக்கப்பட்ட மக்களை சிந்திக்கத் தூண்டிய சமூக மாற்றத்தை நோக்கி அறிவினை கட்டியெழுப்பிய பல்லோபிரேயர் ஓர் ஆசிரியரே. இந்த காலத்தில் பொலிவியா படையினர் பிடித்து பின் தங்கிய பாடசாலையில் அடைத்து வைத்து சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாடசாலை அதிபருக்கு புரட்சி வெற்றி பெற்றால் புதியபாடசாலை அமைத்து தருவோம் என கூறிய சே.குவேரா ஓர் ஆசிரியர். இதனை போல எத்தனையோ ஆசிரியர்கள் சமூகமாற்றத்தினை நோக்கிய வகிபாகத்தினை செலுத்தியுள்ளனர்.

யாரோ நான்கு ஐந்து பேரால் தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கலைத்திட்ட அம்சங்களை சீர்தூக்கிப் பார்த்து அதனை சமூகம் சார்ந்ததாக நன்மையினை புரிந்துக் கொள்வதும் விவாதிப்பதும் ஆசிரியரின் வகிபாகமாகும். கலைத்திட்ட உருவாக்கத்தில் அதனை மக்கள் வாழ்வுக்குரிய மாற்றத்திற்கான முன்மொழிவினை வைப்பதுவும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தினை முன்னெடுப்பதுவும் ஆசிரியருக்கு இருக்கவேண்டும். உலகமயம், தாராளமயம் என்பன மக்களை பெரும் அறிவு பொருளாகிய உழைப்பிலிருந்து அந்நியபடுத்தி நுகர்வுக்குரிய மக்களாக உருவாக்கிய நிகழ்கால கலைத்திட்ட சீராக்கம் நடந்து வருகின்றது. இதனால் விதேசிய தன்மையினை நிராகரித்து சுதேசிய பொருளாதார அரச அதிகாரத்தினை வலியுறுத்தி பேசும் கலைத்திட்டதினை உருவாக்குவது ஆசிரியரின் பணியாகும்.

இதனை விட மனிதனை சமூக ஆளுமைமிக்க மனிதனாக உருவாக்க வேண்டியதும் ஆசிரியரே. இன்று நல்ல அரசியல்வாதிகளை காணமுடியாதுள்ளது. இங்கு கட்சி சார்ந்த அரசியல் பேசப்படவில்லை. மாறாக ஓர் அரசியல்வாதிக்குரிய தகுதிகளை பாடசாலையிலிருந்து வளர்க்கவேண்டும். சிறந்த பேச்சாற்றல், விவாதிக்கும் தன்மை, உலக கண்ணோட்டம் என்பன பாடசாலையிலிருந்து உருவாக்கவேண்டும். உலகத்திலுள்ள சக்திமிக்க ஜனாதிபதி அமெரிக்காவில் தேர்ந்தெடுக்கப்பட்ட உலகமே வியக்கும் வண்ணம் அவரது பேச்சாற்றல், திறன், போன்றன காணப்படுகின்றன. அவர்களின் பாடசாலை கொடுத்த கல்வி முறையாகும். ஆசிரியர்களுக்கான உரிமைகள் சலுகைகள் என்பவற்றுக்கு அப்பால் பொதுமக்களின் நம்பிக்கையினை பெறுவதற்கான முயற்சிகளும் அவசியமாவை. அதிகாரவர்க்கத்திற்குரிய பண்புகளுடன் இயங்குவதை தவிர்த்து மக்கள் பண்புக்குரிய இயல்புகளை வளர்த்துக் கொள்ளல் இன்றைய அவசிய தேவையாக உள்ளது.

தொடர்பாடல் முறையானது இன்று விரிவடைந்த சகல மக்களையும் சென்றடைந்துள்ள இணையத்தளத்தினூடாக வருவதை சமூகவலைத் தளங்களினூடாக தகவல் பரிமாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இதனை மையமாக வைத்து வகுப்பறையில் வெற்றிகரமான கற்றல் கற்பித்தலை ஓர் ஆசிரியர் நடத்த முடியும். அது ஆசிரியரின் வினைத் திறன் மிக்க ஆளுமையாக கருத முடியும். ஆனால் சமூக வலைத்தளங்கள் ஊடாக வரும் தீய விளைவுகளை அவதானிக்க வேண்டிய அதே வேளை சமூக வலைத்தளங்களுக்கு இயந்திரமாய் போன மணித்தியாலங்களையும் நோக்க வேண்டியவர்களாக உள்ளனர். மாற்றத்திற்கான சமூக முன் நகர்வுக்கான தகவல் தொழில்நுட்ப முறையிலும் தனது பல்வேறு திறன்களை ஆற்ற வேண்டிய அனுபவம் வாய்ந்த ஆசிரியர் உள்ளனர் என்பதையும் மனங் கொள்ள வேண்டும்.

இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு, வளங்கள் சூறையாடப்பட்டு, சூழலுக்கு ஏற்படும் தீய விளைவுகளை அன்றாடம் காண்கின்றோம், பாதிப்படைகின்றோம். நிலை பேண் அபிவிருத்திக்கான (Sustataionable Development /Sustainable Operation) என்ற நிலை முன்வைக்கப்படுகின்றது. மித மிஞ்சிய வள நுகர்வானது சமூக ஏற்றத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வுகளை அதிகரித்து கொள்வதற்கான இடைவெளிகளை அதிகரித்துக் கொண்டுள்ளது. தனிப்பட்ட லாப முயற்சிக்காக முதலீடு என்ற பெயரில் வளங்கள் சுரண்டப்படுவதுடன் சூழலுக்கு பொருத்தமில்லாத உற்பத்தி பொருட்கள் உருவாக்கப்படுகின்றன. இவையனைத்தையும் எங்கள் கலைத்திட்டத்தில் பகுதியேனும் இணைத்துள்ளோமே தவிர நடைமுறையில் முரண்நிலையில் இயங்குவதை காண்கின்றோம்.

இவ்விடத்தில் ஆசிரியரின் சமூக வகிபாகம் என்ன? என்ற கேள்வியினை நாம் முன்னிறுத்துவோமானால் புதிய சிந்தனையினை வந்தடைய முடியும் மாற்று சிந்தனை கருத்துக்களை கூர்மையாக்களை சமூகத்தில் அதற்குரிய கல்வி கருத்துக்களை பெற வேண்டும். மாற்றத்திற்கான இயக்கத்தினை தோற்றுவிக்க வேண்டும். அதற்காக கடுமையாக போராட வேண்டி இருக்கும். தொழில் சார்ந்த சிந்தனைகளுக்கு அப்பால் பண்பாட்டு மாற்றங்களை கொண்டு வர வேண்டிய நிலை ஆசிரியருக்குரியதாகும். நாட்டுக்குள் சமூகத்தினுள் ஆசிரியரும் வாழ்கின்றார். சமூக பாதிப்புக்களில் ஆசிரியரும் இணைந்திருக்கின்றார்.

சமூக முரண்பாடுகள், இனத்துவ முரண்பாடுகள், தேசிய, குறுந் தேசிய சிந்தனை, முரண்பாடுகள், ஒரு புறம் சாதியம், பெண்ணடிமை, மக்கள் ஒடுக்குமுறை இன்னொரு புறம் வறுமை, சமூக ஏற்றத் தாழ்வு என விடயங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. உலகமயம் இன்று மனிதனை ஆட்டிப்படைக்கும் தன்மையினை உருவாக்கியுள்ளது. போட்டி முறை, தனி மனித முனைப்புக்கள், அந்நிய மோகம் என்பனவற்றை உலகமயம் நிகழ்த்தி வருகின்றது. நுகர்வு மய சமூகத்தினை உலகமயம் உருவாக்கி பண்பாட்டு சீரழிவுகளை உருவாக்கியுள்ளது. இத்தகைய ஒரு நிலையில் ஆசிரியர் சமூக வகிபாகமானது மக்கள் சார்ந்த, சுய தேவை சார்ந்த, சமூக விஞ்ஞான கண்ணோட்டம் சார்ந்த நடைமுறை வேலைத் திட்டங்கள் சமூக ஆசிரிய மாற்றத்தினை நோக்கிய வகையில் அமையுமாயின் வகிபாகம் வெற்றி பெறும்.

●●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பல்வகைமை - கற்றலும் கற்பித்தலும்

மை. பன்னீர்செல்வம்
விரிவுரையாளர்
பேராதனை தேசியக் கல்வியற் கல்லூரி
பேராதனை.

கல்வியை குறிக்கும் ஆங்கிலச் சொல்லான 'எடுகேசன்' (Education) என்பதற்கு முன்பு வெளிக் கொணர்தல் என்று கருத்து கொடுக்கப்பட்டபோதும் இன்று 'வளர்த்தல்' என்ற கருத்தே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கல்வி என்பது மிகவும் பழக்கமான ஒரு சொல் எனினும் அதனை தெளிவாக விளக்குவது அவ்வளவு எளிதானதல்ல. "கல்வி என்பது கற்றலுடன் தொடர்புபடுத்தப்பட்டாலும் அது கற்பித்தலோடும் இணைந்தே பொருள்கொள்ளப்பட வேண்டும். இங்கு கற்பித்தலானது ஆசிரியரோடு மட்டும் தொடர்புபட்டதன்று அது மாணவரோடும் மாணவரின் கற்றலிலிருந்தும் மேற்கிளம்புகிறது." என சந்தனம்.எஸ் (1987) கூறுவார். எனவே கற்றல் - கற்பித்தல் இருவழி தொடர்பாடலாகும். இங்கு ஆசிரியர் மாணவரின் நிலை அறிந்து தனது கற்பித்தலை ஒழுங்கு செய்வதோடு தனது வகுப்பு மாணவரின் தனியாள் நடத்தைகள் தொடர்பாகவும் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டியவராகிறார். பிள்ளையின் நற்பண்புகளையும் நல்லாற்றலையும் வளர்த்து அவற்றின் மூலம் பிள்ளையின் ஆளுமையை வளர்ப்பது ஆசிரியரின் பொறுப்பாகும்.

மாணவரின் தனியாள் வேறுபாடுகள் என்பது பொதுவாகவே உள்ளது என்பது பொதுவாக கல்வியலாளர்கள் மற்றும் ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். மாணவரின் தனியாள் வேறுபாடு அவர்களின் உள்ளார்ந்த செயற்பாடு காரணமாக வெளிகாட்டப்படும் நடத்தைகளாகும். இது தொடர்பான மிகுந்த அறிவு ஆசிரியர்களுக்கு இன்றியமையாதது. தனது கற்பித்தலின் வெற்றி தோல்வி என்பது இதனடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. ஆசிரியர் மாணவரின் கல்வியை பொறுப்பேற்றல் (Accounntability), கல்விச் செலவுக்கான பயன் (Cost Effectiveness), மாணவரின் தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்ற நெகிழ்ச்சியான பாடத்திட்டம் (Flexible Scheduling), கற்றல்-கற்பித்தல் செயற்பாடு (Teaching-Learnig Proses),கல்வி நுட்பமுறைகள்(Educational Technology) என்பவற்றின் அடிப்படையில் கற்பித்தல் வடிவமைப்புச் செய்யப்பட வேண்டும்.

பாடசாலையின் பிரதான இயக்குனர்கள் ஆசிரியர்களாவர். பிள்ளைகள் ஒரே தன்மையான ஆற்றல், அறிவு உடையவர்களாக இருப்பதில்லை. அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளும் வெவ்வேறானவை. அதன்படி குழந்தைகள் மூன்று வகையான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

1. உளவிருத்தி தொடர்பான பிரச்சினைகள்
2. மனவெழுச்சி தொடர்பான பிரச்சினைகள்
3. உடல்விருத்தி, கல்வி விருத்தி தொடர்பான பிரச்சினைகள்

உளவிருத்தி, கல்வி விருத்தி தொடர்பான பிரச்சினைகளில் பின்வரும் தன்மை கொண்ட மாணவர்களை வகுப்பறையில் நாம் அவதானிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பின்தங்கி கற்பவர்கள்
- மீத்திறன் உடையவர்கள்

பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் நியமங்கள் இருந்த பொழுதும் அவர்களுக்குரிய தனித்துவமான வளர்ச்சியும் காணப்படுகிறது. குழந்தைகளின் உடல் வளர்ச்சி குழந்தைகளின் நுண்மதி வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, பரம்பரையும் சூழலும், உடல் நலனும் போசாக்கும் போன்றவை செல்வாக்கு செலுத்துகின்றன. நியமங்களுக்கு மிகக் கிட்டியளவில் வளர்ச்சியடைந்து வரும் பிள்ளைகள் சாதாரண பிள்ளைகள் (Normal Children) எனப்படுவர். எனினும் சில பிள்ளைகள் இவர்களைவிட வேறுபட்டு இருப்பர். அவர்கள் வகுப்பறைக் கற்பித்தல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்கள் துலங்கலை ஏற்படுத்த முடியாது அவதியுறுவர். எனவே ஆசிரியர் இவ்விருவருக்கும் ஒரே வகையான கற்பித்தல் முறையினை மேற்கொள்ள முடியாது. இவர்களின் தனியாள் வேறுபாடுகளில் கவனம் செலுத்தி கற்பிக்கும் போதே அது முழுமையான கற்பித்தலாக அமையும்.

"நல்ல சமூக பன்முக ஆளுமை உடைய மாணவர்களை உருவாக்க வேண்டிய பணி ஆசிரியர்களுடையது" ஆசிரியர் மாணவரின் தனித்தன்மைக்கேற்ப கற்பிக்கும் போது இது சாத்தியம் என்பர். ஆய்வாளர் இதன்போது ஆசிரியர் மாணவர் தொடர்பு முக்கியமானது. மாணவரின் கருத்துக்கு செவிமடுப்பதும், அவர்கள் கூறும் கருத்துக்களை ஆராய்ந்து தனது அணுகுமுறையில் தேவையான மாற்றங்களைச் செய்வதும் முக்கியம். இது மாணவரின் தேவை மற்றும் இவர்களின் தனியாள் வேறுபாட்டை பொறுத்து அமைதல் வேண்டும். எனினும் இங்கு மாணவனின் தனியாள் வேறுபாடு முக்கியம் பெறுகின்றது. "விஷேடமாக அவர்களிடம் காணப்படுகின்ற தனியாள் வேறுபாடுகளில் (Individual Differences) கவனம் செலுத்தப்பட வேண்டியதும் இன்றியமையாததாகும். இதற்கு காரணம் எல்லா மாணவர்களுடனும் ஆசிரியர் ஒரே விதமான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியாமையாகும்" என லோகேஸ்வரன். ஆர், (2008) கூறுவார்.

"கற்றல் நிகழுகின்ற சூழலானது கற்றலில் வலுவான செல்வாக்கை செலுத்துகிறது கற்றல் நடைபெறும் இடம், முறை மற்றும் பௌதீக வசதிகள் என்பன இங்கு முக்கியம் பெறுகிறது" என்பார் சின்னத்தம்பி.மா.(2003)

மாணவர்கள் ஆசிரியர்களுடன் கொள்ளும் தொடர்புகளுக்குள்ளும் கூட தனியாள் வேறுபாடுகள் இருக்கலாம். குறிப்பாக சிலர் எதையும் பயமின்றி முன்வந்து கதைப்பர், கேட்பர், சிலர் கேட்பதில் தயக்கம் காட்டுவர், சிலர் வகுப்பறையில் அமைதியாக இருப்பர், சிலர் எப்போதும் அச்ச உணர்வுடன் காணப்படுவர், சிலர் முரட்டுத்தனமாக செயற்படுவர், இவ்வாறு ஒவ்வொருவரும் தமது திறமை, ஆற்றல், மனப்பாங்கு, சமூகத்திறன் என்பவற்றுக்கேற்ப தமது நடத்தைகளில் பல் வகையிலும் வேறுபட்டவர்களாக காணப்படுவர். இதற்கு ஏற்ற வகையில் தமது கற்பித்தலை ஆசிரியர் கொண்டு செல்லவேண்டும்.

"கற்றலுக்கான சூழலை உருவாக்குவதில் சிறப்பான இடைவினைத் தொடர்புகளை ஏற்படுத்துவதில், இடர்களை நீக்குவதில் பொருத்தமான ஊக்கப்படுத்தலை வழங்குவது ஆசிரியரது பணியாக வகுப்பறையில் முக்கியம் பெறுகிறது" என பீற்றர் டிரகர் (PeterDrker 2004) குறிப்பிடுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பாடசாலைகள் இன்னும் மாணவர்களுக்கு தண்டனை வழங்கி வருவதை அவதானிக்க முடிகிறது. இங்கு நாம் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ப தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து கல்விபுலத்தில் ஏற்புடையதல்ல. தண்டனை முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும் என்பது உளவியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். தண்டனைகளே மாணவர் ஆசிரியர் மீதான தொடர்பாடலை பாதிக்கும் பிரதான காரணமாகும். கற்பித்தலின்போது தனியாள் வேறுபாடுகள் கவனத்திற் கொள்ளப்படும்போது வகுப்பறைச் சூழல் நட்பு, மகிழ்ச்சி நிரம்பியதாக மாறி கற்றல் - கற்பித்தல் சிறப்பாக இடம்பெறும். மாணவர்கள் தமது எண்ணங்கள் தேவைகள் என்பவற்றை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைப்பதால் கற்றலில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு ஆசிரியரிடமே தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியுமாகும். இதனால் வகுப்பறையில் ஜனநாயக தன்மை ஏற்படுவதோடு மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் தோற்றம்பெறும்.

"ஆசிரியர் கற்றலை ஊக்குவித்தல், அதனை நெறிப்படுத்தல், எளிமையானதாக ஆக்குதல், கற்றலுக்கான சூழ்நிலையை தோற்றுவித்தல். கற்றலுக்கேற்ற ஒரு முன்மாதிரியாக விளங்குதல் இன்று ஆசிரியர்களுக்கான பொறுப்புகளாகும்" என்பார் லோகேஸ்வரன்.ஆர்.(2007) ஆசிரியர்கள் வழிகாட்டுபவர்கள், பிள்ளையை இனங்கண்டு பொருத்தமான துறைக்கு இட்டுச் செல்பவர் போன்ற வகிபாகத்தை ஆசிரியர் ஏற்கும் நிலையில் இன்றைய நிலையில் ஆசிரியரின் கற்பித்தல் தொடர்பாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. பயிற்சிகள் வழங்கப்பட்டும் ஆசிரியர் வாண்மைத்துவ செயற்பாடுகள் மற்றும் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகளினூடாக ஆசிரியரின் கற்பித்தல் முறைகளில் புதிய மாற்றங்கள் வளர்ந்த நிலையிலும் ஆசிரியர்கள் கற்பித்தலின்போது அவற்றை பயன்படுத்துகிறார்களா? தனியாள் வேறுபாடுகளுக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதை அறிவதும் அதற்கான காரண காரியங்களை தேடுவதும் மிக முக்கியமானதாகும்.

மாணவரின் தனியாள் வேறுபாட்டில் ஆசிரியரின் கற்பித்தலின்போது கவனம் செலுத்த வேண்டும் என்பது பொதுவாக கல்வியியலாளர்களின் அங்கிகரிக்கப்பட்ட கருத்து என்றாலும் இது நடைமுறையில் வகுப்பறைகளில் எவ்வாறு உள்ளது என்பது ஆய்வுக்குரிய விடயமாகும். விளைதிறனான கற்பித்தல் என்பது வகுப்பறையில் ஆசிரியர் மாணவர் வெளிக்காட்டும் நடத்தைகளின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது. வகுப்பறை நிகழ்வுகளின் இயல்புகளிலேயே நல்ல விளைதிறனுள்ள வகுப்பறைக் கற்றல் தங்கியுள்ளது என்பார் ஆறுமுகம்.ஆ.(1994)

விகொஸ்கி (Vygotskay,1978) என்பவர் தனது அண்மித்த கோட்பாட்டில் (Proximal theory) "கற்பித்தலின் போது பிள்ளையின் தன்மைக்கேற்ப வழிகாட்டியாக ஆசிரியர்கள் உள்ளனர் பிள்ளைகள் புத்திஜீவி ஆவதற்கு வேண்டிய தகவல்களையும் ஊக்கிகளையும் ஆசிரியர் வழங்குதல் வேண்டும்" என்பார். "மாணவர்கள் கல்வி கற்கவே பாடசாலைக்கு வருகின்றனர். தமது கிரகித்தலையும் ஆற்றலையும் வெளிப்படுத்திக் காட்டுமாறு அவர்கள் அடிக்கடி கேட்கப்படுகின்றனர். மாஸ்லோவின் கொள்கைப்படி தமது சுயதிறனை வெளிக்காட்டி திருப்தியடையும் தேவையுடனேயே அவர்கள் இருக்கின்றனர். வெற்றிகரமாக தமது திறன்களை வெளிக்காட்ட அவர்களினால் இயலுமாயின் நேர் மீள வலியுறுத்தல் பெற்று சுயகணிப்பு, சுயகௌரவம் என்பவற்றை அடையப்பெறுகின்றனர். சாதகமான சுய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பு அவர்களை மேலும் கற்கத்தூண்டும். மேலும் தமது ஆற்றலை வெளிப்படுத்தித் திருப்தி காண முயல்வர். திருப்தி காணல் என்ற சக்கரம் தொடர வேண்டுமானால் மாணவர்களின் அடிப்படைத் தேவைகளான உடலியல், அன்பு, காப்பு முதலில் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்" என பக்கீர் ஜ/பார..ப.க(2002) கூறுவார். இத்தகைய தேவைகள் எத்தனை பாடசாலைகளில் ஆசிரியரின் கற்பித்தலின் போது கவனத்திற் கொள்ளப்படுகிறது. எத்தனை ஆசிரியர்கள் தனது கற்பித்தலின்போது மாணவர் சார்பாக சிந்திக்கின்றனர் என்பதனடிப்படையில் மாணவரின் தனியாள் நடத்தை வேறுபாடுகள் மீதான ஆசிரியரின் செயற்பாடு பாடசாலைகளில் இடம்பெறுகிறதா? என்ற கேள்வி எழுகிறது.

மாஸ்லோவின் கருத்தின்படி மனிதத் தேவைகள் கீழ் இருந்து மேல் நோக்கிச் செல்கிறது. அத்தோடு ஒப்பீட்டு ரீதியில் கீழ்க் காணப்படுபவை முக்கியத்துவம் அதிகமுடையதாயும் மேலே செல்லச்செல்ல முக்கியத்துவம் குறைந்து செல்வதாகவும் காணப்படுகிறது. பசி, தாகம், சுவாசம், கழிவகற்றல். நித்திரை, ஓய்வு, பாலியல், வலி, நோய் போன்றவை உடலியல் தேவைகளாகும். இத்தேவைகள் சரியாக நிவர்த்திக்கப்படும்போதே ஏனைய தேவைகள் நோக்கி நகர முடியும். இவை கோட்பாட்டு ரீதியான விளக்கமாக மட்டும் கொள்ளாமல் மாணவர் சார்பாக நடைமுறையோடு தொடர்புபடுத்தி ஆசிரியர்கள் அவதானிக்க வேண்டும்.

"பிள்ளை கற்றலில் ஈடுபடுவதற்கும், தொடர்வதற்கும் தேவையான ஊக்கப்படுத்தல்களை (Motivation) ஆசிரியர்வழங்குவது முக்கியம்" என விகொஸ்கி (Vygotskay,1978) கூறுவர். கற்பித்தல் நடவடிக்கைகளின்போது மாணவரின் தன்மைக்கேற்ப அவர்களின் தனியாள் வேறுபாடுகளை அறிந்து ஊக்கம் வழங்கும் போதே மாணவரின் கற்றலினதும் ஆசிரியரின் கற்பித்தலினதும் நோக்கம் நிறைவு பெறும். உளவியலாளர் ஹெப்(Hebb) என்பவர் "உயிர்களை செயற்படத்தூண்டும் நிகழ்ச்சிகளே ஊக்கிகள்" என்கிறார். எனவே மாணவரின் தனியாள் வேறுபாடுகளை அறிந்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஊக்குவிப்பை வழங்கும்போது ஆசிரியரின் கற்பித்தல் பூரணத்துவம் அடையும்.

பிள்ளைகள் ஒவ்வொருவரும் கல்வி பெறும் உரிமையுடையவர்கள் என 1948ஆம் ஆண்டு அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தின் 26ஆம் உறுப்புரை வலியுறுத்துகிறது. பிறப்பில் அல்லது பிறப்பின் பல்வேறு காரணங்களினால் பிள்ளைகளின் அங்கக்குறைபாடுகள் உடையவர்களாகின்றனர். இது ஓரளவாகவோ அல்லது முழுமையாகவோ இருக்கலாம். எனினும் பாடசாலைக்கு உள்ளீர்க்கப்படக் கூடியவர்களுக்கு எவ்வித வேறுபாடுகளையும் காட்டப்படலாகாது என அவ்வுறுப்புரை கூறும். அதனடிப்படையில் தனியாள் அக்கறை தொடர்பான பார்வை சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாக உள்ளது.

மாணவர்களின் நடத்தைகளை அறிந்து தேவையும் அவசியமும் சாத்தியமும் கருதி மாணவரின் இயல்புகள், ஆசிரியரினது இயல்புகள், சூழல் காரணிகள், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் என்பவற்றிற்கிடையேயான இடை வினைகளைக் கருத்திற்கொண்டு பரஸ்பரம் கற்பித்தலுக்கும் மாணவரின் தனியாள் வேறுபாடுகளுக்கும் இடையில் சீராக்கம் செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது. எனவே மாணவரின் தனியாள் நடத்தைகள் மீது ஆசிரியரின் கவனம் குவியப் படுத்தப்படுவதோடு தனது கற்பித்தலை மேற்கொள்வது இன்றியமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**


- ➢ சந்தனம்,எஸ்.(1987).கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள்,சென்னை பழனியப்பா பிரதர்ஸ்
- ➢ ஞானரத்தினம், க..(2013,மாசி).ஆசிரிய வாண்மையில் புதிய தோற்றம்: பார்வை,8(8),104-112.
- ➢ தேசியகல்வி ஆணைக்குழு அறிக்கை.(1992).இலங்கை அரச அச்சக திணைக்களம்,கொழும்பு தேசிய கல்வி நிறுவகம்.(1990).விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள்.இலங்கை.தொலைக்கல்வி நிறுவகம்.
- ➢ பக்கீர்.ஜ/பார்,ப.க.(2004).வெற்றிகரமான கற்பித்தல், வகுப்பறை முகாமைத்துவம்,அக்கறைப்பற்று.
- ➢ பக்கீர்.ஜ /பார்,ப.க. (2014,மாசி).வகுப்பறைக் கற்பித்தலும் மாணவர் ஒழுங்கும்:
- ➢ பார்வை,1(8), லோகேஸ்வரன்,ஆர்.(2008,ஜூலை).சமகால ஆசிரியர் நோக்கு:அகவிழி.11(7),5-10.
- ➢ ஹிர்பஹான்,எம்,எம்..(2012,எப்பிரல்) மாஸ்லோவின் தேவைக் கொள்கையும் வகுப்பறை கற்றல் கற்பித்தலும்:அகவிழி.12(5),21-27.
- ➢ ரூபசிங்கம்,செ.(2008).சமூக விஞ்ஞான ஆய்வுகள்: கொழும்பு.
- ➢ http://cd1.edb.hkedcity.net/cd/id/en/stratgy/index.html.
- ➢ http://cd1.edb.hkedcity.net/cd/id/en/home/index.html.


●●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கால பாடசாலை முறைமையும் ஒழுக்க விழுமிய பங்களிப்பும்

எஸ்.சற்குணராஜா B.COM , P.G.D.E , M.A , P.G.D.E.M (R) SLPS 2
அதிபர்
மமா/வ இராகலை தமிழ் மகா வித்தியாலயம்

இலங்கையின் கல்வி அமைப்பில் தற்கால பாடசாலைகளை பாராளுமன்ற கல்விச் சட்டங்கள் சுற்றறிக்கைகள் என்பன கட்டுப்படுத்தும் அரசாங்க பாடசாலைகள் எனவும் ஒருசில அரச சட்டங்களுக்கு கட்டுப்பட்டு உள்நாட்டு பாடத்திட்டத்தினையும் சர்வதேச பாடத்திட்டத்தினையும் போதிக்கும் சர்வதேச பாடசாலைகள் என்ற தனியார் கல்லூரிகள் தற்கால பாடசாலை முறைமையில் காணலாம்.

ஆரம்ப கல்வி அமைப்பில் கல்வியை போதிக்கும் அமைப்புகளாக

1. குரு குலகல்வி
2. பிரிவெனாக்கள்
3. மிசனரிகள்

என்பன காணப்பட்டன.

குருகுலக்கல்வி அமைப்பில் கற்க விரும்பும் மாணவரும் கற்கத் தூண்டும் பெற்றாரும் குருவைத் தேடிச் சென்று குருவின் செல்வாக்கை பெற்று அவருக்கு பணிவிடை செய்து அதன் மூலமாக திருப்தி கொண்ட ஒரு ஒழுக்கத்துடன் சார்ந்த கற்பித்தலுடன் போதனைகளை மேற்கொண்டார். இங்கு கற்ற மாணவர் தொகை சிறியதாக காணப்பட்டதுடன் வித்தைகள், யுக்திகள் என்பன ஊடாக ஒழுக்க விழுமியங்கள் மாணவருக்கு கற்பிக்கப்பட்டன. குருவைத் தேடிச் சென்ற மாணவருக்கு மட்டும் கல்வி வாய்ப்பு கிட்டியது. பண்டைய கல்வி முறைமையில் இந்திய பாரம்பரியங்கள் காணப்பட்டன. ஆசிரியர்கள் இலங்கை வந்ததன் காரணமாக குருகுலக் கல்வி முறைமை காணப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பௌத்த சமயத்தின் வருகை காரணமாக பௌத்த கல்வி பன்சல விகாரை மூலமாக ஆரம்பக்கல்வியும், பிரிவெனாக்கள் மூலம் இடை நிலைக்கல்வியும், மகாவிகாரை மூலமாக உயர்கல்வியும் வழங்கப்பட்டன. இக்கல்வி மூலமாக மாணவரிடம் நல்லொழுக்க நற்பண்புகள் வளர்க்கப்பட்டதுடன் சமய வாழ்க்கை திட்டமிட்டப்படி வாழ வழி காணப்பட்டன. இதனடிப்படையில் கலாசார பண்புகள் அடுத்த தலைமுறைக்கு வழிப்படுத்துவதற்கான அடித்தளம் இடப்பட்டது. இதன் மூலம் மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவசியமான ஒழுக்கம் சார்ந்த விடயங்கள் கல்வியின் மூலமாக வழங்கப்பட்டன.

சுதேச கல்வி முறைமைகள் இவ்வாறு காணப்பட்ட போது இலங்கையை தமது கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்து ஆட்சி செய்த விதேசிகள் கல்வி முறைமை மிசனரிகளால் முன்னெடுக்கப்பட்டது. தற்காலக் கல்வி முறைமை (கி.பி 1505– 1658) ஆரம்பமாகின்றது. பின்வரும் மிசனரிக் குழுக்கள் போர்த்துக்கேய காலத்தில் கல்வியில் ஆதிக்கம் செலுத்தின.

1. பிராசிஸ்கன்
2. ஜொயஜட்ஸ்
3. டொமினிக்கன்
4. ஒகஸ்டினியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் மிசனரிகள் பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டிருந்தன.

1. சுதேசிகளை கத்தோலிக்க மதத்திற்கு மாற்றுதல்
2. கத்தோலிக்க சமயத்தை தழுவியவர்களுக்கூடாக தமது வியாபாரத்தை விருத்தி செய்தல்
3. மதத்தின் ஊடாக பிரதேச மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளல்.
4. கத்தோலிக்க மதத்தினை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மாத்திரம் எண் எழுத்து வாசிப்பு கற்பித்தல்
5. போர்த்துக்கேய கலாசாரத்தை தழுவிய மக்கள் குழுவினர் உருவாக்கப்பட்டனர்.

மேற்கூறிய விடயம் ஒல்லாந்தர் காலத்தில் பின்வருமாறு காணப்பட்டது.

1. புரட்டஸ்லாந்து மதம் பரவப்பப்பட்டது.
2. புரட்டஸ்லாந்து தழுவியவர்களுக்கு எழுத்து எண் வாசிப்பு கல்வி வழங்கப்பட்டது.
3. தாய்மொழி மூலம் மதம் பரப்பும் போதகர்கள் ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டமை.
4. அரசியலை உறுதிப்படுத்த கல்வி பிரதானமாக பயன்படுத்தப்பட்டது.

இலங்கையை ஆண்ட பிரித்தானியர் காலத்தில் கல்விக்குறிக்கோளாக

1. மிசனரிகள் ஆதரவுடன் சமயத்தினைப் பரப்புதல்
2. ஆங்கில கலாசாரத்தைப் பரப்புதல்
3. ஆங்கில ஆட்சிக்கு சார்பாக மக்களை திசைப்படுத்தல்

மேற்கூறியவாறு மிசனரிகளைக் கொண்டு ஆங்கிலேயர் கல்வியை இந்நாட்டில் போதித்தாலும் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரான காலப் பகுதியிலும் 1998 தொடக்கம் தற்காலம் வரை பல கல்விச் சட்டங்கள், சீர்திருத்தங்கள், பாராளுமன்ற சட்டங்கள், சிறுவர் உரிமைச்சட்டங்கள், பொதுச்சட்டங்கள் என்ற வகையில் பல மாற்றங்களை கல்வி சந்தித்துள்ளது. கற்பித்தல் முறைமையிலும் கற்றல் முறைமையிலும் பல வெளிநாட்டு அனுபவங்கள் கள ஆய்வுகள் முன்மாதிரிகள் என இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டன. ஆசிரியர் மையக் கல்வியானது விமர்சிக்கப்பட்டு மாணவர்மையக் கல்விதான் மாணவரின் ஆளுமைகளையும் திறன்களையும், வெளிக்கொணரும் என்ற முடிவுக்கு வந்து அது தொடர்பான பல மாற்றங்கள் இலங்கையின் கல்வி முறைமைக்குள் கொண்டு வரப்பட்டு பாடசாலைகளும் அதற்கு ஏற்றவாறு மாற்றம் செய்யப்பட்டன.

உலக மயமான கல்வி முறைமைகள் மிகவும் விரைவாக நாடுகளின் கல்வி முறைமைகளுக்குள் உள்வாங்கக் கூடியவாறு இடமளிக்கப்பட்டன. அரச தனியார் பாடசாலை கல்வி முறைமைகளுள் பல புதிய பாடவிதானங்கள் புதிய பாட உள்ளடக்கம் என்பன விரைவாகப் புகுத்தப்பட்டன. தனியார் பாடசாலைகளும் அரச பாடசாலைகளும் உலக சந்தைக்கு உலக கேள்விக்கு ஏற்ப மாணவர்களை தயார்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டன.இதன் காரணமாக பெற்றோர்களும் பிள்ளைகளும் போட்டியான உலகில் தன் எதிர்காலப் பரம்பரையை வழி நடாத்த வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இன்று தரமான கல்வி வினைத்திறன் மிக்க பாடசாலை என்ற வகையில் மாணவரின் பெறுபேற்றுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் கொடுக்கும் பெற்றோரும் பெரும் எதிர்பார்ப்பை கொண்ட அரசும் சமூகமும் பாடசாலையின் அடைவு மட்டத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

பாடசாலையில் மாணவர்கள் கற்றல் கற்பித்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதோடு ஆளுமை விருத்திக்கு புறக்கிருத்திய செயற்பாடுகள் / இணைப்பாடவிதான செயற்பாடுகள் அரசால் வடிவமைக்கப்பட்டு பாடசாலைகளில் அமுல்படுத்த வேண்டும் என சுற்றறிக்கைகள் மூலமாக கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் பெயர் பெற்ற பாடசாலைகள் எனக் குறிப்பிடப்படும் பாடசாலைகள் அதிக பௌதிக ஆளணி வள வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் மாத்திரமே இணைப்பாடவிதான செயற்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. பெரும்பாலான பாடசாலைகளில் அரசு எதிர்பார்க்கும் பரீட்சை அடைவு மட்டத்திற்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கின்றதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

இன்று பாடசாலைகளில் மாணவர்களுக்கு உள ரீதியாகவோ, உடல் ரீதியாகவோ தண்டனை வழங்க கூடாது என்பதுடன் மாணவர்களை வழி நடாத்த ஆலோசனை சேவை அலகு தாபிக்கப்பட வேண்டும் எனவும் கட்டாயப்படுத்தப் பட்டுள்ளது. கல்வி கற்ற பெற்றோர்களை கொண்ட சமூகத்தில் பெற்றோர்கள் தமது பிள்ளையின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் பிள்ளையின் ஒழுக்க விடயங்களிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

ஆனால் இன்று கல்வி விருத்தி பெறாத குடும்பங்களைக் கொண்ட சமூகங்களில் பெற்றோர் தொலைக்காட்சி, கைத்தொலைபேசி, கணனி, செட்லைட் போன்றவற்றின் ஆளுமைக்கு அடங்கியவர்களாக உள்ளனர். இதன் காரணரமாக இவற்றின் செல்வாக்கு அக்குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகளிடம் அதிகம் காணப்படுகின்றது. இன்று நாட்டின் பெரும்பாலான பாடசாலை முகாமை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களின் ஒழுங்கற்ற விடயங்களில் அதிக பிரச்சினையைச் சந்திக்கின்றனர். குறிப்பாக

1. மாணவர் உடை
2. மாணவர் சிகை அலங்காரம்
3. மாணவர் நடத்தை
4. மாணவர் சொற்பிரயோகம்
5. நடத்தை பிறழ்வு
6. பெரியோரை மதிக்காமை
7. கீழ்ப்படியாமை
8. காதல் தொடர்பான விடயங்கள்

போன்றன விடயங்கள் இன்றைய பாடசாலை முறைமைக்குள் பெரும் சவாலாகவுள்ளன. இவ் ஒழுக்க விழுமிய பண்புகள் பாடசாலை கலாசாரத்திற்குள் தாக்கத்தினை செலுத்தும் பிரதான விடயங்களாக உள்ளன.

மாணவர்களை உடல் உளரீதியாக தண்டிக்கக் கூடாது என்பது மிகவும் சிறப்பான விடயம் இவ்விடயம் அனைவராலும் அறிந்திருக்க கூடியதாகவுள்ளது எனினும் இவ்அம்சத்தினை தமக்கு சார்பாக மாணவர்களும் பெற்றோர்களும் பயன்படுத்திக் கொள்வதனைக் காணலாம். பெரும்பாலான அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலை சமூகம் என்பன தமது நேரத்தின் பெரும் பகுதியை மாணவர்களின் ஒழுக்கம் சார்ந்த விடயங்களுக்குச் செலவிட வேண்டியுள்ளன. பாடசாலை தொடர்பான சம்பவங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் தொடர்பான சம்பவங்கள் பெருமளவு ஊடகங்களில் வெளிவந்த வண்ணம் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் உயிரிழக்கவும் இவ் ஒழுக்கம் சார்ந்த விடயங்கள் காரணமாகவுள்ளன. இலங்கையின் தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகள் அனைத்திலும் ஒழுக்கம் தொடர்பான சட்டதிட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படும் போது பல பிரச்சினைகளை பாடசாலை முகாமை எதிர் கொள்ளவேண்டியுள்ளது.

எனவே பாரம்பரிய கல்வி இலக்குகள் பாரம்பரிய கற்பித்தல் முறைகளில் ஏற்பட்ட மாற்றம் கல்வியின் போக்குகளில் மாற்றம் ஏற்படக் காரணமாக அமைந்ததுடன் உலக பூளோக மயமாக்கல் கல்விக்கு ஈடாக பாடசாலை முறைமை மாற்றியமைக்கப்பட்டதன் காரணமாக ஒழுக்க விழுமியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பண்பு முன்னிலைப்படுத்தப்பட்டதன் காரணமாக இன்று பாடசாலை முறைமை உள்ளிட்ட அரச எதிர்பார்ப்பு என்பன ஒழுக்க விழுமியங்களுக்கு தற்கால பாடசாலை முகாமை முக்கியத்துவம் கொடுக்க முடியாதுள்ளன. என்பதும் ஒழுக்கக் கல்வி பாடசாலைகளில் இருந்து விலகிச் செல்லும்போக்கு காணப்படுகின்றது. இதன் காரணமாக தற்கால பாடசாலை முறைமை ஒழுக்க விழுமியங்களை அமுல்படுத்தப்படுவதால் பல சவால்களை எதிர்காலத்தில் சந்திக்க வேண்டிவரும்.

●●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தலுக்கேற்ற வகுப்பறை முகாமைத்துவம்

திரு.ப.சந்திரசேகரன்
அதிபர்
மமா/வ ஹரஸ்பெத்த தமிழ் வித்தியாலயம்
ஹரஸ்பெத்த
2017.11.10

இன்றைய நவீன உலகில் வகுப்பறை கற்றல் - கற்பித்தல் என்பது பெரும் சவால்களைக் கொண்டுள்ளது. அச்சவால்களை வெற்றி கொண்டு விளைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தலை வகுப்பறையில் ஏற்படுத்த வேண்டுமாயின் **வகுப்பறை முகாமைத்துவம்** பற்றிய போதிய விளக்கம் அசிரியர்களுக்கு அவசியமாகின்றது.

அலுபவமற்ற இளம் ஆசிரியர்கள் முகம் கொடுக்கும் கஷ்டமான பணி தமது வகுப்பறை ஒழுங்கை பேணுவதாகும்.இது ஆரம்ப,இடைநிலை மற்றும் உயர் வகுப்புகளுக்கேற்ப சில வேறுபாடுகளை கொண்டிருந்தாலும் பொதுவாக புதிய இளம் ஆசிரியர்கள் இவ்வெல்லா நிலைகளிலும் பெரும் பாலும் இடர்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

கடந்த ஓரிரு தசாப்தங்களாக இளையோர் தம்மை வழி நடாத்துபவர்கள் மீதுகொண்டிருக்கும் மனப்பாங்குகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் வகுப்பறை முகாமைத்துவம் இன்னும் சிக்கலாகியுள்ளது.சில மாற்றங்கள் காரணமாக மாணவர்களின் சுயநம்பிக்கை விருத்தியடைந்துள்ளது. இது மகிழ்ச்சிக்குரியதாக இருப்பினும் மாணவர்களிடத்தில் தம்மை வழிநடத்துபவர்களை மதிக்காத தன்மை, கீழ்பணியாத தன்மை,வன்முறை போன்ற மனப்பாங்குகள் மேலோங்கி இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.இதனால வகுப்பறை மட்டுமல்லாது பாடசாலை வாழ்க்கையும் சிக்கலாகியுள்ளது. வகுப்பறையில் ஓர் உடன்பாடான கற்றல் சூழலை பேணுகின்ற பொறுப்பை கொண்டுள்ள ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்ட சூழ்நிலை காரணமாக கடுமையான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்வாறான மாணவர்களை கொண்ட வகுப்பறையில் காணப்படுகின்ற சில எதிர்மறையான நடத்தைகள் மோசமான கட்டொழுங்கு பிரச்சினைகளாக மாறுவதற்கு முன்னர் நீக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் அத்தகைய எதிர்மறையான நடத்தைகள் நீக்கப்படலாம். எனவே இதனை கற்றல் - கற்பித்தலுடன் ஒன்றிணைந்த செயற்பாடுகள் மூலம் வகுப்பறை கட்டுப்பாட்டை ஸ்தாபித்துகொள்ளல் முக்கியமாகும்.

இதற்கு பின்வரும் சில நிறுவன நடைமுறைகளை பின்பற்றுவதன்மூலம் (புதிய) ஆசிரியர்கள் வகுப்பறை முகாமைத்துவத்தை ஸ்தாபித்துக்கொள்ளலாம்.

**1.தாம் செல்லும் பாடசாலையின் கொள்கைகளை தெரிந்துகொள்ளல்.**

முதன் முதலில் மாணவர்களை வகுப்பறையில் சந்திப்பதற்கு முன்னர் பமாணவர் நடத்தை மற்றும் கட்டொழுங்கு நடைமுறைகள் பற்றிய பாடசாலை கொள்கைகளை ஆசிரியர் பரீச்சயமாக்கி கொள்வதுடன் கட்டொழுங்கு தொடர்பாக ஆசிரியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் மாணவர்களிடம் பாடசாலையின் எதிர்பார்ப்புகள் என்ன என்பதை தெரிந்துகொள்ளல்.

**2.முதல் வகுப்பறை சந்திப்பை சிறப்பானதாக மாற்றிக்கொள்ளல்.**

மாணவர்கள் ஓர் ஆசிரியரை முதன்முதல் சந்திக்கும் போது அவரைப்பற்றிய தமது மனப்பதிவுகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் அமைதியாக உட்கார்ந்திருப்பார்கள், நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்வார்கள், கேட்கின்ற கேள்விகளுக்கு பதிலளிப்பார்கள். இதனால் ஆசிரியர்கள் தாம் ஒரு அருமையான வகுப்பிற்கு வந்திருப்பதாக எண்ணி தமது முன்னெச்சரிக்கையை தளர்த்தி விடக்கூடாது. ஒரு வாரத்திற்குள் மாணவர்கள் ஆசிரியர்களை சோதிக்க தொடங்குவார்கள் இச்சந்தர்ப்பத்தில் ஆசிரியர்கள் அந்த வகுப்பறைக்கு ஏற்ற வகையில் தமது வகுப்பறை தொடர்பான ஒழுங்கு விதிகளை ஸ்தாபித்துக்கொள்ளல் வேண்டும்.

**3.வகுப்பறை விதிகளை ஸ்தாபித்தல்**

மாணவர்களின் நடத்தையை வழிப்படுத்தும் வகுப்பறை ஒழுங்கு விதித் தொகுதி ஒன்றை ஸ்தாபித்தல் வேண்டும். ஒவ்வொரு விதியையும் மாணவர்கள் விளங்கி அதன் தேவையை ஏற்றுக்கொள்ளக் கூடியவகையில் அவை பற்றி அவர்களுடன் வகுப்பறையில் கலந்துரையாடுதல் வேண்டும். இவ்விதிகள் கூடியவரை சிறியதாக இருப்பதுடன் அவை பிறரை மதித்தல், இரைச்சலை தவிர்த்தல், பாடத்தை அவதானித்தல், வீட்டு வேலைகளை ஒழுங்காக செய்தல், வகுப்பறை சுத்தம், ஒழுங்கு அமைதி, சுயகற்றல் போன்றனவையாக இருக்கலாம்.

**4.பாடங்களை மிகையாக திட்டமிடல்.**

முதல் ஓரிரு வாரங்கள் ஆசிரியர்கள் தமது பாடங்களை மிகக் கவனமாக திட்டமிடுவதுடன் அது மாணவர்களின் நல்ல மனப்பதிவுகளை உருவாக்க கூடியதாக இருத்தல் வேண்டும். நீங்கள் உங்களின் ஆற்றல் தன்னம்பிக்கை, கற்பிக்கும் திறமை என்பவற்றில் நம்பிக்கை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**5.மாணவர்களின் பெயர்களை அறிந்துகொள்ளல்**

வகுப்பறையில் மாணவர்களின் பெயர்களை விரைவாக அறிந்துகொள்ளக்கூடிய வகையில் ஆசன ஒழுங்கமைப்பை ஏற்பாடு செய்தல் வேண்டும். அத்துடன் மாணவர்களை பெயர் சொல்லி அழைத்தல் அவர்களுக்கு மகிழ்ச்சியை தரும்.அத்துடன் சூழ்நிலைக்கு ஏற்ப அதனை பயன்படுத்தவும் வேண்டும். உதாரணமாக **"அனைவரும் கதைப்பதை நிறுத்தி கணக்கினை செய்து முடிப்போம் என்பதை விட துசி கதைப்பதை நிறுத்தி கணக்கினை செய்துமுடி"** என்பது கூடிய விளைத்திறனை தரும்.

**6.உறுதியாகவும் ஒரே மாதிரியாகவும் இருத்தல்**

ஆசிரியர் ஒருவர் எப்போதும் .உறுதியாகவும் மாணவர்களுடன் நட்பாகவும் ஆதரவாகவும் இருத்தல் வேண்டும். மாணவர்கள் ஆசிரியருடன் இருக்கும் போது தாம் பாதுகாப்பாக இருப்பதாக உணரும் ஒரு சூழலை உருவாக்குதல் வேண்டும். புதிய வகுப்பின் ஆரம்பத்திலே அல்லது வருட ஆரம்பத்திலே வகுப்பறை ஒழுங்கில் முறையாகவும் உறுதியாகவும் இருப்பின் பின் ஆறுதலாக இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைத்தவிர பொதுவாக வகுப்பறையில் சிறந்த முறையிலான கற்றல்-கற்பித்தல் நடைபெற வேண்டுமாயின் பின்வரும் விடயங்களிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

- தமது வகுப்பறையின் மீது ஆசிரியருக்கு சிறந்த கட்டுபாடு இருத்தல் வேண்டும்.இதன் பொரு சர்வாதிகாரியாக நடந்து கொள்ள வேண்டும் என்பதல்ல. வகுப்பை கட்டுபடுத்தாமல் கற்பிக்க முயன்றால் கற்பித்தலின் தரம் வீழ்ச்சியடையும் அத்துடன் திட்டமிட்டவாறு கற்பிக்க முடியாமல் போகும்.
- மாணவர்களை மரியாதையுடன் நடத்த பழகுங்கள் அது ஆசிரியரின் மரியாதையை மாணவரிடத்தில் அதிகரிக்கும்.
- கட்டொழுங்கை பேண சிறு தண்டனைகளை வழங்கலாம் ஆனால் அது வழங்கப்பட்டதன் நோக்கத்தை அடையகூடியதாக இருக்க வேண்டுமே தவிர வெறுப்பையோ அல்லது குரோதத்தையோ உருவாக்குவதாக இருக்ககூடாது. அது இயற்கையானதாக இருக்க வேண்டும்.ஆத்திரத்தில் தண்டனை வழங்க முற்பட கூடாது.
- மாணவருடன் நட்புடன் பழக வேண்டும் ஆனால் அது எல்லையை மீறி விடக் கூடாது.
- வகுப்பறையில் நியாயமாக நடந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.
- வகுப்பறையில் பிரச்சினைகள் எழும் போது அமைதியாக அதனை தீர்க்க முயலுங்கள்.மாணவர்களும் அதனையே பின்பற்ற முயல்வார்கள்
- மாணவர்கள் விடயத்தில் நடவடிக்கை எடுங்கள். ஆனால் எதிர் வினைகள் காட்டாதீர்கள். மாணவர்களுக்கு எப்போதும் தெரிவுகளை வழங்குங்கள். அத்துடன் தொடர்ந்து அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.
- ஆசிரியர் சகல மாணவர்களையும் எல்லா நேரங்களிலும் அவதானிக்க கூடியவாறு வகுப்பறையில் தமது இடத்தை தெரிவு செய்ய வேண்டியதுடன் வகுப்பறையில் எப்போதும் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பதை தவிர்த்தல் வேண்டும்.
- வகுப்பறையை ஒழுங்காகவும் அழகாகவும் கவர்ச்சிகரமானதாகவும் மாணவர்நேயமாகவும் வைத்திருக்கவும்.
- மாணவர் நடத்தைகள் தொடர்பான எதிர்பார்ப்புகளை இனங்கண்டு அவற்றை கிரமமமாக அவர்களுக்கு அறிவிப்பதுடன் அவற்றை காட்சிபடுத்துவதுடன் தொடர்ச்சியாக கண்காணிக்கவும் வேண்டும்.
- கற்றல் - கற்பித்தலின் போது தெளிவற்ற விடயங்கள், தலையீடுகள் ஆகியவற்றை முடிந்தளவிற்கு தவிர்க்கப்பட வேண்டும்.
- ஓர் ஆசிரியரின் கட்டொழுங்கு முகாமை பாங்கினை மற்றொருவர் பிரதிபண்ணாமல். தமது வகுப்புக்கு ஏற்ற பொருத்தமான கட்டொழுங்கு முகாமை பாங்கினை பேணுதல் இன்றியமையாதது.

எனவே விளைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தலை வகுப்பறைகளில் பேணி கொள்வதற்கு முறையான வகுப்பறை முகாமைத்துவத்தினை ஒவ்வொரு ஆசிரியரும் ஒழுங்குபடுத்தி கொள்ள வேண்டும். கற்றல் - கற்பித்தல் போல இதுவும் தனித்துவமானது.

••••


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறாவின் தீர்ப்பு

-மல்லிகை ஆனந்த்-
மமா/வ/மகாஊவா தமிழ் வித்தியாலயம்

சோடிப் புறாவுடன்
கூடியே மகிழ்வுடன்
மாடப் புறாவொன்று
அவற்றுடன் அன்பாய்
கூட்டிலே வாழ்ந்தன
குஞ்சுப் புறாக்களிரண்டு

கொஞ்சிடும் மாடப்புறாக்கள்
அவை கொஞ்சமும் அச்சமின்றி
குஞ்சுப் புறாக்களிரண்டுடன்
வஞ்சமில்லா நெஞ்சங்கொண்டு
வாழ்ந்தன மஞ்சங் கண்டு
கோயிலின் உச்சிக் கோபுரத்தே

அவ்வப்போதவை பறக்கும்
அதிரடியாய் வான்வெளியில்
சுதந்திரக் காற்றை சுவாசித்தபடி
சில பல தருணங்களில்
அவை நகைத்த கதையுமுண்டு
வையத்து மானுடர் நிலைகண்டு

பார்த்துப் பலரை பரிகசித்து
உற்றுச் சிலரை சிலாகித்து
சினந்து விரைந்து சிறகடித்து
திணையா லுயர் மனிதருள்ளே
திரிபுகளு பிளவுகள் பிணக்குகள்
உண்டோ இவ்வள வென்று

கூட்டமாய் கூடிய மனிதரும்
பேசிய குதர்க்க மொழிகளும்
கேட்டே அதிர்ந்தன புறாக்கள்
கீழோர் மேலோர் தாழ்வுயர்வு
கொடுமை கொடூரம் அநீதிகள்
கண்டே உள்ளம் கசிந்தன

ஆளுக்கொரு சாதி பிரித்து
சாதிக் கொரு நீதி வகுத்து
ஆண்டனர் மாண்டனர் வெறிபிடித்து
ஊர் எல்லையிலே ஒரு கூட்டம்
உயிரைக் கொடுத்தே சாய்ந்தது
எல்லைத் தகராறில் கெடுபிடியாம்

அடித் துடைத்து நொறுக்கினர்
அநியாயமாய் பாபர் மசூதியை
இடித்து சரித்து சாய்த்தனர்
இட்டுத் தீயைக் கொழுத்தியே
இலக்காரம் செய்தனர் இராமர் கோயிலை
ஏரித்துச் சாம்பலும் ஆக்கினர்

இழிவுகள் புரியும் இவர்களோ
இகமதில் உயர் திணையினர் !
என்றே வினவின இளைய புறாக்கள்
அழிவுகள் பண்ணும் இவரெலாம்
அகிலத்தின் மானிடப் பிறவிகளோ?
என் றலுத்தன மொத்தப் புறாக்கள்

மாண்புடையார் என்பார் மண்ணில்
எவருளரோ கூறுங்கள் எனக் கேட்டது
இளைய புறாவொன்று தாயிடத்தில்
எவருளார் மனிதரென தேடுகிறேன்
எங்ஙனம் உரைப்பேன் அவர் மாண்பு
என்றது பிள்ளையிடம் தாய்ப்புறா

எவருமில்லை மேலோர் மண்ணில்
இறுதி தொகுப்புரைத்தது தலைமைப்புறா
அறுதியாய் ஒருதினம் மேல்வருவார்
மீதி நாளெல்லாம் அன்னார்ந்தே
நோக்கிக் கோபுரம் கைதொழுவார்
எந்நாளும் கோபுரத்தில் மேலோர் நாமே

••••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## What makes an effective teacher?

**R. Nesarajah**
**Co-ordinator (Bilingual Education/Monitoring)**
**Zonal Education Office**
**Walapane.**

Teaching is one of the world's most challenging occupations. Teachers hold a unique position in our society. Ask yourself whether you have the characteristics of an effective teacher. If you feel that you have the characteristics, consider ways to improve and learn more on how to become an effective teacher.

An effective teacher makes good use of instructional time and inspires students to do well and to know more. Each and every student in the class has to feel comfortable. The classroom has to be helpful to learning and has the proper time arrangement so that learning easily takes place.

Being an effective teacher has to be able to handle every situation that comes our way. We surely encounter different problems regarding pupil's attitudes and others. Teacher should be flexible to take control of any situation. Teachers are values-oriented mentor.

Effective teachers have characteristics: enthusiastic, creative and positive in teaching and learning process. You can express these characteristics in different ways, but typically this means that, most time of the day, you truly want to be in classroom and see your pupils' learning.

Being organized in the classroom is another key part of an effective teacher. By organizing and planning each day, the teacher surely can present the lesson in effective manner. When the teacher is well organized in the classroom, pupils will observe, imitate and apply it in their daily lives.

As teacher, one must be honest to himself, to the school and to his profession. A teacher must always be truthful in whatever he does or says.
Some more tips to be good teacher. A good teacher

1. respects students.
2. creates the good learning opportunity for the students.
3. has the characteristics of sincere, enthusiastic and caring.
4. sets high expectations for all students.
5. has his own love of learning
6. has a skill of leadership.
8. collaborates with colleagues.
9. maintains professionalism in all areas
10. maintains disciplines in career.

*R. Nesarajah*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் பிரச்சினைகள் தீர்த்தலில் தலைமைத்துவத்தின் வகிபாகம்.

**S.Thuraiyarashan ISA-Maths**
**MATE(international), B.A, PGDE, Maths Trd.**
**Walapane Zone.**

நவீன உலகில் தலைமைத்துவம் சம்பந்தமான எண்ணக்கரு எல்லா வகையான நிறுவனங்களிலும் பிரபலம் பெற்று வருகின்றது. எந்தவொரு நிறுவனத்தின் இலக்கையும் இலகுவில் அடைந்து கொள்வதற்கு தலைமைத்துவமே வகை செய்யும் என்பதனால் சகல நிறுனங்களும் தமக்கான தலைமைத்துவத்தின் மீது அக்கறை செலுத்தத் தொடங்கி விட்டன. அதனடிப்படையில் தலைமைத்துவம் என்றால் என்ன? என்பது தொடர்பாக தலைமைத்துவத்திற்கான வரைவிலக்கணங்களினை நோக்குவோம்.

நிறுவனங்களின் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அதனுடன் தொடர்புபட்டவர்களை வழிநடத்திச் செல்லும் பணியான தலைமைத்துவத்திற்கு பல அறிஞர்கள் பலவகையான வரைவிலக்கணங்களை வழங்கியுள்ளனர்.

- "எவரேனும் ஒருவர் ஏனையோருக்கு முன்மாதிரியாக நின்று செயற்படுகின்றாரோ அவரால் மேற்கொள்ளப்படும் கருமம் தலைமைத்துவம்" என ஸ்புறூட்ல் எனும் அறிஞர் தலைமைத்துவத்தை வரையறுத்துள்ளார்.

- "தூய்மையாகவும் சிக்கனமாகவும் செயற்பட்டு தன்னைச் சார்ந்துள்ள மக்கள் கூட்டத்தின் மேல் அல்லது குழுவின் மேல் நேர்கணியமாகச் செல்வாக்கை செலுத்தக்கூடிய கருமம் எதுவோ அதுவே தலைமைத்துவம்" மேர்வின் இசோ என்ற அறிஞர் பலவகையான வரைவிலக்கணங்களை வழங்கியுள்ளார்.

- "தலைமைத்துவம் என்பது ஒரு நிலையில் உடமையாகவும் தனிநபரின் குணவியல்பாகவும், நடத்தையின் கூறாகவும் கொள்ளப்பட முடியும்" என டானியல்கற்ஸ் றோபேட் என்கன் ஆகியோர் தலைமைத்துவத்தை வரையறுத்துள்ளனர்.

- "தலைமைத்துவம் என்பது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட் இலக்கை அடைவதற்கு தனக்கு கீழ் இயங்கும் பின்பற்றுவோரை அல்லது உதவியாளர்களை நெறிப்படுத்தும் கருமம்" என கூன்ஸ் ஓடோன்ஸ் ஆகியோர் வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.

இவ்றவாறு தலைமைத்துவத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் பல்வேறு வரைவிலக்கணங் களினூடாக நிறுவனங்கள் தமக்கென உருவாக்கியிருக்கும் இலக்கை அடைவதற்கு ஏனையோரை வழிப்படுத்தும் கருமமாகத் தலைமைத்துவம் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு இலக்கு என்பதனையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூர நோக்கம் - Vision
இலட்சிய நோக்கு - Mission
நோக்கம் - Objective
குறிக்கோள் - Goal

என இலக்கினை நான்காக கொள்ளப்படுவதனால் அதனை அடைய நிறுவனங்களில் பணியாற்றும் உதவியாளர்களையும், பின்பற்றுவோர்களையும் நெறிப்படுத்தி செல்ல தலைமைத்துவம் பொறுப்பாக அமையும்.

இதனடிப்படையில் கல்வித்துறையிலும் கல்விக்கான இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு அதனை அடைவதற்கு தலைமைத்துவ செயற்பாடுகள் தொழிற்படுவதனைக் காணலாம். அதனடிப்படையில் தலைமைத்துவ தேர்ச்சிகளை பார்ப்போமாயின்.

- **நோக்க உணர்வு**
  பணியினை ஆற்றத் தொடங்க முன்பு தமது நோக்கத்திற்கு முரணாக இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இது பிரச்சினை தீர்த்தலிலுள்ள தலைமைத்துவ பண்பாக குறிப்பிடலாம். நோக்கத்தினால் முகாமை செய்தல் என்ற கருதுகோளை தெளிவாக்கி விடுதல் வேண்டும். இது இலக்கை அடைவதில் எல்லோரும் இணைந்து செயற்படவும் வெற்றி பெறவும் வகை செய்யும்.

- **மானிட திறன்**
  தலைமைத்துவம் எப்பொழுதும் மனிதனை விளங்கிக் கொள்ளும் மானிடத்திறன் கொண்டிருத்தல் வேண்டும். ஏனையோர் மனதைப் புரியக்கூடிய மற்றையோர் நிலைக்குள்ளாகும் பண்பை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும். இப்பண்பை பெற்றுக்கொண்டால் ஏனையோரிடம் வேலையினை இலகுவாக பெற்றுக் கொள்ளலாம். எல்லோரிடமும் தன்னிச்சையாக ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு மற்றையோர் நிலைக்குள்ளாகும் பண்பினை கற்றுக்கொள்ள வேண்டும் இது பிரச்சினை தீர்த்தலுக்கு உதவக்கூடியதாக இருக்கும்.

- **தொழில்நுட்பத் திறன்**
  தனது வேலை அல்லது தொழில் தொடர்பான பூரண அறிவை கொண்டிருத்தல் வேண்டும். புதிய எண்ணக்கருக்கள் மற்றும் நுட்பங்கள் அறிமுகப்படுத்தும் போது அதனைக் கற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் பிரச்சினைத் தீர்த்தல் இலகுவாக்கப்படுகின்றது.

- **தொடர்பாடல் திறன்**
  முகாமைத்துவத்திலே தொடர்பாடலுக்கென தலைவர் தனது மொத்த வேலை நேரத்தில 60-75% வரையான நேரத்தை செலவு செய்ய முடியும் என கூறுகின்றனர். ஆய்வுகளின்படி சொற்களில் அல்லது மக்களிலேயே கருத்துக்கள் பொதிந்திருப்பதால் வழங்கப்படும் எத்தகைய செய்தியும் சரியாகப் பரிமாற்றப்படுவதை உறுதிப்படுத்துவது தலைவரின் பொறுப்பாகும் இதனை பிரச்சினை தீர்த்தலுக்கான பண்பாக குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **தீர்மானம் எடுக்கும் திறன்**

தலைவர் பல தீர்மானங்களை எடுக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கின்றார். நிகழ்ச்சி திட்ட தீர்மானங்களையும், நிகழ்ச்சி அற்ற தீர்மானங்களையும் எடுப்பது மட்டுமன்றி தனித் தீர்மானங்களையும் குழுத் தீர்மானங்களையும் எடுப்பார். குழுத் தீர்மானம் எடுக்கும் போது குழுத்தீர்மானம் எடுக்கும் முறையை பின்பற்ற வேண்டும். மற்றும் குழு நெறிப்படுத்தலையும் மேற்கொள்ள வேண்டும். இதன்படி பலரிடம் ஆலோசனை பெற்று தீர்மானம் எடுக்கும் முறை பின்பற்ற வேண்டும். இவ்வாறு செய்யும் போது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள அல்லது தவிர்த்துக் கொள்ள இயலும்.

- **பயிற்சி அளித்தல்**

தலைமைத்துவத்தின் முக்கிய செயற்பாடாக பயிற்சி அளித்தல் காணப்படுகின்றது. நிறுவனத்தில் வேலை செய்வோரின் திறனை வளர்ப்பதற்கு காலத்திற்கு காலம் பயிற்சிகளை வழங்க தலைமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருத்தமானவர்களுக்கு பொருத்தமான பணியினை ஒப்படைப்பதும், பணியை மேற்கொள்ள முடியாதவர்களுக்கு பயிற்சியினை வழங்க நடவடிக்கை எடுப்பதும் தலைவரின் கடமையாகும். இவ்வாறு செய்வதன் மூலம் பிரச்சினைகளினை தடுத்து வேலை செய்வோரின் திறனை வளர்க்க முடியும்.

- **கையளித்தல்**

எல்லா பொறுப்புகளும் தலைவரிடம் குவிந்து கிடக்காமல் தனது வேலைச் சுமையை குறைத்துக் கொள்ளவும், மன அழுத்தங்களிலிருந்து விடுபடவும் வசதியாக தனது பொறுப்புகளில் ஒருபகுதியை தனது உதவியாளர்களிடம் ஒப்படைத்து அவை சரிவர நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்து கண்காணிக்க வேண்டும் ஏனெனில் வகை கூறல் தலைவரின் பொறுப்பாகும். இதுவும் பிரச்சினை தீர்த்தலிலுள்ள தலைமைத்துவ தேர்ச்சியாக தாம் கொள்ளலாம்.

- **விமர்சனம் ஏற்கப்படல்**

தலைவருக்கு பல்வேறு தரப்பிடம் இருந்து விமர்சனங்கள் தெரிவிக்கப்படும். இதனை கண்டு துவண்டுவிடக் கூடாது. விமர்சனம் தலைவரின் எதிர்கால விருத்ததிக்கான ஆலோசனைதான் எனக் கருதும் நேர்க்கணியக் கருத்தை வளர்த்தல் வேண்டும். இவ்வாறு செயற்படும் போது பிரச்சினைகளிலிருந்து முரண்பட்டுக் கொள்வதனை தவிர்த்துக்கொள்ள முடியும்.

- **ஊக்குவித்தல்**

உதவியாளர்களிடம் எதிர்பார்த்த விளைவை அல்லது கூடிய விளைவைப் பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்தல் அவசியமாகும். அடிப்படைத் தேவைகளான பாதுகாப்பு தேவை சமூகத்தேவை, கௌரவத்தேவை, தன்னலத் தேவை போன்ற தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஊக்கப்படுத்துவதன் மூலம் உதவியாளர்கள் தற்திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் பெயற்படுவோர் இதன் மூலம் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **நேர முகாமைத்துவம்**

சிறந்த தலைமைத்துவத்திற்கு நேரமுகாமைத்துவம் முக்கியம் பெறுகின்றது. நேரம் முதன்மை வளமாக கருதலாம். குறித்த நேரத்திற்குள் சகல செயற்பாடுகளினையும் நிறைவேற்ற நேரமுகாமைத்துவத்தினை முகாமை செய்து கொள்ள வேண்டும். ஆற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் அவசரத்தையும், அவசியத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். அவசியமானதும் அவசரமானதுமான வேலைகளை உடனடியாக உதவியாளர்கள் மூலம் செய்யலாம் இவ்வாறான செயற்பாடும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஓர் திறனாக கொள்ளலாம்.

- **முரண்பாடுகளை முகாமை செய்தல்**

தலைமைத்துவத்தில் முரண்பாடுகளினை தீர்த்து வைப்பது முக்கியம் என கூறப்படுகின்றது.ஆனால் புதிய முகாமைத்துவத்தில் முரண்பாடுகள் உத்தம அளவில் இருப்பதே நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வகைசெய்யும் என இனங் காணப்பட்டுள்ளது. எனவே முரண்பாடுகளை முகாமை செய்வதும் பிரச்சினை தீர்த்தலிலுள்ள தலைமைத்துவ தேர்ச்சியாக குறிப்பிடலாம்.

- **பொருத்தமான தலைமைத்துவ இயல்பு**

நிறுவன தலைமைத்துவத்தில் நல்ல தலைமைத்துவ இயல்பை தேர்ந்தெடுப்பது அவசியமாகின்றது. குறிப்பாக

- பணிக்கும் இயல்பு
- திணிக்கும் இயல்பு
- கலந்தாலோசிக்கும் இயல்பு
- பங்குபற்றும் இயல்பு

என நான்கு இயல்புகள் இருப்பதால் தலைவர் தான் எவ்வளவு அதிகாரத்தை வைத்திருக்க விரும்புகிறார் உதவியாளர்களுக்கு எவ்வளவு சுதந்திரத்தை வழங்க விரும்புகிறார் என்பதைப் பொறுத்து தலைமைத்துவ இயல்பு தலைவரால் தீர்மானிக்கப்படும். எனவே இத்தகைய இயல்புகளினை சரியாக பயன்படுத்துவதும் பிரச்சினை தீர்த்தலுக்கு உள்ள தலைமைத்துவ தேர்ச்சியாகக் குறிப்பிடலாம்.

- **இணைந்து போதல்**

தலைவர் எப்பொழுதும் பணியாளர் அல்லது உதவியாளர் நலன் நோக்கிய தலைமைத்துவத்தை கொண்டிருக்க வேண்டுமென நவீன கோட்பாடு கூறுகின்றது. அதற்குடைய உதவியாளர்களுடன் நேர்கணிய முகாமைத்துவத்தை கையாளல் வேண்டும். பணியாளர்களது நெருக்கடியான மனோநிலையில் நெகிழ்ச்சிப் போக்கை கையாளுதல் விரும்பத்தக்கது. இச்சந்தர்ப்பத்தில் விதிகள். பிரமாணங்கள் பின்பற்றப்படத் தேவையில்லை. இதன்மூலம் பணியாளர்களின் உண்மையான ஒத்துழைப்பைப் பெறமுடியும். இதனூடாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஓர் தேர்ச்சியாகவும் கருதலாம்.

இவ்வாறான தலைமைத்துவப் பண்புசார் அல்லது தேர்ச்சிகளை ஓர் தலைமைத்துவம் வளர்த்துக் கொள்வதன் மூலம் நிறுவனத்தின் நோக்கத்தினை அடைவதுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியினையும் ஏற்படுத்தலாம் அத்துடன் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான செயலொழுங்கு தேர்ச்சியாகவும் குறிப்பிட முடியும். இத்தகைய அம்சங்களுடன் எமது கல்வி முறையினை ஒப்பிடும்போது இலங்கையின் பொதுத்துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் கல்வி நிலையில் என்றும் விமர்சனத்துக்குரிய விடயங்களாகவேயுள்ளன. காலத்தை ஒட்டிய மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்ற கருத்து எல்லோராலும் பொதுவாக ஏற்றுக்கொள்கின்ற போதிலும் கல்வியில் முன்மொழியப்படும் மாற்றங்கள் முழுமையாக உள்வாங்கப்படுவதும் ஏற்றுக்கொள்ளப்படுவதும் கேள்விக் குறியாகவேயுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கை மக்களின் எழுத்தறிவு வீதம் 91% காட்டுகின்ற போதிலும் கல்வியின் தரம் மற்றும் பிரதேசவாரியான ஏற்றத்தாழ்வுகள் காரணமாக இதனை திருப்தி கொள்ள முடிவதில்லை அனைவருக்கும் அடிப்படையான கல்வி என்னும் உலகளாவிய கோட்பாட்டின் வழியில் அனைவருக்கும் இலவசமாகக் கல்வியை வழங்கும் நடைமுறை இலங்கையில் காணப்படுகின்ற போதிலும் வழங்கப்படும் கல்வித்தரமும் பொருத்தப்பாடும் குறைபாடுடையதாகவே இனங்காணப்பட்டுள்ளன. இலங்கையில் சில பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் உலகத்தரத்தினை தொடர் கல்விக்குப் பொருத்தமான உலகலாவிய தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மனிதவளத்தினை உருவாக்குகின்ற போதிலும் பெரும்பாலான பாடசாலைகளின் ஒட்டு மொத்தமான கற்றல் செயற்பாடுகளும் கல்வி விளைவுகளும் திருப்தியற்ற நிலையில் உள்ளன. என்பதை அண்மைகால புள்ளிவிபரங்கள் புலப்படுத்துகின்றன. அதனடிப்படையில் நாம் பாடசாலை சார்ந்த அப்பிரச்சினைகளினை 3 தலைப்பின் கீழ் நோக்கலாம்.

1. மாணவர்கள் சார்ந்த பிரச்சினைகள்
2. ஆசிரியர் சார்ந்த பிரச்சினைகள்
3. தலைமைத்துவம்/ அதிபர் சார்ந்த பிரச்சினைகள்

**மாணவர்கள் சார்ந்த பிரச்சினைகள்**

- கற்றலில் இடர்படுதல்
- பொருத்தமான வகுப்பறையின்மை
- தரமான ஆசிரியர்கள் கிடைக்காமை
- கட்டிட பற்றாக்குறை, நவீன கற்றல் சாதனங்கள் இன்மை
- அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யாத வீடு
- அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யாத பாடசாலை
- தண்டனைகள், பொருத்தமற்ற சொற்பிரயோகங்கள்
- சக மாணவர்களின் தொல்லைகள், பகிடிகள்
- ஊக்கப்படுத்தல் இன்மை
- வறுமை, பெற்றோர் பிரிவு, வெளியூர் செல்லல்

**ஆசிரியர் சார்ந்த பிரச்சினைகள்**

- கற்றல் கற்பித்தலுக்கான வளங்கள் கிடைக்காமை, பற்றாக்குறை
- வாண்மைத்துவ பயிற்சி இற்றைப்படுத்தாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒழுங்கான தலைமைத்துவம் கிடைக்காமை
- மாணவர்களின் நடத்தை பிரச்சினைகள்
- ஆசிரியர்களுக்கான முறையான தர, சம்பள உயர்வு
- பெற்றோர், சமூக, தலையீடுகளின் தாக்கம்
- வகுப்பறையின் கவின் நிலை போதாமை
- கட்டிட பிரச்சினை
- ஊக்கப்படுத்தல், தரமான ஆசிரியர்கள் பாராட்டப்படாமை
- ஆசிரியர்களிடையே பாராபட்ச தன்மை காட்டல்
- மேற்பார்வை, வழிகாட்டல் இன்மை அல்லது குறைபாடு
- கல்வி அதிகாரிகளின் பொருத்தமற்ற தலையீடு
- அரசியல் தலையீடுகள்.

**தலைமைத்துவம் சார்ந்த பிரச்சினைகள்**

- தூரநோக்கிற்கு ஏற்ப திட்டங்கள் இன்மை
- இலக்குகள் தெளிவாக வரையறுக்காமை அதை நோக்கி செல்லாமை
- 5 ஆண்டு, 1 ஆண்டு திட்டங்கள் முறையாக தயாரிக்காமை
- பலம், பலவீனங்கள் தெளிவாக இனங்காணப்படாமை
- பாடசாலையின் தேவைகள், வாண்மைத்துவ பயிற்சிகளை இனங்காணாமை
- உள்ளக, வெளியக மேற்பார்வைகளிலுள்ள குறைபாடுகள் இனங்காணப்படாமை
- தரம் 1-5 அடிப்படை கற்றல் தேர்ச்சிகள் பூர்த்தி செய்யப்படுகின்றதா என்பது தொடர்பாக அதிக அக்கறை காட்டாமல் 50% அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் பூர்த்தி செய்யாத ஓர் நிலை
- க.பொ.த சா/த பெறுபேறுகளில் பின்னடைவு கனிஸ்ட, இடைநிலை வகுப்புகளின் அடைவுமட்ட குறைவு அவற்றில் அக்கறை செலுத்தாமை தரம் 5 உடன் விட்டுவிடல்
- பாடசாலைக்கு தேவையான வளங்களினை பெற்றுக் கொள்வதில் ஈடுபாட்டுடன் செயற்படாமை (அப்படியே நிர்வாகத்தினை நகர்த்தி செல்லல்)
- இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை முன்னேற்றத்திற்கு இட்டுச்செல்லாமை, நவீன காலத்திற்கு ஏற்ற அல்லது சவால்களுக்கு ஏற்ப மாணவர்களை தயார் செய்யாமை.

இவ்வாறு பாடசாலை சார்ந்த பிரச்சினைகள் முன்வைக்கப்படுகின்றது.

இன்று ஆசிரியர்கள் வாண்மைத்துவ பயிற்சி இற்றைப்படுத்தல் அவசியமானது. இதனை வெளிவாரியாக கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், பரீட்சை திணைக்களம், மகாணம், வலயம், கோட்டம், நிறுவனங்கள் என்றடிப்படையில் வழங்கப்படுகின்றன. இருப்பினும் இன்றைய நவீன சீர்திருத்தத்தின் கீழ் பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்ட ஆசிரியர் அபிவிருத்தி SBTD முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. இதனை சில பாடசாலைகள் சிறப்பாக செய்தாலும் இதனை பாடசாலை அரசினால் வழங்கப்படுகின்ற பணத்திற்காக தேவையறிந்து செயற்படாத நிலை கவலைக்குரிய விடயமாக முன்னுரிமை பிரச்சினையாக கருதி முன்மொழிவுகள் முன்வைக்கப் படுகின்றது. இதற்காக நாம் மேலும் சில ஆய்வுகளின் மூலம் காணப்பட்ட குறைபாடுகளினை இவ்விடத்தில் முன்வைப்பது சிறப்பாக அமைவதுடன் இப்பிரச்சினையுடன் தொடர்புபட்டது என்பதனையும் தொடர்புபடுத்துகின்றேன்.

இலங்கையில் 2004ம் ஆண்டில் தேசிய கல்வி ஆய்வு மற்றும் மதிப்பீட்டு நிறுவனத்தினால் (NEREC) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படியும் ஏனைய ஆய்வுகளின் வழியும் இலங்கைப் பாடசாலைகளில் முகாமைத்துவம் மற்றும் கல்விச் செயற்பாடுகளில் பின்வரும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன.

- அதிகாரம் பரவலாக்கப்பட்டமை
- பங்கேற்பு தீர்மானம் கொள்ளளவில் அக்கறை செலுத்தப்பட்டமை
- ஒரு சில ஆசிரியர்கள் சொல்வதை மட்டும் கேட்டு செயற்படும் அதிபர்கள்
- மிக நெருக்கடியான வகுப்பறைகள்
- வளங்களின் பற்றாக்குறை
- ஆசிரியர் வரவின்மை
- ஆசிரியர்களின் நேரம் பிந்திய வருகை
- மாணவர்களின் இடைவிலகல்
- மாணவர்களின் குறைவான அடைவு மட்டம்
- முறையான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின்மை
- ஆசிரியர்கள் வகை கூறலில் இருந்து விலகியுள்ளமை
- பாடசாலை மீதான பெற்றோரின் குறைவான அக்கறை
- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் மத்தியில் சுமூகமான தொடர்பு குறைவாக காணப்படல்
- விசேட தேவையுள்ள மாணவர்மீது போதிய கவனமின்மை
- மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பரிகாரக் கற்பித்தல் இடம் பெறாமை
- பாடசாலைகளில் நேர அட்டவணை முறையாக நடைமுறைப்படுத்தப் படாமை
- ஆசிரியர்களின் செயலாற்றுகை பற்றிய விரிவான மதிப்பீடு இன்மை
- பாடசாலைகளில் பாடத்திட்டங்கள் உரிய காலத்தில் முடிக்க இயலாமை
- பாடசாலைமட்டக் கணிப்பீட்டின் குறைபாடுகள்
- கற்பித்தலில் நவீன தொழில்நுட்ப பயன்பாட்டின் பற்றாக்குறை

இவ்வாறு 13 வருடங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் 13 வருட பிந்தியும் தற்போதும் காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும் எனவே அதனை முன்னிறுத்தி "பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியினை வலுப்படுத்த வேண்டும் என்பதனையே நான் முன் மொழிகின்றேன். இதனை "எல்லோருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி" என்ற நிலையில் இருந்து "எல்லோருக்கும் தரமான கல்வி" என்ற நிலைக்கு மேல் நோக்கி நகர்வதாகும்.

பாடசாலையில் எதிர்நோக்கப்படும் சவால்கள் பிரச்சினைகள் பாடம் தொடர்பான சிக்கல்கள் சார்ந்து அவற்றுடன் தொடர்புடைய ஆசிரியர்கள் அல்லது சேவையாளர்கள் என்று கூடி அச்சவால்கள் அல்லது பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து கலந்துரையாடி தீர்மானங்களை தேடியறிந்து பாடசாலையின் செயற்பாடுகளை தரமாக்கும் அதேவேளை தமது சுய தொழில் மேம்பாட்டினையும் தொழில் வாழ்க்கையும் சிறப்பாக்குவதற்கும் பயன்படும் ஒரு உத்தியாக இவ் ஆசிரியர் அபிவிருத்தியினை மேற்கொள்ளலாம். பாடசாலை மட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவ அணுகுமுறை அத்துடன் பங்கேற்பு அணுகுமுறையாகவும் படிப்படியாக மேல்நோக்கி நகரும் அணுகுமுறையாகவும் ஒவ்வொரு ஆசிரியரையும் பாடசாலை செயற்பாட்டில் ஈடுபடுத்தும் முகாமைத்துவ அணுகு முறையாகவும் காணப்படுகின்றது. பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தியின் கீழ் தரவட்டங்களினை பாடசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்து வாண்மைத்துவ பயிற்சி தேவை தொடர்பாக அதிபர் தேவைப்பட்டியலினை தயாரித்துக்கொள்ள வேண்டும். அத்தேவைப் பட்டியலுக்கு ஏற்ப வளவாளர்களினை பொருத்தமான முறையில் தெரிவு செய்து பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக்குரிய தரவட்டங்களினை நடத்தப்படல் வேண்டும். இதனூடாகவே உண்மையான ஆசிரியர் அபிவிருத்தியும், மாணவர் அடைவுமட்ட விளைவுதிறன் அதிகரிப்பு ஏற்படும் இதன் விளைவாக தரமான முகாமைத்துவ அபிவிருத்தி ஏற்பட பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியின் தரவட்டங்கள் சிறப்பான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தி கொடுக்கும்.

மேலும் சுயமதிப்பீடு அபிவிருத்தி செயன்முறைகளுக்கான வழிகாட்டல் சூழலையும் ஏற்படுத்தும் அத்துடன் பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தியின் கீழ் மேற்கொள்ளப்படும் தரவட்டங்களின் கீழ் பின்வரும் நன்மைகளை பாடசாலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

1. ஒரு பாடத்தில் ஆசிரியர் கற்றல் கற்பித்தலின் போது எதிர்நோக்கும் பிரச்சினை இனங் காணவும் கலந்துரையாடவும் வாய்ப்புண்டாகும்.
2. அனுபவங்களை பரிமாறிக் கொள்ள முடியும்.
3. ஏதாவதொரு புதிய கற்பித்தல் முறையினை குறித்தவொரு கருப்பொருளில் பயன்படுத்த முடியும்.
4. பின்னூட்டல் பற்றி திட்டமிட முடியும்
5. குறிப்பிட்ட பாடப்பரப்பு அல்லது விடயம் சார்ந்து எத்தகையவொரு வளவாளரின் உதவியினை பெறமுடியும் என்பதினை இனங்காணலாம்.
6. ஆசிரியருடைய பாட அறிவை தேவையேற்படின் மேம்படுத்த முடியும்.
7. செயற்பாடுகள் சார்ந்த வேலைகளை திட்டமிட முடியும்
8. வளவாளர்களை பங்கிட முடியும்.
9. ஆசிரியர்களிடையே ஒத்துழைப்பினை ஏற்படுத்தி நலன்புரி சேவைகளை நடத்த முடியும்
10. தவறுகளை சுட்டிக்காட்டுதல் அல்லது தேடுதல் என்பதினை விடுத்து தவறுகளை இயன்றளவு தடுத்தல் என்பதற்கு உதவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மேலும் தவறுகளை கண்காணித்து பின்னர் பின்னூட்டல் செய்யும் முகாமைத்துவ செயற்பாட்டிற்கு பதிலாக பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி தரவட்டங்களின் போது முன்னூட்டல் செய்வதற்கு உதவும்.
12. எந்தவொரு கருமமும் திட்டமிட்ட அடிப்படையில் உரிய நேரத்தில் ஆரம்பித்து உரிய நேரத்தில் முடிப்பதற்கான கலந்துரையாடல் களமாகவும் அமையும்.

அத்துடன் மேலே இனங்காணப்பட்ட பிரச்சினைகளினை தீர்ப்பதற்கான ஓர் வழிமுறையாக இப் பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தியினை (SBTD) பயன்படுத்திக்கொள்ள முடியும். என்பது எனது முன்மொழிவாகவும் வைக்கின்றேன். ஆனால் அதனை தற்போது போல் அல்லாமல் தரமானதாகவும் வினைத்திறன், விளைத்திறனுடையதாகவும் செயற்படுத்தும் போதே அது வெற்றியளிக்கும் எனவே இது தொடர்பாக தெளிவூட்டும் செயலமர்வுகளை பாடசாலை மேற்பார்வையினூடாக கண்காணிக்கப்படல் வேண்டும்.

கலந்துரையாடலானது ஒரு வகையான பண்ட உற்பத்தி துறை அல்லாத போதும் மனித உயிர்களோடு தொடர்புபடும் கல்விச் சேவைகளின் பண்பு, தரம் என்பவற்றை வழங்க வேண்டிய ஒரு நிலைக்கு கல்வித்துறையும் வந்துள்ளது. தீர்மானங்களினை மேற்கொள்ளும் போது அனைவருக்கும் சமமான நிலையில் சுதந்திரமான ஆரோக்கியமான கலந்துரையாடல் மூலமும் வெளிப்படைத் தன்மையான அணுகு முறையுடனும் கூட்டாகப் பங்கெடுப்பதின் ஊடாக தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்பது மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். எவ்விதமான சட்டதிட்ட அதிகார வரம்பு எல்லைகளை வகுத்துக்கொள்ளாது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விடயம் சுயாதீனமான விவாவதத்திற்கு கலந்துரையாடலுக்கு உட்படுத்த வேண்டும் இதற்காக கூட்டமொன்றின் போது இருக்கைகளில் வட்ட வடிவில் அமர்ந்து கலந்துரையாடி அனைவரும் சமமானவர்கள் என்ற நிலையில் செயற்பட வேண்டும்.

பாடசாலையின் தலைவர் அதிபர் என்றவகையில் பாடசாலை மட்ட பண்புசார் முகாமைத்துவதின் கூறாக பயன்படுத்தும் ஆற்றலை அதிபர் பெற வேண்டும். மரபு ரீதியான அதிகார அணுகு முறைகளில் இருந்து விடுபட்டு அதாவது சகலருக்கும் அபிமானத்துடன் செயற்படக்கூடிய சூழலைத் தோற்றுவிக்க வேண்டும். பாடசாலையின் முகாமைத்துவ செயன்முறைகளில் சகலரின் ஒத்துழைப்பு பெறப்பட்டு கீழ்மட்டத்தில் இருந்து மேல் மட்டம் வரைக்கும் சகலரும் பங்கெடுத்து செயல்படுவதற்குரிய கற்றல் அமைப்பாகவும் பாடசாலை மாற்றுவதற்கு பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி சிறப்பான கருவியாகும். பாடசாலையொன்றில் "அவர்கள், நாங்கள்" என்ற நோயினை விரட்டி பாடசாலை அபிவிருத்தியில் அனைவரும் பங்கேற்று பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் தர உறுதிப்பாட்டினை மேற்கொள்ளலாம் என்பது உறுதி.

●●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பணியும் அதன் முக்கியத்துவமும்

**எஸ்.ஜனார்த்தனன், BA, P.G.D.in Edu(marit), MATE.**
**ஆசிரியர் ஆலோசகர்-தமிழ்,**
**வலய கல்வி பணிமனை,**
**வலப்பனை.**

மனிதவள அபிவிருத்தி என்பது உள்ளரர்ந்த மனித ஆற்றல்களை சமூக,பொருளாதார, கலாசார அபிவிருத்தியின் பொருட்டு கல்வி, பயிற்சி என்பவற்றின் மூலம் பயன்படு நிலைக்கு உந்துதல் ஆகும். மனிதவள அபிவிருத்திக்கு வலுவூட்டிகளாக கல்வி, சுகாதாரமும் போசாக்கும்,சூழல், தொழில், அரசியல் பொருளாதார சுதந்திரம் என்பவற்றை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அடையாளம் கண்டுள்ளது. ஒன்றையொன்று சார்ந்தனவாகவும், ஒன்றோடொன்று தொடர்புபட்டனவாகவும் உள்ள இந்த வலுவூட்டிகளுள் கல்வி என்பது ஏனையவற்றிற்கு அடிப்படையாகவும் அவற்றின் மேம்பாட்டிற்கு அத்தியவசியமான காரணியாகவும் உள்ளது.

வாழ்க்கை வாய்ப்புக்களை வழங்கும் ஒரு வலிமையான வழியாக கல்வி உள்ளமையால் அது அடிப்படை மனித உரிமையாக வலியுறுத்தப்படுகிறது. மேலும் பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு முதலீடாகவும் மானிட மேம்பாட்டிற்கான ஒரு திறவுகோலாகவும் கல்வி கருதப்படுகின்றது. ஆகையினால் அடிப்படைக்கல்வியானது அனைவருக்கும் வழங்கப்படுதல் வேண்டும் என்ற மனிதநேயச் சிந்தனை இன்று முக்கியத்துவம் பெறுகின்றது.

கல்வி வரலாற்றில் உலக கல்வி கருத்து யாவருக்கும் கல்வி என்ற கோட்பாட்டை உலக நாடுகள் யாவும் ஏற்றுக்கொண்டுள்ளன. வாழ்க்கையின் உறுதியான ஆரம்பமாகவும் அத்திவாரமாகவும் ஆரம்பக்கல்வித் துறையே அளிக்கின்றது. எழுத்தறிவும் எண்ணறிவும் மிக்க மக்களை உருவாக்குவதுடன் மேற்றொடர் கல்விக்கும் வாழ்க்கை முழுவதுமான கல்விக்கும் உரிய வழியைத் திறந்து தற்கால தகவற் சகாப்தத்திற்குப் பொருந்தி வாழக்கூடிய கற்கும் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் ஆதார மூலமாக ஆரம்பக்கல்வி அமைகின்றது. ஆரம்பக் கல்வி உட்பட்ட அடிப்படைக் கல்வியைக் குணச் சிறப்புடன் தமது குடிமக்கள் அனைவருக்கும் வழங்குவதை உறுதி செய்த நாடுகள் அபிவிருத்தியின் சகல பரிமாணங்களிலும் கூடுதலான விளைதிறனைப் பெற்றுள்ள உண்மையினை பல ஆய்வுகள் நிறுவியுள்ளன.

இதன் அடிப்படையில் கலைத்திட்டம் பாட அறிவை நோக்கமாகக் கொள்ளாமல் தேர்ச்சி மட்டங்களை அடைதலை நோக்கமாக கொண்டது. இத்தேர்ச்சி மட்டங்கள் இலங்கையின் தேசியக் கல்வி ஆணைக்குழு வெளியிட்ட ஒன்பது தேசியக் கல்விப் பெறுபேறுகளையும் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான கல்வி பற்றிய யுனெஸ்கோவின் சர்வதேச ஆணைக்குழு அடையாளங் கண்ட கல்வியின் நான்கு தூண்களான அறிதலுக்குக் கற்றல்,செய்வதற்குக் கற்றல், வாழ்வதற்குக் கற்றல், இருத்தலுக்குக் கற்றல் என்பவற்றை அடிப்படையாக கொண்டு அமைந்தன.

அக்கலைத்திட்டத்திலிருந்து மாணவர்களின் தாய்மொழி அடிப்படையில் முதலாவது தேசியமொழி, இரண்டாவது தேசியமொழி என மொழிப்பாடங்கள் கலைத்திட்டத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கப்பட்டுள்ளன. இம்மொழிப்பாடங்களை பொதுவாக நோக்குவோமாயின். பொது நோக்கங்கள் பெரும்பாலும் பொதுவானவையாகவும். பரந்த இலக்குகளை கொண்டதாகவும் அமைகின்றன. பொது நோக்கங்களை அடைவதற்கு நீண்ட கால ஒரு எல்லையினை கொண்டிருக்கும், பொது நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்கு கால எல்லை வகுப்பது மிகவும் கடினமானதாகும். கற்பித்தலுக்கான பொது நோக்குகள் பின்வருமாறு பாகுபடுத்தப்பட்டுள்ளன.

1. அடிப்படை மொழித்திறன்களை மாணவரில் விருத்திச் செய்தல்.
2. .மாணவர்கள் தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் மொழிவழியாக வெவ்வேறு வடிவங்களில் சுதந்திரமாக வெளிப்படுத்தக் கூடிய ஆக்கத்திறன்களையும்,.படைப்பாற்றல்களையும் வளர்த்துக் கொள்வதற்கு உதவுதல்.
3. மொழி வழிச்சிந்தனையை விருத்திச் செய்தல்.

மேற்கூறப்பட்ட பொது நோக்கங்களை அடைவதில் கால எல்லை விதிக்க முடிவதில்லை வாழ்நாள் முழுவதற்கான நோக்கங்களுக்காக இவை அமைகின்றன. பாடசாலையில் கற்பதற்கு வருகின்ற போது சிறப்பு நோக்கங்களை பகுக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. பாடசாலை,வகுப்பு மட்டங்கள் பின்வருமாறு பாகுபடுத்தப்பட்டிருக்கின்றது.

தரம் 1 தொடக்கம் 5 வரை ஆரம்பக் கல்வி
தரம் 6 தொடக்கம் 8 வரை கனிஸ்ட இடைநிலை கல்வி/பருவம்
தரம் 9 தொடக்கம் 11 வரை சிரேஸ்ட இடைநிலை கல்வி

இலங்கையில் இங்கு குறிப்பிட்டவாறு சிறப்பு நோக்கங்கள் கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. சிறப்பு நோக்கங்கள் பெரும்பாலும் குறிப்பாகவோ ஒரு கால வரையரையோ கொண்டிருக்கும் அதற்கு இணைந்தப்படியே பாட நூல்களிலும் ஆக்கப்பட்டுள்ளன. பாடத்திட்டங்களிலும் பாடநூல்களிலும் பொது நோக்கங்கள் காணப்பட்டாலும் அதனை அடைந்துக்கொள்வதற்குறிய சிறப்பு நோக்கங்களாக ஆக்கப்பட்டுள்ளன.

வகுப்பு ரீதியாக அமைக்கப்படுகின்ற பாடத்திட்டத்தில் அறிவு என்பன பாடநூல்களில் கவனம் செலுத்தப்படுகின்றன. மொழி விருத்தி, மொழித்திறன் விருத்தி, இலக்கியத்தை நயத்தல் திறன் விருத்தி, படைப்பாற்றல் விருத்தி பண்பாட்டு விழுமிய உயர்வு விருத்தி ஆகியன கற்பித்தல் கற்றலில் பொது நோக்கங்களாக கொள்ளப்படுகின்றன. இதன் அடிப்படையில் பார்க்கின்ற போது கருகூலத்தின் ஊடாக சிறப்பு நோக்கத்தினையும், பொது நோக்கினையும் அடையும் வண்ணம் கற்பித்தல் கற்றல் அமையும் போதுதான் கல்வியின் புதிய நோக்கை அடைய முடியும். பேராசிரியர் சுப்பு ரெட்டியார் எழுதிய கற்பித்தல் நுட்பம் எனும் நூலிலிருந்து அவதானிக்கும் போது இது மேலும் புலனாகின்றது.

நவீன கல்வி முறையியலில் ஆசிரியர் கல்வியும் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஆனப்படியால் ஆசிரியர் கல்வியினை ஓர் பார்வையாக நோக்குகின்ற போது ஆசிரியர் கல்வி என்பது ஒரு செயன் முறையாகும். இது கற்போனை மையப்படுத்திய ஒரு செயன்முறையும் ஆகும். அது மனித ஆற்றலை விருத்தி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது. மேலும் ஆசிரியர் கல்வி ஒரு வாழ்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்த செயன்முறையாகும். இதில் பங்கு பற்றும் நபர்கள் தம்மைத்தாமே கற்பித்துக் கொள்வதற்கான சுய ஊக்கங்களைக் கொண்டுள்ளனர் என அறியக்கூடியதாக உள்ளது.

அந்த வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வெற்றிகரமாகவும், அவை தனியாள் விருத்திக்கும் சமூக விருத்திக்கும் அடிப்படையான காரணிகளாக அமைவதற்கும் இச்செயற்பாட்டிற்கு முக்கிய பங்காளர்களாகிய ஆசிரியர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். கற்பித்தல் என்பது தொழில் நுட்ப தகைமைகளின் சேகரிப்பு செயன்முறைகள் சிலவற்றின் சேர்க்கையோ அல்ல கற்பித்தல் என்பது ஒரு தொழில்நுட்ப அலுவலுடன் கூடிய ஒரு ஒழுக்க நெறியுமாகும் என கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். மேற்குறிப்பிட்ட கூற்றிலிருந்து கற்பித்தல் ஒரு எளிமையான பணியல்ல அது திறன்கள், செயற்திறன்கள், அறநெறி போன்ற அனேக சிறப்பான உயரிய பண்புகளை அடக்கியுள்ள பணியாகும்.

இவ்வுயரிய பணியை சிறப்பாக ஆசிரியர்கள் செய்வதற்கும், தரமான கல்வியை வழங்க வேண்டுமானால் பயனுறுதியுள்ள கற்பித்தலை பெற்றுக்கொள்வதற்கும் ஆளுமையுள்ள ஆசிரியர்களுக்கு தேவையான அறிவு, திறன் ஆகியவற்றை உச்சப்படுத்தி சிறந்த மனப்பாங்குகள், விழுமியங்களை வளர்க்கக் கூடிய ஒரு உயரிய தொழில் என்று தெளிவான பார்வையை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் சமூகத்தில் புதிய சமூக பொருளாதார, கலாசார மாற்றங்களுக்கும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் வல்லமையை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகளான முகாமைத்துவ தொடர்பாடல் திறன், தகவல் தொழில் நுட்ப திறன் விருத்தி, கலைத்திட்ட மாற்ற எண்ணக்கரு சார்ந்த அறிவாற்றல் சார்ந்த திசைமுகப்படுத்தல்களை மாற்றத்துடன் கூடிய தொழில்நுட்ப தொழில் சார்ந்த மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் புதிய தகவல் தொழிலிற் துறைப் புரட்சி, பூகோளமயமாதல் மற்றும் புதிய சவால்கள் என்பவற்றிற்கும் முகம் கொடுக்கக் கூடிய சமூக மாற்றத்தின் ஒரு பங்காளராக மாணவர்களை உருவாக்க ஆசிரியர்களின் பங்களிப்பை பெறக்கூடியவகையில் ஆசிரியர் பணிக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்க வேண்டிய போக்கினையும் உலகலாவிய கல்வி மாற்றங்கள் எடுத்து காட்டுகின்றன.

●●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன் F கேரின் கலைத்திட்ட மாதிரியும் நடைமுறையிலுள்ள கலைத்திட்டத்தில் அதன் பிரயோகமும்

**S. ஏகாந்தராஜன் (B.A, PGDE, Dip in Counseling, National Dip in Teaching ),M.Ed**

ஆசிரியர் மத்திய நிலையம்,
நில்தண்டாஹின்ன.

கலைத்திட்டம் என்பதை ஆங்கிலத்தில் Curriculum என்று அழைப்பதோடு, அது Currere எனும் இலத்தீன் சொல்லிலிருந்து பிரிந்து வந்த சொல்லாகும். Currere என்பது ஓட்டப்பாதை, ஓடுபாதை, ஓட்டம் என்ற கருத்தைத் தரும். அதன்படி கலைத்திட்டம் என்பது "ஒரு தொடக்கத்தையும் முடிவையும் உடைய முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட அனுபவத் திரட்டு" என கொன்ரட் கூறுகின்றார். மேலும் கலைத்திட்டம் தொடர்பாக கலைத்திட்ட நிபுணர்கள் முன்வைத்த சில வரைவிலக்கணங்கள் வருமாறு.

ஜோன் எப் கேர் - பாடசாலைக்கு உள்ளேயோ வெளியேயோ மாணவர்கள் தனித்தோ குழுவாகவோ பெற்றுக்கொள்ளும் அனைத்து அனுபவங்களும் கலைத்திட்டமாகும்.

நில்வினும் சூலரும் - பாடசாலையின் வழிகாட்டலின் கீழ் நிகழும் அனைத்து கற்றல் செயன்முறைகளும் அவை சார்ந்த அனுபவங்களுமே கலைத்திட்டமாகும்.

கோன்ராட் - தொடக்கத்தையும் முடிவையும் கொண்ட ஒழுங்குமுறையாக ஒழுங்கமைக்கப்பட்ட அனுபவத் தொகுதியே கலைத்திட்டமாகும்.

புரோபல் - மனித வர்க்கத்தின் அனைத்து அறிவு, அனுபவங்களினதும் தொகுப்பாக அல்லது சாரமாக அமைந்துள்ளது.

நகல், எவான்ஸ் - மாணவர்களுக்கு அவர்களது ஆற்றல்களின் உச்ச மட்டத்திற்குப் பொருத்தமானவாறு உத்தேச கற்றல் பேறுகளை அடைவதற்கு உதவக்கூடியவாறாகப் பாடசாலையினால் வழங்கப்படும் திட்டமிடப்பட்ட சகல அனுபவங்களும் கலைத்திட்டமாகும்.

மேலுள்ள வரைவிலக்கணங்களிலிருந்து கலைத்திட்டம் என்பதை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்த முடியும். **பாடசாலைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ தனித்தோ அல்லது குழுவுக்கோ மாணவர்களுக்கு பாடசாலை திட்டமிட்டு வழங்கும் தொடக்கத்தையும் முடிவையும் கொண்ட ஒழுங்குமுறையான அனுபவத்தொகுதி கலைத்திட்டமாகும்.**

மாதிரி என்பது ஆங்கிலத்தில் Model என அழைக்கப்படும். இதனை உருவக் குறிப்பு, தயாரிக்கப்பட்ட ஓர் உருவம், படிமுறை அமைப்பு, ஒரு திட்டம், ஒழுங்குமுறை எனவும் பெயரிடலாம். மாதிரி என்பதன் பொருள் பின்பற்றுவதற்காக ஒழுங்கு முறையில் தயாரிக்கப்பட்ட ஒன்று அல்லது பின்பற்றுவதற்கான திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எனலாம். இதன் அடிப்படையில் கலைத்திட்ட மாதிரி என்பதை பின்வருமாறு கூறலாம். ஒரு கலைத்திட்ட ஆக்கத்திற்கு பின்பற்றக்கூடிய ஒரு புற அமைப்பை அல்லது திட்டத்தை கலைத்திட்ட மாதிரி என அழைக்கலாம்.

கலைத்திட்ட அபிவிருத்திச் செயல்களின் உள்ளடக்கங்களைத் தயாரிக்கும்போது கலைத்திட்டத்தில் தாக்கம் விளைவிக்கும் அம்சங்களை இனங் காண்பதற்கும் கலைத்திட்டச் செயல்களை இலகுவாக நடைமுறைப் படுத்துவதற்கும் அவ்வம்சங்களுக்கிடையில் காணப்படும் இடைத்தொடர்புகளை அறிந்துகொள்ளவும் கலைத்திட்ட மாதிரி பயன்படுத்திக்கொள்ளப்படுகின்றது. "உலகம் தனித்தனி பொருள் கொள்வதற்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது. தனிப்பட்டவர்கள் அதனை வெவ்வேறு விதமாக விளங்கிக்கொள்வார்கள். அது ஒவ்வொருவரினதும் ஆக்கத்திறனமைப்புக்காகத் திறந்த நிலையில் காணப்படுகின்றது". எனவே உலகில் ஆக்கத்திறன்களுக்கான வாய்ப்பைப் பயன்படுத்தி ஒன்றுக்கொன்று வேறுபட்ட விதத்தில் பல கலைத்திட்ட மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரிகளைச் சமர்ப்பித்துள்ளவர்களில் ஜோன் F கேர் முக்கியமானவர் ஆவார். அவரது மாதிரியின் அடிப்படை இயல்புகள் நடைமுறையிலுள்ள கலைத்திட்டத்தில் பின்வரும் அடிப்படையில் பிரயோகிக்கப்படுகின்றது.

இவர் ஒரு சிக்கல் வாய்ந்ததும் விளக்கமானதுமான ஒரு மாதிரியை உருவாக்கியுள்ளார். இதில் நான்கு பிரதான கட்டங்கள் அல்லது படிமுறைகள் காணப்படுகின்றன.

1. குறிக்கோள்கள்
2. அறிவு
3. பாடசாலை கற்றல் அனுபவங்கள்
4. மதிப்பீடு

**ஜோன் F கேரின் கலைத்திட்ட மாதிரி**




மேலே காட்டப்பட்டுள்ளவாறு 4 கட்டங்களுக்குமிடையே காணப்படும் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு கேர் தனது கலைத்திட்ட மாதிரியை உருவாக்கியுள்ளார். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கட்டங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புபடும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அக்கட்டங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக நோக்குவோம்.

**குறிக்கோள்களைத் தீர்மானித்தல்**

கேர் நோக்கங்களைத் தீர்மானிக்கும்போது மாணவர்கள், சமுதாயம் என்பவற்றின் தன்மைக்கேற்பவும் மறுபக்கத்தில் புளுமின் கல்வி நோக்கங்களின் பகுப்பியல்புக்கேற்பவுமே தீர்மானிக்கின்றார். குறிக்கோள்களைத் தீர்மானிக்கும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மையத்தினையே கேர் எதிர்பார்க்கின்றார். புளூமின் கோட்பாட்டிற்கிணங்க மாணவர்களின் அறிதலாட்சி, மனவெழுச்சி ஆட்சி, உளவியக்க ஆட்சி என்பன ஒருமித்து மாணவனிடத்தில் விருத்தியடையும் வண்ணம் குறிக்கோள்கள் உருவாக்கப்படல் வேண்டும் என கேர் கருதுகின்றார். அத்துடன் பாட விடயங்கள், வளங்கள், பாடத்துறைகள் என்பனவற்றையும் கருத்திற்கொண்டு குறிக்கோள்கள் தீர்மானிக்கப்படல் வேண்டும் என்பது கேரின் கருத்தாகும்.

நடைமுறையிலுள்ள எமது கலைத்திட்டத்தில் குறிக்கோள்கள் திட்டமிடப்பட்டிருப் பதனை அவதானிக்கலாம். கலைத்திட்டத்தில் முதலில் தேசிய குறிக்கோள்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இலங்கையின் தேசிய குறிக்கோள்கள் 8 உள்ளன. இவை நாட்டின் கல்விக் குறிக்கோள்கள் ஆகும். இவை ஒவ்வொன்றும் மாணவர்கள், சமுதாயம் என்பவற்றின் தன்மைக்கேற்ப தீர்மானிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக முதலாவது தேசிய குறிக்கோள் இலங்கை சமூகத்தின் தன்மைக்கேற்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது. "மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்" என்ற தேசிய குறிக்கோள் சமுதாய தன்மைக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல 4,5 ஆவது தேசிய குறிக்கோள்களை எடுத்துக்கொண்டால் அவை தனிநபர் தன்மையை விருத்தி செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இங்கு தனிநபர் எனும்போது அது மாணவரது தன்மையைக் குறிப்பதாக அமையும். 4 ஆவது தேசிய குறிக்கோள் ஒருவரது உடல், உள நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாக கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்" இதில் மாணவர்களது தன்மையையும் சமூகத் தன்மையையும் வெளிப்படுத்துகின்றது. அவ்வாறே 5 ஆவது குறிக்கோள் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. "நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்துணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்" இக்குறிக்கோளை நோக்கும்போது மாணவர் தன்மைக்கேற்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

கல்வியின் தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும் அடிப்படைத் தேர்ச்சிகளும் மாணவர் மற்றும் சமூகத் தன்மைகளுக்கேற்ப தீர்மானிக்கப்பட்டுள்ளன. தற்போது ஏழு அடிப்படைத் தேர்ச்சிகள் காணப்படுகின்றன. இதில் முதலாவது தேர்ச்சி "தொடர்பாடல் தேர்ச்சிகள" ஆகும். இது மாணவர் தன்மைக்கேற்பத் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். அவ்வாறே மூன்றாவது அடிப்படைத் தேர்ச்சி "சூழல் தொடர்பான தேர்ச்சிகள்" ஆகும். இது சமூகம் தொடர்பான தன்மையைக் கொண்டுள்ளது.

கேர், மாணவர்களின் அறிதலாட்சி, மனவெழுச்சி ஆட்சி, உளவியக்க ஆட்சி என்பன ஒருமித்து மாணவரிடத்தில் விருத்தியடையும் வண்ணம் குறிக்கோள்கள் உருவாக்கப்படல் வேண்டும் என குறிப்பிடுகின்றார். இதனை அடிப்படையாகக் கொண்டதாகவே தற்போது நடைமுறையிலுள்ள கலைத்திட்ட சீர்திருத்தத்தில் உள்ள பாடங்களின் பாடக் குறிக்கோள்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக 6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை வரலாறு கற்பதன் மூலம் 10 நோக்கங்களை மாணவர் அடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை நாம் நோக்கினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் அறிதலாட்சி, உளவியக்க ஆட்சி, மனவெழுச்சி ஆட்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக "வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்துகொள்ளல்" என்ற நோக்கம் அறிதலாட்சியை அடிப்படையாகக் கொண்டது. "தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல்" என்ற நோக்கம் உளவியக்க ஆட்சியை அடிப்படையாகக் கொண்டது. "கால ஒழுங்கு மூலாதார விமர்சனம் காரண காரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டியெழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தல்" என்ற நோக்கம் எழுச்சி ஆட்சியை அடிப்படையாகக் கொண்டது. மேற்குறிப்பிட்டவாறு கேரின் கலைத்திட்ட மாதிரியில் உள்ள குறிக்கோள்களைத் தீர்மானித்தல் என்ற அம்சம் நடைமுறையிலுள்ள கலைத்திட்டத்தில் காணப்படுவதை அறிந்துகொள்ளலாம்.

**பாடசாலைக் கற்றல் அனுபவங்கள்**

கேரின் மாதிரியில் இது மூன்றாவதாக கூறப்பட்டுள்ள அம்சமாகும். இது கற்பவருக்கும் பல்வேறு சுற்றாடல் கூறுகளுக்கும் இடையே ஏற்படும் இடைத்தாக்கத்தையே குறித்து நிற்கின்றது. அதனுள் சமூக சந்தர்ப்பங்கள், பாடசாலைச் சமூகம், ஆசிரியர் மாணவர் இடைத்தொடர்பு, கற்பித்தல் முறைகள், பாட உள்ளடக்கம், தனியாள் வேறுபாடுகள், ஆயத்தம் போன்றவை அடங்கும். இவை பாடசாலை கற்றல் அனுபவங்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. பாடசாலை கற்றல் அனுபவங்களை தெரிவு செய்யும்போது மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் என கேர் குறிப்பிடுகின்றார். ஆனால் தற்காலத்தில் நடைமுறையில் காணப்படும் கலைத்திட்டமானது சகல மாணவர்களுக்கும் பொதுவானதாகவே திட்டமிடப்பட்டுள்ளது. மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. அத்தோடு வகுப்பறைக் கற்பித்தலின் போதும் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. மாறாக பொதுவான கற்பித்தலே வகுப்பறைகளில் இடம்பெறுகின்றது. தனியாள் வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. மேலும் கேர் வலியுறுத்துவதுபோல் ஆசிரியர் - மாணவர் இடைத்தொடர்பு மூலம் கற்றல் அனுபவங்கள் வழங்கப்படல் வேண்டும். ஆசிரியர் - மாணவர் இடைத்தொடர்பு நடைமுறையில் பாடசாலைகளில் அரிதாகவே காணப்படுகின்றது. மேலும் ஒருவழித் தொடர்பே அதிகமாக காணப்படுகின்றது. அத்தோடு கேர் குறிப்பிடுவது போன்று பாடப்பகுதிகளிலிருந்து கற்றல் அனுபவங்கள் மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ஆனால் நடைமுறையிலுள்ள பாடங்கள் அறிவை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர் மனப்பாடம் செய்து பரீட்சைக்குத் தயாராகுதல் இடம்பெறுமே தவிர ஏனைய திறன் விருத்தி மாணவரில் ஏற்படுவது குறைவாகவே உள்ளது.

**அறிவு மற்றும் கற்பித்தல் முறைகள்**

பல்வேறு பாடத் துறைகளினதும் எண்ணக்கருக்களினதும் கோட்பாடுகளினதும் அடிப்படையில் அறிவினை ஒழுங்கமைத்தல் நிகழ்கின்றது. இயைபாக்கம் செய்தல், ஒழுங்குமுறையைப் பின்பற்றல், மீளவலியுறுத்தல் என்பவற்றின் ஊடாக அறிவு உறுதிப்படுத்தப்படுகின்றது. நடைமுறைக் கலைத்திட்டத்தில் பல்வேறு பாடங்கள் இடைநிலைக் கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இடைநிலை பொதுக்கலைத்திட்டத்தில் தரம் 6 - 9 12 பாடங்களைக் கொண்டமைந்துள்ளது. தரம் 10,11 என்பன 6 மையப்பாடங்களையும் 3 தொகுதிப்பாடங்களையும் கொண்டமைந்துள்ளது. தரம் 12,13 கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றும் தலா மூன்று வெவ்வேறான பாடங்களைக் கொண்டுள்ளன. இப்பாடங்கள் ஊடாக மாணவர்களின் அறிவு ஒழுங்கமைக்கப்படுகின்றது.

ஆசிரியர் பயன்படுத்தும் கற்பித்தல் முறை மூலமும் கற்றல் அனுபவங்களைப் பெறுகின்றார்கள். ஆசிரியர்கள் அதிகமாக செயற்பாடுகள் சார்ந்த அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலமே விளைதிறனான அனுபவங்களை மாணவர்கள் பெறுவார்கள். ஆனால் நடைமுறையில் ஆசிரியர்கள் செயற்பாடு சார்ந்த கற்பித்தல் அன்றி விரிவுரை முறையையே பயன்படுத்துகின்றனர். இதனால் கற்றல் அனுபவங்கள் சிறப்பானதாக மாணவர்களுக்கக் கிடைப்பதில்லை.

**மதிப்பீடு**

இது ஏனைய கட்டங்களுடன் தொடர்புடைய ஒரு நிரந்தரச் செயலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள், மதிப்பிடல், ஒப்படைகள், வேறு மதிப்பீட்டு முறைகள் ஆகியன மூலம் மதிப்பீடு மேற்கொள்ளவேண்டிய முறை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு முறைகளில் இலங்கை கலைத்திட்டத்தில் பரீட்சைகள் மட்டுமே முதன்மை வகிக்கின்றது. தவணைப் பரீட்சைகள், ஆண்டிறுதிப் பரீட்சைகள் என்பவை இடைநிலை வகுப்புகளில் இடம்பெறுகின்றன. அத்தோடு பாடசாலை மட்டக் கணிப்பீடும் ஒரு மதிப்பீட்டு முறையாக இடம்பெறுகின்றது. எனினும் பாடசாலை மட்டக் கணிப்பீடு எந்தளவுக்கு நம்பகத் தன்மையுடையதாக இடம்பெறுகின்றதென்பது ஒரு கேள்விக்குறியாக உள்ளது. ஆரம்பக் கல்வியைப் பொறுத்தமட்டில் மதிப்பீடானது தொடர் கணிப்பீடாகவும் நியதிகளை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடாகவும் அமைந்துள்ளது.

மேற்கூறப்பட்ட அம்சங்களை நோக்கும்போது கேரின் கலைத்திட்ட மாதிரியின் இயல்புகள் நடைமுறையிலுள்ள கலைத்திட்டத்தில் பிரயோகிக்கப்படுவதை அவதானிக்க முடியும்.

**உசாத்துணைகள்**


- இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வித்துறை கல்விப்பீடம். (2002) "கலைத்திட்ட கொள்கையும் நடைமுறையும் தொகுதி II", இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நாவல, நுகேகொட.
- கினிகே, ஐ. எல். (2008), "புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக் கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும்: புதிய சாகரத்தின் முதலாவது இடைநிலைப் பாடசாலை கலைத்திட்ட மறுசீரமைப்பு 2007", கல்வி வாண்மை தேர்ச்சி அபிவிருத்தி மையம், பாதுக்கை
- புண்ணியமூர்த்தி, கி. (2010), "கலைத்திட்ட மாதிரிகள்", சேமமடு பதிப்பகம், கொழும்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments from*

# EASTERN HARDWARE


**Dealers in Hardware,
Electrical & Estate Supplies**



**NO 61, St, Margaret's Bazaar
Udapussellawa
Tel : 0522 68 9347**

# R.T.S.FANCY & TEX
# R.S.GOLD CENTER

**Delers in Textiles, Fancy Goods
Eversilver, Bata, Bags
Electrical & Eletronical Ect,**



**NO 17,ST.MARGARET'S BAZAAR
UDAPUSSALLAWA
tel 052.2269338**

**Managing Director.
P.Rajendren(j.P)
Former Vice Chairman Of Walapane Pradeshiya Sabawa**

**Tel. 0522269338**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சற்குருவாகுவோம்

**பி.அசோக்குமார் M. Ed**
**வலய கல்வி பணிமனை**
**வலப்பனை.**

மனிதனாக வாழத்தொடங்கிய காலந்தொட்டு இற்றைவரை காலவோட்டத்திற்கேற்ப பல்வேறு நல்ல விடயங்களை தன்னகத்தே உள்வாங்கி நிலைத்து நிற்கின்ற துறை ஆசிரியர்த்துறை. இத்துறையே உலகின் சகலதுறையினதும் அடிநாதமாக அமைந்திருக்கின்றது. எனவே இத்துணை முக்கியத்துவம் வாய்ந்த ஆசிரியத்துறையையும், அதேபோல் ஆசிரியர்களையும் போற்றி அவர்வழி நின்று அவர்களை வென்று வாழும் மாணவர்கள் ஏராளம். இவர்களே நாளைய உலகின் தலைவர்கள் என்பதை அனைவரும் அறிவோம் எனின் இவ்விருசாரார் தொடர்பாக இத்தருணத்தில் சற்றுநோக்குதல் அல்லது மீள கொணர்தல் காலப்பொருத்தமுடையதென கருதுகின்றேன்.

ஆசிரியர் எனும் இப்பதம் குரு, குரவர், உபாத்தியாயர், கணக்காயர் என பலவாறு வழங்கப்படுகின்றமை இலக்கியங்களின் வாயிலாக காணக்கிடைக்கின்றது. இதனடிப்படையில் பண்டு குருவுக்கு வழங்கப்பட்ட இலக்கணமும், பண்புகளும் இற்றைக்கு ஆசிரியருக்கு வழங்கப்படுகின்ற இலக்கணமும், பண்புகளும் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை சற்றுநோக்குவாம். குருகுலம் எனும் கற்பித்தல் நிலை முழுமுதற் கடவுளாம் சிவபெருமான் அகத்தியர் மற்றும் கல்லால மரத்தடியிலிருந்து சந்தான குரவர்களுக்கும் போதிக்கப்பட்டதாக வரலாறுகளும் இதிகாசங்களும் சான்று பகிர்கின்றன.

இதனைத் தொடர்ந்து இராமாயணம், மகாபாரதம் எனும் இதிகாசங்களின் வாயிலாக அதன் பிரதான பாத்திரங்களை நன்நெறிபடுத்துவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு எத்துணை முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பதை காணலாம். அத்தோடு பல்வேறு அரச தீர்மானங்களை எடுப்பதற்கு குருவின் ஆலோசனைகளும் நல்லாசியும் பெறுதல் என்பது பாரிய செல்வாக்கு செலுத்துகின்றது. இவற்றையெல்லாம் கற்றுணர்ந்த பவணந்தி எனும் நன்னூல் ஆசிரியர் தனது நூலின் பாயிரவியலில் ஆசிரியரின் இயல்பு எனும் தலைப்பின் கண் நல்லாசிரியர் இயல்பில்

"குலன்அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்
அமைபவன் நூலுரை ஆசிரி யன்னே" (பாடல் - 26)

உயர்குடிபிறப்பு, இரக்க உணர்வு, கடவுள்பற்று இவற்றால் அடைந்த மேன்மை, பல்கலையும் கற்று தேர்ந்த அறிவு, அறிந்தவற்றை மாணவர் மனங்கவர் வகையில் எடுத்துரைக்கும் தன்மை, பூமி, மலை, துலாக்கோல் (தராசு), மலர் போன்ற உள்ளம் என்பவற்றையும் யதார்த்த உலகை அறியும் அறிவு, பல உயர்ந்த குணங்கள், மாணாக்கரின் நற்பணியை பாராட்டவும், சிறு குற்றம் கண்டபோது சினங்கொள்ளாத, பொருளாசையில்லா பண்புகளை கொண்டவரே சிறந்த ஆசான் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல் குமரேச சதகம் எனும் இலக்கியத்தின் கண்

"தொல்வளம் மிகுந்தநூற் கரைதெரிந் துறுதிமொழி
சொல்லுமவ னேகுரவனாம்" (பாடல் 58)

பழம்பொருள் நிறைந்த நூல்களைக் ஐயந்திரிபுர கற்று உறுதிமொழி கூறக்கூடிய இருவழியாயும் தனது கற்றலுக்கும் நூலின்கண் காணப்படும் கருத்துக்களையும் சொல்லக்கூடிய குரவனாம் ஆசானாம்.

இதேபோல் அம்பலவாணக் கவிராயர் தனது அறப்பளீசுரர் எனும் நூலில் ஆசிரியர் பற்றிக் கூறுகையில்

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
விவரவிஞ் ஞான பூரண
வித்யாவி சேடசற் குணசத்ய சம்பன்ன
வீரவை ராக்கிய முக்ய
சாதார ணப்பிரிய யோகமார்க் காதிக்ய
சமாதிநிஷ் டானு பவராய்ச்
சட்சமய நிலைமையும் பரமந்த்ர பரதந்த்ர
தருமமும் பரச மயமும்
நீதியின் உணர்ந்துதத் துவமார்க்க ராய்ப்பிரம
நிலைகண்டு பாச மிலாராய்
நித்யா னந்தசை தன்யராய் ஆசையறு
நெறியுளோர் சற்கு ரவாம். (பாடல் 5)

இக் கவியின் வாயிலாக ஓர் ஆசிரியர் வேதாந்த, சித்தாந்தங்களை கற்றுணர்ந்திருத்தல், ஒழுக்கமுடையோராய் இருக்க வேண்டும், அறிவியல் சிந்தனை இருக்க வேண்டும், நிறைகல்வி, வாய்மை, துணிவு, மனத்திடம், யோகநெறி, அமைதி, மந்திர தந்திரநெறி, உண்மை அறிவு, பற்றற்ற உள்ளம் என்பன ஒருங்கே கொண்டவரே நல்லாசான் என்கிறார்.

ஆசிரியர் தொடர்பான பண்டைய காலநோக்கு இவ்வாறிருக்க நவீன காலத்தில் அறிவியல் உலகில் ஆசிரியர் தொடர்பான எதிர்பார்க்கை இவ்வாறு அமைந்திருக்கின்றன. பட்டம் பெற்றிருத்தல், ஆக்கத்திறன் சிந்தனை மிக்கவராக, சவால்களுக்கு முகம் கொடுப்பவர், அகத்தூண்டல் (ஊக்கம்) உடையவராக, உள்ளக்கிளர்ச்சிகளை அறிபவராக,மேம்படுத்துபவராக, தகவலறிந்து வழங்குபவராக, நேர்சிந்தனை கொண்டவராக, நன்மாற்றத்திற்கான நுழைவாயிலாக, நகைச்சுவை உணர்வு கொண்டவராக, ஒரு சிறந்த முன்மாதிரி நபராக, மரியாதை மிக்க மனிதராக, கற்க தயாரானவராக, நட்புக்கரம் நீட்டுபவராக, நெகிழ்திறன் கொண்டவராக, சமயோசித தன்மை கொண்டவராக, அமைதியானவராக இருக்கவேண்டும் என குறிப்பிடுகின்றது.

எனவே பண்டைய இலக்கியமாகட்டும் இற்றைய நவீன அறிவியலாயினும் ஆசிரியர் எனும் நபரிடம் எதிர்பார்க்கப்படும் பண்புகள் இவையே. இதனடிப்படையில் ஆசிரியராக பிறப்பால் இல்லாவிடினும் துறைக்குள் பிரவேசித்திருக்கும் நாம் இப்பண்புகளை பெறுவது இத்துறையின் சிறப்பினை வளர்க்கும். அத்தோடு எதிர்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததியினரை உருவாக்கும் நாம் பவணந்தி முனிவர் குறிப்பிடும் மாணாக்கர் அல்லாதோரான

"களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே" (பாடல் 39)

கள்ளுண்டு களிப்பவன், சோம்பேறி, தற்பெருமையுடையவன், காமுகன், கள்வன், நோயாளி, அறிவில்லாதவன், குணமாறுபடுபவன், சினமுடையவன், மிகுதியாகத் தூங்குபவன், மந்தபுத்தியுடையவன், பழைய நூல்களை கற்க ஆர்வமில்லாதவன், அஞ்சத்தக்கவற்றிற்கு அஞ்சாதவன், பாவம் செய்பவன், பொய்பேசுவோன் போன்றோர் இற்றைக்கு மனிதவுரிமை மற்றும் சிறுவருரிமை, அரசின் கல்விக்கொள்கை மற்றும் அனைவருக்கும் கல்வி போன்ற எண்ணக்கருக்களால் சகலரையும் கொண்ட வகுப்பறைகள் அமைவது தவிர்க்க முடியாததாகி வருகின்றது. இந்நிலையில் ஆசிரியர்களாகிய நாம் எந்தளவிற்கு விழிப்பாக இருக்கவேண்டும் என்பது தெளிவாகின்றது. அத்தோடு இவர்களையும் நற்பிரசையாகவும் நாட்டிற்கும் உலகிற்கும் பயன்படக் கூடியவராகவும் மாற்றவேண்டிய சவால் நிறைந்த பணியினை மேற்கொள்ளும் நாம் நல்ல பண்புள்ள ஆசானாக இருக்கவேண்டியது காலத்தின் தேவையாக அமைந்திருக்கின்றது.

••••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதலால் வழிகாட்டுவீர்.

ப.முகுந்கமலவண்ணன் J.P BA,PGDE,MA,SLPS.3. SP.Tr.in Tamil
பிரதி அதிபர்
ம.மா/வ/டலோஸ்.த.ம.வி
உடப்புசல்லாவ.

தொலைத்தவைகளுக்கு
பெருமூச்சு விடாத மனசோடு...
தேநீர் கோப்பை தாங்கும்
கைகளில் நடுக்கமில்லை
மரணத்தை தந்தெடுக்காத வயோதிபம்...

கட்டாந்தரை
கண்ணுறக்கம்- ஒரு
சுவர்க்க அமைதி....
விருதுகளுக்கு ஓடும்
எருதுகளாய் இல்லாமல்- அன்று
என் கடன் பணி செய்து கிடந்ததே....

பிள்ளைகளை தொல்லைகளாய்
எண்ணாமல்
வாழ்க்கைப்பாடத்தையும்
வடி கட்டி கொடுத்தேன்....

வருட கடுகதியில்
வாலிபம் கடந்து போனது....

விடைபெறும் நேரம்
விருதுகளெல்லாம்
மண்டியிருக்க வேண்டும்
என் மாணவர்களிட்ட
கண்ணீர்த்துளிகளுக்கு முன்

கணிப்பீடு மதிப்பீடு
இடாப்பு அலகுபரீட்சையென
அதை ஆசிரியத்துவ
வேதங்களை பூஜித்துக்கிடந்தேன்.

வீடு மனைவி மக்கள்
அதிகமாய் மறந்து
கரும்பலகை வெண்கட்டியோடு
உறவு வளர்த்தேன்....

ஏதோ - என் ஆசிரியத்துவத்தில்
மனசுள்ள மனிதர்களை படைத்த
திருப்தியில்
ஓய்வின் ஊர்தியில்
உட்கார்ந்துவிட்டேன்.

என் தனிமை
ஞாபகப் பூக்களின் இதழ் விரித்து
மகிழ்ச்சிமணம்
நகர்கின்றது....

ஏதோ ஒரு பொழுதில்
நான் வளர்த்த சின்னவனும்
சிங்காரமும் நல்ல மனிதராய்
காணக்கிடக்கின்ற போதெல்லாம்
பிறந்ததற்கு அர்த்தமறிந்து
பேரின்பமடைகின்றேன்...

என் மாணவர்கள்
உயரத்தில் நிற்கும் போதெல்லாம்
தோள்களில் சுமந்து
உயரம் காட்டிய தந்தையாகவும்
வலிகளின்போது வருத்தம் தாங்கிய
தாயாகவும்
இடரியபோது தாங்கும்
நண்பனாகவும்
இருந்திருக்கின்றேன்.
பாடசாலை என்ற கோயிலில்

ஆதலால்
இன்னொரு பிறவி
எடுத்து வந்தால்
ஆசிரியனாகவே அவதரிக்க
வேண்டுமென்ற
விழி திறந்த கனவோடு பொழுது
கழிக்கின்றேன்....

....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் இடர்பாடுடைய மாணவர்களை அறிதலும் அவர்களுக்கு உதவுதலும் ஓர் கண்ணோட்டம்

S.குணரட்னம் **B.A.PGDE(SNE) MATE**
**விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்**
**வலப்பனை கல்வி வலயம்.**

டேய்லரும் ஸ்ரேன்பேர்க்கும் (Taylor and Sternberg 1989) விளக்குமாப்போலச் சாதாரணமாகப் பாடசாலைச் சனத்தொகையில் 15-20 வீதத்தை சேர்ந்த கற்றல் தொடர்பான சாதாரண பிரச்சினையுள்ள பிள்ளைகள் கற்றல் இடர்பாடுடையவர்கள் என்னும் பிரிவைச் சேருகின்றனர். ஒரு பிள்ளையின் கற்றல் இடர்பாடு நிச்சியிக்கப்பட்ட அறிவாற்றல் (Intellectual) உடலியல் (Physical) அல்லது புலன்களின் (Sensory) குறைபாடென்றோடு நேரடியாக தொடர்புற்றதாக இருந்தால் இப்பிள்ளை கற்றல் இடர்பாடுடைய பிள்ளைகள் என்ற பிரிவைச் சேரும் என வெஸ்ட்வுட் (Westwood 1995) கூறுகிறார். மேலும் இது பற்றி கருத்து கருத்து தெரிவிக்கும் வெஸ்ட்வுட் பல்வேறு குறைபாடுகளை உடைய பிள்ளைனள் பெரும்பாலும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை மட்டுமல்லாது சமூக பொருத்தப்பாடு பற்றிய பிரச்சிணைகளையும் அனுபவிக்கின்றார்கள் என்று விளக்குகிறார்.

முன்னர் மெல்ல கற்கும் மாணவர்கள் (Slow Leaners) என அழைக்கப்பட்டவர்கள் தற்காலத்தில் “கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள்) என்று அழைக்கப்படுகின்றனர். சாதாரண வழக்கில் “கற்பிக்க கஷ்டமானவர்கள்” என ஏற்றுக்கொள்ளப்படும் பிள்ளைகள் கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள் எனும் இப்பிரிவையே சாறுகின்றனர். இவர்களால் சாதாரண பிள்ளைகளை (Normal Children) விட குறைந்த வேகத்திலேயே கற்றுக் கெள்ள முடியும் என ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ரிட்சட்சன் (Richartson 1992) கருத்துப்படி தெளிவான ஒரு காரணமின்றி அடிப்படை கல்விசார் திறன்களை கற்றுக்கொள்ள மிகவும் கஷ்டப்படும் 6 -17 வயதெல்லைகளுக்கு உட்பட்ட பாடசாலை சனத்தொகையில் 1 -2 சதவீதத்தினராவர். கற்றற் குறைபாடுடைய பிள்ளைகள் ஆவர். எனவே இவர்களும் கற்றல் இடர்பாடுடையவர் எனும் பிரிவைச் சேர்ந்தவர்களாவர். செவிமடுத்தல் பேசுதல், வாசித்தல், எழுதுதல் சார்ந்த திறன்களும் கணித திறன்களும் அடிப்படைக் கற்றத் திறன்கள் என கருதப்படுகின்றது.

கற்றல் குறைபாடு எனும் எண்ணக்கருவின் வரலாறு 20ம் நூற்றாண்டின் 6வது தசாப்தத்தில் ஆரம்பமாயிற்று எனினும் தற்காலத்தில் கற்றற் குறைபாடு என்பது விவாதத்திற்கு இடமளிக்கும் ஒரு எண்ணக்கருவாக இருக்கிறது. உங்களுக்கு இவ் எண்ணக்கருவைப்பற்றி விரிவானதொரு விளக்கத்தை பெற்றுத் தரும் நோக்கில் கற்றற் குறைபாடு பற்றிய கூட்டு தேசியக்குழு (National Joint Committee on Learning Disabilities 1990) வெளியிடப்பட்டுள்ள விபரத்தில் காட்டப்படும் கருத்தை சுருக்கமாக இங்கு தருகின்றேன்.

“கற்றற் குறைபாடு” என்பது கேட்டல், செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், தர்க்கித்தல் அல்லது கணித திறன்களை பெற்றுக் கொள்ளுதல் மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகித்தல் என்பன பற்றி தெளிவாக தென்படும் குறைபாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் பலவகையான ஒழுங்கீனங்களின் தொகுதிக்கு வழங்கப்படும் சாதாரண சொல்லாகும்".

இக்குறைபாடு அந்நபரிடத்தில் இயல்பாகவே அமைந்த ஒன்றாகவும் மத்திய நரம்பு தொகுதியின் செயற்பாட்டின் பின்னடைவினால் நடைபெறுகின்றதெனவும் இந்நிலை வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்க முடியும் என்றும் நம்பப்படுகின்றது. தனது நடத்தையை செயற்படுத்தும் போது சமூகத்தோடு இடைத்தாக்முறும் போதும் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் கற்றற் குறைபாடுடன் சேர்ந்திருக்க முடியும் எனினும் அத்தகைய பிரச்சினைகள் "கற்றற் குறைபாடுகள்" பிரிவில் சேர்வதில்லை ஆனால் புலன்கள் ஊணமுறுதல் மந்த உளநிலை, அல்லது கடுமையான மனவெழுச்சி குழப்பம் போன்ற நிலமைகள் காரணமாக அல்லது தனிநபருடைய கலாச்சார வேறுபாடுகள் அல்லது பொருத்தமற்ற பயிற்சிகள் போன்ற நிலமைகளுடன் இணைந்ததாக கற்றத் திறன் இன்மை காணப்படக் கூடும் எனினும் இந்நிலமைகளின் காரணமாக கற்றற் குறைபாடு ஏற்படுவதில்லை என்பது கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

1970 முதல் கல்வியியலாளர்கள் கற்றல் இடர்பாடுடைய பிள்ளைகளை ஒரு விசேட குழுவாக பிரித்து கற்பிப்பதற்கு பதிலாக சாதாரண வகுப்பறையில் அவர்களை கற்றல் நடவடிக்கைகளில் பங்கேற்ற செய்வது சிறந்த பெறுபேற்றை தரும் என்று கருதினர். இக்கருத்துக்கு ஏற்றவாரான கொள்ளை திட்டமிடற் போக்கு விசேடமாக 20ம் நூற்றாண்டின் இறுதி சதாப்தத்திலிருந்து அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் காணப்படுகின்றமையை அவதானிக்கலாம்.

இலங்கையின் பாடசாலை முறைமையில் பார்வை குறைபாடு, கேள்வி குறைபாடு, உளகுறைபாடு (மந்த உளநிலை) உள்ள பிள்ளைகளுக்காக விசேட அளவுகள் அமைக்கப்பட்டிருந்தாலும் கற்றல் இடர்பாடுடைய பிள்ளைகள் சாதாரண வகுப்பறைகளிலேயே கற்கின்றனர். சாதாரண வகுப்பறையில் கற்றல் இடர்பாடுடைய பிள்ளைகளின் கல்வியின் வெற்றியை உறுதிப்படுத்தும் கற்றல் கற்பித்தல் அனுபவங்களை பெற்றுக் கொடுத்தல் ஆசிரியர்களுக்கு ஒரு பெரும் சவாலாகவும் அமைகின்றது. சாதாரண வகுப்பறையில் கற்கின்ற கற்றல் இடர்பாடுடைய பிள்ளைகளின் கற்றலை வெற்றிகரமானதாக்கி கொள்வதற்கு ஆசிரியர் பிள்ளைகளுக்கு விசேடமாக உதவி புரிதல் வேண்டும். அதே போன்று இம்மாணவர்களின் தேவைகள் பற்றி விசேட கவனம் செலுத்த வேண்டும்.

கற்றல் இடர்பாடுடைய பிள்ளைகளக்கு செய்யக்கூடிய உதவிகள்

- ❖ பாடத்தை அறிமுகப்படுத்தும் போது மாணவரது மட்டங்களை நினைவிற் கொள்ளுதல்.
- ❖ பாடத்தை கருத்துள்ள கூறுகளாக பிரித்து வரிசையாக ஒழுங்குபடுத்தி பிள்ளையின் மட்டத்திற்கேற்ப கற்பிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ பாடத்தை கற்பிக்கும் போது பயன்படுத்தும் சொற்கள், அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள் என்பன பிள்ளைகளின் வயது மட்டம், திறமை மட்டம் என்பவற்றிக்கு ஏற்றனவாக உள்ளனவா என சிந்தித்தல்.

- ❖ மாணவர்களின் துலங்களை பொருத்து உங்கள் அறிவூட்டல்களை சிறிது மாற்றியமைக்க நேரிடலாம்.

- ❖ அவர்களது திறமை மட்டத்திற்கு பொருந்தக்கூடியவாறு வினாக்களை (வாய்மொழி மூல அல்லது எழுத்து மூல) மாற்றியமைக்கலாம்.

- ❖ எல்லா சந்தர்ப்பங்களிலும் நல்ல ஆசிரியர் மாணவர் தொடர்பு பேணப்படுதல் வேண்டும்.

- ❖ திறமையான பிள்ளைகள் திறமை குறைந்த பிள்ளைகளுக்கு உதவுவதற்கு இடமளிக்க வேண்டும்

- ❖ கற்றல் இடர்பாடுடைய மாணவரால் எளிமையான பொதுமையாக்கம் செய்ய முடியும் ஆனால் அவர்களுக்கு பரிசோதிக்க ஆய்ந்தறிய, கலந்துரையாட போதுமான அளவு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

- ❖ மாணவரது கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

- ❖ மாணவரது சாதனை பற்றிய திரல் பதிவேடுகள் குறிப்பிட்ட காலத்திற்கு பேணப்படுவது அவசியமாகும்.

எனவே இவற்றை கருத்திற் கொண்டு செயற்படுவோமாயின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் கற்றல் இடர்பாடுடைய மாணவர்களை முன்னேற்ற கூடியதாக இருக்கும். சிறந்த கற்பித்தலின் மூலம் வெற்றியடையக்கூடியதாகவும் அமையும்.

●●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வி வளர்ச்சியில் கணிப்பீடும் மதிப்பீடும்

**T.ரமேஸ் JP**
**ஆசிரிய ஆலோசகர்**
**ஆரம்ப பிரிவு**
**வலய கல்வி பணிமனை வலப்பனை.**

புதிய கலைத்திட்ட அமுலாக்கத்தில் மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பது கணிப்பீடும் மதிப்பீடுமாகும்

ஆரம்பக் கல்வி வளர்ச்சியின் பின்னடைவிற்கான காரணத்தை நோக்கும் போது முதன்மை நிலைகளில் காணப்படும் கணிப்பீடும் மதிப்பீடும் முறையாகக் கணிக்கப் பெறாமையே முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு சம்பந்தமான பூரணமான தெளிவு காலம் கருவியைக் கையாளுதல் சந்தர்ப்பம் என்ன? என்பன பற்றி சரியாக அறிந்து கொள்ளாமல் தேர்ச்சிகளுக்கு ஆசிரியர்களால் வழங்கப்படும் ( ) குறியீடானது ஆரம்பக் கல்வியின் வீழ்ச்சிக்கு ஓர் காரணியாகக் காணப்படுகிறது. முறையாக கணிப்பீடுகளை மேற்கொண்டு மாணவர்களை இனங்கண்டு அவர்களு க்கான சரியான பின்னூட்டலை ஆசிரியர்கள் குறித்த காலத்தினுள் செயல்படுத்துபவராகக் காணப்பட்டால் சகல மாணவர்களுமே சிறந்த பாண்டித்தியத்தைக் கொண்டவராகக் காணப்படுவார்கள்.

இன்று அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி விருப்புக்குரிய தேர்ச்சி மற்றும் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி என்பன வகுப்பாசிரியர்களினால் முன்னாயத்தம் கருவிகள் உபகரணப் பயன்பாடு பொருத்தமான காலம் திட்டமிடல் இன்றியும், வைத்திருப்பதற்கும் படிவத்தைப் பூர்த்தி செய்தலுமே என்ற நிலையில் காணப்படுகிறது. இதன் காரணமாகவே ஆரம்பப்பிரிவுகளில் வயதிற்கேற்ற வாசிப்பு எழுத்துத் திறன் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதன் தாக்கமானது புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்குக் குறைவான மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதற்குக் காரணமாகின்றது.

**மதிப்பீடு என்றால் என்ன?**

ஒரு மாணவனின் புள்ளியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கணிக்கப் பெறுவது மதிப்பீடாகும். (அலகு பரீட்சை தவணைப்பரீட்சை)

**கணிப்பீடு என்றால் என்ன?**

ஒரு தேர்ச்சியை பல நியதிகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப் பெறுவது கணிப்பீடாகும். தேர்ச்சிகளுக்கேற்ப நியதிகளைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

உதாரணம் :- பாடல் ஒன்றைப் பாடிக் காட்டுவார்.
நியதிகள் :- மனனம், உச்சரிப்பு, தெளிவு, பண்ணோடு பாடுதல்
இவ்வாறு நியதிகளை அமைத்துப் புள்ளி வழங்கல்.

கணிப்பீடு செய்யும்போது கவனிக்கப்பட வேண்டிய காரணிகள்

1. சூழல் 2.கலாசாரம் 3. பண்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீடானது பின்வரும் தன்மையைக் கொண்டிருக்கும்.அளவு, பண்புத்தரம், உள்ளடக்கம், விடய அமைப்பு, ஒழுங்கு, செயற்பாடு, பாவனை, ஆசிரியருக்கு இலகுதன்மை, வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் சமமானதாகக் காணப்படும்.

**கணிப்பீடு, மதிப்பீடு பிள்ளைகளிடத்தே மேற்கொள்ளும் முறைமை.**


- 1. பல்வகைத் தன்மை ஊடாக
- 2. விஷேட தன்மை ஊடாக
- 3. விருப்புக்குரிய தன்மை ஊடாக
- 4. சவால்களை ஏற்றுக்கொள்ளல் ஊடாக
- 5. எல்லோருக்கும் இடமளிப்பதன் ஊடாக
- 6. சுதந்திரத்தின் ஊடாக மேற்கொள்ளல் வேண்டும்.

**அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி என்றால் என்ன?**

அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி என்பது மாணவர்களிடம் எதிர்பார்க்கும் தேர்ச்சியை அடைய முடியாத மாணவர்கள் உயர் மட்டத்தில் கட்டாயம் அடைய வேண்டிய தேர்ச்சியாகும்.

முதன்மைநிலை ஒன்றினை பூர்த்திசெய்வதற்கு முன்னர் சகல மாணவர்களாலும் கட்டாயமாக உயர் மட்டத்திலான திறனைக் காட்டுதல் வேண்டும். இவ்வாறு காட்டுதலே அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி எனப்படும்.

முதன்மை நிலை 1 48 அக தேர்ச்சிகள்
முதன்மை நிலை 2 52
முதன்மை நிலை 3 55




ஆரம்ப பிரிவு மாணவர்களை சரியாக இனங்கண்டு அதற்கேற்றவாறு மாணவர்களுக்கான பரிகார வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதுடன் குறித்த காலத்தில் நிறைவு செய்து அடுத்த முதன்மை நிலைக்குத் தயாராக மாணவர்களை தேர்ச்சியடைய செய்யும் போது ஆரம்ப பிரிவு மிக விரைவான வளர்ச்சியை அடையும்.

●●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலைப் பாதுகாப்போம்.

**M.உலகநாதன் BA, PGDE. MEd**
**ம.மா/வ இராகலை த.ம.வி**

இளமையும் இல்லை, இலைகளும் இல்லை, இதயம் இளைப்பாற மரங்களும் இல்லை, மனிதன் சுயநலம் நிலைத்திட மரம் கொன்றானோ? ஒரு வேளை கானல் நீர் கொண்டு இனிவரும் அவன் தாகம் தீர்ப்பானே! இதோ சூழல் தாயின் ஏக்கம். சூழல் எனும் கருவறையில் நாம் இருந்து கொண்டு சூழலின் பாதுகாப்பைப்பற்றி என்ன செய்தோம்?

உண்மையில் சூழல் என்பது மனிதன் உட்பட அனைத்து ஜீவன்களும் வாழ்வதற்கேற்ற இடம்தான் இந்த புவிமண்டலமாகும். இப்புவிமண்டலம் சீராக இயங்குவதற்கு ஐந்து வகையான ஏற்பாடுகளாக நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ என ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு உயிர்க் கோளத்தைச் செழிக்கச் செய்கின்றது. இந்த ஐம்பூதங்களில் ஒன்று குறைபாடாக இருந்தாலும் உலகம் நாசத்தைத்தான் அதிகம் அடையும்.

சூழல் கேடு எனும் காரிருள் தற்போது இப்பூமியின் மீது கவிழ்ந்திருந்தாலும் பூமி நிச்சயம் உயிர் பிழைக்க வேணடும். என்பதே நமது ஆசை.ஏனென்றால் அது நம்முடைய வீடாயிற்றே. நமது பிள்ளைகளின் பேரப்பிள்ளைகளின் வீடாயிற்றே. இந்த ஆசை ஈடேற நம்முடைய பங்கில் செய்வதற்கு ஏதாவது இருக்கிறதா?

சுற்றுச் சூழல் பற்றி பெரும்பாலானோர்கள் கவலைப்பட்டாலும் குப்பையை வீதியில் எறிவதைப்பற்றியோ கழிவுகளை ஆற்றில் கொட்டுவதைப்பற்றியோ அநாவசியமாக மின் விளக்குகளை எரிய விடுவதைப்பற்றியோ அநேகர் சிந்தித்துப் பார்ப்பதே கிடையாது. இவை எல்லாம் சின்ன விடயங்கள் அல்ல. பூமியில் வாழும் கோடிக்கணக்கான மகன்களில் ஒவ்வொருவரும் பூமியைப் பராமரிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தால் அது எப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தும்! ஆற்றலைப் பயன்படுத்துவதில் சிக்கனமாக இருப்பது மறுசுழற்சி செய்யும் திட்டங்களும் ஒத்துழைப்பது குப்பைகளைத் தகுந்தமுறையில் அப்புறப்படுத்துவதுபோன்றவை சூழல் பாதுகாப்புக்குக் கைகொடுக்கும். என்றாலும் நம்மைச் சுற்றியுள்ள பெரும்பாலான மக்களின் செயல்களை நாம் கட்டுப்படுத்த முடியாது. அதனால் இந்நிலைமையை மாற்றவே முடியாது என அர்த்தமாகுமா?

உலக மாற்றத்திற்காக சமூக மற்றும் சுய மாற்றத்தினைக் கொண்டு வருவது அத்தியாவசியமாகிறது. நாம் மக்கள் மத்தியில் செய்ய வேண்டியவைகளாக

- சூழல் நேய சிந்தனையை விருத்தி செய்தல்
- வளங்களை வீண்விரயம் செய்யாது பார்த்துக் கொள்ளல்.
- வளங்களின் பாவனையை வரையறைக்கு உட்படுத்தல்.
- வளங்களை மீள்சுழற்சி அடிப்படையில் பயன்படுத்தல்
- மாற்று வளங்களை தேவைக்கு ஏற்ப நுகர்தல்
- மன ரீதியான உதாசீனமான சோம்பல்தனமான எண்ணத்தைத் தவிர்த்தல்.
- சேதனப் பசளைகளைப் பயன்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முறையாக தொழில்நுட்ப ரீதியில் மலசலகூட கழிவுகளை அகற்றுதல்.
- பிளாஸ்டிக் போத்தல்களையும் தகரப்பேணிகளையும் வருமானம் தரும் வகையில் சேகரித்தல்
- சமூக பொறுப்புமிக்க பிரஜைகளின் மனப்பாங்கினைக் கட்டியெழுப்புதல்.
- பாடசாலை மட்டத்தில் சுற்றாடலைப் பாதுகாக்கும் செயற்பாட்டை களத்தில் சென்று ஈடுபடுத்தல்.
- முக்கிய சூழல் நிறுவனங்கள் முக்கிய தினங்களிலும் கலாசார நிகழ்வுகளிலும் மரம் நாட்டும் நிகழ்வினைக் கட்டாயப்படுத்தல்.
- அரச நிறுவனத்தின் அதிகாரிகள் உதவியுடன் மத்திய சூழல் அதிகார சபையின் வேலைத் திட்டங்களைத் தமது பகுதிக்கும் பகிரச் செய்தல்.
- எமது பிரதேசத்தின் பெறுமதிமிக்க மரங்கள் பாறைகள் மண்வகைகள் விலங்குகள் தாவரங்கள், மூலிகைகள் என்பனவற்றை தெரிந்தோ தெரியாமலோ திருடுவதை கட்டாயச் சட்டங்கள் மூலம் தடைசெய்தல்.
- ஈரநிலங்கள் நீரோடைகள் விளிம்புக்காடுகளை தாவரக்காப்பாகப் பிரகடனம் செய்தல்.
- சூழல் வளங்களைச் சுரண்டுபவர்களைக் கண்டித்தல் தண்டப்பணம் அறவிடுதல் மாற்றுத் தொழிலில் ஈடுபடச் செய்தல்.
- பேண்தகு விவசாயம் பேண்தகு வீடமைப்பு பேண்தகு விலங்கு வளர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை தேசியக் கொள்கைப்படி அதிகாரம் பெற்றவர்களால் படிப்படியாக பிரதேசம் தோறும் அமுல்படுத்தல்.
- மண் வளமாக்கல் நடவடிக்கைகளை மலைச்சரிவுகளில் ஏற்படுத்தல்.
- தோட்டக் காணிகளை மரக்கறி செய்கைக்கு குத்தகையாக வழங்கி சேதனப்பசளை மூலம் விவசாயத்தினை மேற்கொள்ளல்.
- நீரேந்துப் பிரதேசங்களை முறையாகப் பாதுகாத்தல்.
- சூழல்நேய உற்பத்திகளில் ஈடுபடும் மக்களை தனியார் நிறுவனத்துக்குச் சம்பந்தமான தரப்பினர் விருதுகள் பாராட்டுக்களை வழங்குதல்.
- சூழல் மேற்பார்வையில் ஈடுபடும் அதிகாரிகள் நேர்மையாகவும் அக்கறையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.
- அரச தனியார் சர்வதேச நிறுவனரீதியில் அங்கீகாரம் பெற்ற அதிகாரிகள் ஊடாக இவ்வாறான செயல் திட்டங்களை அமுல்படுத்தவேண்டும்

திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு புதிய செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பதனிடுதல் வசதிகள் நிறுவுதல் குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் அவைகளை அறிவியல் ரீதியில் மூடுதல் வீட்டுக்கு வீடு சென்று குப்பைகளை சேகரித்தல் அவைகளை பதனிட்டு திட்ட வளாகத்திற்கு கொண்டு சேர்த்தல் என்பன புதிய திட்ட வரையறைகளாகும்.

இது தொடர்பான விழிப்புணர்வூட்டும் தினமாக ஜூன் மாதம் 5ஆந் திகதியை ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்துள்ளது. இச் செயற்பாடு 1972ஆம் ஆண்டு ஐ.நா பொதுச் சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்குப் பொறுப்பாக ஐ.நா சூழல் திட்டம் செயற்படுகின்றது. சூழல்பாதுகாப்பு நிகழ்ச்சிகள் தொடர்பாக பணியிடத்தில் ஆற்றல் பயன்பாட்டை குறைக்க தனி ஒவ்வொருவருக்கும் ஊக்கமூட்ட 2017இல் இருந்து சிங்கப்பூரில் சூழல் செயற்பாட்டு நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் பூமித்தாயின் செழிப்பை புத்துயிர்ப்பிக்க பொது நலம் கருதி முன்வருவோம். தொலைந்த இயற்கையை மீண்டும் கொண்டுவந்து 21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தோம் என சரித்திரம் செதுக்குவோம்.

ஊசாத்துணைகள்


- நித்திலவர்ணன், ஆ.(2015) பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி கொழும்பு. சேமமடுபதிப்பகம்.
- கருணாநிதி, மா.(2014) கல்விச் சேவை பாராட்டி விழா மலர். கொழும்பு குமரன் புத்தக இல்லம்.
- வேல்நம்பி, தி. (2008) வலுவுட்டல் முகாமைத்துவம் யாழ்பாணம். குரு வெளியீடு.


• • • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டின் முக்கியத்துவம்

**Author : Mr.S.Jeevaneshan**
**(Deputy Principal)**
**CP/W/Ragala T.M.V.**

புதிய வருடத்தில் பாடசாலை சென்று பழைய நட்புக்களை மீண்டும் சந்தித்தல், புதிய நண்பர்களை உருவாக்குதல், புதிய விடயங்களைச் செய்தல, மற்றும் புதிய குழு வேலைகள் விளையாட்டுக்கள் என்பவற்றில் ஈடுபடல் போன்ற காரணங்களினால் சிறுவர்கள் புதிய வருடத்தில் பாடசாலைக்குச் செல்லும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கின்றனர். சிறுவர்கள் விளையாட்டு மற்றும் புதிய விடயங்களைச் செய்வதில் மாத்திரம் அதிக விருப்பம் கொள்வதில்லை. குறிப்பாக அவர்கள் ஆச்சரியமான விடயங்களை செய்வதிலும், குழு விளையாட்டுக்களில் ஈடுபடுவதிலும் அதிகம் ஆர்வம் கொண்டவர்களாகவும் உள்ளனர். இது சிறுவர்களுக்கு சிறந்த மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் வழங்குவது மாத்திரமன்றி அவர்களில் குழுசெயற்பாட்டுத்திறன் மற்றும் சமூகத்துடனான தொடர்பை அதிகரிப்பதற்கும் உதவுகின்றது.

**குழு விளையாட்டுக்களினால் ஏற்படும் நன்மைகள்**

**01. நம்பிக்கை அதிகரித்தல்.**

சிறுவர்கள் ஒரு விளையாட்டில் ஈடுபடும்பொழுது அவர்களுக்கு தமது திறமையை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகின்றது. சுய விழிப்புணர்வு ஏற்படுகின்றது. அதே போன்று அவர்கள் தாம் விரும்பும் விளையாட்டில் ஈடுபட்டு அதன்மூலம் முழுமையான மகிழ்ச்சியை அடைவதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கின்றது.

**02. சீரான உடற்பயிற்சி வழங்கப்படுதல்**

குழு விளையாட்டில் ஈடுபடும் ஒரு சிறுவன் தனது அதிகமான நேரத்தை விளையாட்டிற்காக செலவழித்து பல செயற்பாடுகளை அதற்காக மேற்கொள்கிறான். அதில் முக்கியமாக தொடர்ச்சியான பயிற்சிகளுக்கு அவர் உள்வாங்கப்படுகின்றார். எனவே அவர் நோய் எதிர்ப்புச்சக்தி கொண்டவராகவும் முழுமையான சுகாதார ஆரோக்கியம் உள்ளவராகவும் மாறுகின்றார்.

**03. உறவுகளை வளர்த்துக்கொள்ளல்.**

பயிற்சிகள் மற்றும் விளையாட்டின் போது சிறுவர்கள் ஏனைய பயிற்சியாளர்களுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்கின்றனர். இதனால் சிறுவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படுவதுடன் அவர்கள் சமூகத்தோடு தமது திறமைகளைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

**04. கல்வியிலும் திறமையானவர்களாக மாறுகின்றனர்.**

குழு விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்கள் கல்வித்துறையிலும் தம்மைச் சிறந்தவர்களாக வளர்த்துக் கொள்கின்றனர். விளையாட்டில் ஈடுபடும்பொழுது நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவமும், ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு என்பனவற்றைக் கற்றுக் கொள்கின்றமையினாலேயே அவர்கள் கல்வியிலும் சிறந்தவர்களாக மாறக் காரணமாக இருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05 வெற்றிக்கு வழிவகுத்தல்**

குழு விளையாட்டில் ஈடுபடும் ஒரு சிறுவன் வெற்றி, தோல்வி ஆகிய இரண்டையும் எதிர் கொள்வார். இதனால் அவரிடம் தோல்வியைத் தாங்கிக்கொள்ளும் தன்மை வெற்றியைக் கொண்டாடும் முறைமை மற்றும் இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது தமது அணியின் ஏனைய வீரர்களின் நிலைமையை அறிந்து கொள்ளல் போன்றவற்றை அவர் கற்றுக்கொள்கின்றார். இவை அனைத்தும் அவர் எதிர் காலத்தில் தனது இலக்குகளை வெற்றி கொள்வதற்கு அதிக பங்களிப்பு செலுத்துகின்றன.

**06. மதிக்கும் மனப்பாங்கை ஏற்படுத்துதல்.**

குழு விளையாட்டில் ஈடுபடும் ஒருவர் பயிற்சியாளர், ஆசிரியர், நடுவர் மற்றும் தமது சகாக்களை மதித்து நடக்க வேண்டும். எனவே விளையாட்டில் உண்டாகும் இந்த ஏனையோரை மதிக்கும் பழக்கம் பின்னர் அது அவரது வாழ்க்கையிலும் தானாகவே நிலைத்து நிற்கிறது.

• • • •


# New Kalaiaruvi Academy

(English Institute)

Pansala Road,Ragala

Contact -0772366028



**Purposes Of Institute**

To develop the pupils,understanding of the english language.
To uplift the grammatical terminology for level of students.
success and satisfaction on final target.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் சேவையும் நடைமுறை நோக்கும்

**த.மணிவண்ணன் B Ed, DSM**
**அதிபர்**
**ம.மா/வ/மகாஊவா.த.வி, வலப்பனை.**

குற்றங்களை களைபவராக பணிபுரியும் ஆசிரியர், தனது சேவையின் ஊடாக எவ்வாறு சமூகத்தின் தேவையை பூர்த்தி செய்கின்றார் என்ற வினா, அனைவரது மனதிலும் காணப்படுகின்ற ஒன்றாகும்.ஆசிரியர் சேவை என்பது ஆதிகாலம் தொட்டு மிக உயரிய ஒன்றாகவே கருதப்பட்டு வருகின்றது. அந்த ஆசிரிய சேவையின் மகத்துவத்தை நடைமுறையில் நோக்குவது தேவையாகுகின்றது. இன்நிலையில் இன்று ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்படுவோர் பல்வேறு தரத்திற்குரியவராக காணப்படுவதனை நோக்கலாம். அவர்களில்,

- தொழில் மகத்துவம் கருதி இணைவோர்.
- தொழில் வேண்டும் பட்சத்தில் இணைவோர்.
- வேறு தொழில் கிடைக்காதவிடத்து கட்டாயத்தின் பேரில் இணைவோர்.

என வகைப் பிரிக்கலாம். இவ்வாறு பல்வேறு காரண காரியத்தின் பொருட்டு தம்மை ஆசிரிய சேவையில் இணைத்துக்கொண்டாலும், இன்று தேர்ச்சி மைய கல்வியின் அடிப்படையில் ஆசிரியர் என்பவர் மாணவனின் நலனில், அறிவுவிருத்தியில் அவர்களை ஓங்கச்செய்வதுடன் தம்மையும் இற்றைப்படுத்தி நலனோம்பியாக செயற்படுவது அத்தியாவசியமாகுகின்றது. இதன்போது ஆசிரியர் வெறுமனே ஆசிரியராக மட்டுமன்றி தன்னை பல்வேறு வகிபாகங்களுக்குள் ஆட்படுத்திக்கொள்ள வேண்டியவராகவும் காணப்படுகின்றார்.

இந்நிலையில் ஆசிரியர் ஒருவர் சமூகத்தின் திறவுகோளாக காணப்படுவதுடன் பல்வேறு சமூக, அரசியல், பொருளாதார, கலாசார போக்குகளுக்கு ஆட்பட்டவராகவும், காணப்படுவதுடன் முக்கியமாக பொருளாதார கட்டமைப்பில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளமுடியாத நிலையில் திகழ்வதுடன் கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளில் ஒரு நோக்குநிலை கொண்டு செயல்பட முடியாதவர்களாகவும் கபணப்படுகின்றமை கண்கூடு.

இவ்வாறு பல்வேறு நிலைபாடுகளுக்குள் பின்னிப்பிணைந்து காணப்பட்டாலும் கூட ஆரோக்கியமான சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதில் ஆசானின் கடப்பாட்டை விளிக்கும்போது ஆசிரியர்,

ஒழுக்கங்கள் சார் தேர்ச்சி
அறிவுசார் தேர்ச்சி
பொருப்புக்கள் சார் தேர்ச்சி
தலைமைத்துவம் சார் தேர்ச்சி

என்ற கட்டுகோப்புகளுக்குள் மையச்சுட்டியாக காணப்படுகின்றார். நல்லாசான் நலநோம்பும் மாணவ சமுதாயத்தை தூரநோக்கு சிந்தனையுடன் உருவாக்குதல் காலத்தின் தேவையாகின்றது. ஆசிரியராய் பிறந்த எவரும், ஆசிரியராய் தன்னை மாற்றிக்கொண்ட எவரும் அடைய விரும்பும் இலக்கு இதுவேயாகும். எதிர்கால


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தை செய்தளித்தல் என்பது ஒவ்வொரு ஆசானினதும் கைகளிளேயே தங்கியுள்ளது என்பது மறுக்கமுடியாத வரலாற்றுண்மையாகும்.

இந்த வகையில் ஆசிரியர் திருத்தமான சிந்தனை கொண்டவராகவும், பிள்ளை விருத்தியில் கவனமுடையவராகவும், மற்றும் பிள்ளை உளவியல் ,பாடப்புல அறிவு, தொடர்பாடல் முன்மாதிரி நடத்தை பாங்கு கொண்டவராகவும், கற்பித்தல் நுட்பங்களை அறிந்தவராகவும், பரிகார கற்பித்தல் நுட்பங்களை கையாள்பவராகவும் காணப்படுவது இன்றைய ஆசிரியரின் சூல்நிலைத் தேவையாகும். மரபு ரீதியான ஆசிரியர், கடத்தும் வகிபாகமும், பரிமாற்று வகிபாகமும் கொண்டு காணப்பட்டார். தற்போது இந்நிலை மாற்றம் கண்டு ஆசிரியர் நிலைமாற்ற வகிபாக நடைமுறை தேவைப்பாடாகின்றது.

மேலும் கற்பித்தல் கற்றலில் "தயார்படுத்தல்" பற்றி முக்கியத்துவம் படுத்தப்பட்டு வந்தபோதும் இதனை தனது கற்பித்தல் அனுபவத்தை காரணமாக காட்டி தயார்படுத்தலுடன் வகுப்பறைக்குள் உள்நுழையும் ஆசிரியர்களின் தொகை குறைவாகவே காணப்படுகின்றது. தயார்படுத்தல் ஆசிரியரின் தொழில்வாண்மை கூறுகளுள் ஒன்றாகும். தயார் படுத்தாத கற்பித்தல் கற்றலில மாணவர்களுக்கான நோக்கம் அடையப்பெறாமல் வெறுமனே வளங்களின் வீண்விரயமே சுட்டிக்காட்டப்படுகின்றது. நோக்கம் அடையப்படாத விடத்து வளமான சமுதாய மாற்றம் ஏற்படுவது கேள்விக்குறியானதே. ஆசிரியரின் சிறந்த தயார்படுத்தல் வகுப்பபைறயினூடாக நட்பிரஜை உருவாக்கத்திற்கும், அறிவுமைய சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் வழிசமைக்கும்.

நடைமுறையில் ஆசிரியருக்கென பல்வேறு தொழில்வாண்மை விடயங்கள் பேசப்படுகின்றன. அவை நவீனத்துவ கல்வியியல் சிந்தனைகளாக சுட்டிக்காட்டவும் படுகின்றன. காலத்தின் தேவைக்கேற்ப மரபு ரீதியான விடயங்களிலிருந்து மாற்றம்பெற்று வந்த கூறுகளாகவும் இவற்றினை பார்க்கலாம். தொழில்வாண்மை ரீதியாக தன்னை பலப்படுத்திக்கொண்ட ஆசிரியர் இன்று வெற்றிகரமான கற்பித்தலை மேற்கொள்ள முடிவதுடன் இருபத்தோராம் நூற்றாண்டிற்கான வளம்சார் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான உயரிய பங்களிப்பை செலுத்தக்கூடியதாக இருக்கும். மேலும் ஆசிரிய சேவை தொடர்பாக உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நவீன திறன்களை இன்று நடைமுறையில் கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் ஆசிரியராக சேவைக்குள் உள்வாங்கப்பட்ட பின்னர் திறன்களை வளர்த்துக்கொள்வது கடப்பாடாகும். அறிவுமைய சமூகத்தை கட்டியெழுப்பும் முயற்சிக்கு, ஆசான் தேடல்சார் கற்கையை பின்பற்றுவது வரவேற்கத்தக்கதாகும்.

கற்பித்தல் கற்றலின் எல்லா பக்கங்களையும் முழுமையாக பூர்த்தி செய்ய முடியாவிடினும் மாணவரை மையப்படுத்தி தனது சேவையை வெற்றிகரமாக்க முயலும் எல்லா ஆசிரியனும் வெற்றி காணலாம் என்பது உண்மை.

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இதயம் கனக்கிறதே.......

திருமதி P. மதிவதனி BA, PGDE
மமா/வ/ டலோஸ் த.ம.வி.

தன்னை அறிந்தவன்
தலைஞானி
சொன்னான் ஒருவன்
உன்னுள்ளே அவன்
உள்பொருளாய்
வேதவாக்கிது
இன்று அது?
இல்பொருளாகிவிட்டதுவோ?

இல்லை .. இல்லை
மனிதனே
நேயமில்லா பொருளாகிவிட்டான்.

விஞ்ஞான யுகமெனக் கூறி
இங்கு மெய்ஞ்ஞானத்திற்கு மறுப்பு
சத்தியத்திற்கோ சாட்டையடி
சுயநலம் இங்கு
வேர் விட்டு
விருட்சமாகிறது.
என் இதயம் கனக்கிறதே....!

கலியுகத்திற்கு வரவேற்புவிழா
கலாசார விழுமியத்திற்கோ
பிரியாவிடை
கொண்டாடுகிறது உலகம்.

"பயப்படு கடவுளுக்கு"
அறிவின் ஆரம்பமிது
சொன்னான் ஒருவன்
அறிவால்....
அறிவியலை பெருக்கி
அபச்சாரம் நடக்கிறது
என் இதயம் கனக்கிறதே....!

இன்டர்நெட் ஈமெயில்
இன்னும் பல முன்னேற்றம்
இருந்துமென்ன....
இதயமில்லா ஈனர்களின்
இரக்கமில்லா செயல்கள் பல
என் இதயம் கனக்கிறதே....!

தினந்தினம் தினத்தந்தியில்
திடுக்கிடும் செய்திகள் பல
கொலை கொள்ளை
கற்பழிப்பு
ஏனிந்த நிலை?
என் இதயம் கனக்கிறதே.....!

பெண்ணுக்கு உரிமை உண்டாம்
பிதற்றுகிறது உலகம்.
பிஞ்சுக்குழந்தைக்கும் உண்டாம்
பேசுகிறது
உரிமை உரிமை என
முழக்கங்கள் பல
ஒழிக்க முடிந்ததுவா
மீறல்களை
என் இதயம் கனக்கிறதே...!

ஆக்கத்திற்கு உருவாக்கிய
அனைத்தும் இன்று
மனித தேக்கத்திற்கு,
ஓடும் பஸ்ஸில்
ஒழுகும் பார்வையில்
தேடும் (வேலை) தளங்களில்
வாழும் இடங்களில்
மனித நேயத்தின்
மரண ஓலங்கள்!!!!
என் இதயம் கனக்கிறதே...!

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் நடத்தைகளை விருத்தி செய்வதில் பாடசாலையின் பங்களிப்பு

திரு.S.செல்வகுமார் ( M.Ed ) SLPS
பிரதி அதிபர்
மமா/வ/ இராகலை தமிழ் மகா வித்தியாலயம்

கல்வியில் முக்கிய நோக்கங்களுள் ஒன்று மாணவர்களிடம் நல்லொழுக்க பண்புகளை வளர்த்து சமுதாயத்தில் பண்புள்ளவர்களாக வாழ அவர்களை பயிற்றுவிப்பதாகும்.இதனையே கல்வி சிந்தனையாளரான ஹேர்பார்ட் எலிஸபத் ஹர்லொக் கோல்பர்க் போன்றவர்கள் வலியுறுத்துகின்றனர்.இன்று கல்வியின் நோக்கங்கள் பல இருப்பினும் தற்கால சூழலில் நல்லொழுக்கத்துடன் வாழக்கூடிய நல்ல வளமிக்க மனவுறுதியை மாணவரகளிடம் உருவாக்க வேண்டும் .ஏனெனில் ஒழுக்கம் என்பது தனிப்பட்டோரின் வாழ்க்கைக்கும் சமுதாயத்தின் நல்லொழுக்கத்துக்கும் உதவுவதாக அமைவதாகும்.

மாணவனின் ஆரம்பகால ஒழுக்க வளர்ச்சியில் குடும்பத்தின் செல்வாக்கு குடும்ப உறுப்பினர்களின் நடத்தைகள் ஓரளவு செல்வாக்கு செலுத்தி இருப்பினும் அடுத்த கட்டமாகிய பாடசாலை மாணவர்களை ஒழுக்க பண்புகள் பெறச் செய்வதில் கூடிய பங்கு வகிக்கின்றது. பாடசாலை மாணவர் வாழ்க்கைக்கான அறக் கருத்தக்களையும் உயர்ந்த வாழ்க்கைக்கான குறிக்கோள்களையும் தனது உள்ளத்தினுள் அமைத்து அவற்றிற்கேற்ப வாழக்கூடிய பழக்கத்தை பெறுவர். பாடசாலை கல்வி வழியாகவே இத்தகைய நல்லொழுக்கப் பழக்கங்களை மாணவர் அடைய வேணடும் என்றும் மாணவர்களின் குறைபாடுடைய நிலைமையை மாற்றியமைத்து அவர்களின் சூழ்நிலையை சீராக்க உதவும் வழியேற்ப்படுத்துதல் வேண்டும். எனவும் சமூகம் எதிர்ப்பார்க்கின்றது. எனவே மாணவரின் ஒழுக்க வளர்ச்சியில் பாடசாலையின் பங்கு அளப்பரியதாகும்.

மாணவர் ஒருவர் காண்பிக்கும் பிறழ்வான நடத்தைகளை நிறுத்துவதற்கு தண்டனையளித்தல் அதாவது ஏசுதல், பேசுதல், வகுப்புத்தடை, தாக்குதல் போன்றன இடம் பெறும். இத்தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள மாணவர் பிறழ்வான நடத்தைக்கு பதிலாக சீரிய நடத்தையை காட்டுவார் என்பது எதிர்ப்பார்க்கப்படும். பாடசாலை சட்ட ஒழுங்கு நாட்டின் சட்டத்திட்டங்கள் இடப்பட்டிருப்பதும் தவறிழைப்போருக்கு தண்டனை வழங்குவதும் அதே எதிர்ப்பார்ப்புடன் ஆகும்.

ஒரே தண்டனை வழங்கும் ஆசிரியரில் பயம், சினம், வெறுப்பு என்பன மாணவர்க்கு தோன்றலாம். அது பிரதி கூலமான பக்க விளைவாகும். ஜோன் ஹோல்ட் பாடசாலை கல்வி பயத்தின் மீது அடித்தளமிட்டிருப்பதாகவும் பயமுள்ள உள்ளத்தில் போதிய கற்றல் இடம் பெறாது. மாணவன் அடிக்கடி தண்டணைக்கும் பயத்திற்கும் இரையாகுவானாயின் அவனுள் நலம் குன்றிய மனோநிலை உருவாக இடமுண்டு. அது உளநோயினை வளர்ச்சியடைய செய்யும்.

நற்செயல்களுக்கும் பொருத்தமான திறமைகளுக்கும் நேர் மீளவலியுறுத்தலை வழங்கல். அதாவது வெகுமதியளித்தல் பாராட்டுதல் மூலம் நல்ல நடத்தைகளை அதிகரிக்க முடியும். விடைத்தாள்களைத் திருத்தும் போது தவறுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுவதை விட சரியானவற்றை வெளிப்படுத்தி காட்டி அவற்றிற்கு பாராட்டு வழங்குதல் மூலம் விரைவான சரியான கட்டுரை எழுதவைக்க முடியும் எனவும் தவறுகளில் இருந்து மீட்டெடுக்க முடியுமெனவும் ஆய்வுகள் கூறுகின்றன. ஸ்கின்னர் சுட்டிக்காட்டியிருப்பது நேர் மீள வலியுறுத்தலாகும். இதனால் ஆசிரியர்களின் ஏச்சு பேச்சு நிகழ்வது மனநிறைவான நேர்நிலை கற்றல் அல்ல. மன நிறைவற்ற மறைநிலைக் கற்றலாகும். இந்நிலையை மாற்றி நேர் மீளவலியுறுத்தலை வழங்குவதன் மூலம் கற்பித்தலை மீள திருப்திகரமான செயற்பாடாக கற்க இயலுமென ஸ்கின்னர் காட்டினார்.

தண்டணை வழங்களில் இடம்பெறுவது தவறை தடுத்தலேயன்றி போக வேண்டிய வழி சரியான வழியென காட்டிக்கொடுப்பதல்ல. வெகுமதியளித்தலில் தரப்படும் செய்தி நீர் செய்ததை மீண்டும் செய் என்பதாகும். இதனால் தண்டணையினால் தவறை தடுப்பதுடன் வெகுமதி மற்றும் பாராட்டு மூலம் சரியான வழியில் செல்ல தைரியமளித்தல் வேண்டும். சிக்கல் பாதையில் விடப்பட்ட எலிகளுக்கு சரியான வழியில் செல்ல அவ்வழியில் மின் அதிர்ச்சியை வழங்கிய போது அவை நீண்ட வழியில் சென்றன. இதன்படி தண்டனை நடத்தையை மாற்றம் செய்ய உபகாரமாய் அமைந்தது.

தவறை முன்கூட்டியே தெரியப்படுத்தல் அந்தத் தவறை செய்யாமலிருக்க மாணவரால் முடியும். எந்த நடத்தைகள் அனுமதிக்கப்படுபவை? எந்த நடத்தைகள் அனுமதிக்கப்படாதவை? என்பதை முன்கூட்டியே தெரிந்திருக்கும் போது பிழையிலிருந்து மீளவும் அதன் மூலம் தண்டணையிலிருந்து மீளவும் மாணவரால் முடியும்.

இன்று ஒழுக்க கல்வி பெருங்கல்வியின் ஒரு முக்கிய பகுதியாக காணப்படுகின்றது. இன்று உலகில் காணப்படும் பதட்டமும் போராட்டங்களும் கட்டுப்பாடுகளற்ற நிலையில் எக்காலத்தையும் விட ஒழுக்க கல்வியும் நல்லொழுக்க பயிற்சியும் மேலும் முக்கியத்துவம் பெற்று காணப்படுகின்றது.

மக்டூகல் என்பவர் மிக சிறிய வயதில் குழந்தைகளிடம் ஒழுக்க நடத்தை எனக் குறிப்பிடத்தக்கதாக காணப்படாது.இயல்பூக்கங்கள் அவற்றுடன் இணைந்த மனவெழுச்சியை வெளிப்படுத்தும். அவற்றினால் உந்தப்பட்ட நடத்தை இந்நிலையில் காணப்படும் குழந்தையின் அனுபவங்கள் பெருகப் பெருக பல்வேறு பொருள்கள் கருத்துக்கள் நிலைமைகள் போன்றவற்றுடன் அதன் தொடர்பு அதிகரிக்கும் போது அதன் இயல்பான ஊக்கங்களும் மனவெழுச்சிகளும் இப் பல்வேறு பொருட்கள் கருத்துக்கள் நிலைமைகள் போன்றவற்றைச் சுற்றி திட்டவட்டமான முறையில் ஒருங்கினைக்கப்பட்டு பற்றுக்களாக உருவாகின்றன. பற்றுக்கள் அனுபவங்கள் கற்றல் போன்றவற்றின் விளைவுகளாகும்.

பாடசாலையில் ஒழுக்கம் என்பது ஆரம்பகால தொட்டே வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால் அவ் ஒழுக்கமானது வகுப்பறையில் மாணவர் செயலற்ற நிலையில் சத்தமின்றி அமைதியுடன் இருக்க வேண்டும். என்பதாகவே அமைந்திருந்தது. அதாவது ஆசிரியர் சொல்லுதல் மாணவர் உடனடியாக கீழ்ப்படிதல் ஒழுக்கம் எனப்பட்டது. இது வசைப்பாடல் கட்டாயப்படுத்தல் தண்டனையளித்தல் பிரம்புகொண்டு மாணவரை நையப்புடைத்தல் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கட்டுப்பாடுகளால் ஏற்படுத்தப்பட்டது. வகுப்பறையில் ஒழுக்கமின்மை காணப்படின் அது மாணவரின் தவறாகவே காணப்பட்டது.

அக்காலத்தில் மாணவர் தவறுகள் செய்யாமல் தடை செய்வதையே நோக்கமாக கொண்டிருந்தது. ஆனால் தற்காலத்தில் ஒழுக்கமானது நல்ல பழக்க வழக்கம் நன்மனப்பான்மை போன்றவற்றை பெற்று சிறப்பான ஆளுமை வளர்ச்சியினை மாணவர் பெற உதவுவதாக அமைதல் வேண்டும். இது தண்டனையால் அன்றி மாணவரின் மனதில் இருந்து எழ வேண்டும் அத்தோடு வகுப்பறையில் ஆசிரியர் மேற்பார்வையில் மட்டுமின்றி சமுக நிலையில் இருந்தும் எழ வேண்டும். எனவே தற்காலத்தில் எதிர்மறை கட்டுப்பாடுகளின்றி ஒழுக்கப் பண்புகளை மாணவர் தாமே விரும்பி ஏற்க வேண்டும் என்பதே நோக்கமாகும். இவ்வாறான ஒழுக்க நிலையை அடைந்தோர் தம்மை பொறுத்தவரை மட்டுமின்றி சமூகத்தை பொறுத்த அளவிலும் நல்ல பொருத்தப்பாட்டை பெற்றவர்களாக வாழ்வர். ஆகவே ஒழுக்கம் என்று தவறான நடத்தையில் இருந்து விடுவித்தல் அன்று மாறாக சுயகட்டுப்பாடு சுயமுயற்சி ஆகியவற்றுடன் நற்செயல்களை செய்ய பிள்ளைகளை ஊக்குவித்தல் கட்டாயமாகும்.

பிராய்ட் (freud) என்பவர் குழந்தைகள் ஒழுக்கப் பண்புகளுடன் பிறப்பதில்லை அவை வளர்ச்சியின் அளவுகளாகும் எனகிறார்.பாடசாலையின் மரபும் அதன் பாங்கும் பண்பும் மாணவர்களை ஒழுங்கு படுத்தவற்றனவாகும். மாணவர்களின் ஒழுங்கு பாடசாலை ஆசிரியர்களின் பண்புகளையும் பொறுத்திருக்கும். ஆசிரியர்கள் ஆளுமையுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். அறிவும் சிறப்பான ஆளுமையும் ஆற்றலும் புகழும் மாணவர்களிடம் அன்பும் பரிவுணர்ச்சியும் காணப்படுதல் வேண்டும். வகுப்பறையில் ஒழுக்கம் பிறழ்ந்த மாணவர்கள் இருப்பார்கள். இத்தகைய மாணவர்களை சீர்திருத்துதலில் அவர்களது பொருத்தப்பாடின்மையின் அடிப்படை காரணங்களை கண்டுபிடித்து அவற்றை நீக்குதல் சிறந்த முறையாகும். வகுப்பில் எழும் சில ஒழுங்குப் பிரச்சனைகளுக்கு ஆசிரியரே காரணமாக அமையக்கூடும் என்று கிராப்ஸ், ஜவர்ஸன் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். ஆசிரியரிடம் சகிப்புத்தன்மையின்மை, வீட்டுக்கவலைகள் மாணவரது பிரச்சினைகள் பற்றிய உணர்வின்மை, பரஸ்பர புரிந்துணர்வின்மை, கற்பித்தல் திறனின்மை ஆகியன வகுப்பில் ஒழுங்கின்மையினை தோற்றுவிக்கும். ஆதலால் ஒழுங்கின்மையை அகற்ற முயலும் ஆசிரியர் அதனைத் தோற்றுவித்தலில் தமக்கேனும் பங்கு உள்ளதா என்பதனையும் அறிய வேண்டியவராகிறார்.

மாணவர்களின் நடத்தைகளை விருத்தி செய்வதற்காக பாடசாலையில் நடைமுறைப்படுத்தும் தண்டனை முறைகளுக்கு பதிலாக ஒழுக்கத்தினை பேணிக்கொள்வதற்கான செயன்முறைகளை குறிப்பிட்டுள்ளனர். இவற்றை பின்பற்றுதல் பயன்மிக்கதாகும்.

ஒவ்வொரு மாணவர்களும் ஏற்கனவே பெற்றுள்ள பாடசாலை அனுபவம் பற்றி ஆசிரியர் அறிந்து வைத்திருக்க வேண்டும். இவற்றை மட்டும் கருத்திற் கொண்டு உடனே முடிவெடுக்ககூடாது.

வகுப்பறையில் ஆசிரியர்கள் மாணவர்களைப் போல நடக்க கூடாது. உறுதியாகவும் பக்கச்சார்பின்றியும், நெகிழ்வுத்தன்மையுடனும் பதற்றமின்றியும், நகைச்சுவையோடும் மாணவரை புண்படுத்தாத வகையிலும் நடந்து கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒழுங்கு பற்றி கவனிக்கும் போது வகுப்பறைச் சூழ்நிலையின் தன்மையினை கருத்திற் கொள்ள வேண்டும்.
- பரிவுடன் தெளிவான குரலில் மாணவனோடு பேசுவது கட்டாயமானது.
- பாடத்திட்டமிடல், பல்வேறு செயல்முறைகள் பாடவேளையில் இடம் பெறச் செய்வதுடன் மாணவர்கள் ஊக்கப்படுத்தப்படலும் வேண்டும்.
- குறித்த நிலைமைகளில் மாணவரின் நடத்தை பற்றிய தளம்பல் மாணவரின் உள்ளத்தில் எழக் கூடாது.
- செய்யக்கூடிய அளவில் வீட்டுவேலை,கரும்பலகையில் நன்கு எழுதுதல் பாடவேளையில் சிறந்த கற்பித்தல் நேர முகாமை என்பனவும் அவசியமாகும்.

உற்சாகமான கற்பித்தல், மாணவர்களை அச்சுறுத்துவதோ அளவுக்கு மீறி கடிந்து கொள்வதோ பயனற்றது. மாணவர்களுக்கு மேல் தாம் வகுப்பறையில் சத்தமாக பேசுவது தவறு. சில பொது நிகழ்ச்சிகளைப் பார்த்தும் பார்க்காதது போல் ஆசிரியர் இருத்தலும் தேவையானதாகும்.

எல்லோர்க்கும் முன் எந்த மாணவனையும் அவமானப்படுத்துவது தவறு. குற்றமிழைத்தோரையும் தனிபட்ட முறையில் அழைத்துப் பேசுவது விரும்பத்தக்கது. அவர்களிடமும் பண்பும் பரிவோடும் அதே போல் கண்டிப்போடும் ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டும். அடிக்கடி அதிபரிடமும் முறையிடுதலும் தவறு.

தண்டனை முறைக்கு பதிலாக ஒழுக்கத்தினை ஏற்படுத்தும் பொருட்டு முழு பொறுப்பினையும் நிறைவேற்ற வேண்டிய நிலை தோன்றியுள்ளது. பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் பங்கு அதிகமாகும். அவ்வகையில் பாடசாலையில் மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சிக்கு ஆசிரியர் ஆற்ற வேண்டிய செயன்முறைகளோடு மேலும் பல விடயங்களை நோக்கலாம்.

- வகுப்பில் அமைதியையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவதுடன் மாணவரது நடத்தைக்கான தரத்தை சிறிது சிறிதாக உயர்த்தச் செய்தல்.
- மாணவர்களிடம் சில தலைமை பொறுப்புக்களை ஒப்படைத்து திட்டமிட்டபடி நடக்கச் செய்து சுய கட்டுப்பாடுடன் செயற்படச் செய்தல்.
- ஆசிரியர் மாணவர்கள் மீதான தனது கட்டுப்பாட்டை நிலையானதாகவும், அதே சமயத்தில் தீர்க்கமானதாக இல்லாத வகையிலும் செயற்படுத்தல். இதில் மாணவர்களை வகுப்பறையிலும் வெளியிலும் கட்டுப்பாட்டோடு நடத்தப்படுவதுடன் அவர்களுக்கு தேவையான சந்தர்ப்பத்தில் உதவுபவராகவும் செயற்படுதல்.
- வகுப்பறையில் பாடத்தை கற்பிக்கும் போது ஒழுக்கத்தை கடைபிடிக்க செய்தல் அதாவது மாணவரை கவரும் வகையில் கற்பித்தலை ஒழுங்கு செய்து அதனூடே அமைதி ஒழுக்கம் என்பவற்றை வகுப்பறையில் நிலை நாட்டுதல்.
- மாணவர்கள் நல்ல ஒழுக்க நடத்தைகளை பாடசாலையில் வெளிக்காட்டும் போது அவற்றை பாராட்டுவதுடன் பொருத்தமற்ற ஒழுங்கினமான நடத்தைகளை வெளிக்காட்டும் போது கண்டிப்பதன் வழியேயும் ஒழுக்க பயிற்சியினை மறைமுகமாக நடைமுறைப்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்களிடமும் அறப்பண்புகளை வளர்த்தல் இதற்கு நற்பண்புடைய பெரியோரின் வரலாறுகளை உதாரணமாகக் கொண்டு அதன்படி நடக்க வழிப்படுத்தல்.
- ஒழுக்கப் பண்புகள் வகுப்பறையில் மட்டுமின்றி வாழ்க்கையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவை பொருந்தும் என எண்ணும்படி செய்தல்.
- உண்மை பேசுதல், அன்பாக பழகுதல்,முதியோர்களை மதித்தல் சமுக நெறிமுறைகளை கடைபிடித்தல் கண்ணியமாக நடந்து கொள்ளல் தமது கடமைகளை நிறைவேற்றுதல் என்பன வாழ்க்கை முழுவதும் எப்போதும் மேற்கொள்ள வேண்டிய பண்புகள் என்பதை உணரச் செய்தல்.
- சமய அறநெறிக்கு முக்கியத்துவமளித்தல், வாழ்க்கை நெறி, ஒழுக்கம், பண்பு, பண்பாடு என்பனவற்றை பெறும் வகையில் சமய போதனை சமயக் கல்வி,சமய நடைமுறைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- பிழை செய்யாதிருக்க அவர்களை ஊக்குவித்தல்.
- மாணவர்களின் வாழ்க்கையில் செய்யத்தக்கவை செய்யத்தகாதவைத் தொடர்பான விளக்கம் கிடைக்க சகல சந்தர்ப்பங்களிலும் முன்வைத்தல்.
- ஆசிரியர் ஒழுக்க பண்புகளை தாம் முறையாக பின்பற்றுவதுடன் அப்பண்புகளை ஒரு குறிக்கோளாக பிள்ளைகள் ஏற்கும்படி செய்தல். எப்போதும் முன்மாதியாக செயற்படுத்தல்.

நல்லொழுக்கத்துடன் வாழக்கூடிய நல்ல வலுமிக்க மன உறுதியை மாணவர்களிடையே உருவாக்க வேண்டியது ஆசிரியரின் பணிகளுள் ஒன்று. மாணவர்களின் நடத்தைகளை விருத்தி செய்வதற்காக பாடசாலைகளில் பயன்படுத்தும் தண்டனை முறைகளுக்கு பதிலாக ஒழுக்கத்தினை செய்வதற்காக பாடசாலையில் கற்றல் கற்பித்தல் சந்தர்ப்பங்களிலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் மாணவர்களிடம் நலலொழுக்கப் பண்புகள் உருவாகிடும் வகையில் ஆசிரியர் பணியாற்ற வேண்டும். அப்படி எதிர்காலத்தில் மாணவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் சமுக வாழ்க்கைக்கும் உதவுவதாக அமைவதோடு நடத்தைகளை விருத்தி செய்வதற்கும் உதவுதாக அமைதல் வேண்டும்.இதற்கு ஆசிரியர் தான் நல்லொழுக்கப் பண்புகளை முறையாக பின்பற்றுவதுடன் எப்போதும் மாணவர்களுக்கு முன்மாதியாக செயல்பட வேண்டியதும் அவசியமாகும்.

உசாத்துணைகள்:
1. கல்வி உளவியல் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
2. கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும் - தேசிய கல்வி நிறுவகம்
3.சிறுவர் நேய அணுகுமுறை தொடர்பான ஆலோசனை வழிகாட்டி - யுனிசெப்
4.அகவிழி
5.கல்வி அமைச்சு சுற்றரிக்கை இல: 2005/17

● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி முகாமைத்துவமும் தகவல் முறைமையும். (EMIS)

A.அன்புரோஸ் B.Ed, DSM

மமா/வ/ இராகலை தமிழ் மகா வித்தியாலயம்.

**கல்வி தகவல் முகாமைத்துவம்**
(EDUCTION INFORMATION MANAGEMENT)

பாடசாலையின் தமது ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்குரியதாக பாடசாலையின் வளங்களையும், கட்டமைப்பையும் பயன்படுத்தி தமது தொழிற்பாடுகளை திட்டமிட்டு வழிப்படுத்தி மேற்பார்வை செய்து வினைத்திறனையும், விளைத்திறனையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் இதுவே பாடசாலை முகாமைத்துவத்தின் கடமையாகும்.

இதில் தேவையான வளங்களைப் பெறுவதும், பேணுவதும் போட்டியிடுகின்ற பல்வேறு தேவைகளிடையில் உரிய முறையில் ஒதுக்கீடு செய்வதும் அவசியமாகிறது. இவ்வாறு கவனம் செலுத்த வேண்டிய வளங்களில் முக்கியமானதாக பாடசாலை மற்றும் கல்விசார் தகவல்கள் விளங்குகின்றன. வினைத்திறனும், விளைத்திறனும் மிக்கதாக பாடசாலைகளை நிர்வகிப்பதில் கல்விசார் தகவல்கள் முக்கியமானவை.

**தகவல் வளம்**

பாடசாலையின் நாளாந்த செயற்பாடுகள் கற்றல், கற்பித்தல், மதிப்பீடு, பிள்ளைகளின் ஆளுமை விருத்தி, விழுமிய முன்னேற்றம் என்பன சார்ந்தனவாக உள்ளன. இவற்றுக்குரிய தரவுகள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட உள்ளீடுகளாக மாறும்போதும் தகவல்கள் ஆகின்றன. எல்லாத் தரவுகளும் தகவல் ஆகிவிடாது ஆனால் தரவுகளை மையமாக வைத்து பாடசாலையின் குறிக்கோள், தேவைகள் நோக்கியதாக ஒழுங்கு முறைப்பட்ட செயன்முறைகளை (Processer) பயன்படுத்தும் போது தகவல் ஆகிவிடுகிறது. பாடசாலையின் முகாமையாளர்களான அதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர்கள் போன்றோர் பாடசாலை தொடர்பான தரவுகளை நல்ல தகவல்களாக மாற்றும் போது தொழிநுட்ப திறன்களைக் கொண்டிருத்தல் அவசியமாகின்றது. முகாமைத்துவ திறன்களில் இது மிகவும் முக்கியத்துவமுடையது. பாடசாலை தனது நிர்வாக மற்றும் முகாமைத்துவ முடிவுகளை மேற்கொள்வதற்கு ஏற்றதாக பல மூலகங்களிலிருந்தும் திரட்டப்படும் தரவுகளை சிறந்த தகவல்களாக மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும்.

**கல்வி முகாமைத்துவ தகவல் முறையை சுருக்கமாக EMIS என்கிறோம்.**

EMIS என்பது கல்வி முகாமைத்துவ தரவு மற்றும் தகவல்களை சேகரித்து களஞ்சியப்படுத்தி செயற்படுத்தி பகுப்பாய்வு செய்து பயன்தரு வடிவில் தகவல் மற்றும் ஆவணப்படுத்தும் முறைமைக்கமைய கல்வி முறைமை தகவல் எனப்படுகிறது. இதனது விரிவாக்கம் Educational management information System ஆகும். கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை திட்டமானது கல்வித்திட்டம் பற்றிய தகவல் நிர்வகிக்க வடிவமைக்கப்பட்ட ஒரு தகவல் முறையாகும் பாடசாலை தொடர்பான தகவல்கள், மாணவர்கள் தொடர்பான தகவல்கள், மாணவர் தொடர்பான விபரங்கள், பாடசாலை செயற்பாடுகள், மாணவர் அடைவுகள், சாதனைகள், பாடசாலையின் எதிர்கால திட்டங்கள் போன்ற தகவல்கள் தரவுகளை உரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விழா சிறப்புற எங்கள் வாழ்த்துக்கள்*

உங்களுக்கு தேவையான
அணைத்துவித
பிரிண்டிங் தேவைகளுக்கும்,
பொட்டே பிரதிகள்,
காகிதாதிகள் மற்றும்
புகைப்பட சேவைகள்
அணைத்தையும்
ஒரே கூரையின் கீழ்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Amrutha
Advertising & Printing

**077 5882774 I 0750353686**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தின விழாக்குழு
# 2017

| | |
|---|---|
| ஆலோசகர்கள் | திரு. சோ. சற்குணராஜா (அதிபர்) |
| | திரு. ப. சந்திரசேகரன் (அதிபர்) |
| தலைவர் | திரு. வி. யோகேஸ்வரன் |
| செயலாளர் | திரு. ப. முகுந்கமலவண்ணன் |
| பொருளாலர் | திரு. சா.ரகுநாதன் |
| உப தலைவர் | திரு. செ. செல்வகுமார் |
| உப செயலாளர் | திரு. பெ. சுரேஸ் |
| இணைப்பாளர் | திரு. அ. அன்புரோஸ் |
| இதழாசிரியர் | திரு. இரா .விஜயகுமார் |
| இதழாக்க குழுவினர் | திரு. சுசிதா ஆனந்தகுமார் |
| | திரு. கி. தியாகன் |
| | திரு. தே. திலகேஸ்வரன் |
| | திருமதி. செ. பிரியதர்சினி |
| | செல்வி. சி. மேரிகிருஸ்டினா |
| | செல்வி. ஆ. கணேஸ்வரி |
| | திரு. இரா. சதிஸ் |
| | திரு. தி. ருசாந்தன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## AGM Food City



**No.07, Nuwara Eliya Road**
**Ragala,Halgranoya.**
**Tel: 072 71 43 499**

## Ragala Grinding Mill



**No.31, Bus Stand Road**
**Ragala,Halgranoya.**
**Tel: 052 22 65 509**

## SS Enterpricess & Baby Care

**Dealers for Lumala Bicycles**
**Fancy Goods**




**No.66,86,Ragala Bazzar,**
**Halgranoya.**
**Tel: 075 70 82 135**

## Sri Kalae Stores





**No.36,Ragala Bazzar,**
**Halgranoya.**
**Tel: 072 71 43 499**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் பகுப்பாய்வு செய்து தகவல்களை ஒன்றாக்கி ஒழுங்காகவும் முறையாகவும் பேணுவதுடன் தேவையான இடங்களுக்கு அவற்றை வழங்கும் ஒழுங்கமைப்பு முறையே கல்விமுகாமைத்துவ தகவல் முறையாகும்.

கல்வி முகாமைத்துவ தகவல் முறையானது கல்வி அபிவிருத்திக்கு திட்டமிடல் மதிப்பீடு செய்தல் மற்றும் கல்வி நிருவாகத்திற்கும் மிக அவசியமாகின்றது. நிறுவனத்தின் செயற்பாடுகள் உட்புற வெளிப்புறத்திறன்கள் அதனது செயற்றிறன் தேவைகள் மற்றும் குறைபாடுகளை வெளிப்படுத்துகின்றது: சவாலான பொருளாதார சூழ்நிலைகளிலும் நிறுவனத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு தேர்வு வழங்குவதற்காகக் காணப்படுகின்றது. இது புள்ளி சார்ந்த தகவல்கள் கல்வி பங்குதாரர் செயற்பாடுகளையும் முன்வைக்கின்றதோடு அவ்வகையில் இங்கு அதிகமான தகவல் பரிமாற்றம் இடம் பெறுவதனால் தகவல்களானது பின்வரும் அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

உரிய நேரத்தில் உரிய தகவல்களை வழங்கக்கூடிய வகையில் தகவல் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். தரவுகளையும் தகவல்களையும் கொண்டதாகக் காணப்படும் நம்பகமான தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும். உரிய காலத்தில் உரிய தகவல்களை வழங்கக்கூடிய வகையில் தகவல் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் முழுமையான தரவுகளையும் தகவல்களையும் கொண்டதாகக் காணப்படும் நம்பகமான தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும் பொருத்தமான இடங்களுக்கு பொருத்தமான நேரங்களில் விநியோகிக்கப்பட வேண்டும். தேவைக்கேற்ப தரவுவளை வழங்கும் தன்மை தகவல்களை வெளிப்படுத்துவதற்கு பயன்படும் ஊடகம் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். தகவல் காலத்துக்குக்காலம் இற்றைப்படுத்த வேண்டும். நவீன தொடர்பாடல் சாதனங்களை பயன்படுத்தி தகவல்களை பேணவேண்டும். (உ+ம்) Website, face books.

இத்தகவல்கள் முகாமைத்துவ தொகுதி ஒன்றை வினைத்திறனான முறையில் அமைப்பதற்கு பொருத்தமான உரிய துறையில் தகைமை அனுபவமும் கொண்ட ஆளணியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் உரிய பொருத்தமான மென்பொருட்களை பெற்றுக்கொள்ளல் (உ+ம்) SPSS, MS Office

உரிய பொருத்தமான உபகரணங்கள் கருவிகளைப்பெற்றுக் கொள்ளல் (உ+ம்) Computers தகவல் செயலமைப்பு (Information System) என்பதை இவ்வாறு விளக்கலாம்

குறிப்பிட்ட ஒரு பொதுவான இலக்கை அடைந்து கொள்வதற்கு ஒன்றோடொன்று இணைந்து ஒன்றாக தொழிற்படும் கூறுகளின் தொகுதி முறைமை எனப்படும்.

தரவு → செயன்முறை நிழற்படுத்தல் → வெளியீடு

தரவுகளை தகவல்களாக மாற்றும் திறன் முகாமைத்துவ குழுவுக்குத் தேவை

**தகவல் முறைமை:**

ஒரு பாடசாலையின் தீர்மானமெடுத்தல், கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு துணைபுரிவதற்கு தகவல்கள் சேகரித்து / மீளப்பெறும் மாற்றீடு செய்யும் தொகுதிகளின் கூட்டுத்தகவல் முறைமை என்பர். கல்வி தொடர்பான மதிப்பீடு கட்டுப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பாடசாலையின் நிர்வாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமங்களுக்கு முகாமையாளருக்குத் தேவையான ஒருமைத்தன்மை கொண்ட பொழிப்பாக்கப்பட்ட அறிக்கைகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும். முறைமைக்கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை ஆகும். ஒரு வினைத்திறனான பாடசாலையில் கல்வி முகாமைத்துவ தகவல் முறையானது சிறந்த முறையில் அமுல்படுத்தல் அதன் பெறுபேறுகளும் அவதானிக்கப்படுகிறது.

**தரவு**

குறித்த ஒரு விடயம் தொடர்பாக சேகரிக்கப்படும் ஒழுங்குப்படுத்தப்படாத/ தரவுக்குட்படாத எண்கள், எழுத்துக்கள், ஒலி, ஒளி என்பற்றை குறிப்பிடலாம் வாசித்தல், கணித்தல், அவதானித்தல், அளவிடுதல், நிறையிடுதல் என்பவற்றால் தரவுகளை பெற்றுக்கொள்ளலாம்.தரவு என்பது தகவல்களை பெறுவதற்கான ஒரு உள்ளீடாகப் கருதப்படுகிறது. (உ+ம்) பாடசாலை மாணவர் தொகை, ஆசிரியர்களின் சம்பளம்

**தகவல்**

தரவுகளைக்கொண்டு வெளியீடாக பெற்றுக்கொள்ளத்தக்க ஒழுங்குப்படுத்தப்பட்டவை தகவல் ஆகும். தரவுகளை பயன்படுத்தத்தக்க முறையில் ஆக்கும் போது அது தகவல் என்ப்படுகின்றது. தகவலானது ஒழுங்குப்படுத்தப்ட்டு உபயோகத்திற்கு தயாராக இருப்பது ஆகும். இது தெரிவு செய்யப்பட்டோ மாற்றப்பட்டோ இருக்கும் திர்மானம் எடுக்க இதனைப் பயன்படுத்தலின் ஒரு செய்தியாகவும் தகவல் காணப்படுகின்றது. What, who, when, where போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும்.

**தரவுக்கும் தகவலுக்கும் இடையிலான தொடர்பு**

தரவு தயாரித்தல் செயற்பாடு மூலமாக தகவலாக உருவாகும் நிருவாகத்திற்கு உள்ளே வரும் எல்லாத் தரவுகளும் பயன்படுபவனவாக இல்லாதிருக்க முடியும். பயனுடைய தகவலாக மட்டும் பயன்படுத்தி மிகவும் பயனுடைய தீர்மானங்களை மேற்கொள்ளத் தேவையான தகவல்கள் உருவாக்கப்படும் ஆகையால் எதிர்பார்த்த நோக்கத்தினை பூர்த்தி செய்வதற்குத் தேவையான தரவுகளில் இருந்து தெரிவு செய்தல் வேண்டும். தரவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலம் தீர்மானங்களும் சரியானதாக அமைய முதல் தரவுகள் பிழைத்தால் தீர்மானம் பிழைத்து வரும். தகவல்களைப் போல அதாவது தகவல்கள் வாக்கியங்களாகவும், படங்களாகவும், வரைபுகளாகவும், வாய்மொழி கூற்றுக்களாகவும் சமர்பிக்கப்படலாம். அதாவது கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையானது தரவுகளை உள்ளீடாகப் பெற்று மாற்றீடு செய்த தகவல்களை வெளியீடு செய்கிறது.

**கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் பிரயோகங்கள்**

தகவல் செயலமைப்பு செயற்பாடுகள் இதில் உள்ளீடு தரவு செய்முறை வெளியீடு தரவுகளை வழங்கும் களஞ்சியப்படுத்தல், கட்டுப்படுத்தல் என்பன உள்ளடங்கும்

**வன்பொருள் (Hardware)**

- ❖ தகவல் மூலகங்கள் கணினிகள் செயல் நிலையங்கள் போன்றவற்றை அறிதல்

**மென்பொருள் (Software)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ இதில் எல்லா செயல்பாட்டு நிலையங்களிலும் நிகழ்ச்சித் திட்டங்களாக்கப்படும் அறிக்கை வரைப்படம் மாதிரிகளால் மாற்றியமைக்கப்படும் களஞ்சியப்படுத்தல் பாதுகாத்தல் நிகழ்ச்சிதிட்டங்கள் முக்கியமானவை

**ஆளணி**

கணினி இயக்குபவர்கள் கட்டுப்படுத்துநர்கள் எழுத்தாளர்கள் போன்றோரை போதிய அளவு மற்றும் பயிற்சி வழங்கி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்துவதற்கு வழிவகுக்க வேண்டும்.

**கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (EMIS)**

முகாமைத்துவ மட்டத்தில் செயற்படுத்துப்படுகின்ற முறையொன்றாகும். இம்முறை மத்திய மட்ட முகாமையாளருக்கு திட்டமிடல் கட்டுப்படுத்தல் போன்ற கருமங்களுக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக்கொடுக்கும் நாளாந்தம், வாராந்தம், மாதாந்த, வருடாந்த என்றவாறு ஒரே முறையில் காலத்திற்கேற்பவும் முக்கியமாக தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பதிவு செய்த தகவல்களை பெற்றுக்கொடுத்தல் இம்முறையில் இடம்பெறும்.

(உ+ம்)

நடைமுறை அறிக்கைகள், அன்றாட விற்பனை அறிக்கைகள் கடன்பட்டோரிடம் இருந்து பெறும் அறிக்கைகள்.

**விஷேட அறிக்கைகள்**

உறுதியான கடன்பட்டோர் தொடர்பான விஷேட அறிக்கையினை முகாமைத்துவம் கேட்டும்போது அவற்றை பெற்றுக் கொடுத்தல் எனவே பாடசாலையின் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை பயன்படுத்துவது மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. அந்த வகையில்,

பாடசாலையின் தற்போதைய சூழ்நிலையை அறிந்து கொள்வதற்கு EMIS பயன்படுகிறது.

**1. வளங்கள்**

பாடசாலையின் பௌதீக (கட்டிடம், நீர்) நிதிவளம்,மனித வளம், தகவல் வளம், நேரவளம், போன்ற பாடசாலையின் வளங்கள் அதன் அளவு பயன்படுத்தக்கூடியது பயன்படுத்த முடியாதது எனவும் எதிர்காலத்திற்கு தேவையானவை எவை என அறிந்து கொள்ளத் தேவைப்படுகிறது.

பாடசாலையின் செயற்பாட்டு நடைமுறைப் பிரச்சினைகள் பாடசாலை அபிவிருத்திக்கு தடையாக உள்ள நடைமுறைப்பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்கு அப்பிரச்சினைகள் தோன்ற காரணிகளையும் அறிந்து அதற்கான தீர்மானங்களை எடுக்கத் தேவைப்படுகிறது.

**மாணவர் தொடர்பான நிலைமைகள்**

ஆசிரியர் மாணவர்கள் தற்போதைய நிலைப்பாடுகள் என்ன என்பதை அறிவதற்கும் தேர்வுகள் முன்வைக்கப்படுகிறது.

**நிர்வாகம் தொடர்பான நிலைமைகள்**

பாடசாலையின் விருத்திக்குக் கல்வி நிர்வாகம் முக்கியமானது என அறியப்பட்டு தீர்வுகள் மேற்கொள்ளப்படுகிறன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டிடங்கள் பொருட்கள் தொடர்பான நிலைப்பாடு**

தற்போது பாடசாலையின் பொருட்கள் தொடர்பான நிலைப்பாடு என்பவற்றில் அதில் திருத்தியமைக்கப்பட வேண்டியது எதிர்கால பயன்பாட்டிற்கு தேவையானது என்பன பற்றி அறிந்துகொள்ள முடிகிறது

**கல்வி அடைவு மட்டங்கள்**

மாணவர்களின் கல்விசார் செயற்பாடுகள் இணைப்பாடவிதானம் என்பவற்றில் அதன் வீழ்ச்சிக்கான காரணங்கள் என்பவற்றை அறிய முடியும். வசதிகளும் பெறுபேறுகளும் தொடர்பானவற்றை விளங்கிக்கொள்வதற்கு EMIS பயன்படுகிறது. மற்றைய பாடசாலையுடன் ஒப்பிடல் பாடசாலை ஒன்றின் வசதி வாய்ப்புக்களை அதன் செயற்பாட்டில் கிடைக்கும் இதன் மூலம் வேறு பாடசாலையுடன் ஒப்பிட்டு அதன் தற்போதைய நிலையை அறிதல். தற்போதைய பெறுபேறுகளையும் ஆற்றுகைகளையும் இனங்கண்டு கொள்ளல், பின்னடைவுகளையும் விலகல்களையும் இனங்காணல் திட்டங்களை அமுல்படுத்த EMIS பயன்படுகிறது. செயற்திட்டங்களையும் நகிழ்ச்சித் திட்டங்கயைும் முறையாக வழிப்படுத்துவதற்கு EMIS பயன்படுகிறது. மதிப்பீட்டினை மேற்கொள்ள EMIS பயன்படுகிறது. இலக்கை அடைந்துள்ளதா என அறியமுடிகிறது புதிய நியமனம் தொடர்பாக தகவல் கண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படுகிறது.

**கல்வித்திட்டமிடலில் செயலாற்றுகை சுட்டிகளின் தேவைப்பாட்டினை கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

கல்வி திட்டமிடலில் முன்வைக்கும் குறிக்கோள்களளை அடைவதே கல்வி திட்டமிடலின் நோக்கும் எனவே இக்குறிக்கோள்களை அடைய செயற்திட்டங்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். அதோடு வினைத்திறன் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை, மூல மொழி, சராசரி, வரவு என்பன வருட ஆரம்பத்தில் ஆரம்ப வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை.

**பாடவிதானத் தகவல்களைக் கொண்ட உப முறைமை**

தொழில்நுட்ப (வணிகம் உட்பட) அழகியற் பாடங்களைக் கற்கும் 7 – 11 ஆண்டுகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வகுப்புகளின் எண்ணிக்கை 12ம் 13ம் ஆண்டுகளில் அந்தந்த மூல மொழியில் விஞ்ஞான பாடங்களைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வகுப்புகளின் எண்ணிக்கை முழு நேர / பகுதி நேர தொழிற்கூறுகள், அந்தந்தப் பாட நெறிகளில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை, தொழிற் கூறுகளினால் பணிபுரியும் ஆலோசகரின் எண்ணிக்கை , பிரத்தியேமான கட்டிடங்கள் பற்றி விபரங்கள், சீடா நன்கொடையின் அடிப்படையில் உபகரணங்கள் வழங்கப்படும் பாடங்கள்.

**ஆளணியினர் தொடர்பான தகவல்களினைக் கொண்ட உபமுறைமை**

ஒவ்வொரு ஆசிரியர் பற்றிய விபரங்கள் கல்வித்தகைமைகள், வயதெல்லைகள், இனம், சமயம், நிரந்தர வதியுமிடம், நிரந்தர? நிரந்தரமற்ற பதவி தொடர்பான விபரம், பால் என்பவற்றுக்கேற்ப அதிபர் உட்பட ஆசிரியர் குழாத்தின் எண்ணிக்கை, புள்ளி விபரம் திரட்டப்படும் வருடத்தின் புதியாய நியமனங்கள், அடமாற்றங்கள், பதவி விலகல் என்பன தொடர்பான எண்ணிக்கை, இலங்கைக்சல்விச் சேவையின் அந்தந்த தரங்களைச் சேர்ந்த அதிபர், பிரதியதிபர், ஆசிரியர்களின் எண்ணிக்கை (பயிற்றப்பட்ட பட்டதாரி, பயிற்றப்பட்டவர் மற்றம் ஏனையோர் என்றவராக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பௌதீக வளங்கள் பற்றிய உப முறைமை**

நிரந்தர, பகுதிநேர, தற்காலிக வகுப்புகளின் இடவசதி (ஒதுக்கப்பட்ட அறைகளும் ஒதுக்கபடாத அறைகளும்) விஷேட இடவசதிகளும் மின்சாரம், நீர் சமையல் வாயு உள்ள, அற்ற ஆய்வு கூடங்கள், ஆய்வு கூட அறைகள், விவசாயக் கூறுகள் மனையியல் அறைகள், வணிகவியல் அறைகள், உலோக வேலை அறைகள், புறசிகிச்சைக் கூடங்கள், கூட்டங்களுக்கான மண்டபங்கள், விடுதிகள், மாணவர்களின் எண்ணிக்கை உடைய செற்பாடுகளாக அமைய வேண்டும். அவ்வாறு செயற்பாடுகள் இடம்பெற்றதற்கான சான்றுகள் பெறுபேறுகளே. எனவே இப்பெறுபேறுகளைக் கொண்டே பாடசாலை எந்தளவு இலக்குகளைக் கொண்டமைந்துள்ளது. என்பதை நிர்ணயிக்க முடியும் அத்தகவல்களைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு கல்வி முகாமைத்துவ தகவல் முறையானது பயன்படுவது இன்றியமையாதது. எனவே இத்தகவல்களைக் கொண்டு பாடசாலையின் செயற்பாடுகள் ஒழுங்கமைத்துக் கொள்ளலாம்.

தகவல் வகைகளை மூன்றாக

1.உள்ளீடு சார் தகவல்
2.செயன்முறை சார் தகவல்
3.வெளியீடு சார் தகவல்

இங்கு உள்ளீடு தகவலில் மனிதவளம் உள்ளீடு சார், தகவல்கள் நிதிவள உள்ளீடுகள் தளபாட உபகரணங்கள் என தகவல்கள் கூறப்படுகின்றன. ஆளணி, மாணவர்கள், கட்டிடங்கள், கலைத்திட்டம், நிதி, பௌதீக வளம், உபகரணங்கள் என்பன கிடைக்பெற்று பொருத்தமான செயல்கள் திட்டமிடப்படுகின்றது.

இச்செயல்கள் குறிக்கோள்களை மையப்படுத்தி எவ்வாறு விளைதிறனான செயற்பாடுகளை செய்து முடிப்பதற்கு, இது தொடர்பான தகவல்களை செயன்முறை சார் தகவல்களை எமக்குத் தருகின்றது. இதன் விளைவே வெளியீடு சார் தகவல் தருகின்றது.

**விளைதிறன் செயன்முறைகள்,**

1. உள்ளக விளைத்திறன்
2. வெளியக விளைத்திற்ன
3. நடத்தை மாற்றங்கள்
4. உற்வாக்கு மாற்றங்கள் என்பதாகும்

இவ்வெளியீடுகளுக்கு வெகுமதிகளையும், மதிப்பீடுகளையும் வழங்கும்போது அவை ஆதாரமாக்கப்பட்ட செயல்களாக கோவைப்படுத்தப்படுகிறது. செயலாற்றுகை சுட்டிக்களை எண்கள், பின்னங்கள், தசமதானங்கள் வீதம் என்பவற்றில் பெறக்கூடியதாகவுள்ளது. இத்தகைய உறுதி செய்யப்பட்ட செயல்களின் பெறுமதி Smart தன்மையை குறிக்கோள் எந்தளவு அடைந்துள்ளது. என்பதைப் பார்க்க முடியும். இதற்கு க.பொ.தா (சா/த), க.பொ.தா. (உ/த) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் சுட்டிகளாகக் காணப்படுகின்றது. செயலாற்றுகை சுட்டிகள் GIR.NIR.PIR, SAR, TAR, TR, RR, SR,PR,GER போன்ற காணியின் அளவு, நீர்க்குழாய்கள், கிணறு, மலசல கூடங்கள், உள்ளக விளையாட்டரங்குகள், விளையாட்டு மைதானங்கள், ஓடு பாதையின் அளவு, நூலகத்துக்காக ஒதுக்கப்பட்ட காணியின் அளவு, நூல்கள், அறைகள் அமைந்துள்ள காணியின் அளவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வி நிதித்தகவல்களைக் கொண்ட உபமுறைமை**

அரசாங்க முற்பணமும் வரவு செலவுத்திட்டத்தினை ஈடு செய்யும் தகவல்களும் வசதிகள் செலவுகட்டணங்களால் அறவிடும் மாதாந்தத்தொகை வரவு சுருக்கம், வங்கி வைப்புகள் என்பன அது தொடர்பான விபரங்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கநிதி, வரவு, செலவு சுருக்கம் கையிருப்பு , வங்கி விபரங்கள் ஒவ்வொரு கல்வி நிலவரத்திலும் சம்பளச் செலவினங்களும் கொடுப்பனவுகளைக் கொள்வனவு செய்து கொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கையும் ஆசிரியர்களில்லாத ஊழியர்களின் எண்ணிக்கை, அரசாங்கத்தால் சம்பளம் பெறுவோரின் எண்ணிக்கை , வேறு விதமாகச் சம்பளம் பெறுவோரின் எண்ணிக்கை பெ்ரவரி மாதச்சம்பளம், சம்பளமற்ற லீவுகள், குத்தகை அடிப்படையில் அறவிடப்படும் பணம், வீட்டுவாடகை, விநியோகிக்கப்பட்ட புகையிரத ஆணைச்சீட்டுகள் (விடுமுறைகாலக் பயணங்கள்) அங்கீகரிக்கப்பட்ட படிவங்களைப் பயன்படுத்தவும் கல்வி முகாமைத்துவ தகவல் முறையில் தீர்மானம் எடுத்தலினை குறிப்பிட்டு அவற்றை பாய்ச்சல் கோட்டு முறையில் விளக்குதல்.


கல்வி முகாமைத்துவ தகவல் முறையில் செயற்படும் முக்கிய முறைமையான தீர்மானம் எடுத்தல் உள்ளது இம்முறையினை பயன்படுத்தி கல்வி முகாமையாளர்கள் இலகுவில் முன்கூட்டியே குறிப்பிட முடிஷடியாத தீர்மானங்களை எடுக்கின்றனர் அதற்குதேவையான தகவல்களை உள்ளக மூலகங்களான கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையில் இருந்தும் வெளியக மூலகங்களில் இருந்தும் கூறுகின்றனர்.

அத்தீர்மானம் எடுத்தல் முறையானது ஏனைய முறைமைகளை கூடப் பகுப்பாய்வு செய்யக்கூடிய திறனுடைய முறையாகும். இங்கு கல்வி தொடர்பான நிறுவனத்தின் பல்வேறு மட்டங்களில் தீர்மானம் எடுத்தல் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. முகாமைத்துவ கட்டுப்பாட்டுடன் தொடர்பு பட்ட தீர்மானம் எடுத்தலானது எவ்வளவு வளங்கள் வினைத்திறனாகவும், விளைத்திறனாகவும் பயன்படுகின்றது. என்பதையும் செயற்பாட்டு அலகுகளின் செயற்பாடுகளுடன் தொடர்பு படுத்தி பார்க்கிறது. கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையிலுள்ள பல்வேறு நிர்வாக மட்டங்களில் காணப்படும் செயற்பாட்டு பகுதிகள் (வளம்) இனங்கண்டு அமுல்படுத்துவதன் ஊடாக தீர்மானங்களை பெறக்கூடியதாக இருக்கும் அந்த வகையில் உடனடித் தீர்மானம், நாளாந்த தீர்மானம், வாராந்த தீர்மானம், மாதாந்த தீர்மானங்கள் (12 மாதங்கள்) போன்ற தீர்மானங்கள் முன்வைக்கப்படுகின்றன.

கல்வி முகாமைத்துவத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் இடம்பெறும் தீர்மானங்களையும் தீர்மான வகைகளையும் இணைத்து பார்க்கும் போது, பொதுவாக செயற்பாட்டு மட்டத்தில் உள்ள ஆசிரியர்களும் ஏனைய ஆளணியினரும் நன்றாக முறைப்படுத்தப்பட்ட முறைப்படுத்தப்படாத பிரச்சினைகளையும், அறிவுசார் மட்டத்திலுள்ளவர்கள் முறைப்படுத்தப்படாத பிரச்சினைகளையும், அறிவுசார் மட்டத்திலுள்ளவர்களும் பெரும்பாலும் முறைமைபடுத்தப்படாத பிரச்சினைகளையும் உள்வாங்கிக்கொண்டுள்ளனர்.

• • • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Liyork Communication

**Fancy Goods, Stationary, Reload, Photo Copy,
Type Setting, Binding, Lemating,
E Billing, Ez Cash,
Wedding Cards**



**Dolphin Van for Hire**



**251-4442**

**NO.72,Lakmali Building,
Ragala,Halgranoya
Tel/Fax- 052 2265 646
072 6264244**

---

# Methawatha Agri

Methawatha Agri

AgStar



**NO.146,Udapussellawa Road,
St,Leonard's
Halgranoya.
Tel- 077 130 79 35,
052 22 65 238**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Roshan Hardware



**Udapussellawa Road**
**Ragala, Halgranoya.**
**Tel: 071 371 41 47**

---

# Sineska Reception & Restaurant




**Stafford Road, Ragala**
**Tel: 072 3581069**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rubi Traders

## Agency IGM Product

## Soya, Noodles, Papadam, Coruka.




NO.25, New Bazaar Street,
Ragala, Halgranoya
Tel- 0719 933 675


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sarmila Hardwere
&
Sarmila Ceremics




NO.97, Ragala Bazaar,
Halgranoya
Tel- 052 2265 343
071 3981 777, 077 7194 027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தின விழா சிறப்புற வாழ்த்துகிறோம்



**SMART PRINCIPALS**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலை செயல் ஒழுங்கில் ஆலோசனை வழிகாட்டல்

**S.ரகுநாதன் JP. B.Ed ,DSM**
**பகுதித் தலைவர்**
**மமா/வ/ இராகலை தமிழ் மகா வித்தியாலயம்**

இலங்கை பாடசாலை கட்டமைப்பில் ஆலோசனை சேவை என்பது புதிய ஒன்றல்ல. ஆரம்ப காலம் தொட்டே காணப்படும் துறை. ஆனால் இச் சேவை ஒழுங்கமைக்கப்படாத, அங்கீகரிக்கப்படாத ஒரு துறையாக சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப செயற்பட்டு வந்தது. பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட உள சமூக நெருக்கீடுகளை ஆராய்ந்து இது ஒரு அங்கிகரிக்கப்பட்ட துறையாக பரினமித்தது. அதற்கமைய 1997ம் ஆண்டு பொது கல்வி சீர்திருத்தப்படி ஆலோசனை வழிகாட்டல் சேவை பாடசாலை கட்டமைப்பின் ஓர் அங்கமாகியது. இதன்படி 300 மாணவர்களுக்கு கூடுதலான தொகையை கொண்ட பாடசாலைகளுக்கு ஒருவர் இச் சேவைக்கு முழுமையாக நியமிக்கப்பட்டு இதற்கென்று ஒரு தனி அலகு ஸ்தாபிக்கப்பட்டது. அதாவது அங்கிகரிக்கப்பட்ட துறையாக மாறி செயலாற்றியது.

சுனாமி பேரனத்தத்தின் பின் ஒரு வலுப் பெற்ற தேவைப்பாடு மிக்க துறையாகியது. இதற்கு சர்வதேச சிறுவர் அமைப்பான யுனிசெப் அனுசரனையோடு ஆசிரிய ஆலோசகருக்கு விஷேட திசைமுகப்படுத்தல்களையும் பயிற்சிகளையும் கல்வி அமைச்சு வழங்கியது.

இதற்கமைய இச்சேவை பின்வரும் விடயங்களில் பாடசாலையில் ஈடுபடுத்தப்பட்டது.

1. தனியாள் ஆய்வு விருத்திகள்
2. கல்வி சார் செயற்பாடுகள் வழிகாட்டல்கள்
3. தொழில் சார் வழிகாட்டல்கள்
4. உடல் நலம் சார் வழிகாட்டல்கள்
5. சமூகம் சார் செயற்பாடுகள்
6. பாடப்புற செயற்பாடுகள்

இது பாடசாலையின் அனைத்து வயது பிரிவினருக்கும் பொதுவானதாகும். தனியாள் சார் ஆய்வு செயற்பாடு என்னும் பொழுது தரம் 01இல் ஆரம்பிக்கிறது.

- ❖ மாணவர்களின் சுயவிபரங்களை ஆவணப்படுத்தல்
- ❖ விசேட விடயங்களில் கவனம் செலுத்துதல்
- ❖ அதனை பேணி பாதுகாத்தல்

இதன்படி பாடசாலை ஆலோசகர் பாடசாலையின் அனைத்து மாணவர்களின் சுய விபரங்களை சேகரித்து வைத்திருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்து மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் ஆலோசனை சேவையின் பங்களிப்பினை பார்ப்போமானால் முதலில் விசேட தேவை உடைய மாணவர்களுக்கான வசதிகளை செய்து கொடுத்தலை உறுதி செய்தல்.
உதாரணம் : பார்வை குறைப்பாடு உடையோர், கேட்டல் குறைபாடு உடையோர் என்போருக்கு முறையான வைத்திய பரிசோதனைகளுக்கும் அவர்களின் திறன்களை விருத்தி செய்யக்கூடிய சாதனங்களை பெற்றுக்கொடுத்தல். மேலும் கல்வி மேம்பாடு தொடர்பாக பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துதல் எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ மெல்ல கற்போர், மீத்திறன் உடையோர் மீது கூடிய கரிசனை காட்டல்.
- ❖ ஆக்கத்திறன் உடையோர்களை இனங்கண்டு அவர்களின் திறன்களை வெளிக்கொணர சந்தர்ப்பங்களை உருவாக்கி கொடுத்தல்.
- ❖ பாடத் தெரிவுகளில் சரியான ஆலோசனைகளை வழங்கி அவர்களின் விருப்புகளுக்கு முக்கியத்துவம் வழங்கல்.
- ❖ கற்றல் தொடர்பாக மாணவர் ஊக்கல் நிலையை மேம்படுத்தி இடைவிலகல்களை தவிர்த்து உயர் கல்வியை தொடர ஆலோசனை வழங்கல்.

ஆனால் பாடசாலைகளில் கல்வி மேம்பாட்டின் ஆலோசனை சேவை ஒப்பீட்டு அளவில் மிக குறைவாக காணப்படுகிறது.

அடுத்து கட்டிளமை பருவ மாணவர்களுக்கான ஆலோசனை சேவை என்பது மிகவும் உசிதமானதாக இனங்காணப்பட்டுள்ளது. இவர்கள் கூடுதலான உள சமூக நெருக்கீடுகளுக்கு உட்படுவர். வயது முதிர்ச்சி காரணமாக ஏற்படும் உடலியல் மாற்றம், ஓமோன்களின் தூண்டல், மனவெழுச்சிகள், சுதந்திர உணர்வு, குடும்பப்பின்னணி, சமூக சகபாடிகளின் தாக்கம் என்பன காரணமாக ஏற்படும் பதகளிப்பு, முரண்பாடுகள், விரக்தி தன்மை என்பனவற்றுக்கு உள்ளாவர். இதன்போது சரியான முறையில் ஆலோசனை வழிகாட்டல் வழங்கல் எதிர்பார்க்கப்படுகிறது.

சில ஆலோசகர்கள் எதிர்மறையாக செயற்படுவதும் அவதானிக்கப்படுகிறது. ஆலோசனை என்ற பெயரில் சில அழுத்தங்களை வழங்கி மாணவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்கல். உதாரணம்: காதல் வயப்படும் மாணவர்களை இனங்காண்பதே பெரிய வழிகாட்டல்கள் ஆக கருதுவதை காணக்கூடியதாக உள்ளது. இதை விடுத்து இவர்களுக்கு மனவெழுச்சி விருத்தி, சமநிலை ஆளுமை விருத்தி, சுயமாக பிரச்சினை தீர்த்தல், யதார்த்த உண்மையை அறிதல், இது ஒரு உடலியல் தூண்டல் என்பவற்றில் ஆலோசனை சேவை அமைதல் வேண்டும்.

மேலும் பாடத் தெரிவுகளின் போது பாட ஆசிரியர்களின் தற்றிணிபு மற்றும் பாடசாலையில் உள்ள ஆசிரியர் வளத்தினை கொண்டு பாடத்தெரிவுகளை மேற்கொள்ளாது மாணவர்களின் திறன்களுக்கும் சுய விருப்பத்திற்கும் மதிப்பளிக்க கூடிய வகையில் பாடத் தெரிவை மேற்கொள்ள ஆலோசனை வழங்கல் வேண்டும்.
உதாரணம் :- 2015 ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தின் ஒரு பாடசாலையில் கா.பொ.த (சாதாரண தர) பரீட்சை பெறுபேறு 76மூ ஆக காணப்பட்டது. ஆனால் தொகுதி பாட தெரிவு முழுமையாக சித்திர பாடமாக காணப்பட்டு பெறுபேறு 7மூ மாக காணப்பட்டு 93மூ மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

அடுத்து தொழில் வழிகாட்டல் சேவையும் பாடசாலையினால் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. தொழில் வாழ்க்கையின் ஒரு அங்கம் என்பதையும் அது தத்தமது திறன் ஆளுமைக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும் என்பதையும் வழிகாட்டல் வேண்டும். மேலும் தொழில் உலகு பற்றிய தரவுகளையும் தகவல்களையும் சேகரித்து வழங்கல் அவசியமாக உள்ளது.

இதே போல் சமூக வழிகாட்டல்களையும் வழங்குதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவை சமூக இசைவாக்கம், சமூக முரண்பாடுகளை தீர்த்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமூகமான சமூக உறவை பேணல், சமூகம் சார் நேர் மனப்பாங்குகளை விருத்தி செய்தல், சமூக விழுமியங்களை மதித்தல், சமூக நியமங்களுக்கு ஏற்ப ஒழுகுதல், சூழல் செயற்பாடுகள் என்பன தொடர்பாக சரியான ஆலோசனை வழிகாட்டல்களை பாடசாலை ஆலோசனை சேவை வழங்குதல் வேண்டும்.

மேலும் பாடப்புற செயற்பாடுகளான ஓய்வு நேர பயன்பாடு, பொழுது போக்கு விடயங்கள், பாடசாலை வளங்களை பயன்படுத்தும் முறைகள், ஏனைய பொது சொத்துக்களை பயன்படுத்துதல் மற்றும் விளையாட்டு ஏனைய கழகங்கள், சங்கங்களில் ஈடுபாடு, பங்குபற்றல் என்பன பற்றியும் அதன் சாதக பாதக தன்மைகள் பற்றியும் மாணவர்களுக்கு பாடசாலை ஆலோசனை சேவை உதவி செய்தல் வேண்டும்.

இதே போல் பாடசாலை கலாசாரத்தை மதித்தல். உடல், உடை சுகாதாரம் பேணல், உடல் ஆரோக்கியம்சார் விடயங்கள் உணவு பழக்கங்கள், பாலியல் கல்வி, துர் நடத்தைகளின் பாதிப்பு என்பன பற்றி சரியான விளக்கம் அளித்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் இன்று பல பாடசாலை ஒழுங்கில் இவ்வாறான ஆலோசனை சேவையை காணக்கூடியதாக இல்லை. ஆலோசனையும் வழிகாட்டல் என்பது இடர்படும் மாணவர்களை மட்டும் இனங்கண்டு அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதை மட்டுமே காணக்கூடியதாக உள்ளது.

இதற்கு பல நடைமுறை பிரச்சினைகள் உள்ளன
- ❖ பொருத்தமான சேவையாக ஆலோசனை சேவையை கருதாமை.
- ❖ பக்குவம், அறிவு முதிர்ச்சி, ஆலோசனை அனுபவம் இல்லாத ஆசிரியர்களை இச்சேவைக்குதெரிவு செய்தல்.
- ❖ ஆலோசகரின் நம்பகத் தன்மை இன்மை, இரகசியம் பேணாமை, முன்மாதிரி இன்மை காரணமாக பாடசாலையும் மாணவர்களும் ஆசிரியர்களும் இவர்களை நாடாமை.
- ❖ பாடசாலை நிருவாகம் ஆலோசனை சேவையை பயன்படுத்தாமை.
- ❖ ஆலோசகர்களுக்கு முறையான பயிற்சி இன்மை.
- ❖ ஆலோசகர்களின் அசமந்த போக்கு மற்றும் தகவல்களை இற்றைப்படுத்தாமை.

என்பன காரணமாக இன்றைய பாடசாலை அமைப்பில் ஆலோசனை வழிகாட்டல் சேவை என்பது செயற்றிறன் அற்ற ஒரு பெயரளவு அமைப்பாகவே செயற்படுகிறது. இதனை மாற்றி அமைத்து அனைத்து பாடசாலை அமைப்பிலும் பயன் உறுதி வாய்ந்த செயற்றிறன் மிக்க செயற்பாட்டு அலகாக உருவாக்கி பாடசாலையின் உள சமூக விருத்திக்கு ஆலோசனை வழிகாட்டல் சேவையை பயன்படுத்துதல் கல்வி சார் புலத்தின் தேவைப்பாடாக உள்ளது எனலாம்.

● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கல்வித்துறையின் வரலாறு

**பெரியையா சுரேஸ் Dip.Sch.Ma.History Trn**

**மமா/வ/ இராகலை தமிழ் மகா வித்தியாலயம்**

**ஹல்கரனோய.**

கிமு 6ஆம் நூற்றாண்டில் கல்வி எனப்படுவது பௌத்தவிகாரைகளையும், துறவி மடங்களையுமே ஆக்கஇலங்கையின் கல்வித்துறையில் கல்வி என்ற வார்த்தை இன்றைய காலக்கட்டத்தில் இலங்கையரைப் பொறுத்தமட்டில் ஒரு முக்கியமான அம்சமாகவே பார்க்கப்படுகிறது.ஆரம்பநிலை தொடங்கி பல்கலைக்கழகம் வரை ஏழை, பணக்காரன், சாதி, மதம், இனம், மொழி, போன்ற எந்தவித பாகுபாடுமின்றி அனைவருக்கும் பொதுவானதாகவும்.

அனைவராலும் ஆர்வத்துடனும் போட்டி மனப்பான்மையுடனும் முறையான கல்வித்திட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. குறிப்பிட்டளவு வாய்புக்களை பாரியளவு மக்களுக்கு வழங்குவதில் இலங்கை போன்றதொரு நாடு எதிர்நோக்கும் சமூக, பொருளாதார சவால்களின் விளைவாக மாணவர்கள் போட்டிபோட்டுக்கொண்டு தங்களது வாய்ப்புக்களைத் தக்கவைத்துக்கொள்ள போராடும் நிலையையும் நாம் அறிவோம்.ஏழை விவசாயியின் பிள்ளைகள்கூட தனது திறமையை வெளிப்படுத்தி கல்வியில் உயர் மட்டங்களை அடையலாம் என்ற நிலையில் இன்று இருக்கின்ற இலங்கையின் கல்வியானது கடந்த காலங்களில் அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.

அக்காலத்திலே கல்வி,கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் போன்றவை சமூகத்தில் உயர் அந்தஸத்தில் இருக்கும் துறவிகளுக்கும் பிக்குகளுக்குமே போதிக்கப்பட்டன. மேலதிகமாக வசதி படைத்த செல்வாக்குள்ளவர்களின் பிள்ளைகளுக்கு துறவிகளால் கல்வி கற்றுக்கொடுக்கப்பட்டது.பெரும்பாலும் மதம் சார்ந்த கல்வியோடு உலோகவேலை நெசவு, கட்டிடக்கலை, மரவேலை, ஓவியம், சிற்பக்கலை போன்ற விடயங்களே கற்றுக் கொடுக்கப்பட்டன. அந்தக் காலக்கட்டத்தில் சமூகத்தில் வாழ்ந்த ஏனைய மக்களுக்கு கல்வி என்பது எட்டாக் கனியாகவே இருந்தது. அவர்கள் பெரும்பாலும் கல்வியறிவு அற்ற சாதாரண மக்களாகவே வாழ்ந்துவந்தனர். காலனிய ஆட்சி இலங்கையை ஆட்கொள்ளும் வரை இலங்கையின் கல்வி முறைமை இவ்வாறே இருந்தது.

16ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயர் வருகையின் பின்னர் இலங்கை மக்களுக்கு கல்வியைப் பெற்றுக்கொள்ள ஓர் வித்தியாசமான வாய்ப்புக்கிட்டியது என்பதே உண்மை. போத்துக்கேயர் ரோமன் கத்தோலிக்க மதத்தை பரப்புவதனை நோக்கமாக கொண்டு ஆரம்பித்த போர்த்துக்கேய மிஷனரிகள் பின்னர் ஒல்லாந்தரின் வருகையின் போது கிறிஸ்தவ ஆரம்பநிலைப்பாடசாலைகளாக அவை தோற்றம்பெற்றன. ஒரு நூற்றாண்டுக்காலம் நிலைத்து நின்ற இப் பாடசாலைகள் 18ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் ஆங்கில மொழிக் கற்கைகளை வழங்கியது.

ஆங்கிலம் என்றதுமே தெறித்து ஓடுகின்ற கலாச்சாரம் அன்றும் இருந்ததனாலோ என்னவோ இப்பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களின் அளவு மிகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பமாகவே இருந்தது. கோல்புருக் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி 1836 இல் ஒரு நிலையான அரச கல்லூரி அமைப்பை பிரித்தானியா ஸ்தாபித்தது. இன்றுவரையில் தொடரும் அரச நிதியில் இயங்கும் பாடசாலை அமைப்புக்கு இது வழிகோலியது. பெரும்பாலான அரச பாடசாலைகளில் உள்ளூர் மொழிகளிலேயே கல்வி கற்பிக்கப்பட்டது. எனவே பாடசாலைகளுக்கு மாணவர்கள் வரும் வீதமும் அதிகரித்தது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் மூன்றாம் நிலைக்கல்வி நிலையங்கள் பிரித்தானியாவினால் ஸ்தாபிக்கப்பட்டன.19ம் நூற்றாண்டின் இறுதியிலும்,20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், ஏனைய மத பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

இருந்தபோதும், கல்வியை பெறுவது ஆண்களுக்கு இலகுவாக இருந்தபோதும் அது பெண்களுக்கு சாத்தியப்பட்டமை மிகக் குறைவே!. 1942இல் இலங்கையின் கல்வி இலவசமாக்கப்பட்டதை அடுத்து, அரசபாடசாலைகள் அனைத்திலும் தேசிய மொழிமூல கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.சுதந்திரத்துக்கு பின்னான காலப்பகுதியில் 60 சதவீதமான பாடசாலைகள் அரசினாலேயே இயக்கப்பட்டன. 1980களில் இலங்கையில் முதன் முதலாக சர்வதேச பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இன்று பெருமளவில் பரிணாம வளர்ச்சிகண்டுள்ள இலங்கையின் கல்விமுறைமையில் 10012 அரச பாடசாலைகள் இயங்கியபோதும், தனியார் பாடசாலைகளின் வளர்ச்சியும் அவற்றுக்கான கேள்வியும் அபரிமிதமான வளர்ச்சியை அடைந்துள்ளமை கண்கூடு. இவற்றுள் தேசிய பாடத்திட்டத்தைப் பின்பற்றுக்கின்ற சர்வதேபாடசாலைகளும் உள்ளடங்குகின்றன.

இலங்கையிலுள்ள பெரும்பாலான சர்வதேச பாடசாலைகள் தமது இரண்டாம் நிலைக்கல்வி பெறும் மாணவர்களை, எடெக்ஸல்(EDEXCEL) அல்லது கேம்ப்ரிஜ் (CAMBRIDGE) IGCCSE சாதாரண, உயர்தர துணை மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு தயார்படுத்துகின்றன.

**கல்விதுறையின் எதிர்காலம்**

இன்று உலகளாவியரீதியில் கல்வி கற்கும் முறைமைகள் எமது கற்பனைக்கு அப்பாற்பட்ட அளவுமாற்றத்தை கண்டுள்ளது. திறன்பேசிகள, கணினிகள், மடிக்கணினிகள், இணையம், தொலைதொடர்புசாதனங்கள், டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட எண்முறையான கற்றல் உபகரணங்கள் போன்ற பல்வேறுப்பட்ட பரிணாமங்களின் வளர்ச்சிகண்டுள்ள சர்வதேச கற்கை முறைமைகளோடு ஒப்பிடுமிடத்து, இலங்கையில் இன்று இருக்கின்ற நிலை மிகவும் பின்தங்கியே உள்ளது என்பதில் ஐயமில்லை.

அந்தவகையில் நோக்கும்போது காலணித்துவத்தின் பினனரான இலங்கையின் கல்வித்திட்டம் கல்வி கற்றல் முறைகளில் புதிய அனுகுமுறைகளின் வருகை எந்தவிதமான முன்னேற்றமான மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை என்பது நிதர்சனமான உண்மை. கடந்த ஐம்பதாண்டு காலப்பகுதியில் இலங்கையின் கல்விமுறைமையில் பாரிய மாற்றம் ஏதும் நடைபெறவில்லை. உலகத் தரத்தோடுகூடிய கல்வி முறைமைகளை பின்பற்றுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் வகையில் பாடசாலைகளில் கணினி கூடங்கள், டிஜிட்டல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்ப வசதிகள் போன்றவை ஏற்படுத்தப்படுவதற்கான முன்னெடுப்புகள் நடைபெற்றபோதும், அவை உரிய விளைவுகளை கொடுப்பதில் பல்வேறு பின்தங்கிய நிலைகள் காணப்படுகின்றன.

இலங்கையின் பொருளாதாரம் இதற்கு ஓர் மிகப்பெரும் காரணியாக இருந்தபோதும் கல்வியியலாளர்கள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தோடுகூடிய கல்வி முறைமையின் முன்னேற்றம் மற்றும் அதன் அவசியம் பற்றி அறிந்திராமையும், அவ்வாறான கற்கை நெறிகளை போதிக்ககூடிய ஆசிரிய வளம் இல்லாமை போன்ற பல்வேறு காரணிகளும் இதற்க்கு காரணமாக இருக்கின்றன.கல்வி முன்னேற்றத்தை டிஜிட்டல் மயப்படுத்துகின்ற செயல்முறையானது மூன்று படித்தரங்களைக் கொண்டிருக்கின்றது.

- முதலாவது-VCR தொலைகாட்சிகள் போன்ற ஓடியோ-வீடியோ கருவிகள் CD-ROM, குறைந்த வேக இணைய தொடர்புகள், கணினி விகிதத்திற்கு அதிகமான மாணவர் மற்றும் தேவையான தகவல்தொழில்நுட்ப திறன்களைக் கொண்ட இரண்டு ஆசிரியர்கள் போன்றவற்றையும்,
- இரண்டாவது- மல்டிமீடியா புரொஜக்டர்கள், அதிவேக இணையதொடர்புகள், கணினி விகிதத்திற்கு குறைந்த மாணவர் போன்ற மிகவும் முன்னேற்றகரமான கருவிகள் மற்றும் தகவல் தகவல்தொழில்நுட்ப அறிவு கொண்ட போதியளவு ஆசிரியர்கள் எனவும் இறுதிப் படித்தரம் அசிரியர் முன்னெடுப்பு கல்வி அல்லாது மாணவர் வழிநடாத்தும் கல்வியாகவும் இனங்காணப்படுகின்றது. நிலைமை இப்படி இருக்க இலங்கையானது டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கல்வியின் முதல்படியின் பெரும்பாலான பகுதியையே இன்னும் தாண்டவில்லை என்பதுதான் வேடிக்கை.

அது மட்டுமல்லாது சர்வதேச ரீதியில் உள்ள மணவர்கள் அறிவைப் பெறுவதற்காகவும், தகவல்களை பகிர்ந்துகொள்வதற்க்கும், கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கவும், வாய்ப்புகளை நாடவும், தகவல் தொழில்நுட்பத்தை சமுக வலைத்தளங்களை யூடியூப் போன்ற சாதனங்களையும் பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் அவர்களது தேடல் அதிகரித்தவண்ணமே இருக்கின்றது.புதிய விடயங்களை கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும், கல்வியின் மூலம் தமது வாழ்கை மற்றும் சமூகத்திற்க்கு தேவையான உள்ளீடுகளை வழங்கவும் அவர்கள் முயன்று கொண்டே இருக்கின்றனர். இதுவே அவர்களை முன்னேற்ற பாதையில் இட்டுச்செல்கின்றது.

ஆனால் இலங்கையை பொருத்தமட்டில் வினாத்தாள்களையும், அவற்றிலுள்ள கேள்விகளுக்கான குறிப்பிட்ட பதில்களையும் மட்டும் உள்வாங்கி அதன் மூலம் தமது கல்வி என்கின்ற இலக்கை அடைகின்ற துர்பாக்கிய நிலையில் இருக்கின்றது.இதன் மூலம் மாணவர்களின் தேடல் முடக்கப்படுகின்றது. தொழில்நுட்பத்தின் உதவியோடு அவர்கள் பரந்த விரிந்த உலகை நோக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் செய்யப்படுகின்றது.முறையான முன்னேற்றமான ஆரோக்கியமான வழிகளில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை இலங்கையர்களில் பெரும்பாலானர் பயன்படுத்தத் தவறுகின்றமைக்கு அவற்றை முறையாக கையாளும் விதிகளை பாடசாலை மட்டக்கல்வித்திட்டம் கட்டமைக்காமையே எனலாம். உரிய விதத்தில் உரிய தேவைக்காக,சிறந்த நிலைபேறான விளைவுகளை பெரும் வகையில் மாணவர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் கல்வியோடு சேர்ந்து ஊட்டப்பட எமது கல்வித்திட்டத்தில் சீரிய மாற்றங்கள் இடம் பெறவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 முதல் 16 வயது வரையிலான சிறுவர்களுக்கு கட்டாயக்கல்வி 92 சதவீத தேசியகல்வியறிவு ஆரம்ப பாடசாலையில் இணையும் மாணவர்கள் 99 சதவீதமாகும் மிகுந்த போட்டித்தன்மை கொண்ட பொதுப் பரீட்சைகள்.அத்தோடு சிறந்த சித்திகளைப் பெறுவதற்காக மாணவர்கள் தமது பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக தனியார் வகுப்பகளை நாடுதல் என எமது கல்வி முறைமை படுவேகமாக சென்றுக்கொண்டிருக்கும் வேலை தகவல் தொழில் நுட்பத்தின் நுழைவு அதிசயிக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தவல்லது. தொழில்நுட்பத்தோடு இணைந்த ஆரோக்கியமான கல்வி இலங்கைக்கு காலத்தின் தேவையாகும்.

நன்றி
தொகுப்பு- இணையம்.

• • • •






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆம் நூற்றாண்டின் வகுப்பறையும் ஆசிரியர்களின் வகிபங்குகளும்

இரா-விஜயகுமார். M.Ed, SLPS
பிரதி அதிபர்
ம மா/வ/ டெல்மார் தமிழ் வித்தியாலயம்

## 1.1 அறிமுகம்.

இருபத்தோராம் நூற்றாண்டு மூன்றாவது மிலேனியத்தின் முதலாவது நூற்றாண்டாகும். இது ஓர் அறிவுமைய நூற்றாண்டாகப் பரிணமித்துள்ளது. மனித வாழ்வியலில் விவசாயம், கைத்தொழில் ஆகியவை கொண்டிருந்த ஆக்கிரமிப்பைத் தளர்த்தி அவற்றின் இடத்தை இன்று அறிவு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. ஒரு நபர் சமூகத்தில் சிறந்த உறுப்பினராவதற்கு கல்வி மிக அவசியம். என்பதை உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் சபையில் யுனெஸ்கோ அமைப்பு உட்பட பல உலக அமைப்புக்கள் காலத்திற்குக் காலம் பல கல்விக் குறிக்கோள்களை வெளியிட்டு உறுப்பு நாடுகளை வழிகாட்டி வருகின்றன. அந்த வகையில் வாழ்நாள் நீடித்த கல்வி, (1970) அறிவுசார் பொருளாதாரத்திற்கான கல்வி, (1996) உலக கல்வி மாற்றத்திற்கான அனைவருக்கும்கல்வி, (2000) ஐக்கிய நாடுகளின் மிலேனிய இலக்குகள்(MDG 2000) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

எந்தவொரு கல்விமுறையிலும் மாணவர்களுக்கு அடுத்து அதி முக்கிய தொகுதியினராக விளங்குபவர்கள் ஆசிரியர்களே ஆவர். இதன் அடிப்படையில் 1966 ஆம் ஆண்டு UNESCO நிறுவனம் சர்வதேச தொழில் நிறுவனத்துடன் (ILO) இணைந்து ஆசிரியரின் அந்தஸ்து மற்றும் அவர்களின் பணி தொடர்பான விதந்துரைகள் கொண்டதொரு முக்கிய ஆவணத்தை வெளியிட்டது. இன்று உலகில் பணிபுரிகின்ற 50 மில்லியனுக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் வேதனம், பயிற்சி ஆகியவற்றுக்காக மீண்டெழும் செலவினத்தில் 50 – 90 வீதம் வரை செலவிடப்படுகிறது. இது கல்வி மீதான பாரிய முதலீடாகும். எனவே காலத்துக்குப் பொருத்தமான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதும் அவற்றை கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பிரயோகிப்பதும் ஆசிரியர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

21 ஆம் நூற்றாண்டு ஆசிரியர்களின் வகிபங்குகளை தெரிந்து கொள்வதற்கு முன்பாக இந்நூற்றாணடுக்குரிய வகுப்பறையின் இயல்புகளை தெரிந்து கொள்வது முக்கியமானது. அவ்வியல்புகளை பின்வரும் அட்டவணை ஒப்பீட்டு வகையில் விளக்குகிறது.

| 20 ஆம் நூற்றாண்டு வகுப்பறை | | 21ஆம் நூற்றாண்டு வகுப்பறை |
|---|---|---|
| 1. | நேரத்தை அடிப்படையாக கொண்டது | பேற்றினை (Outcome) அடிப்படையாக் கொண்டது |
| 2. | தகவல்களை மனனம் செய்வது முக்கியமானது | மாணவர்களுக்கு கற்பித்தலின் முடிவில் என்ன தெரியும், செய்யமுடியும் என்பது முக்கியமானது |
| 3. | பாடங்கள் Bloom இன் கீழ்மட்ட | மேற்படி தேர்ச்சிகளுடன், தொகுப்பு, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | தேர்ச்சிகளில் (அறிவு, கிரகிப்பு, பிரயோகம்) கொண்டிருத்தல். | பகுப்பாய்வு, மதிப்பீடு ஆகியவையும் முக்கியமானவை. |
| 4. | பாடப்புத்தகங்களை அடிப்படையாக கொண்டது | ஆய்வுகளை அடிப்படையாக கொண்டது |
| 5. | தங்குநிலை (Passive) கற்றல் சுதந்திரமின்மை | உயிர்ப்பான (Active) கற்றல்: போதுமான சுதந்திரம் |
| 6. | மாணவர்கள் நான்கு சுவர்களுக்குள் தனிமையில் கற்றனர் | தமது சகமாணவர்களுடன் மாத்திரமல்லாது உலகளாவிய ரீதியல் கூட்டிணைந்து கற்கின்றனர். (Golbal Classroom) |
| 7. | ஆசிரியரே சகல தகவல்களையும் தரக் கூடியவர் - ஆசிரியர் மையமானது. (Teacher – Centered) | ஆசிரியர் கற்றலை வசதிப்படுத்துநர் மட்டுமே (Student – Centered) |
| 8. | கட்டொழுங்குப் பிரச்சினை : பரஸ்பர நம்பிக்கையீனம் | ஆசிரியரும் மாணவர்களும் இணைந்து கற்கின்றனர் (Co- Learners) |
| 9. | ஒன்றிணைக்கப்படாத (Fragmented) கலைத்திட்டம் | ஒன்றிணைக்கப்பட்ட கலைத்திட்டம் (Integrated/ interdisciplinary) |
| 10. | புள்ளியினை சராசரிப்படுத்தல் | கற்றலுக்கு புள்ளிகள். தரங்கள் வழங்குதல் |
| 11. | கீழ்மட்ட எதிர்பார்ப்புகள் | உயர் எதிர்பார்ப்புகள் சகல மாணவர்களும் கற்றலில் குறைந்தபட்ச வெற்றியடைகின்றனர். சிலர் உயர் மட்டத்துக்கு செல்வர் |
| 12. | ஆசிரியரே நீதிபதி, மாணவரின் வேலைகளை அவர் மட்டுமே பார்ப்பார் | சுயமதிப்பீடு மற்றும் சகபாடிகள், ஏனையோர் மதிப்பீடு செய்வர் |
| 13. | கலைத்திட்டம் மாணவர்களின் விருப்பங்களுடன் தொடர்புபட்டதல்ல | மாணவரின் ஆர்வம், அனுபவங்கள், யதார்த்த உலகுடன் கலைத்திட்டம் தொடர்புபட்டிருக்கும் |
| 14. | கற்றல் மற்றும் மதிப்பீட்டுக்கு அச்சு ஊடகமே அடிப்படை | செயற்றிட்டங்கள், செயலாற்றுகை முதலிய பல்வேறு ஊடகங்கள் கற்றலுக்கும் மதிப்பீட்டுக்கும் உள்வாங்கப்படும் |
| 15. | மாணவர் மத்தியிலுள்ள பன்மைத்துவம் கருத்தில் கொள்ளப்படுவதில்லை | மாணவரின் பன்மைத்துவம் கலைத்திட்டத்திலும் கற்பித்தலிலும் முக்கியம் பெறும் |
| 16. | எழுத்தறிவு என்பது 3R (வாசிப்பு, எழுத்து, கணிதம்) | உலக மயமாக்கப்பட்டுள்ள புதிய மிலேனியத்தில் வாழ்வதற்கு அவசியமான பன்மை – எழுத்தறிவு (Multiple – Literacy) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 17. கைத்தொழில் யுகத்தில் உற்பத்தி உடைமையாளர்களுக்கு அவசிய தொழிற்சாலை மாதிரியையும் விஞ்ஞான முகாமையும் (Factory Model) | உலகமயமாக்கப்பட்ட, உயர்தொழில்நுட்ப சமுகத்துக்குப் பொருத்தமான பூகோள மாதிரி (Global Model) |

மூலம் w.w.w.wikipedia.com

மேலே கூறப்பட்ட சகல விடயங்களுடனும் சகலரும் உடன்படுவர் எனக் கூறுமுடியா விட்டாலும் 21 ஆம் நூற்றாண்டு கற்றல் - கற்பித்தல் செயன்முறை, மாணவர் - ஆசிரியர் இயல்புகள், வகுப்பறை – பாடசாலையின் இயல்புகள் ஆகியவற்றின் செல்நெறிகளை மேற்படி அட்டவணை ஓரளவுக்கு காட்டிநிற்கிறது என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. அபிவிருத்தியடைந்த பல நாடுகளில் மேற்படி விடயங்கள் பாடசாலை, வகுப்பறைகளின் அமைப்பிலும், கற்றல்- கற்பித்தல் செயன்முறைகளிலும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தபட்டு வருகின்றன. இவ்வாறான – கற்பித்தல் சூழ்நிலைகளில் ஆசிரியர்களின் தொழில்சார் தேர்ச்சிகளும் பொருத்தமாக இருக்க வேண்டிது முக்கியமானது.

இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் சூழலுடன் இயைபு கொண்டு செயற்பட வேண்டியவராவார். கலைத்திட்டத்தில் பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. வர்த்தக மாதிரிகை (Business Model) க்காக உருவாக்கப்பட்ட மென்பொருள்களையும் வன்பொருட்களையும் தான் கற்பிக்கும் பல்வேறு வயதுப்பிரிவுகளும் வேறுபட்ட ஆற்றல்களும் கொண்ட மாணவர்களுக்கு ஏற்ற வகையில் வகுப்பறை செயன்முறைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலையும் நெகிழ்வுத்தன்மையையும் அவர் கொண்டியங்க வேண்டியுள்ளது. வகுப்பறை தொழிநுட்பவியலைப் பயன்படுத்தும் போது அவை செயற்படுதிறனை இடைநடுவில் இழந்துவிட்டால் வகுப்பறை செயன்முறையை நிறுத்திவிடமுடியாது. எனவே அவ்வாறான சூழ்நிலையில் அறைகூவல்களை உவந்தேற்று அவர் சூழலுக்கு இயைந்து செயற்பட வேண்டும். அத்துடன் பல்வேறு கற்றல் பாங்குகளையும் (Learning Styles) விளங்கிக் கொண்டு வேறுபட்ட கற்றல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஆசிரியர் தனது கற்பித்தல் பாங்குகளை மாற்றிக்கொள்ளுதலும் வேண்டும்.

எவ்விடயத்திலும், எந்நேரமும் கற்றல் (Anywhere, Anytime Learning) என்பது இன்று பரவலாய் பயன்படுத்தப்படும் தொடராகும். எனவே இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியரும் எந்நேரமும் எவ்விடயத்திலும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆர்வத்தையும் ஆற்றலையும் கொண்டிருத்தல் அவசியம். தொடர்பாடலையும் ஒன்றிணைப்பையும் ஏற்படுத்தக்கூடிய கருவிகள். மற்றும் தொழிநுட்பவியல்களில் அவர் பரிச்சயம் கொண்டிருத்தல் வேண்டும் பல்வேறு உரித்தாளர்களுக்கிடையே தொடர்பாடலை ஏற்படுத்தவும், அதனை ஊக்குவிக்கவும் கட்டுப்படுத்தவும், முகாமை செய்யவும் எமது ஆசிரியருக்கு அறிவும் ஆற்றலும் இருத்தல் அவசியம். உதாரணமாக இன்றைய சூழ்நிலையில் மக்களிடையே நெருக்கமான தொடர்பாடலை ஏற்படுத்துவதில் சமூக வலையமைப்புக்கள் மிக முக்கிய இடம் வகிக்கின்றன. இவற்றுடன் பரிச்சயம் இல்லாத ஓர் ஆசிரியர் இருபத்தோராம் நூற்றாண்டுக்குரிய ஆசிரியராக பரிணமிக்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால அறிவுப் பிரவாகமானது மாணவர்களை மாத்திரமல்லாது ஒவ்வொரு குடிமகனையும் வாழ்நாள் நீடித்த கற்போனாக (Lifelong Learner) மாற வைத்துள்ளது. பாடசாலையுடன் அல்லது உயர்கல்வி நிலையத்துடன் "படிப்பு முடிந்தது" என்பது அர்த்தமில்லாத கூற்றாகிவிட்டது. மாறாக "தொட்டில் முதல் சுடுகாடு வரை" யிலான கல்வி இன்று அவசியமாகிவிட்டது. இதற்கு உதவும் வகையில் மூடப்பட்ட கல்வி முறைகளை விட திறந்த கல்வி முறைகள் பிரபலமாகி வருகின்றன. கலைத்திட்டத்தின் உள்ளடக்கத்தில் தொடர்ச்சியாக புதியவற்றைப் புகுத்த வேண்டும் எனில் ஆசிரியரும் வாழ்க்கை நீடித்த கற்போனாக உருமாற வேண்டியுள்ளது. அறிவுப் பிரவாகத்தினால் கல்விபுலமும் தேவையான மாற்றத்திற்கு உள்ளாகும் போது அம்மாற்றத்தை உள்வாங்க கூடிய வகையில் தனது அறிவையும் தேர்ச்சியையும் மாற்றிக் கொள்ளக்கூடிய ஆசிரியனே இருபத்தோராம் நூற்றாண்டுக்குக் பொருத்தமானவனாவான்

தரிசனநோக்கு (Vision) என்பது தனிநபருக்கும், சமூகத்திற்கும் நாட்டுக்கும் அவசியமானது. அதே போல அத்தகைய தரிசன நோக்கினை அடைவதற்கான செயற்றிறனும் முக்கியமானது. "செயற்றிறன் இல்லாத தரிசன நோக்கு வெறுமனே ஒரு கனவுதான், தரிசனநோக்கு இல்லாத செயற்றிறன் நேரவிரயமாகும். தரிசன நோக்கும் செயற்றிறன் ஒன்றிணைத்தால் இந்த உலகினை வெல்ல முடியும்" என ஓர் அறிஞர் குறிப்பிட்டார். இன்றைய உலகின் தொழில்நுட்பவியலின் வளர்ச்சி வேகத்தையும் எதிர்காலத்தில் அதன் பரிணாமத்தையும் ஆசிரியர் விளங்கி அவற்றைச் செயலாற்றவும் வேண்டும்.அத்தகைய நிலையை அடைய ஆசிரியருக்கு கற்பனைத்திறனும் கற்பனை வளமும் அவசியமாகும். புதிய புதிய தொழில் நுட்பங்களை வகுப்பறைச் செயன்'முறைகளில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்குரிய கற்பனைத்திறன் இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியருக்கு மிகவும் அவசியமாகும். கற்பனைத்திறன் கொண்ட ஆசிரியர் தனது கற்பித்தல் துறைக்கு அப்பால் சென்று ஏனைய கற்றல் துறைகளிலும் கலைத்திட்டத்திலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனங்கண்டு தனது வகுப்பறைச் செயற்பாடுகளில் புதுமைகளைப் புகுத்த முயல்வார்.

இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் ஒரு தலைவராகவும் மிளிரவேண்டியுள்ளது. ஒரு தலைவரின் வகிபங்கு யாது? ஒரு தலைவர் என்பவர் தனது நிறுவனம் அல்லது மக்களுக்குரிய தரிசனநோக்கினை உருவாக்குவார். அத்துடன் தன்னைச் சூழ உள்ளவர்கள் அந்தத் தரிசன நோக்கினை ஏற்றுக்கொள்ளவும் பாடுபடுவார். அது மாத்திரமின்றி அத்தரிசன நோக்கினை அடையக் கூடிய வகையில் தன்னைச் சார்ந்துள்ளோரை அவர் ஊக்கப்படுத்துவார். இன்று கல்வி உலகினுள் குறிப்பாக வகுப்பறைச் செயன்முறைகளை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் முன்னெடுத்துச் செல்ல இத்தகைய தலைமைத்துவ தேர்ச்சியை ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். விஞ்ஞானம் தொழிநுட்பவியலில் ஏற்படும் வளர்ச்சியும் முன்னேற்றமும் கல்வி உலகிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றை இனங்கண்டு வகுப்பறைச் செயன்முறையில் அத்தகைய புத்தாக்கங்களை உள்வாங்கி கற்றல் கற்பித்தல் செயன்முறையை நவீனமயமாக்குவதற்கு சிறந்த தலைமைத்துவமும் அவசியமாகிறது. இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியனுக்கு இத்தகைய தலைமைத்துவம் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் தமது சொல்லாலும் செயலாலும் எப்போதுமே மாணவர்களுக்கு முன்னுதாரணமாக நடந்து வந்துள்ளனர். மாணவர்கள் ஒரு நாளில் உயிர்ப்பான நேரத்தை தமது பாடசாலைகளிலேயே கழிக்கின்றனர். அந்நேரத்தில் ஆசிரியர்கள் விழுமியங்களையும் அறவொழுக்கங்களையும் அவர்களுக்குகற்பிப்பதோடு தாமே மாணவர்கள் பின்பற்றக் கூடிய மாதிரிகளாகவும் திகழவேண்டிய நிலை உள்ளது. இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் பிரதிபலிப்பு நடைமுறையை (Reflective practice) பின்பற்ற வேண்டியவராகிறார் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் தொடர்பான சுய பிரதிபலிப்பை தானே அசை போட்டுக் கொள்ளாமல் Facebook, blogs, twitter முதலான சமூகவலைத்தளங்களில் பிறருடனும் பகிர்ந்துகொள்ளமுடியும் பகிரப்படுவதால் பொறுமைக்காத்தல், பிறரது கருத்தை கௌரவித்தல், கருத்து மோதலில் உயர் பண்பாட்டை வெளிப்படுத்தல், சர்வதேச பார்வை முதலிய பண்புக் கூறுகளை இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் வெளிப்படுத்துவதோடு அப்பண்புகளின் நிலைக்களனாகவும் அவர் செயற்பட வேண்டியுள்ளது.

ஒரு காலத்தில் கற்றல் என்பது வகுப்பறையின் நான்கு சுவர்களுக்குள் மட்டுப்படுத்தப் பட்டிருந்தது.ஆனால் இன்று கற்றல் செயற்பாடுகளுக்கு எல்லைகளில்லை.இணையத்துககுள் பிரவேசிக்கும் ஒரு மாணவனோ அல்லது ஆசிரியரோ எல்லையற்றுப் பரந்து விரிந்து கிடக்கும் கற்றல் வாய்ப்புக்களுடன் சங்கமமாகி விட முடியும். Ning, Blogger, Wiki spaces, Bebo, MSn, My Space, Second life முதலான இணைய வலையமைப்புக்கள் மிகச் சிறந்த கற்றல் தொடர்புகளையும் வாய்ப்புக்களையும் வழங்குகின்றன. இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் புத்தறிவை உள்வாங்குதிறனும், நவீன உருவாக்கு திறனும் அவற்றைப் பிறருடன் பகிர்வதிலும் தனது மாணவர்களுடனும் ஏனையோருடனும் இணைந்து செயற்படுதிறனும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பல்வேறு புதிய மாறுபட்ட வகிபங்குகளை ஏற்று செயற்படுவதில் பல ஆபத்துக்களும் உள்ளன. ஆனால் இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் அவ்வித ஆபத்துக்களைத் துணிந்தேற்று செயற்பட வேண்டிய நிலையிலுள்ளார். மாணவர்கள் நவீன தொழிநுட்பவியலுக்குள் மிக எளிதாக பிரவேசிப்பதுடன் அவற்றைத் திறமையுடன் கையாளவும் செய்கின்றனர். அதனால் ஆசிரியர் பல சந்தர்ப்பங்களில் தமது மாணவரிடமே கற்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. கற்றலை உறுதிப்படுத்துகின்ற உயரிய விளைத்திறன் கொண்ட வழிமுறை பிறருக்கு கற்பிப்பதாகும்.

**நிறைவுரை**

இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் தமது மாணவர்கள் ஒருவருக்கு ஒருவர் கற்பிப்பதற்கு வழிப்படுத்தவும் வேண்டிய நிலையிலுள்ளார். தரிசன நோக்கு, தெளிவான இலக்குகள், புதிய தொழில் நுட்பவியலில் நம்பிக்கை போன்றவை நவீன ஆசிரியர் ஆபத்தை ஏற்று வெற்றியடையும் துணிச்சலை அவருக்கு வழங்கக்கூடியன. 21 ஆம் நூற்றாண்டு ஆசிரியர் உயர்மட்ட தேர்ச்சிகளையும் வகிபங்குகளையும் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படும் அதே நேரத்தில் அவர்களது தொழில் சார் நிலைமைகள் பற்றியும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமானது. எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைகள்

- சந்திரசேகரன், சோ(1995). புதிய நூற்றாண்டுக்காண கல்வி தர்ஸனா வெளியீட்டகம், திருகோணமலை.
- சந்திரசேகரம், சோ. (1993) இலங்கையின் கல்வி. கவிதா பதிப்பகம் , மதுரை.
- சந்திரசேகரம் , சோ. (2004) கல்வி ஒரு பண்முக நோக்கு. உமா பதிப்பகம், கொழும்பு.
- கல்வி அமைச்சு, (2007). கலவித்துறை அபிவிருத்தி சட்டகமும் நிகழ்ச்சி திட்டமும் (ESDFP),கல்வி அமைச்சு,இலங்கை
- சின்னத்தம்பி.மா.(2013) புதிதாக சிந்திப்போம் சமுதாயத்திற்கான கல்வி யாழ்ப்பாணம் கரிகணன் பிரின்டர்ஸ்.
- Beare,H,(2001).Ceating the future of schools,London;Routeledge Falmar. Gunawardena.C, (1996) Problem of literate Developing Society; Srilanka.
- தேசிய கல்வி ஆணைக்குழு,(2003) கல்வி முகாமைத்துவம் பற்றிய அறிக்கை.
- Unicef,(2013)Out of Schoool Childran in srilanka, Unicef,Srilanka.

••••

# Central Medicals

**Dealers in Pharmaceuticals**




**No.-13/1, Old Bus Stand**
**Ragala, Halgranoya**
**Tel-052-2265585**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகச் செம்மல்களே!......

திருமதி. தேவகி ஞானசேகரம் (ஆசிரியை)
ம.மா/வ/இராகலை கிருஸ்ணன் ஜுனியர் த.வி

அதிகாலைச் சூரியனாய்
அந்தி நேரச் சந்திரனாய்
ஆங்காங்கே விண்மீன்களாய்
அகல் விளக்குகளாய்
"அ" என்ற அட்சரத்தை – அழகாய்
தேன் தொட்டு நாவில் எழுதி
அனைத்து மொழி அட்சரங்களையும்
அறியச் செய்து – எம்
அறிவுத் தேடலுக்கு
அச்சாணியாய் அமைந்த – எம்
அற்புதத்தீபங்களாய்
அன்பால் அரவணைத்து
பாசத்தால் பரிணமித்து
கருணையால் கைகோர்த்து
இரக்கத்தில் இரண்டரக்கலந்து
ஏராளமானோரை - கல்வியில்
தாராளமாய் ஏற்றிக்கொண்டிருக்கும்
ஏணிகளாய்
ஏற்றத்தாழ்வின்றி
மாற்றுத்திறனாளிகளைக் கூட
மாறிக்கொண்டிருக்கும் உலகிற்கு
மாணிக்கமாய் உதயமாக.....
உதவிக் கொண்டிருக்கும்
உலகம் போற்றும் உத்தமர்களாய்
உரிமையோடு உறவாடுகின்றீர்கள் - எங்கள்
உள்ளத்தை உருமாற்றிகிறீர்கள்
உதயங்களுக்கு உயிர்கொடுக்கும்
உங்களுக்கு உணர்வுகளால்
ஒரு விழாவாக
உங்களை வாழ்த்துகின்றோம்
ஏனெனில் - எங்களுக்கு
வாழக்கற்றுத்தந்துள்ளீர்கள்.

உங்களுக்காக பிரார்த்திக்கின்றோம்
ஏனெனில் - எங்களுக்கு நீங்கள்
முன்னால் ஒருதிசையாகவும்
பின்னால் ஒரு விசையாகவும்
பிரயத்தனப்படுகிறீர்கள்.
சிந்தித்துப் பார்க்கையில்
சிலிர்த்து விடுகின்றோம் - எங்களின்
சின்னத்தனங்களை சிரித்தப்படி
சகித்துக் கொள்கிறீர்கள் - நாம்
தடம் மாறும் போதெல்லாம்
திடம் கொள்ள வைக்கிறீர்கள்
இலட்சிய வாழ்க்கைக்கு
வழிகாட்டும் தீபங்களே!-எம்
தியாகச் செம்மல்களே!
எத்திக்கும் உங்கள் புகழ்
தித்திப்பாய் கலந்திட
கவிபாடுகிறோம்.....
களங்கரை விளக்குகளே!
கற்பக விருட்சங்களே
வாழ்நாள் எல்லாம் போதாது-உங்கள்
நல்வழிகாட்டல்களை மீட்டுவதற்கு
வள்ளல் தியாகச் செம்மல்களின்
புகழ் பாராட்டி.....
இத்தரை மீது எம் கண்களைத் திறந்து
அறிவு ஆற்றல்களை ஊக்குவித்த
உறவுப் பூக்களே
அக்டோபர் ஆறு மட்டுமல்ல
அணு நொடியும் ஆசிரியர் தினம் தான்
வாழ்க.....வாழ்க........
எம் தியாகச் செம்மல்களே!

••••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி வேலைத்திட்டம். (SBTD)

J.சிவராம் BA
அதிபர்
மமா/வ/பிளேயலோமண்ட் த.வி
உடப்புஸ்ஸல்லாவ.

கல்வி அமைச்சின் சுற்றுநிருப இல10/2013, 2013.02.19இற்கு அமைவாக ஆசிரிய மேம்பாட்டு தேவையினை அடையும் ஒரு முயற்சியாக கல்வி அமைச்சின் துறைசார் விருத்திச் சட்டகச் செயற்திட்டத்தின் கீழ் இயங்கும் TESP வேலைத்திட்டத்தினால் பாடசாலை மட்ட ஆசிரிய விருத்தி வேலைத்திடடம் புதிய வடிவம் பெற்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி வேலைத்திட்டம் என்றால் என்ன?**

மாணவர்களின் அடைவுமட்ட உயர்வு மற்றும் ஆளுமை விருத்திக்கு வழிகாட்டக்கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக ஆசிரிய அபிவிருத்தித் தேவைகளை இனங்காணல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் எனும் செயற்பாடுகளை உள்ளடக்கியதான தொடர்ச்சியானதும் ஒருங்கிணைந்ததுமான ஆசிரியர் விருத்திச் செயற்பாடுகளை பாடசாலைகளில் செயற்படுத்தலானது பாடசாலைமட்ட ஆசிரிய அபிவிருத்தி வேலைத்திட்டம் எனப்படும்.

**நோக்கம்.**

- ஒவ்வொரு பாடசாலையும் அத்தியாவசியமானதும் பொருத்தமானதுமான ஆசிரிய விருத்தி வேலைத்திட்டத்தை தாமாகவே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் ஆற்றல் உள்ளதாக வலுவூட்டுதல்.
- மாணவர்களின் அடைவுமட்ட மேம்பாட்டுக்கான தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- ஆசிரியர்களிடையே சிறந்த நடைமுறைகள் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், மற்றும் பிரதிபலித்துக் கற்கும் தேர்ச்சியை மேம்படுத்தல்.
- தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டங்கள் மூலமாகப் பாடசாலை முறைமையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தல்.

**பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்திவேலைத்திட்டத்தின் தேவைப்பாடு**

- பிறரால் திட்டமிடப்பட்ட பாரம்பரியமான ஆசிரியர்கல்விச் செயற்பாடுகளைவிட பாடசாலைகளால் இனங்காணப்பட்ட தமது தேவைக்குப் பொருத்தமான வேலைத்திட்டங்களை பாடசா லைகளாலேயே நடைமுறைப்படுத்துவதன் மூலம் உயர் அடைவுகள் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தமது வேலைத்திட்டம் என்ற உணர்வானது ஆசிரியர்களின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பு கிடைக்க வாய்ப்பாக அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர்கள் தமக்கிடையே வாண்மை விருத்தி தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் செய்யவும் இடைத்தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் உதவும்.
- பாடசாலைகள் சுயவிருத்திக்கான ஆற்றலைப் பெற பயிற்சியும் சந்தர்ப்பமும் கிடைக்கும்.
- மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் உயர்வான பெறுபேறுகள் அடையமுடியுமென எதிர் பார்க்கப்படுவதனால் வளர்ச்சியடைந்து வரும் பெரும்பாலான நாடுகள் இம்முறையை நடைமுறைப் படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றன. எமது நாட்டிலும் இந்த அனுகுமுறை மிகவும் பொருத்தமானதாக அமையும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஆசிரியக் கல்விக்கான (Teacher Education) வாய்ப்புகளும் சமகாலத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளும்.

தேவராஜ் பன்னீர்செல்வம் (B.A, PGDE. M.Ed)

கல்வியானது தனியாள் விருத்திக்கும், சமூக விருத்திக்கும் அடிப்படைக் காரணியாக அமைவதால், அது தொடர்பாக தேசிய, சர்வதேச அடிப்படையில் பல நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இங்கு குவிந்த நோக்கில் தனியாள் ஒவ்வொருவரும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கும், கற்றவை வாழ்க்கையினதும், சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைய வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இச்செயன்முறைக்கு முழுமை வடிவம் கொடுக்கும் முக்கிய பங்காளர்களாக ஆசிரியர்கள் கருதப்படுகின்றனர். இத்தகைய வகிபங்கினை வகிக்கும் ஆசிரியர்கள் தன்னை இற்றைப்படுத்திக் கொள்ளவும், வாண்மை தொடர்பான உயர்நிலைத் தேர்ச்சிகளை பெற்றுக்கொள்வதற்கும் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் கல்வி வழங்கப்பட வேண்டும்.

ஒரு நாட்டின் கல்விக் கொள்கைகளையும், இலக்குகளையும் குறிக்கோள்களையும் மாணவரிடம் கொண்டு சேர்த்து அதற்கு செயல் வடிவம் கொடுக்கும் முக்கிய வகிபங்கினை ஆசிரியர்கள் ஆற்றுகின்றனர். இத்தகைய ஆசிரியர்களுக்கு இலங்கையின் பொதுக் கல்வித்துறையில் வழங்கப்பட்டுள்ள வாய்ப்புகளை முதலில் நோக்குவோம்.

**ஆசிரியர் கல்வி என்பது கற்பித்தல் திறன்கள், பாடவிதானத் திறன்கள், வாண்மைத்துவத் திறன்கள் என்பவற்றை உள்ளடக்கிய கல்வியாகும்.** இலங்கையில் ஆசிரியக் கல்வி வழங்கும் நிறுவனங்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

- பல்கலைக்கழகங்கள்.
- ஆசிரியப் பயிற்சி கலாசாலைகள்.
- தேசிய கல்வியியற் கல்லூரிகள்.
- தேசிய கல்வி நிறுவகம்.
- ஏனைய நிறுவனங்கள்.

இலங்கையின் பொதுக்கல்வித் துறையில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கல்வி வாய்ப்புகளும் பயிற்சி நெறிகளும்.

**கொழும்புப் பல்கலைக்கழகம் (கல்விப்பீடம்).**

வழங்கும் பயிற்சிகள் / பட்டங்கள்.

- B.Ed (Spcial)

பட்டப்பின் பயிற்சிகள் / பட்டங்கள்

- கலாநிதிப் பட்டம் - ஆய்வுக்கட்டுரை (Ph.D)
- கல்வி முதுதத்துவமாணி – ஆய்வுக் கட்டுரை (M.Phill)
- கல்வி முதுமாணி (M.Ed)
- கல்வி முகாமைத்துவ முதுமாணி (M.Ed.Edu.Mgt)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வி வழிகாட்டல் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PGDE . Education Counseling).
- சமூக அபிவிருத்திக்கான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PGDE – Community Development).
- Teaching of English as a second Language

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

- கல்வி முதுமாணி (M.Ed)
- பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE Full time)

**ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.**

- பட்டப்பின் கல்வி கற்கை நெறி
- M.Sc in Physics Education

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (கல்விப் பீடம் - Department of Education)**

- பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE - Full time)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (உயர் பட்டப்படிப்புகள் பீடம் - Faculty of Graduate Studies)

- கலாநிதிப் பட்டம் (Ph.D)
- கல்வி முதுதத்துவமாணி (M.Phill)
- கல்வி முதுமாணி (M.Ed) – Inculuding vavuniya Campus
- பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE – Vavuniya Campus)

**இலங்கைத் திறந்தப் பல்கலைக்கழகம். (கல்விப் பீடம்)**

- கலாநிதிப் பட்டம் - ஆய்வுக்கட்டுரை (Ph.D)
- கல்வி முதுதத்துவமாணி – ஆய்வுக் கட்டுரை (M.Phill)
- கல்வி முதுமாணி (M.Ed)
- M.A (Teacher Education M.A.T.E)
- பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE )
- பட்டப்பின் விசேட கல்வி டிப்ளோமா (PGDSNE )

**கிழக்குப் பல்கலைக்கழகம். (Faculty of Arts & Culture)**

- கல்வி முதுமாணி (M.Ed)
- இளங் கலைமாணி (B.A – Special in Education)

**தேசிய கல்வி நிறுவகம் (national Institute of Education N.I.E)**

➢ இலங்கையின் பொதுக் கல்வித் துறையில் ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பான அரச நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பின்வரும் ஆசிரியர் பயிற்சி நெறிகளை வழங்குகின்றது.
  - கல்வித் தத்துவமாணி (M.Phill)
  - கல்வி முதுமாணி (M.Ed)
  - முதுமாணி (M.A – Education)
  - முதுமாணி (M.A – Education Management)
  - பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE )
  - பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (PGDEM)
  - PGD In School Counseling
  - B.Ed
  - Dip.in.Teach.English as a Second language.
  - Dip.in School Management (DSM)
  - DSM – For Overseas Students
  - Diploma in. special Education.
  - Dip. in. singala language
  - Additional Language Improvement Course (ALIC)
  - Short term thematic work shop in Education Management

**தேசிய கல்வியியற் கல்லூரிகள். (National College of Education – N.C.O.E)**

- தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆசிரியர் தொடக்கக்கல்வி, சேவை முன் பயிற்சிகள் என்பவற்றை வழங்குகின்றன.
- 2வருட உள்ளகப் பயிற்சியும், 1 வருட கட்டுருவாக்கப் பயிற்சியும் வழங்கப்பட்டு இறுதியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் (National Diploma in Teaching) வழங்கப்படுகின்றது.
- இவர்கள் S.L.T.S 3 - I(c) வகுப்பில் ஆசிரியர்களாக ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்படுகின்றனர்.
- இலங்கையில் தற்போது 20 தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆசிரிய முன்சேவைப் பயிற்சியினை வழங்குகின்றன.

**ஆசிரிய கலாசாலைகள் (Teacher Training College- T.T.C)**

- ஆசிரிய சேவையில் உள்ள, ஆசிரியப் பயிற்சிப் பெற்றிராத ஆசிரியர்களுக்கு பயிற்சியை வழங்குகின்றது.
- 2 வருட கால பயிற்சி வழங்கப்படுகின்றது.

**ஏனைய நிறுவனங்கள்.**

- மேற்கூறப்பட்ட நிறுவனங்களைத் தவிர பின்வரும் நிறுவனங்களும் ஆசிரியர்களுக்கான கல்வி வாய்ப்புகளை வழங்குகின்றன.
  1. தனியார் பல்கலைக்கழகங்கள்
  2. வெளிநாட்டு புலமைப் பரிசில் செயற்றிட்டங்கள்.
  3. அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள்.
  4. தனியார் வர்த்தக நிறுவனங்கள்.
  5. கல்வியுடன் தொடர்புடைய ஏனைய அரச திணைக்களங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆசிரிய முன்சேவைப் பயிற்சி, சேவைக்காலப் பயிற்சி, பாட விதான மாற்ற விசேட செயற்றிட்டங்கள், ICT வலுவூட்டல் செயற்றிட்டங்கள், முகாமைத்துவ வலுவூட்டல் செயற்றிட்டங்கள் என்பன காலத்திற்கு காலம் மத்திய கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவனங்களால் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கையின் பொதுக் கல்வித்துறையில் ஆசிரியர்களுக்கு இவ்வாறான வாய்ப்புகள் வழங்கப்பட்டாலும் சமகாலத்தில் பல்வேறு பிரச்சினைகளை ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்றனர்.

பொதுக் கல்வித்துறையில் ஆசிரியர்களுக்கான கல்வி வாய்ப்புகளை வழங்கும் நிறுவனங்களில் வழங்கப்படும் கல்வியும் பயிற்சியும் தொடர்பாக பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இங்கு வழங்கப்படும் பயிற்சிக்கும், காலத்தின் தேவைக்குமிடையே பாரிய இடைவெளி காணப்படுவதை அவதானிக்கலாம். இதனால் ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்திக் கொள்வதில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

காலத்துக்கு காலம் சேவைக்கால அடிப்படையில் தொழில் சார் திறன் தொடர்பான நிகழ்ச்சி நிரல் உருவாக்கப்பட்ட போதும் அவை ஆசிரியர்களின் தொழில்சார் திறன்களை எந்தளவுக்கு உயர்த்தியுள்ளது என்பது சிந்திக்க வேண்டியுள்ளது. பொதுவாக சேவைக்கால பயிற்சிகள், கலைத்திட்ட மறுசீரமைப்புத் தொடர்பான மாற்றங்களை விளக்குகின்ற அமர்வுகளாகவே அமைந்து விடுகின்றனவே தவிர தொழில்வாண்மை தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கத் தவறிவிடுகின்றன.

சேவைக்கால பயிற்சிகள் எனும் போது அதில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதையும் அவதானிக்கலாம். பெரும்பாலான சேவைக்கால பயிற்சிகள் பாடசாலை இடம்பெறும் நாட்களிலேயே அதாவது கிழமை நாட்களிலேயே ஒழுங்கமைக்கப்படுகின்றன. இதில் ஆசிரியர்கள் பங்குகொள்ளும் போது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் பாடசாலை மற்றும் சமூக மட்டங்களில் இருந்து ஆசிரியர்கள் அழுத்தங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அத்துடன் வார இறுதி நாட்களில் ஒழுங்கு செய்யப்படும் சேவைக்காலப் பயிற்சிகளில் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு இன்றி தோல்வியில் முடிவடைகின்றது. மேலும் பயிற்சி நெறிகளின் உள்ளடக்கம், பயிற்சி நெறியை வழங்குவோரிடம் காணப்படும் குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் என்பனவும் ஆசிரியர்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுகின்றன.

இலங்கையில் பொதுக் கல்வித் துறையில் ஆசிரியர் எதிர்நோக்கும் மற்றொரு பிரச்சினையாக வாய்ப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளமையை குறிப்பிடலாம். ஆசிரியர் கல்வி வழங்கும் நிறுவனங்களும் வழங்கும் பயிற்சி நெறிகளும், ஊடக மொழியும் சமவாய்ப்புகளை வழங்கத் தவறியுள்ளன. உதாரணமாக தமிழர்கள் செறிந்து வாழும் மத்திய மாகாணத்தில் பேராதனைப் பல்கலைக்கழகம் மட்டுமே காணப்படுகின்றது. ஆனால் இங்கு வழங்கப்படும் கல்வி முதுமாணி (M.Ed), பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) போன்ற கற்கை நெறிகள் தமிழ் மொழியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படுவதில்லை. எனவே இப்பயிற்சி நெறியிலிருந்து தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள்.

பயிற்சிகளின் தரத்தில் காணப்படும் குறைபாடும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக குறிப்பிடலாம். உதாரணமாக கலை, வர்த்தகத் துறை ஆசிரியர்களுக்கு விஞ்ஞானப் பயிற்சிகளை வழங்குதல், குறிப்பிட்ட ஒரு சில ஆசிரியர்களையே எல்லாப் பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகளில் பங்கு கொள்ளச் செய்தல், பயிற்சி நெறிகள் மரபு வழியான முறைகளில் வழங்கப்படுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் தொழில்சார் பயிற்சியானது தொழில் தொடர்பான சிந்தனைகளை ஆசிரியர் மத்தியில் விருத்தியுறுவதற்கான பங்களிப்பைச் செய்ய வேண்டும். இவ்வகைச் சிந்தனைகள் நீண்டகாலம் தொழிலில் நிலைத்து நிற்கும் ஆசிரியர்களின் தொழில்சார் திறன்களை காலத்துக் காலம் விருத்தி செய்யும் வகையில் வலியுறுத்தப்படல் வேண்டும். ஆசிரியர்களின் தொழில்சார் விருத்தியானது வகுப்பறை சார்ந்ததாக அமைதல் அவசியம். வகுப்பறையே ஆசிரியர்களின் வேலைக்களமாகும். இங்குள்ள மாணவர்களின் ஆக்கத்திறன்களை விருத்தி செய்யும் பாரிய பொறுப்பு இவர்களிடம் உண்டு. வெறுமனே கோட்பாடுகளை கற்பதோ, மாதிரிகளை தெரிவதோ பயனுறுதி வாய்ந்த செயற்பாட்டுக்கு உதவுவதில்லை. துரதிஸ்டவசமாக ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளை வழங்கும் நிறுவனங்கள் இவ்விடயங்களில் கூடுதல் அக்கறை கொள்வதில்லை.

ஆசிரியர்களுக்கான கல்வி வழங்கும் நிறுவனங்களும் பயிற்சி நெறிகளும் பரவலாக காணப்பட்டாலும், அதனை பெறுவதற்கு அதிகளவான நிதியினை முதலீடு செய்ய வேண்டியிருப்பதும் மற்றொரு பிரச்சினையாக சுட்டிக்காட்டலாம். ஆசிரியர்களுக்கான உயர் கல்வி வாய்ப்புகள் சுய நிதியில் பெறவேண்டிய கற்கை நெறிகளாக காணப்படுவதால், நிதிசார் பிரச்சினைகள் அக்கற்கை நெறிகளிலிருந்து ஆசிரியர்களை விலக்கி வைக்கின்றது.

அரசியல் மற்றும் அதிகார ரீதியிலான சில செயற்பாடுகள் ஆசிரியர்களுக்கான வாய்ப்புகளை தடுப்பதுடன் சில பிரச்சினைகள் தோன்றுவதற்கும் காரணமாகிவிடுகின்றது. உதாரணமாக இடமாற்றம், பதவியுயர்வு, வெளிநாட்டுப் பயிற்சிகள், நியமனம், புலமைப்பரிசில்கள் போன்ற செயற்பாடுகளின் போது தகைமைகள் மற்றும் அனுபவங்கள் புறக்கணிக்கப்பட்டு அரசியல் ரீதியிலான சலுகைகள் வழங்கப்படுவது நடைமுறையில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாகும்.

முடிவாக நோக்குமிடத்து இலங்கையின் பொதுக்கல்வித் துறையில் ஆசிரியர்களுக்கான கல்வி வாய்ப்புகளை பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள், தேசிய கல்வி நிறுவகம், மத்திய மற்றும் மாகாண கல்வி அமைச்சுகள் போன்றவற்றினூடாக ஆசிரியக் கல்வியும் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இருப்பினும் அவற்றைக் பெற்றுக்கொள்ளும் போது ஆசிரியர்கள் சில பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

●●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தியும் தேவைப்பாடும்

வீ.யோகேஸ்வரன் National Dip in Teaching, BEd. TMC (NIE)
மமா/வ/கிருஸ்ணன் ஜீனியர் த.வி

பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் அபிவிருத்தி பாடசாலைக்கு வெளியிலுள்ள நிறுவனங்கள் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் நடைமுறைக்கு சாத்தியமானதாக இல்லை. எனவே பாடசாலை மட்டத்திலேயே ஆசிரியர் அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்று இருத்தல் வேண்டும் என்ற கருத்து தற்போது வலுவடைந்துள்ளது. எனவே ஆசிரியர்களது உற்பத்தி திறன் உயர் மட்டத்தில் இருப்பதோடு அவர்களது அறிவு, திறன் என்பன தற்காலப்படுத்தப்படவும் மனப்பாங்கு சரி செய்யப்படவும் வேண்டியுள்ளது. பாடசாலைகளுக்கான நிதியினை ஒதுக்கீடு செய்து குறிப்பிட்ட பாடசாலைகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களிடம் விருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்களை இனங்கண்டு அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டிய கடமையை பாடசாலைகள் கொண்டுள்ளன.

ஆசிரியர் அபிவிருத்திக்காக அமுலிலுள்ள ஏற்பாடுகள்

01. சேவை முன் பயிற்சி
02. சேவைக் காலப் பயிற்சி
    தொடருரு கல்வி

பாடசாலை மட்ட ஆசிரியர்களது அபிவிருத்திக்கான வேலைத்திட்டத்தின் நோக்கங்கள்

01. தனிப்பட்ட ஆசிரியர்கள் தமது தொழில்களை பணிகளை திட்டமிட்டுக் கொள்ளவும் தொழிலின் தன்மையை இனங்காணவும், கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ளவும் ஊக்குவித்தல்.
02. பாடசாலை கல்வியின் தத்துவார்த்த பின்னணியையும் கல்வியின் இலக்குகளையும் மற்றும் நோக்கங்களைப் பற்றிய அறிவையும் அவற்றை அடைவதில் ஆசிரியர் பங்களிப்பு செய்வதற்கான தேர்ச்சிகளையும் வழங்குதல்.
03. மாணவர்கள் தமது கல்வித் தேவையை அடையச் செய்வதில் பூரணமான தேர்ச்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்குதல்
04. தற்காலத்தில் கல்வித்துறையில் அறிமுகப்படுத்தப்படும் புதிய கொள்கைகள், தகவல்கள் என்பவற்றை அறிந்து அதற்கமைய தமது பணியினை செம்மைப்படுத்திக் கொள்ளல்.

பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் அபிவிருத்தி திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யும் படிமுறை

01. ஆசிரியர்களிடம் அபிவிருத்தி செய்ய வேண்டிய துறைகளை இனங்காணல்.
02. இனங்கண்ட துறைகளை கொண்டு முன்னுரிமை பட்டியலை தயாரித்தல்.
03. முதலில் விருத்தி செய்ய வேண்டிய விடயத்திற்கு செயற்திட்டம் ஒன்றை தயாரித்தல்.
04. பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
05. அமுலாக்கல், கண்காணிப்பு செய்யதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. மதிப்பிடல்.
07. பின்னூட்டல்.

ஆசிரியர் அபிவிருத்திக்கான துறைகளை இனங்காணும் முறைகள்

01. மேற்பார்வை.
02. எழுமாறான ஆய்வு.
03. ஆசிரியர் மதிப்பீட்டு பத்திரம்.
04. சகபாடிகளின் மதிப்பீடுகள்.
05. நிபுணத்துவ சேவைகளை பெறல்.
06. காலத்திற்குக் காலம் ஆசிரியர் அறிய வேண்டியவற்றை கையேடுகள் மூலம் கற்கச் செய்தல்.

பாடசாலை மட்ட ஆசிரியர்கள் அபிவிருத்தி செயற்திட்ட விடய தெரிவு

01. அறிவு
    - எண்ணக்கருவாக்கம்.
    - கோட்பாட்டறிவு.
    - தகவலறிவு.
    - பிரயோக அறிவு.
02. திறன்கள்
    - எண்ணக்கரு ரீதியிலான திறன்கள்.
    - தொழிநுட்ப திறன்கள்.
    - தொடர்பாடல் திறன்கள்.
    - மனித உறவு திறன்கள்.
03. மனப்பாங்கு மாற்றம்
    - இது தொழிலில் அக்கறையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும்
04. பொருத்தமான தந்திரோபாயங்கள்
    - வளர்ந்தோர், கற்றோர் மாணவர்களை கையாளும் தந்திரோபாயங்கள்.

எனவே பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியானது இன்றைய காலக்கட்டத்தில் அனைத்து பாடசாலைகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் திறனை விருத்தி செய்து கொள்வதன் ஊடாக இன்றைய நவீன உலகின் நவீனங்களை உள்வாங்கி அதனூடாக தமது பணியினை சிறப்பாக செய்வதினூடாக எமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் தேவையான அல்லது பொருத்தமான மானிட சமூகத்தை உருவாக்க உதவும் ஓர் செயற்பாட்டு ரீதியிலான நிகழ்ச்சி திட்டமாகும்.

உசாத்துணை
பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி
A.J.M.Furkham (விரிவுரை)

••••


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# F.W. டேலரின் முகாமைத்துவச் சிந்தனைகளும் பாடசாலைத் தலைவருக்கு அதன் பயன்பாடுகளும்.

**திருமதி. ராஜேஸ்வரி ஏகாந்தராஜன்,**
**(National Dip. in Teaching (Social science), BA, PGDE, MA in Geo, MEd)**
**ம.மா/ வ/ சென் லெனாட்ஸ் த.ம.வி,**
**ஹல்கரனோயா.**

எந்தவொரு ஒழுங்கமைப்பினதும் வெற்றியின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரதான காரணி முகாமைத்துவம் ஆகும். உண்மையில் முகாமைத்துவம் என்பது பல்வேறு பரிமாணங்களில் விளக்கப்படக்கூடியதாகும். பொதுவாக ஒழுங்கமைந்த நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிக்கோள்களை வினைத்திறனுடனும்இ விளைதிறனுடனும் அடைவதற்கு ஏற்றதாக தமது நிறுவன ஒழுங்கமைப்பையும் வளங்களையும் திட்டமிட்டு, வழிப்படுத்தி, ஒழுங்கமைத்து மேற்பார்வை செய்து ஒழுங்கமைத்துக்கொள்ளும் உபாயங்களும் நுட்பங்களுமே முகாமைத்துவம் என்று கூறப்படுகின்றது.

முகாமைத்துவம் என்ற எண்ணக்கருவிற்கு பல்வேறு அறிஞர்களும் வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அவர்களுள் விஞ்ஞான முகாமைத்துவத்தின் தந்தையான **F.W. டேலர்** "முகாமைத்துவம் என்பது எதனைச் செய்ய வேண்டும்? அதனை எவ்வாறு சாத்தியமான முறையில் செய்யவேண்டும் என்பதை அறியும் ஒரு கலை" என்றார். இவர் இங்கு திட்டமிடல், காட்சிப்படுத்தல் என்னும் இரு எண்ணக்கருக்கள் தொடர்பாக விளக்கியுள்ளார். அவ்வாறே நவீன முகாமைத்துவத்தின் தந்தையான **ஹென்றி பயோல்** "ஒரு பொதுவான இலக்குகளை நோக்கியதான செயற்பாடுகளை நெறிப்படுத்துகின்ற ஒரு குழுவின் செயன்முறையே முகாமைத்துவம்" என்றும் "முகாமை செய்வது என்பது எதிர்வு கூறல், திட்டமிடல், ஒழுங்கமைத்தல், இணைத்தல், கட்டுப்படுத்தல்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**M.C. Farland** என்பவர் "எல்லா வளங்களினதும் இணைப்பாக்கமே முகாமைத்துவம்" என்றார். அதாவது குறித்த இலக்குகளை அடைவதற்கு திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் செயன்முறைகளின் ஊடாக சகல வளங்களையும் இணைப்பாக்கம் செய்தல் என்றார். **ஜோசப் மர்சி** என்பவர் "ஒரு நிறுவனத்தில் திட்டமிட்ட ஒருங்கிணைந்த கூட்டுறவுடனான மனித முயற்சிகள் மூலம் அந்நிறுவனத்தை உருவாக்கவும், பராமரிக்கவும் உதவும் உறுதியான நோக்கத்துடன் கூடிய அமைப்பு ரீதியான செயன்முறை முகாமைத்துவம்" என்றார்.

மேற்கூறப்பட்ட வரைவிலக்கணங்களின் அடிப்படையில் நோக்கும்போது "செய்வதற்கு பொருத்தமானவற்றைச் செய்தல் முகாமைத்துவம்" எனலாம். இதனை மேலும் தெளிவுபடுத்தினால் "சரியான நோக்கங்களை தீர்மானித்துக்கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை உயர்ந்த மட்டத்தில் நிறைவேற்றிக்கொள்வதற்கு வரையறைக்குட்பட்ட வளங்களை சரியாக பயன்படுத்துதலே முகாமைத்துவம்" எனலாம்.

முகாமைத்துவ சிந்தனையிலும் செயற்பாட்டிலும் மிக அதிகளவில் செல்வாக்கு செலுத்தியவர் **F.W. Taylar** ஆவார். கி.பி. 1856- 1915 வரையான காலப்பகுதியில் வாழ்ந்த அமெரிக்க நாட்டவரான இவர் பழைய ஒழுங்கமைப்புக் கொள்கைவாதியாவார்.

விஞ்ஞான முகாமைத்துவத்தை அறிமுகம் செய்த இவர் தான் வாழ்ந்த காலத்தில் தமது செயலாற்றத்தில் முன்னேற்றம் காண விரும்பிய கைத்தொழில் துறை முகாமையாளர்களுக்கு பயன்படும் வகையில் தமது சிந்தனைகளை வெளியிட்டார். இவரது கருத்துக்கள் தொழிற்சாலைகள், தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் அமைந்திருந்தன. மனிதன் செய்யும் வேலை இவரது காலம் வரை முறையாக பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படவில்லை. ஆனால் டேலரும் அவரை பின்பற்றியவர்களும் வேலையை செய்வதற்கு மிகச்சிறந்த வழி யாது? என்பதை கண்டறிவதே தமது குறிக்கோள் என்று தமது வினைத்திறனை தேடும் முயற்சியை முன்னெடுத்தனர். விஞ்ஞான பாங்கான முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துவதனால் தொழிலாளர்களும் பரந்த சமூகமும் நன்மையடைய முடியும் எனக் குறிப்பிட்டனர்.

**F.W. Taylar** சிறப்புத்தேர்ச்சி மற்றும் வேலைப்பகிர்வு முறையினைப் பரிந்துரைத்தார். நிறுவனத்தில் வேலை செய்கின்ற ஒவ்வொரு தொழிலாளரும் பல கடமைகளில் ஈடுபடுவதனை விடுத்து ஒரு குறிப்பிட்ட துறையில் விசேடத்துவம் கொண்டிருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டினார். அதற்காகவே வேலைப்பிரிப்பையும் குறிப்பிட்ட துறையில் சிறப்புத்தேர்ச்சியையும் வலியுறுத்தினார். (கனகசிங்கம்,வ. 2012,பக்.11) 19 ஆம் நூற்றாண்டு முடிவடைந்த காலத்தில் " நிர்வாகம் என்பது ஒரு நிறுவனத்தின் பொருள் உற்பத்தியை உச்சப்படுத்தும் விஞ்ஞான பாங்கான தத்துவங்களைப் பயன்படுத்தும் ஒரு செயற்பாடாகும்" என்றும்இ "மனித வளங்களையும் பொருள் வளங்களையும் நிறுவனத்தின் நன்மைக்காக திறமையுடன் பயன்படுத்தும் நோக்குடன் நிர்வாக நடைமுறைகள் பகுத்தறிவுடன் ஆராயப்படல் வேண்டும்" என அவர் கூறினார். "ஊழியர்கள் எவ்வாறு தமது வேலைகளை செய்ய வேண்டும்? அவ்வேலைகள் திறமையுடன் மலிவாகவும் எவ்வாறு செய்யப்படல் வேண்டும்? என்பதனை தீர்மானிப்பதிலேயே முகாமைத்துவத்தின் சிறப்பு தங்கியுள்ளது" என்பது இவரது சிந்தனையாகும் (சந்திரசேகரம்,சோ, கருணாநிதி,மா,2008).

**F.W. Taylar** முன்வைத்த முகாமைத்துவ முறைமையின் அடிப்படையான தத்துவங்களை பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

1. **நேர ஆய்வுத்தத்துவம்:** சகல உற்பத்தி முயற்சிகளும் சரியான நேர ஆய்வின் மூலமாக அளக்கப்படல் வேண்டும். சகல பணிகளுக்குமான நியாயமான நேரம் இதுதான் என உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
2. **Piece rate principle:** உற்பத்தி வெளியீட்டுக்கு ஏற்றவாறு சம்பளங்கள் அமைதல் வேண்டும். நேர ஆய்வின்படி தீர்மானிக்கப்பட்ட நியமங்களின்படி சம்பளங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமைதல் வேண்டும். ஒரு தொழிலாளிக்கு வழங்கப்படும் வேலை அவனுடைய ஆற்றலுக்கேற்ப உயர்ந்ததாக அமைதல் வேண்டும்.

**3. செயலாற்றம், திட்டமிடல் என்னும் இரண்டும் வெவ்வேறாக அமைதல் வேண்டும்.** வேலைகளை திட்டமிடும் பொறுப்பை முகாமையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும். திட்டமிடல் நேர ஆய்வு, உற்பத்தி என்பவற்றின் அடிப்படையில் அமைதல் வேண்டும். இவை விஞ்ஞான ரீதியாக தொகுக்கப்பட்டு, கருவி மற்றும் வேலை முறைகளும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. **விஞ்ஞான முறையான வேலை முறைகள் பற்றிய தத்துவம்**: விஞ்ஞான ரீதியாக சிறப்புடைய வேலைகளை தீர்மானித்து, அவை செய்யப்படுவதற்கான முறைகள் பற்றியும் முகாமையாளர் தீர்மானிக்க வேண்டும். அத்துடன் அந்தந்த முறைகளில் தொழிலாளர்களுக்கு தேவையான பயிற்சியையும் வழங்க வேண்டும்.

5. **முகாமைத்துவ கட்டுப்பாட்டுத் தத்துவம்:** முகாமையாளர்கள் மேற்குறித்த தத்துவத்தினை பயன்படுத்த பயிற்சி வழங்கப்படல் வேண்டும்.

6. இராணுவத்தத்துவங்களை பயன்படுத்தல் தொடர்பாக மறுபரிசீலனை செய்யப்படல் வேண்டும். அதாவது நிறுவனத்தில் பணிபுரிவோரின் செயற்பாடுகளில் இயைபாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நிறுவனம் வடிவமைக்கப்படல் வேண்டும் (சந்திரசேகரம்,சோ, கருணாநிதி,மா,2008).

இவ்வாறான தமது முகாமைத்துவம் தத்துவங்கள் முகாமையாளர்களுக்கு தங்களது செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு வாய்ப்பாக அமையும் என டேலர் கருதினார்.

வுயடையச வேலையிலும் இயற்கை விதிகள் உள்ளன எனக் கருதினார். ஒரு வேலையை விஞ்ஞான ரீதியாக பகுப்பாய்வு செய்வதன் மூலம் அதனை மேற்கொள்வதற்கான சிறந்த வழியை கண்டறிய முடியும். அவ்வாறே வேலைச்சூழலில் இடம்பெறும் பிற காரணிகளும் தரப்படுத்தப்படல் வேண்டும் என்ற மற்றொரு பிரதான கருத்தையும் முன்வைத்தார். குறித்த நிறுவனத்தின் ஊழியர் தொடர்பாக மட்டுமன்றி பிற நிறுவனங்களின் பிரச்சினைகள், பிற நிறுவனங்களுக்கிடையேயான தொடர்புகள், விருத்தி நிலைமைகள் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும் என்றார். அத்துடன் நிறுவனத்தின் உற்பத்தி மட்டங்களை உயர்த்துவதற்கு ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக்களின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

மேற்குறிப்பிட்டவாறு விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் தொடர்பான கருத்துக்களை முன்வைத்துள்ள **பெட்ரிக் வின்ஸ்டர் டேலர்** நிறுவனத்தின் பல்வேறு செயற்பாடுகளையும் சிறப்பாக முன்னெடுப்பதற்கான வழிகளையும் எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் முன்வைத்த பல்வேறு கருத்துக்கள் பாடசாலைத் தலைவர் என்ற வகையில் அதிபருக்கு உதவக்கூடியதாக அமைந்துள்ளது. அவற்றினை பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

விஞ்ஞான பாங்கான முகாமைத்துவத்தின் தந்தையான டேலர் வினைத்திறனான முகாமைத்துவம் பற்றி குறிப்பிட்டுள்ளார். வினைத்திறனான முகாமைத்துவம் எனப்படுவது இருக்கின்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி நன்மை அடைதல் ஆகும். பாடசாலையில் உள்ள பௌதிக, மனித வளங்களை சிறப்பாக முகாமை செய்வதன் மூலம் பாடசாலை அடைய எதிர்பார்க்கின்ற இலக்கினை எட்ட முடியும். இலக்குகளை நோக்கியதாக தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இச்சிந்தனை பாடசாலைத்தலைவருக்கு உதவுவதாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**F.W.** டேலர் சிறப்புத்தேர்ச்சி மற்றும் வேலைப்பகிர்வு முறையினை முன்வைத்தார். எந்தவொரு நிறுவனத்தினதும் வெற்றி அங்கு பணியாற்றுகின்ற ஆளணியினரைப் பொறுத்தே அமையும். பாடசாலை ஒரு கட்டமைக்கப்பட்ட நிறுவனம். அதிபர் தலைவராக இருந்தாலும் அவரால் தனித்து அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாது. எனவே இலகுவாக தமது செயல்களுக்காக, வேலைகளை உயர்மட்டத்திலிருந்து தாழ் மட்டத்தை நோக்கியதாக பகிர்ந்தளித்தல் வேண்டும். வேலைகள் பகிரப்படும் போது ஆசிரியர்களின் தரம், ஆற்றல், பாட நிபுணத்துவம் என்பவற்றையும் கருத்திற்கொள்ளவேண்டும். இதன் போது குறித்த துறையில் சிறப்பு பெற்ற நபர்களுக்கு உரிய வாய்ப்பு வழங்கப்படுவதனால் நிறுவனத்தின் குறிக்கோளை இலகுவாக அடைய முடியும்.

மனித வளங்களையும் பொருள் வளங்களையும் நிறுவனத்தின் நன்மைக்காக சிறப்பாக கையாளும் திறன் அதிபருக்கு காணப்படல் வேண்டும். அதாவது பாடசாலையில் காணப்படும் மனித வளங்களான ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சிற்றூழியர்கள் ஆகியோர் அவரவரின் விசேட ஆற்றல்களுக்கேற்ப நிருவகிக்கப்படுவதுடன் பொருள் வளங்களான பாடசாலை வகுப்பறைகள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், நூலகம், கணினி அறை, மனையியல் கூடங்கள் மற்றும் பிற அம்சங்களும் வினைத்திறனுடன் முகாமை செய்யப்படுவதற்கு டேலரின் இச்சிந்தனை வாய்ப்பாக அமைகின்றது.

டேலர் முன்வைத்த முகாமைத்துவ முறைமையின் அடிப்படைத்தத்துவங்களுள் ஒன்றான நேர ஆய்வுத்தத்துவம் பாடசாலைத் தலைவருக்கு உதவக்கூடிய பிரதான பண்பாக காணப்படுகின்றது. எவ்வாறெனில் அடுத்த ஆண்டுக்கான பாடசாலை தவணை ஆரம்பிப்பதற்கு முன்னரே அந்த வருடத்திற்கான நேர சூசி, பாடசாலை கலண்டர் என்பன தயாரிக்கப்பட்டு, அலுவலக அனுமதியும் பெறப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு நேர ஆய்வுத்தத்துவம் உதவுகின்றது. அவ்வாறே பாடசாலை ஆரம்பித்தது முதல் பாடசாலை செயற்பாடுகள் முடிவடைதல் வரையுள்ள அனைத்து செயற்பாடுகளும் நேர ஆய்வுத்தத்துவத்தின் படி இடம்பெறுவதை அவதானிக்கலாம். காலை பாடசாலை ஆரம்பிப்பதற்கான மணி ஒலிப்பதற்கு முன்னரே பாடசாலையை சுத்தம் செய்தல் உட்பட அன்றாட நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு விடுகின்றன. தொடர்ந்து மணி ஒலித்தலுடன் காலைக்கூட்ட செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன. பாடசாலைக்கீதம் இசைத்தல், உடற்பயிற்சி செயற்பாடுகள், நற்சிந்தனைகள் உட்பட செயற்பாடுகள் என்பன குறித்த 20 நிமிட நேரத்திற்குள் நிறைவடைகின்றன. எனவே இதனை திட்டமிட்டு வழிப்படுத்துவதில் பாடசாலைத் தலைவரின் பணி சிறப்பானது.

முதலாவது பாடம் ஆரம்பித்தல் தொடக்கம் ஒவ்வொரு பாடங்களுக்கும் 40 நிமிடங்கள் என நேரம் வரையறுக்கப்பட்டு நான்காவது பாட நிறைவிலோ அல்லது ஐந்தாவது பாட நிறைவிலோ மாணவர்களுக்கு இடைவேளை வழங்கப்படுகின்றது. தொடர்ந்து ஏனைய பாடங்களும் முறையே இடம்பெற்று 6 மணித்தியாலங்களில் பாடசாலை நடவடிக்கைகள் நிறைவடைகின்றன. எனவே இங்கு சகல கல்வி நடவடிக்கைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டவாறு இடம்பெறுவது கண்கூடு. ஒவ்வொரு ஆசிரியரதும் கற்பித்தல் நேரம் 40 நிமிடங்கள் எனவும் அந்நேரத்திற்குள் மாணவர்கள் அடையவேண்டும் என எதிர்ப்பார்க்கும் தேர்ச்சிகளை அடையக்கூடிய விதத்தில் அவர்களது செயற்பாடுகள் அமைதல் வேண்டும் எனவும் திட்டமிடப்படுகின்றது. எனவே இவ்வாறான செயல்களை திறம்பட ஆற்றுவதற்கு டேலரின் சிந்தனை பாடசாலைத் தலைவருக்கு உதவுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைத் தலைவர் என்ற வகையில் அதிபர் தமது முகாமைத்துவத்தின்போது தனி நபர் ஆற்றல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். பாடசாலையில் உள்ள ஒவ்வொரு ஆசிரியரும் பல ஆற்றல்களைக் கொண்டவர்களாகக் காணப்படுவார்கள். பாடரீதியான செயலாயினும், இணைப்பாடவிதான செயற்பாடாயினும் அவை உரிய நபர்களிடம் பொறுப்பளிக்கப்படும் போது அதன் விளைவு காத்திரமானதாக அமையும். மாறாக இயலுமைகளை கருதாது செயற்பாடுகளை திட்டமிட்டு வழங்கும்போது அதன் பெறுபேறு எதிர்மறையாக அமைவதோடு பாடசாலைச் சூழலும் மகிழ்ச்சியற்றதாக மாறி அது மாணவர்களின் அடைவு மட்டத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். இது குறித்த பிரதேசத்தில் மட்டுமன்றி முழுக்கல்விச் சமூகத்திலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும். எனவே டேலரின் ஒரு தொழிலாளிக்கு வழங்கப்படும் வேலை அவனுடைய ஆற்றலுக்கேற்ப உயர்ந்ததாக அமைதல் வேண்டும் எனக் கூறும் 'நைஉ_ந சயவந 'சைஉெ_லிடந என்னும் தத்துவம் பாடசாலைத் தலைவருக்கு மிகவும் பயனுடையதாக அமைகின்றது.

திட்டமிடல் தொடர்பான பொறுப்பு முகாமையாளரைச் சார்ந்ததாக இருத்தல் வேண்டும். செயற்பாடுகள் திட்டமிடப்படும் போது குறித்த காலப்பகுதியில் குறித்த நேரத்திற்குள் மாணவர் அடைய வேண்டும் என எதிர்பார்க்கும் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு எந்த ஆசிரியர் ஊடாக இப்பணியை மேற்கொண்டால் சிறப்பான விளைதிறனைப் பெற முடியும் என்றவாறு அதிபர் வருடாந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். இதனூடாக பாடசாலை எதிர்ப்பார்த்த அடைவு மட்டத்தை அடைய முடியும்.

பாடசாலைகளைப் பொறுத்தளவில் ஒவ்வொரு நடவடிக்கையையும் திறம்பட முன்னெடுக்கவேண்டிய பாரிய பொறுப்பு தலைவரைச் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. அதற்கான வேலைகளை நடைமுறைப் படுத்துவதற்காக பாடசாலை நேரசூசியை தயாரிக்கும் பொறுப்பும் அதிபரையே சாரும். எனவே அவரால் பாடசாலையில் உள்ள அனைத்து தரங்களுக்கும் ஏற்றவாறு அனைத்து ஆசிரியர்களையும் உள்ளடக்கி நேரசூசி தயாரிக்கப்படுகின்றது. இதற்காக ஆசிரியர்களிடமிருந்து ஏற்கனவே திரட்டப்பட்ட அவரவர் பயிற்சிக்குரிய பாடங்கள், அவர்களால் மேலதிகமாக கற்பிக்க இயலுமான பாடங்கள் தொடர்பான விபரங்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன. எந்த நேரத்தில் எந்த பாடம்? அதனைக் கற்பிக்கும் ஆசிரியர் யார்? என்பது தொடர்பாக தீர்மானம் எடுத்து வருடார்ந்த நேரசூசி தயாரிக்கப்பட்டு, உயர் அதிகாரிகளின் அனுமதியுடன் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றது. அவ்வாறே எதிர்பாராத விதமாக ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படின் அச்சந்தர்ப்பத்திலும் நேரசூசியில் திருத்தங்கள் செய்யப்படுகின்றன. அத்துடன் அதில் மேலதிக பொறுப்புக்களும் பதிவு செய்யப்பட்டே ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவ்வாறான நடைமுறைகளின் காரணமாக அதிபர் தேசிய, மாகாண மற்றும் வலய ரீதியாக நடத்தப்படுகின்ற அனைத்து பயிற்சிகளுக்கும் ஆசிரியர்களை உட்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. இதனூடாக ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு பாடசாலையின் அபிவிருத்திக்கு பங்களிப்பர்.

அத்துடன் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பற்காக பயன்படுத்தப்படும் தொடர் வேலைத்திட்டங்களை முறையாக, விஞ்ஞான ரீதியாக நோக்குவதும் டேலரின் கருத்தின் படி அதிபருக்கு அவசியமாகின்றது. அலகுப் பரீட்சைகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவணைப் பரீட்சைகள், மாதாந்தப் பரீட்சைகள் மற்றும் கணிப்பீட்டு வேலைத்திட்டங்கள் என்பவற்றையும் கருத்திற்கொண்டு தீர்மானங்களை எடுக்கவேண்டும். இந்த வகையில் டேலரின் சிந்தனை பாடசாலைத் தலைவருக்கு உதவக்கூடியதாக உள்ளது.

முகாமையாளர் என்ற வகையில் அதிபர் விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து பாடசாலைக்குத் தேவையான ஆளணியினரைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தமது பாடசாலையின் வகை, அதில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை, உள்ள வகுப்புக்கள், உள்ள பிரிவுகள், அந்தந்த வகுப்புகளுக்குரிய பாடங்கள், அதற்காக தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ற அடிப்படையில் அதிபர் தமது தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறே ஆசிரியர்கள் தமது திட்டங்களை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும், அதற்காக வழங்கப்படவேண்டிய உதவிகள் யாவை என்பதையும் அறிந்து தேவையான பயிற்சிகளுக்கு ஊக்குவிக்கவேண்டும். இதனூடாக வயடைழச குறிப்பிட்டுள்ள ஆயயெபநசயைட - ஊழவெசழட "சைைஉைிடந பாடசாலைத் தலைவருக்கு உதவுகின்றது.

பாடசாலையின் வெற்றி அங்கு தொழிற்படும் மனித வளங்களைப் பொறுத்தே அமையும். எனவே வெற்றிக்கு காரணமான ஆசிரியர்கள், மாணவர்கள் கட்டாயம் ஊக்குவிக்கப்படல் வேண்டும். பரிசளிப்பு விழாக்கள், ஊக்குவிப்பு செயற்றிட்டங்கள், காலைக் கூட்டங்களில் பாராட்டுதல் மூலம் அவர்கள் மேலும் உந்தப்பட்டு பாடசாலையின் வளர்ச்சிக்கு துணைபுரிவர். "சன்மான ஏற்பாடுகள் தொழிலாளர்களை ஊக்குவிக்கவல்லன" என்ற டேலரின் இச்சிந்தனையானது பாடசாலைத்தலைவருக்கு மிகவும் உதவுவதாக உள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும்போது **F.W. Taylor** இன் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவச் சிந்தனைகள் பாடசாலை என்னும் நிறுவனத்தை சிறப்பாக முகாமை செய்வதற்கு பாடசாலைத்தலைவருக்கு உதவுகின்ற பண்புகளாக உள்ளன எனலாம்.

**உசாத்துணைகள்**


- சந்திரசேகரம்,சோ.உம் கருணாநிதி, மா.(2008), "முகாமைத்துவகொள்கைகள் ஓர் அறிமுகம்", சேமமடு புத்தகசாலை,யூஜி.50,பீப்பல்ஸ் பார்க்,கொழும்பு- 11.
- இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வித்துறை.(2002)," கல்வி முகாமைத்துவம் - தொகுதி 1", இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட.
- கனகசிங்கம்,வ.(2012), "நவீன முகாமைத்துவ நடைமுறைகள்", குமரன் புத்தகசாலை, 36 வது ஒழுங்கை, கொழும்பு- 06.
- https://en.wikibooks.org/wiki/Management Concepts and Applications/ Management#Definition and Meaning
- http://kalyan-city.blogspot.com/2011/04/what-is-management-definitions-meaning.html
- http://www.skymark.com/resources/leaders/taylor.asp


••••

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறை அபிவிருத்திச் சட்டமும் நிகழ்ச்சித் திட்டமும்

**D.திலகேஸ்வரன் M.Ed . S.L.P.S. 3**
**அதிபர்**
**மமா/வ/ஹைபொரஸ்ட் இல:3. த.வி**

இந்த ஆவணமானது கொள்கைச் சட்டகம். இடைக்கால அபிவிருத்தித் திட்டத்தின் சுருக்க வடிவம். இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட கல்வித்துறைசார் அபிவிருத்திச் சட்டகம் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் விளைவுகளைக் கண்காணிக்கும் சட்டகம் என்பவற்றைத் தருகின்றது. இலங்கையின் கல்வி முறையிலுள்ள கல்விசார் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய முக்கிய மூலகங்களை உள்ளடக்கும் வகையில் ஓர் இடைக்கால மற்றும் வரவு செலவு திட்ட அணுகுமுறையின் மூலம் இக்கொள்கைச் சட்டகம் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய துறைவாரியான திட்டமிடல் அணுகுமுறையானது இடைக்கால வள ஒதுக்கீட்டுச் சட்டகத்துடன் கூடிய பாடசாலையிலிருந்த தேசிய மட்டம் வரையிலான நிறுவனஞ்சார்ந்த மற்றும் ஒன்றிணைந்த திட்டமிடல் மாதிரிகள், வாய்ப்புக்களில் நியாயத் தன்மையை உறுதிப்படுத்தும் உபாயங்கள் கல்வியின் தராதர மேம்பாடு ஆளுகை முறைமையை வலுப்படுத்துதல் மனித அபிவிருத்திசார் உபாயம் முடிவுகளையும் விளைவுகளையும் கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுச் சட்டகம் என்பவற்றை உள்ளடக்குகிறது. ESDEP யானது நான்கு முக்கிய கொள்கை விடயங்கள் மற்றும் அவற்றோடிணைந்த முக்கியமான அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கொண்ட பரந்த சட்டகத்தினைக் கொண்டுள்ளது. இலங்கை அரசாங்கமானது கல்விக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 02 சதவீதத்தினையும் மொத்த அரசாங்க செலவில் அண்ணள. வாக 8-10 சதவீதத்தினையம் முதலீடு செய்கின்றது.

## ESDEP யின் பரப்பு

**பின்வருவன ESDEP யின் பிரதான கொள்கை விடயங்களாகும்.**

- அடிப்படை மற்றும் இடைநிலைக் கல்விக்கான வாய்ப்புக்களையும் சமவாய்ப்புக்களையும் அதிகரித்தல்.
- அடிப்படை மற்றும் இடைநிலைக் கல்வியின் தராதரத்தை மேம்படுத்தல்
- பொருளாதார வினைத்திறன் மற்றும் வள ஒதுக்கீட்டில் நியாயத் தன்மையை உறுதி செய்தல்.
- கல்வி ஆளுகை மற்றும் சேவை விநியோகத்தைப் பலப்படுத்தல்.
- கல்விசார் வெளியீடுகள் மற்றும் விளைவுகளைப் கண்காணிப்பதனையும் மதிப்பீடுகளையும் பலப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உத்தேச கல்வித்துறை அபிவிருத்திச் சட்டகத்தின் முதன்மைப் பண்புகளாவன**

1. பரந்ததொரு கல்வித்துறை அபிவிருத்திச் சட்டகம்.
2. பலவருட கல்விச்செலவு சட்டகமும் நீண்டகால வெளியீட்டு அடிப்படையிலான கல்வித்திட்டம்
3. மத்திய மாகாண பாடசாலை மட்டத்தில் முகாமைத்துவ முறைமைகளை செயற்படுத்தல்.
4. கல்வி வெளியீடுகள் மற்றும் விளைவுகளை கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
5. இலங்கை அரசாங்கமும் நன்கொடைப் பங்காகும்.

**கல்வி வாய்ப்பில் நியாயத்தன்மை**

கல்வியில் நியாயத்தன்மை என்பதன் பொருள், கல்வி வாய்ப்புகளை நியாயமான முறையில் வழங்குவதாகும். கட்டாய அடிப்படைக் கல்வியையும், எல்லோரக்கும் ஆரம்பக் கல்வி வழங்குதலையும் இது வலியுறுத்துகின்றது. ESDEP யானது சகல பிள்ளைகளுக்கும் வாய்ப்பு, அடிப்படைக் கல்வி அடிப்படைநிலைக் கல்வி இடைநிலைக்கல்வியில் பங்கேற்றல் அதனை நிறைவுசெய்தல் என்பவற்றின் மூலம் நியாயத்தன்மையை உறுதி செய்வதனை வலியுறுத்துகிறது.

**கல்வியின் தராதரம்.**

பாடசாலையின் தராதரமானது பின்வருவனவற்றின் தொழிற்பாடாக வரையறுக்கப்படுகிறது.

(அ) தலா மாணவருக்கான சாதன உள்ளீடுகையில் கவனஞ் செலுத்தல்.

(ஆ) மாணவர் அடைவினை உயர்த்துவதற்கு உள்ளீடுகளை வினைத்திறனுடன் பாடசாலைகள் ஒழுங்குபடுத்துவதுடன் முகாமைத்துவம் செய்தல்.

இந்த வரைவிலக்கணமானது ஒவ்வொரு பிள்ளைகளுக்குமான போதனைத் தராதரம் என்னவென்பதில் கவனம் செலுத்துகின்றது. கல்வித் தரமானது சிறந்த தகுதிகளுடைய ஆசிரியர்களையம் உயர்தரமான சாதனங்களையும் வழங்குவதிலோ சிறந்த நூதனங்களைக் கொண்ட பாடசாலைகளிலோ மட்டும் தங்கியிருப்பதில்லை. ஆனால் உள்ளீடுகையில் முக்கியமானவை.அதாவது ஒரு மாணவருக்கான சாதனம் ஆசிரியர் நேரம் மாணவர் அடைவை உயர்த்துவதற்கு இவ்வுள்ளீடுகைகளைப் பாடசாலைகள் எவ்வாறு ஒழுங்குபடுத்தி முகாமை செய்கின்றன என்பவை முக்கியமானவை.

**வள ஒதுக்கீட்டில் நியாயத் தன்மையம் வினைத்திறனும்.**

நியாயத்தன்மை என்ற எண்ணக்கரு பொருள் பொதிந்ததாக விளங்குவதற்கு ஒவ்வொரு பிள்ளையும் அவனது/அவளது தனிப்பட்ட கற்கும் உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப கல்வியைப் பெறக்கூடிய வகையில் செலவானது பகிரப்படுகிறது என்னும் கருத்துக்கு இடமளிக்கின்றது.

வினைத்திறன் என்பது "உள்ளீடுகைக்கும் வெளியீட்டுக்கும் இடையிலான உத்தமநிலைத் தொடர்பாகும்". இது செலவைக் குறைத்தல் என்பது பொருளாகாது. இருப்பினும் ஏதாவது திட்டமிட்ட செயல்முறை நியமித்த இலக்கினை நோக்கி நெறிப்படுத்தப்பட்டு ஆகக்குறைந்த செலவுடனும் முயற்சியுடனும் எதிர்பார்த்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டினை உற்பத்தி செய்யும் வகையில் வளங்களை அல்லது உள்ளீடுகைகளை வழங்குதலாகும்.

**உசாத்துணைகள்**


- சின்னத்தம்பி,மா.(2016) ஆசிரிய முகாமைத்துவம். கொழும்பு : குமரன் புத்தக இல்லம்


- செல்வராசா,மா.(1995) கல்வி அபிவிருத்தியில் அபிவிருத்தி முகாமைத்துவம் மட்டக்களப்பு : புனித செபஸ்ரியன் அச்சகம்.

- கல்வி அமைச்சு,(2014) "பாடசாலைக் கல்விப் பண்புப் தரத்தினை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டு செயன்முறைகள் சுற்று நிருபம் பத்திரமுல்ல :கல்வி அமைச்சு அச்சகம்


●●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய் - ஒரு – துளி

திருமதி S. நிர்மலா
ஹரஸ்பெத்த தமிழ் வித்தியாலயம்.

கல்வி எனும் விழி பெற
உன் வழி வந்து நிற்கும்
கல்விக் குருடர்களின் பார்வைக்காய்
இருள் நீக்கி ஒளி தரவே

பொய்யான புகழுக்காக உருகாதே
அகக்கண் மரல்வாய் புரிந்துமே
அதுவே உன் சேவைக்காயுள் தந்திடுமே
இல்லையேல் உன் பொய்க்காய்

தெய்வம் நின்றறுப்பதில்லை கேள்
உறவுகளாய் நிதர்சனமாய் கூட
உன் பாவம் உன் முன்னே
அறுக்கும் ஐயமில்லை மெய்

●●●●

## நான்

நாகு - பரமேஸ்வரி
மமா/வ/எனிக் தமிழ் வித்தியாலயம், உடப்புஸ்ஸல்லாவ

சூரியன் உதிப்பதில்லை – எவரின்
எதிர்பார்ப்பிற்காகவும்
மழை பொழிவதில்லை – ஒருவரின்
எதிர்பார்ப்பிற்காய்
பசு புகழுக்காய் - பாலை
சுவையாய் சுரக்கவில்லை
மலர்கள் அனைத்துமே
அழகாகவே மலர்கின்றன
இவை அனைத்துமே
இயற்கையின் நிகழ்வே
இதில் யாரும் உரிமை
கோரிட முடிவதில்லை
யானே யாக்கினேன்
இத்தனையும் என்று
ஆங்காங்கே அழிந்தது – உன்
கர்வ மனிதா –நின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைத்துப்பார்

திருமதி, பொ.கலைச்செல்வி
(ஆசிரியை)
மமா/வ/ இராகலை த.ம.வி

குன்றிலிட்ட தீபமாய் நீ ஒளிரு
குறியாய் இருந்த குன்றினை
கொஞ்சம் நினைத்துப் பார்
ஏணியாய் ஏற்றி விட்டு
ஏக்கமாய்க் காத்திருக்கும் ஏணியை
கொஞ்சம் நினைத்துப்பார்

தன்னை வருத்தி ஒளி தந்து
உன் வாழ்வில் ஒளியேற்றிவிட்டு
உருகிய ஒளிக்கீற்றை
கொஞ்சம் நினைத்துப் பார்
ஒவ்வொரு நிமிடமும் உன் நல்
வாழ்வுக்காய் போராடிய
உயர்ந்த உள்ளங்களை
நினைத்துப் பார்க்க மறக்காதே

• • • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## KEEP MOVING.....

**Aru. Sureshwaran**
**CP/W/ Krishnan Junior T.V**
**Ragala – Halgranoya**

This is the most important and crucial period of your lives for what you do now and what you decide now at this age. May well determine which way your life shall go……

And the question is;

Whether you have a proper a solid and A Sound Blueprint. And I want to suggest some of the things that should be in your life's

Number one in your life's blueprint should be a deep belief in your own dignity your own worth and your own background

Do no allow anybody to make you feel, that you are body always feel that your count always feel that you have worth your and always feel that your life has ultimate significance

Secondly, your life's blueprint your must have as a basic principle, the determination to achieve excellence in your various field of endeavor

You are going to be deciding as the days and years unfold what you will do in life what your life's worth will be

Once you discover what it will be set out to do it, and to do it well Be a bush; you cannot be a tree

If you cannot be highway just be a trail you cannot be the sun be a star For is not by size, that you or you fail be the best of whatever you are Finally, your life's blueprint

Must be a commitment to the eternal principals Of beauty … love and justice

Well life for none of us has been a crystal stair but we, must keep moving of you cannot fly, run… of you cannot run, walk…. If you cannot walk, craw …. But by all means

Keep Moving…

••••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினைத்திறன் வாய்ந்த கற்றல் கற்பித்தலை வகுப்பறையில் உருவாக்க வேண்டும்

சுப்பிரமணியம் பரமேஸ்வரி **BA.PGDE,MEd.Red. Primary Trn**
மமா/வ/ ஹல்கரனோய தமிழ் வித்தியாலயம்
ஹல்கரனோய.

மாணவர்களிடையே அறிவுத்திறன் மனப்பாங்கு,விழுமியங்கள்,நல்ல பண்பாடுகள் என்பவற்றை வளர்த்து எதிர்காலத்தில் நற்பிரசையாக அவர்களை உருவாக்குவதற்கு உதவுகின்ற பணியாக கற்பித்தல் நடவடிக்கைகளைக் குறிப்பிடமுடியும் கற்றலின் தொடக்கம் வகுப்பறையாகும்.

கற்றல் கற்பித்தல் தொடக்கம் வகுப்பறையாகும். எனவே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு வகுப்பறை முக்கியமானது வகுப்பறையில் செல்வாக்கு செலுத்தும் பல்வேறு காரணிகளுள் ஆசிரியரின் வகிபங்கு மிகவும் முக்கியமான ஒன்றாகத் திகழ்கின்றது.

ஏனெனில் ஒரு சிறந்த நல் ஆசானால் மாத்திரமே வகுப்பறை கற்றல் கற்பித்தலை ஒழுங்கான முறையில் முகாமை செய்யமுடியும். அந்த வகையில் ஒரு ஆசிரியர வினைத்திறன் வாய்ந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு எவ்வாறான உத்திகளைக் கையாள வேண்டும்.அதற்கான சில நுட்பங்கள் என்ன போன்ற விடயங்களை தெரிந்துகொள்வது அவசியமாகும்.

முதலில் ஆசிரியர் தனது பாடத்தில் அதிக நாட்டமுள்ளவராகவும் சிறந்த தேர்ச்சியுடையவராகவும் இருந்தாலேயே அவர் பாட அலகுகளையும் பயிற்சிகளையும் கொண்டு மாணவர்கள் பாடத்தில் முழுமையான அறிவுபெறுமாறு கற்பிக்க முடியும். அதற்கு அவர் தனது தொழிலில் விருப்புடையவராக இருக்கவேண்டும்.

எனவே ஆசிரியர்கள் பொறுப்புணர்ச்சி கொண்டவர்களாகவும் மாணவர்களது முன்னேற்றத்தில் கரிசனை கொண்டவர்களாகவும் மாணவரிடம் கல்வியில் விருப்பை ஏற்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். ஏனெனில் பாடவிடயத்தில் பாண்டித்தியம் பெற்ற பட்டத்தாரியாயினும் மாணவர்க்கு புரியுமாறும் அவர்கள் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் கற்குமாறும் கற்பிப்பவரே நல்லாசிரியராவார்.

பொதுவாக ஆசிரியர்கள் கற்கும் முறைகளைத் திட்டமிட்டு செயற்படுத்துவராகவும், மாணவர்களது சிந்தனையை தூண்டுபராகவும், கல்வியின் மூலவளங்களை சேகரித்து பாதுகாப்பவராகவும் மாணவர்களது தேவைகளையும் கல்வி நோக்கங்களையும் நிறைவுசெய்யும் வகையில் முழுக்கல்விச் செயற்பாட்டையும் ஒருங்கிணைப்பவராகவும் திகழவேண்டும்.

மாணவர்களது முதிர்ச்சி நிலை, இலக்கு மற்றும் அவாநிலை என்பவற்றை அறிந்து அவற்றுக்கு ஏற்ப தமது கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி கொள்ளவேண்டும்.அதாவது மாணவர்கள் பின்னணி ஆற்றல் தகைமை வசதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றை கவனத்தில் கொண்டே அவாநிலைகளை ஏற்படுத்துவதில் வழிகாட்ட வேண்டும். மேலும் மகிழ்ச்சிகரமான வகுப்பறைக் சூழலை ஏற்படுத்தவேண்டும். சுத்தம் பேணப்பட வேண்டும். ஒழுக்கம் நிலைநாட்டப்பட வேண்டும்.மாணவர்களது ஆளுமைத் திறன்களை வளர்த்து விட வேண்டும் அவர்கள் மத்தியில் கூட்டுறவின் அடிப்படையில் நட்புறவை, இடைத்தொடர்புகளை அதிகப்படுத்த வேண்டும்.

கற்றல் கற்பித்தல் ஆகிய இரு செயற்பாடுகளிலும் நுண்முறைகளைக் கையாள வேண்டும்.கற்றல் தொடர்பான நுட்பங்களை, நவீன கற்றல் உபகரணங்களை பயன்படுத்துவது தொடரபாக மாணவர்களுக்கு சொல்லி கொடுக்க வேண்டும். அது மாணவர்களது கற்றலை மேன்மை அடையச்செய்யும். மேலும் கற்பித்தலுக்காக முடியுமான சந்தர்ப்பங்களிலெல்லாம் கற்றல் துணைச்சாதனங்கள் உபயோகித்து கல்வியை வழங்குவது கற்றல் பணிகளை இலகுபடுத்துவதோடு மாணவர்களுக்கு கூடுதலான தெளிவையும் அளிக்கவல்லது.

வகுப்பறையில் ஒரு ஆசிரியர் சிறந்த தலைவராக இருக்கவேண்டும்.அங்கு பாடத்தை கற்பிக்கும் நல்லாசானாகவும், நீதியை வழங்கும் நீதிபதியாகவும், ஒழுங்கு அமைதியை நிலை நாட்டும் பொலிசாகவும், ஒழுங்குகளையும் நற்பண்புகளையும் கொண்ட சமயத்தலைவனாகவும், அமைதியையும் ஆதரவையும் வழங்கும் பெற்றோராகவும், அறிவுரை கூறும் நண்பனாகவும், வழிகாட்டியாகவும் இருக்கவேண்டும்.

இவ்வாறு ஓர் ஆசான் வகுப்பறையில் பல நடிப்பங்குகளை ஏற்று நடிகராக இருத்தல் வேண்டும்.எனவே இவற்றில் இருந்து பார்க்கும்போது ஆசிரியத் தொழிலின் தாற்பரியத்தை தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

ஓர் ஆசிரியர் எவ்வளவு தான் அறிவாளியாக இருந்தாலும் தான் கற்பிக்கும் விடயத்தை கவனமெடுத்து ஆயத்தஞ் செய்யாவிடில் அவர் வினைத்திறன் வாய்ந்த கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது.எனவே ஒவ்வொரு ஆசிரியர்களும் தமது கற்பித்தல் பணியினை உணர்ந்து கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்படவேண்டும். அவ்வாறு செயற்படும்போது தான் எதிர்பார்த்த அறிவுள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

**தொகுப்பு. இணையம்**

••••


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் என்பவர் தொடர்ச்சியாக சுயமாக கற்கின்றார்

திருமதி.S.ரவிசந்திரிகா
மமா/வ/லிடஸ்டேல் த.வி.

தற்கால கல்வி உலகில் கற்றல் என்பதே மிக முக்கிய தொனிப்பொருளாகிறது. கற்றலானது ஜீவராசிகளில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகும்.இத்தகைய நடத்தை மாற்றம் உடனடியாகவோ அல்லது காலம் தாழ்த்தியோ இடம் பெற முடியும். இத்தகைய கற்றல் மாற்றம் மனிதர்களினால் மட்டுமன்றி உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளிலும் இடம் பெறுகிறது.இந்நடத்தை மாற்றங்கள் நிரந்தரமானதாகவோ அல்லது தற்காலிகமானதாகவோ இடம் பெறலாம் நடத்தை மாற்றம் நிரந்தரமானதாக அமைந்தால் அதன் பயனும் அதிகமாக இருக்ககும்.

கற்றல் நிகழ்வானது திட்டமிடப்பட்ட அடிப்படையிலும் எதிர்பாராத விதமாக ஏற்படுகிறது.மனிதர்கள் இடம், காலம், சூழல், இலக்கு என்பவற்றிற்கு ஏற்ப திட்டமிடப்பட்ட அடிப்படையில் கற்றலில் ஈடுபடுவது இன்றைய நவீன உலகின் தேவையாக உள்ளது. மாறாக திட்டமிடப்படாத முறையிலும் எதிர்பாராத விதமாகவும் கற்றல் நிகழ்கிறது.

கல்வியானது மனித வாழ்வை மேன்மையுறச் செய்கிறது.அத்துடன் எதிர்கால சாவால்களை பொருத்தமான வகையில் எதிர்கொள்ள வகை செய்கிறது.இத்தகைய கல்வியை பெற்றுக்கொள்ள எதுவும் கற்றல் செயன்முறையினை சரியாகவும் பொருத்தமானதாகவும் மாணவர்களை ஊக்குவிப்பதன் ஊடாக வினைத்திறன் வாய்ந்த மாணவர் சமூகத்தை உருவாக்க முடியும்.

கற்பித்தல் எனும் போது கற்றல் செயன்முறையை இலகுபடுத்துகின்ற கருமமாகும்.ஆயினும் தற்காலத்தில் கற்பித்தலில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தற்போது கற்றலுக்கு வசதியளிப்போராகவும் கற்றலுக்கு வழிகாட்டுவோராகவும் கருதப்படுகின்றனர்.எனவே தற்கால ஆசிரியர்களும் வினைத்திறன் வாய்ந்த கற்றலில் ஈடுபட வேண்டியவர்களாக உள்ளனர்.இதன் மூலமே தற்கால அறிவு சார் உலகில் சிறந்த ஆசிரியர்களாக மிளிர முடியும்.

இன்று ஆசிரியர் தொழில் உலகலாவிய ரீதியில் மிகுந்த முக்கியத்துவமுடைய தொழிலாக உயர்ந்த நிலையில் நோக்கப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை இன்று ஆசிரியர்கள் தமது வாண்மை விருத்தியை ஏற்படுத்தி கொள்வதற்கு பெருமளவு முயற்சிகளை மேற்கொள்கின்றனர் .ஆசிரியர் தொழில் வாண்மை விருத்தியுடன் இடைவினை கொண்ட சேவையாக நோக்கப்படுகின்றது.இதற்காக இன்று பல்வேறு நிறுவனங்களினூடாக ஆசிரியர் தொழில் சார் வாண்மை விருத்தியை இலக்காக கொண்ட பல்வேறு பயிற்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தொடர்ந்து கற்றல் ,கற்றுக்கொண்டே இருத்தல் ,அறிவை புதுபித்தல்ஆகியன ஆசிரியர்களுக்கு மிகவும் அவசியமாகும். புதியவற்றை கற்பதுடன் பயிற்சியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது வழங்கப்பட்டால் ஆசிரியர் பணியினை செவ்வனே செய்ய ஊக்கமும் உறுதியும் கிடைக்கும்.

சம காலத்தில் ஆசிரியர் தொழில் தொடர்பாக ஏற்படுகின்ற விருத்தி போக்குகள் பற்றிய அறிவினை இற்றைப்படுத்திக் கொள்ளல் மிக அவசியமாகின்றது.வளர்ந்து வரும் இன்றைய உலகில் நாளுக்குநாள் புதிய பல விடயங்கள் வெளிப்படுகின்றன.உலகமயமாதல் தொழில்நுட்ப வளர்ச்சியும் ஆசிரியர் தொடர்ச்சியாக கற்றுக்கொண்டிருப்பவராக இருத்தல் மிக அவசியம்

- பாடத்திட்டத்தின் மாற்றங்கள்
- தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சி
- புதிய கற்பித்தல் முறைகள்
- கல்விச் சீர்திருத்தம்
- புதிய தேர்ச்சிகள்
- சிந்தனை மாற்றங்களை உள்வாங்குதல்
- மாறிவரும் ஆசிரியர் வகிப்பாகங்களை அறிந்து செயற்படல்

போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக தன்னை இற்றைப்படுத்திக்கொள்வதோடு ஆசிரியரின் தனது தொழில் தகைமையை வளர்த்துக் கொள்வதோடு கல்வித்தகைமைகளையும் அதிகரித்துக்கொள்வது இன்றைய சூழலில் அவசியமான தொன்றாகிறது.இன்று ஆசிரியர்கள் தமது அறிவு விருத்தியின் பொருட்டும் தகைமையை வளர்த்தல் பொருட்டும் உயர்கல்வியை நோக்கி செல்கின்றனர்.இதனால் பெருமளவாக ஆசிரியர் சமூகம் இன்று கற்றலை நோக்கி தன்னை நகரத்தி செல்வதை பல்வேறு நிறுவனங்களில் உயர் கல்விக்காக பதிவு செய்து கொண்டு கற்றலில் ஈடுபடுவதை அவதானிக்க முடியும்.

இவ்வாறு கற்றலில் ஈடுபட்டு பெறுகின்ற அறிவானது வெறுமனே சான்றிதழ் பெறுவதற்காகவும் சம்பள உயர்வினை பெற்றுக்கொள்வதற்காவும் மட்டும் இருந்துவிடாது மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவது அவசியமும் தேவையுமாகின்றது.

கல்வியானது மனித வாழ்வை மேன்மையுறச்செய்கின்றது. அத்துடன் எதிர்கால சவால்களை பொருத்தமான வகையில் எதிர்கொள்ள வகை செய்கிறது. இத்தகையகல்வியை பெற்றுக்கொள்ள உதவும் கற்றல் செயன்முறையினை சரியாக விளங்கி ஊக்குவித்தல் வினைத்திறன் வாய்ந்த மாணவர் சமூகத்தை உருவாக்கும். தற்காலத்தில் கற்பித்தல் என்பதை விட கற்றல் என்ற விடயமே முக்கியம் பெறுகின்றது. தற்போதைய நவீன கல்வி முறையில் வகுப்பறை கற்பித்தலில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தற்போதுள்ள கற்றலுக்கு வசதியளிப்போராக கற்றலுக்கு வழிகாட்டுவோராகவும் கருதப்படுகின்றார். எனவே தற்கால ஆசிரியர்களும் வினைத்திறன் வாய்ந்த கற்றலில் ஈடுபட வேண்டியவர்களாக உள்ளனர். இதன் மூலம் தற்கால அறிவு சார் உலகில் சிறந்த ஆசிரியர்களாக மிளிர முடியும்

● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கல்வி வீண்விரயத்தில் அண்மைக்காலப் போக்கு

திருமதி.V.கஸ்தூரிபாய்
ம.மா/வ/எமஸ்ட் தமிழ் வித்தியாலயம்

**1.0அறிமுகம்**
கல்வி பெறுதல் இன்று அனைவரினதும் பிறப்புரிமையாகும். **1948அம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட மனித உரிமை சாசனமே** கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் முதலாவது உலக பிரகடனமாகும். ஒரு நபர் சமூகத்தில் சிறந்த உறுப்பினராவதற்கு கல்வி மிக அவசியம் என்பதை உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளன. ஐக்கிய நாடுகளில் யுனெஸ்கோ(**UNESCO**) அமைப்பு உட்பட பல உலக அமைப்புக்கள் காலத்திற்குக் காலம் பல கல்விக் குறிக்கோள்களை வெளியிட்டு உறுப்பு நாடுகளை வழிகாட்டி வருகின்றன. இந்த வகையில் வாழ்நாள் நீடித்த கல்வி (**LLE**) 1970 அறிவுசார் பொருளாதாரத்திற்கான கல்வி (1996) உலக கல்வி மன்றத்தின் அனைவருக்கும் கல்வி (2000) ஐக்கிய நாடுகளின் மிலேனிய இலக்குகள் (**MEG** 2000) என இப்பட்டியல் நீண்டு செல்கின்றது.

இதன்படி இலங்கை அரசு தனது வருடாந்த பாதிட்டில் பெருந் தொகை நிதியை கல்விக்காக ஒதுக்கி வருகின்றது. **2016ஆம் ஆண்டில் 33200 கோடி** ரூபாய்க்கான அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **6 வீதத்தை** கல்வித் துறைக்காக ஒதுக்கியுள்ளது. **2015இல் இவ்வீதம் 1.9 ஆக** இருந்தது. மேலும் **2014ஆம் ஆண்டின்** தகவலின்படி இலங்கை அரசு வருடாந்தம் ஒரு மாணவருக்கு சராசரியாக **24610 ரூபாய்களை** செலவிடுகின்றது. இதே போன்று ஒரு பல்கலைக்கழக மாணவருக்கு ரூபா 288000/= செலவிடப்படுகின்றது. இந்த வளங்கள் அனைத்தும் உத்தமமான முறையில் பாவிக்கப்படாததால் இலங்கையில் கல்வியில் வீண்விரயம் ஏற்படுகின்றது.

**1.1 கல்வி வீண்விரயம்.(Westage in Education.)**
குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட வளங்கள் சிறப்பான முறையில் பாவிக்கப்படாத நிலையில் ஏற்படும் இழப்புக்களே பொதுவான வழக்கில் விரயம் எனக் கூறப்படுகின்றது. கல்வியில் வீண்விரயம் என்பது குறிப்பிட்ட ஒரு கல்விச் செயற்பாட்டிற்காக குறிப்பிட்ட ஒரு நபர் அல்லது ஒரு அரசாங்கம் அல்லது ஏதேனும் அரசசார்பற்ற நிறுவனம் மூலம் செலவிடப்பட்ட நிதி பௌதிக வளங்களிலிருந்து பூரணமாக பயன் கிடைக்காத நிலைமையே கல்வியின் வீண்விரயமாகும். கல்வியின் இலக்குகளை பாடசாலைகளினால் அடையப்படாத சந்தர்ப்பங்களினாலேயே தான் வீண்விரயமாகும். அதாவது பாடசாலைகளின் செயற்பாட்டு தோல்வியே கல்வியில் வீண்விரயமாகும்.

**2.0 இலங்கையின் கல்வி வீண்விரயத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்.**
**2.1 அனைவருக்கும் கல்வி வழங்க முடியாத நிலை.**
நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளுக்கும் அதாவது உயர்ந்தோர் தாழ்ந்தோர் உடல் உள குறைபாடு உள்ளோர் என வேறுபடுத்தி நோக்காது அனைவருக்கும் சமமான கல்வி வழங்கப்படல் வேண்டும் என்பதே அனைவருக்கும் கல்வி(**EFA**) என்ற சிந்தனையாகும். இலவச சீருடை இலவச பாடநூல் இலவச பாதணி இலவச மதிய உணவு இலவச பருவச் சீட்டு என காலத்திற்குக் காலம் பல வேலைத்திட்டங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்கப்பட்ட போதிலும் இலங்கையில் அனைவருக்கும் கல்வி வழங்கும் இலக்கு எட்டப்படாதுள்ளது. உடல் உள ரீதியான குறைபாடுள்ள பிள்ளைகள் , தெருவோர பிள்ளைகள் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களின் பிள்ளைகள் போன்ற பிரிவினரை நாட்டின் கல்விக் கட்டமைப்பில் இணைக்க முடியவில்லை. இது கல்வித் துறைக்கு வீண்விரயமாகும். **1989 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை சாசனம் அனைத்து பிரிவினரது பிள்ளைகளுக்கும் கல்வி வழங்கப்படுவதை வலியுறுத்தியது. 2000மாம் ஆண்டு தாய்லாந்தின் ஜொமரியன் நகரில் நடந்த உலக கல்வி மாநாட்டில்'அனைவருக்கும் கல்வி (Education for all)'** என்ற பிரகடனம் முன்வைக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டது. இந்த மாநாட்டில் கல்வி பற்றிய ஆறு இலக்குகளும் **(Aims)** 12 உத்திகளும்**(Skils)** முன்வைக்கப்பட்டதுடன் இவற்றை **164 நாடுகளின் பிரதிநிதிகளும்** ஏற்றுக் கொண்டனர்.

**2.2 பாடசாலையில் அனுமதி பெறாத பிள்ளைகள்.**

இலவசக் கல்வி கட்டாயக் கல்வி என பல திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டாலும் இலங்கையில் இன்றும் 1.5 சதவீதமான (2015) பிள்ளைகள் பாடசாலைகளில் சேர்க்கப்படாதிருக்கின்றனர். இது கல்வித் துறையின் தோல்வியை எடுத்துக் காட்டுகின்றது. 92.2 சதவீத எழுத்தறிவைக் கொண்ட இலங்கையில் 2015 வரை 1.5 சதவீதமான பிள்ளைகளுக்கு கல்வி பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இது இலங்கையின் கல்வி வீண்விரயத்தின் அண்மைக்கால போக்காகும். ஐக்கிய நாடுகளின் மிலேனிய அபிவிருத்தி இலக்குகளின் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற இலக்கை இந்த 1.5 வீத பிள்ளைகளால் இன்றும் அடைய முடியாதுள்ளது.

**2.3 மாணவர் இடைவிலகல் (Drop out)**

ஒரு மாணவன் நாட்டில் காணப்படுகின்ற கல்வி பற்றிய சட்ட ஏற்பாடுகளின்படி **(இலங்கையில் 1939ஆம் ஆண்டு 31அம் இலக்க கல்விச் சட்டம் மற்றும் 1997 திருத்திய ஏற்பாடுகள்)**கட்டாயம் கல்வி பெறவேண்டிய வயதில் பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் நிலையே மாணவர் இடைவிலகல் ஆகும். 5 – 16 வயதுவரை கட்டாயக் கல்வியை நிறைவு செய்வதற்கு முன்பே கல்விப் புலத்தில் இருந்து விலகிச் செல்லுதலே இலங்கையில் கல்வியில் வீண்விரயத்தை அதிகரிக்கச் செய்கிறது.

**2.4 மீண்டும் அதே வகுப்பில் கற்றல் (Repetition Rate)**

ஒரு மாணவன் குறிப்பிட்ட ஒரு வகுப்பில் பல ஆண்டுகள் கல்வி கற்பதே இந்நிலையாகும். ஒரு வருடத்தில் கற்கவேண்டியவற்றை பல வருடங்கள் கற்கும் போது கல்வியில் வீண்விரயம் ஏற்படுகின்றது.

**இலங்கையில் மாகாண மட்டத்தில் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாணவர் அதே வகுப்பில் கற்கும் நிலை**

| மாகாணம் | ஆரம்பப் பிரிவு % | இடைநிலைப் பிரிவு % |
|---|---|---|
| மேல் மாகாணம் | 2.75 % | 6.7 % |
| தென் மாகாணம் | 8.43 % | 12.5 % |
| மத்திய மாகாணம் | 8.61 % | 13.95 % |
| வட மாகாணம் | 8.62 % | 11.36 % |
| கிழக்கு மாகாணம் | 21.75 % | 18.40 % |
| வட மேல் மாகாணம் | 9.29 % | 11.43 % |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வட மத்திய மாகாணம் | 11.82 % | 6.13 % |
| ஊவா மாகாணம் | 13.40 % | 13.35 % |
| சபரகமுவ மாகாணம் | 10.64 % | 8.35 % |
| இலங்கை | 9.58 % | 10.94 % |

(ஆதாரம் கல்வி அமைச்சு 2015)

மேற்படி அட்டவணையின்படி இலங்கையில் சகல மாகாணங்களிலும் மாணவர்கள் மீண்டும் அதே வகுப்பில் கற்கும் வீதம் உயர்வாகக் காணப்படுகின்றமையினைக் காணலாம். இது அரசாங்கத்தினதும் பெற்றோர்களினதும் கல்விச் செலவை அதிகரிக்கச் செய்துள்ளதுடன் கல்வியில் வீண்விரயத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

**2.5 வினைத்திறனற்ற கல்வி முகாமைத்துவம்.**

இலங்கையின் கல்வி முகாமைத்துவ செயற்பாடுகள் கல்வியமைச்சு முதல் பாடசாலை வரை பல மட்டங்களில் இடம் பெறுகின்றது. ஆசிரியர் நியமனங்கள் செயலமர்வுகள் வள விநியோகம் போன்றன மாகாணக் கல்வி அமைச்சினாலும் கல்வி அமைச்சினாலும் தனித்தனியே இடம் பெறுகின்றன. இவை செலவினங்களை அதிகரிக்கச் செய்துள்ளன. தீர்மானங்கள் இலகுவாக மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதுடன் தேவையற்ற காலதாமதத்தினால் நேர விரயம் ஏற்படுகின்றது. 2003 ஆம் ஆண்டில் தேசிய கல்வி ஆணைக்குழு முகாமைத்துவ வினைத்திறனில் காணக்கூடிய குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியது. இதன்போது அரசியல் தலையீடுகள் இணைப்பாக்கம் இன்மை அலுவலர்களின் வினைத்திறன் இன்மை போன்ற காரணிகளை முன்வைத்திருந்தது. மேலும் திரு குணவர்தன (!996) தலைமையில் மேற்கண்ட ஆய்வில் இலங்கையில் முகாமைத்துவ செயற்பாடுகளில் வினைத்திறன் அற்ற நிலைமை சுட்டிக்காட்டப்பட்டது.

**நிறைவுரை**

மேற்படி விடயங்களை உள்ளிட்டதோடு மட்டுமன்றி இலங்கையின் கல்வியில் வீண்விரயத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் வினைத்திறனற்ற வள முகாமை கல்வித் துறையில் ஊழல் மோசடி அரசியல் தலையீடுகள் கல்வி பொருளாதார உலகிற்கு ஏற்றதாக இல்லாமை சமத்துவமற்ற கல்வி வழங்கல் ஒழுக்க விழுமியங்களையும் ஐக்கியத்தையும் பாதுகாக்கத் தவறியமை மாணவர் வரவு சீரின்மை விடுமுறை நாட்களின் எண்ணிக்கை என்பவற்றையும் குறிப்பிடலாம். ஆகவே இவற்றினைக் குறைப்பதற்கான ஆலோசனைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். கல்வி முகாமைத்துவத்தை வினைத்திறனாக்குதல் கல்விக்கான விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல் கல்வித் துறையில் அரசியல் தலையீடுகளைத் தடுத்தல் அரச விடுமுறைகளைக் குறைத்தல் பொருளாதாரத்திற்கேற்ற கல்வி இலக்குகளை நிர்ணயித்தல் ஊழல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல் போன்ற ஆலோசனைகளை திட்டமிட்டபடி துரிதமாக செயற்படுத்தும் போது இலங்கையின் கல்விப் புலத்தின வீண்விரயத்தைக் கட்டுப்படுத்த முடியம்.

**உசாத்துணைகள்**


1. Gunawardena.C, (1996) Problem of literate Developing Society; Srilanka.
2. தேசிய கல்வி ஆணைக்குழு,(2003) கல்வி முகாமைத்துவம் பற்றிய அறிக்கை.
3. Unicef,(2013)Out of Schoool Childran in srilanka, Unicef,Srilanka.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தொழில்நுட்பக்கல்வி

திருமதி S. செந்தாமரை ஆசிரியை
மமா/வ/பிளேயலோமண்ட் தமிழ் வித்தியாலயம்
உடப்புஸ்ஸல்லாவ.

2009 இல் ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்பத்துறை சார்ந்த பல்கலைக்கழகம் UNIVOTEC வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகமாகும். இது 2008 ஆம் அண்டு 31ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தொழில்சார் தொழினுட்ப டிப்பளோமாக்களையும் பட்டங்களையும் வழங்குவதற்கென இரத்மலானையில் ஸ்தாபிக்கப்பட்டது. NVQ-NATIONAL VOCATIONAL QUALIFICATION தேசிய தொழில் தகைமை இத்தேசிய தொழில் தகைமை TVEC யினால் வடிவமைக்கப்பட்டதாகும். இது இலங்கையிலுள்ள தொழிநுட்பவியல் கல்லூரிகள் ஊடாக செயற்படுத்தப்படுகின்றது. இத்தொழிற்தகைமையானது மட்டம் 1-7 படிமுறை அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது.இதில் மட்டம் 1-4 வரையானவை சேசிய சான்றிதழ் மற்றும் அடிப்படையான கற்கைநெறிகளாகும்.

**மட்டம் 1 அடிப்படைத் திறன்கள்.**
**மட்டம் 2 மேற்பார்வையின் கீழ் வேலை செய்தல்.**
**மட்டம் 3 சிறிய மேற்பார்வையின் கீழ் வேலை செய்தல்.**
**மட்டம் 4 சுயமாக வேலை செய்தல்.**
**மட்டம் 5 டிப்ளோமா ஏனையோரை மேற்பார்ஜவ செய்தல்**
**மட்டம் 6 ஏனையோரை முகாமை செய்தல்.**
**மட்டம் 7 பட்டதாரி தகைமை**
**மட்டம் 7 வடிவமைப்பிற்கும் கண்டுபிடிப்பிற்கும் உட்படுத்தல்.**

வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்படும் கற்கை நெறிகள்,

தொழிநுட்ப இளமாணி (B.TECH)

தொழிநுட்பகல்வி இளமாணி (B.Ed TECH)

க.பொ.த.உயர்தரம் சித்தியடையாவிடின் NVQ படிநிலை

ஊடாக தொழிநுட்பவியல் பட்டமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே உயர்தரம் கற்கின்ற மாணவர்கள் மத்தியில் NVQ தொடரும் விழிப்புணர்வை வளர்க்க வேண்டிய தேவை ஆசிரியர்களிடம் உள்ளது. அத்துடன் நவீன தொழிநுட்பங்கள் எம்மை ஆட்கொள்கின்ற இத் தருணத்தில் பல்வேறு துறைகளைத் தெரிவு செய்து உலகத்தை வெற்றிகொள்ள வழிகாட்டுதல் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

••••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதம் மலரட்டும்

**திருமதி சு.சுமிதா**
**விவசாய விஞ்ஞானஆசிரியை**
**மமா/வ/ இராகலை த.ம.வி.**

பூக்கள்
பூப்படைகின்ற ஓசை
பூவுக்கே கேட்காதது போல்
மனிதனுக்கே தெரியாமல்
மனங்களைத் திறப்போம்
மனிதத்தை சுவாசிப்போம் !

வேர்விட முன்னாலே
பிடுங்கி வீசப்பட்டாலும்
வீறு கொண்டெழுவோம்
காயம் வலி கனம் ரணம்
எல்லாம் மனங்களில் தாங்கி
நின்றாலும்
வெளியில் காட்டாது
வெகுண்டெழுவோம் !

சோகம் சூழ்ந்த
இடுகாட்டின் மத்தியிலே
என் சமூகம்
தனித்து விடப்பட்டாலும்
பாவம் கொண்டு
கை நீட்டாதே !

பரிவோடு கரையேற்று
தோளில் சும
தோழமையுடன் கொண்டாடு
வலித்த தேகங்கள்
சிலிர்த்து நிற்கும் !

பூக்களாய் மலரும்
சிறிய பிஞ்சுகளின்
சிரிப்புக்கள் - இனி
சிதறி(த்)தெரிக்கும்
மனிதம் !

மண்டையோடுகளின் மேல்
நடக்கும்
பாதங்களுக்கடியில்
நான்
மலராய்ப் படுக்கின்றேன்
என்
மரணத்தின்
முடிவிலிருந்தாவது
மலரட்டும்
மனிதம் !!!

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் இடர்பாடுடைய மாணவர்களின் கற்றல் களங்களை வெற்றிகரமாக்கல்

கி.தியாகன் B.Com, PGDE

மமா/வ/ ஹரஸ்பெத்த தமிழ் வித்தியாலயம்.

நாம் எமது சமூகத்தில் உள்ள அங்கத்தவர் ஒருவரின் ஏதேனும் இயலாமை தொடர்பில், அவ்வேளைகளில் வெளிபடுத்தும் துலங்கள்கள் எவை? அவை அந்நபரிற்குள் உடன்பாடான கருத்தினை ஏற்படுத்தியிருக்கக்கூடியனவா? முன்னர் அவர்கள் மறுக்கப்பட்ட சூழலை அனுபவித்தார்கள் பின்னர் நல்ல மாற்றங்கள் ஏற்படலாயிற்று. பொதுவில் எண்ணுவது போல் இயலாமைக்கு மிகைக் காப்பை வெளிக்காட்டுவது ஒரு உகந்த வினையாற்றலா? இது போன்ற வினாக்களுக்கு நாம் இதுவரையில் கொண்டிருந்த எண்ணங்களை சீர்படுத்த இயலாமை பற்றிய புரிதல் உதவும். சமூகம், இயலாமை கொண்டோர் தொடர்பில் கொண்டிருக்கின்ற எண்ணமானது மறுத்தல் அல்லது மிகை காப்பு செய்தல் என்பதனை நாங்கள் இயலாமையுடையோர் மீது வெளிபடுத்தும் அனுதாபச் செயல்களும் பிற நடவடிக்கைகளும் உறுதிபடுத்துகின்றன. இயலாமையுடையோரை முற்றிலும் புறக்கணிப்பதற்கு சமனானதே அவர்களை வெகுவாக காப்பு செய்தலும்.

எமது அன்றாட வகுப்பறைகளில் உடலியல் மற்றும் உளம் சார் பலவீனங்கள் காணப்படுவோர் பலர் உள்ர். அவ் பலவீனங்களின் கூட்டு விளைவால் கற்றலில் இயலாமைகளை வெளிப்படுத்தும் பிள்ளைகளாக அடையாளம் பெறுகின்றனர். இவ்வாறான மாணவர்களை நாம் அதிகமாகவே வகுப்பறைகளில் சந்திக்கின்றோம். அவர்களின் இயலுமை இயலாமைகளை துரிதமாக இனங் கண்டு பொருத்தாமன கல்விசார் உதவிகளை அவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. இது அதற்கு அவசியமான நுட்பரீதியான வகுப்பறை பிரயோகங்கள் பற்றிய ஒரு விளக்க முன்வைப்பாகும்.

வகுப்பறையில் மாணவர்களால் வெளிக்காட்டப்படும் இயலாமைகள் தொடர்பில் ஒரு தெளிவான புரிதலை ஆசிரியர் கொண்டிருதல் வேண்டும். அதற்கு அவருக்கு இயலாமை தொடர்பான வகைபாடுகளும் அவை தொடர்பான விளக்கங்களையும் தெரிந்திருத்தல் அவசியம். பிள்ளளை ஒருவரின் உடலியற் குறைபாட்டையோ உளக் குறைபாட்டை குறிப்பிடத்தக்க குறைபாடாகவும் பாரமரிப்புக்கும் விருத்தி செய் திட்டங்களுக்குள் உட்படுத்துவதற்கான நிலைமையாகவும் கருத பாடசாலையும் பெற்றோரும் பொருத்தமான உடற் கூற்றியல் நிபுணத்துவம் ஆகியவற்றின் கூட்டுத் தீர்மானம் அவசியமாகும். முத்திரையிடல் இங்கு தீங்கான வழிமுறை என்பது முக்கியமானதாகும்.

### இயலாமை தொடர்பான புரிதல் மூலம் நேர் மனப்பாங்குகளை மேம்படுத்திக் கொள்ளல்

இயலாமை ஒரு உயிரியல், உளவியல் விபத்து எனும் கருத்து ஒரு மேம்பட்ட பார்வையை இயலாமை உடையோர் தொடர்பில் எடுக்க உதவுகின்றது. இதனை இன்றும் சமூகம் சாபத்தின் வினையாக கருதி இயலாமை உடையோரை துயரங்களின் உடமையாளராக கருதும் போக்கு காணப்படுகின்றது. சகலரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் வகையில் ஒரு இயலாமையை கொண்டுள்ளனர், அளவில் அது வேறுபாடு கொண்டுள்ளது. என்பதுவே யதார்த்தமாகும். இயலாமையை ஒருவரின் அடையாளமாக பெயரிடும் தகுதி எவரையும் சாராதது என்பது தற்போது நன்கு புலனாகின்றது. இயலாமை உடையோரின் பண்புக் கூற்று இயல்புகளை நாம் பரந்த மனநியையில் ஏற்கப் பழகுதல் வேண்டும். அவர்கள் தமது பண்புக் கூறினை சீராக்க பெற உதவி வேண்டி நிற்போரே என கருதல் வேண்டும்.

இயலாமை உடைய பிள்ளைகளின் ஆரோக்கிய நிலை அறிவு நிலை, சமூக இடைவினைகளை இயல்பாக்குதல் மூலம் அவர்களை பொதுவான சமூக வெளிக்குள் கொண்டு வருதல் சாத்தியமாகும். இங்கு குடும்பங்கள் தங்கள் இயலாமை உடைய பிள்ளைகள் தொடர்பாக உடன்பாடான எண்ணங்கள் தோற்றம் பெறுவது முக்கியமாகும். அவர்கள் தம் பிள்ளைகளை சாதாரண பிள்ளைகளுடன் ஒப்பீடு செய்வது இயலாமை உடையோரின் இயலுமைகளை கருதிற் கொள்ளாது இருப்பதுவும் இங்கு தவிர்க்கப்பட வேண்டியதாகின்றது. அதேபோன்று அவர்கள் பெறும் மிகை பாதுகாப்பும் அவர்களின சமூக அனுபவங்களை மட்டுப்படுத்துகின்றது. இது இயலாமை நிலையின் இயல்பு நிலை குறைகளை காட்டிலும் மோசமான நிலையை ஏற்படுத்தும். ஏனெனில் தொடர்ச்சியான சார்பு நிலையானது அதிகபடியான இயலாமையை தோற்றுவிக்கலாம்.

**சிறார்களின் மனோநிலைகளை புரிந்துகொள்ளல்**

சிறார்களின் உலகென்பது விளையாட்டும் வினோதங்களும் நிரப்பிய உவகைப் பருவமாகும் களிப்புகளுக்கான கற்பிதங்களும் புனைவுகளும் அவர்களின் மனவெழுச்சி உறுதிபாடுகளை குலைக்க வல்லன. அதே போன்று தற்போது நிலவும் கல்வி போட்டி சூழல் இயலாமை உடையோரை அதிகம் மன உளைவை கொள்ள வைக்கின்றது. அதிக போட்டி மனப்பானமையை தோற்றுவிக்கும் பரீட்சைகளில், இருந்து இவர்கள் விலக்கு பெற வேண்டும். தமது இயலுமைகளுக்கு அதிகமாக ஏற்றப்படும் சுமை அவர்களின் கற்றல் பங்கேற்பை குறைக்கலாம்.

பொதுவாக இயலாமை உடையோரில் ஏற்பட்டுள்ள குறைபாட்டினை பொருத்து அவர்களின் தகவல் சேகரிப்பு தகவல் பகுப்பாக்கம் போன்ற கற்றலுக்கு அவசியமான அறிகை சார் திறன்கள் அவர்கள் இடத்தே விருத்தி பெறாமல் இருக்கக் கூடும். கல்வி சார் அறிவியலாளர்களாக நாம் அதனை விளக்கமாக புரிந்து கொள்ளல் வேண்டும்.

அவர்களின் நரம்பியல் சார்ந்த அவர்களின் புலன் சார் திறன்களை அறிவற்கு இங்கு கல்விசார் கணிப்பீடு ஒன்று முக்கியத்துவம் பெறும்.

இயலுமை உடைய பிள்ளைகளையும் இயலாமையுடைய பிள்ளைகளுடன் உட்படுத்திக் கொண்ட இணைப்புக் குழு முறையாக வகுப்பறைகள் நடைமுறைப்படுத்தப் பட்டால் ஏனைய சாதாரண சிறார்களும் இயலாமை தொடர்பான சமூக புரிதலை சிறார் பருவத்திலேயே பெறுவர்.

பல்வேறு குறைபாட்டு நிர்ணயங்கள் வகைபாடுகளின் சாதாரணமாக வகுப்பறைகளில் கணிசமாக காணப்படுகின்ற கற்றல் இயலாமை கொண்டோரை அவர்களின் கற்றல் மேம்பாட்டிற்கு உட்படுத்தக் கூடிய வகுப்பறை அணுகு முறைகள் கீழே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கப்படுகிறது. இங்கு குறித்த ஓர் குறைபாடடிற்கான கல்வி சார் உதவி என்றில்லாமல் எல்லா வகையினருக்கும் ஏற்ற வாறு பொருத்தப் படுத்தி கொள்ளத்தக்கனவாக குறிப்பிடப்படுகின்றது. (இங்கு குறைபாட்டு வகைபாடுகள் விளக்கமாக விவரிக்கப் படவில்லை). மாணவர் இனங்காணல் மற்றும் முறைப் படுத்தப்பட்ட ஆய்வுமுறைகளைக் கொண்டு பிரச்சினை யாது? பிரச்சினையின் தன்மை எதுவென இனங்கண்டு கொள்ள இயலும்.

சிலகாலம் வரை கற்றல் இடர்பாடுடைய மாணவர்களை ஒரு குறை மட்ட குழுவாக கருதிய நிலைமை வகுப்பறைகளில் அதிகமாக காணப்பட்டது. ஆனால் தற்போது அவ்வாறல்லாமல் அவர்களின் விசேடத் தேவைபாடுகளை கருத்திற் கொள்ளும் ஆர்வம் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. இப் புதிய நிலைமைகளுக்கான காரணங்களுள் ஒன்றாக மாணவர்களின் தனியாட் கூறுகளை கவனத்திற் கொண்டமைந்த கற்பித்தல் அணுகுமுறைகளை சிரத்தையுடன் செயற்படுத்த ஆசிரியர்கள் முனைகின்றமையும் குறிப்பிடலாம். இதன் மூலம் மாணவர்களுக்கு பாகுபாடற்ற வகையில் கற்றல் சந்தர்ப்பம் உருவாக்கப்படுகின்றது. வகுப்பறை மாணவர்கள் சகலரினதும் கற்றல் பங்கேற்பு இங்கு சாத்தியப் படுத்தப்படுகின்றது. கற்றல் இடர்பாடுடைய மாணவர்களின் கற்றல் சந்தர்ப்பம் அல்லது கற்றல் களங்கள் ஆசிரியரின் நுட்பம் சார்ந்த உதவிகள் மூலம் பயன்மிகு நிலைக்கு மேம்படுத்தப்படுகின்றது.

மாணவர் ஒருவரிடத்தே தோன்றியுள்ள கற்றல் இடரானது தனியொரு காரணியாக அல்லது பல பிணைப்பு பெற்ற காரணிகயாகவோ அமைத்திடலாம். அதேபோன்று வகுப்பின் தனியொரு மாணவரிடத்தேயான அல்லது மாணவர் குழுவிற்கானதாகவும் அமைந்திடலாம். இது கற்றல் கற்பித்தலுக்கான முன் திட்டமிடலுக்கு அவசியமானதாகும். இங்கு கற்றல் இயலாமைக்குள் உளவியல் ஒழுங்கீனம், இயக்கவியல் குறைபாடுகள், மனவெழுச்சி சார் பிரச்சினைகள் கற்றல் இயலாமையாக உள்ளடங்குவதில்லை என்பதினை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.(panda 1997)

**கற்றல் இயலாமை கொண்டோரிற்கு கல்வி சார் உதவல் வழிமுறைகளாக பின்வருவம் செயறன்முறைகளை பரீட்சித்திட இயலும்.**

கற்றல் இயலாமை என்பது விசேட தேவையுடையோரில் உள்ளடங்கும். ஒரு வகையினர் இவர்கள் நரம்பு சார் ஒழுங்கீனத்தை கொண்டவர்களும், தொடர்ச்சியான கற்றல் பங்கேற்பு அற்றவர்களாகவும் காணப்படுவர். இவர்களுக்கு புலன் சார் குறைபாடோ, அல்லது உடனலக் குறைபாடோ இல்லாது அறிவுசார் குறைபாடோ ஒழுங்கீன குறைபாடுகள் எவையும் காணப்படாது. எனினும் இவர்கள் ஏனைய இயலாமை கொண்டோர் கல்வி நடவெடிக்கைகளில் அடையும் பல்வேறு மனவெழுச்சி அழுத்தத்தை அனுபவிப்பர். இங்கு கற்றல் இயலாமை கொண்டோரிடையே பயன்படுத்தத்தக்க சில கல்வி சார் உதவிகள் குறிப்பிடப்படுகின்றன.

கட்புலன் வழி காட்சி, கற்பனை கொள்ள பழக்குதல், மின்னல் அட்டைகளை நொடி காண்பித்து சொற்களை நினைவு கூற வழிப்படுத்தல். (visualize). இது புலன் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் மாணவரிற்கு பரீட்சையமான எடுத்துக் காட்டுகளை முன்வைத்தல். விடைகளை பூரணமாக அளிக்க கட்டாயப்படுத்தாமல் உருவரைகளாக பகுதிகளாக விடையளிக்கச் செய்தல். இது எண்ணகரு உருவாக்கத்தை எளிது படுத்தும்.

நேர நெகிழ்வு மற்றும் குழு வேலைகளில் மாணவரிற்கு குறிப்பான வகிபங்கை வழங்குதல். அத்தோடு வாசிப்பு போன்ற குறைபாடுகளை போக்க சொற் சவாலை குறைத்து, சொற் குடும்ப சொற்களை வழங்கி எளிது படுத்தல். கற்றல் பங்கேற்புபையும் கற்றல் நாட்டத்தை ஏற்படுத்தம். அத்தோடு வகுப்பறையில் வழக்கமான வகுப்பறை முகாமைத்துவ ஒழுங்குகளை சிரத்தையாக பின்பற்றுதல் பயனுள்ளதாகும்

மாணவர்களின் தன் மதிப்பு நிலையை உயர்வடையச் செய்யும் பாங்கிலான நடத்தைகளை எப்போதும் பின்பற்றுதல் வேண்டும். ஊக்குவிப்பும் நற் சான்று வழங்குதலும் மாணவரிடையே ஒழுங்கீனத்தை குறைத்து சுய ஓங்கை ஏற்படுத்தும்.

இணைப்பாட செயற்பாடுகளில் பங்கேற்பு செய்தலானது கற்றல் நாட்டத்தையும் ஏனைய திறன் வெளிப்பாடுகளையும் ஊக்கவிக்கச் செய்யும்.

கற்றல் இயலாமைகளை குறைக்க மேற்குறித்த நடவடிக்கைகள் வழக்கமான வகுப்பறை செயற்பாடுகளிடையே உரிய சந்தர்ப்பங்களில் பயன்படுத்திட இயலும். அதன் ஊடே கற்றல் ஒரு விளக்கமாகவன்றி ஒரு அனுபவமாக கற்றல் இயலாமை கொண்டோரிடையே அமையும்.
பொதுவான இயலாமையுடையோரின் தேவைகள் சமூகத்தால்.வெறுத்தொதுக்கும் நிலைமைகளை தவிர்க்க அவர்களுடைய இயலுமைகளை கொண்டு சுய சார்பை பேணிக்கொள்ள உதவும் வகையில் தற்கால உயிரியல் தொழில் நுட்பங்களும் கல்விசார் தொழில் நுட்பங்களும் விருத்தி பெற்றுள்ளன. அவை பொருத்தமாக மாணவரிடத்தே பிரயோகிக்கும் இடத்து அது பயன் மிகு விளை பேறுகளை ஏனைய வகையினரான இயலாமையுடையோருக்கும் வகுப்பறைகளில் ஏற்படுத்தும்.

பொதுவாக விசேட தேவைகள் கொண்டோரிடையே கற்றல் இயலாமை கொண்டோரே சாதாரணமாக அதிகமுளர், அவர்கள் மருத்துவம் சாராமல் வகுப்பறை மட்ட செயன்முறைகளின் ஊடே சீராக்கம் பெறக்கூடியவர்கள். இவ்வகை மாணவர்களுக்கு வகுப்பறைகளில் ஏற்ற உதவிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் கற்றல் களங்களை வெற்றிகரமாக்க இயலும்.

உசாத்துணை நூல்கள் – விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைக்கான அறிமுகம், விசேட தேவைகள் சார் பட்டமேல் நிகழ்ச்சித் திட்ட கையேடு 2013, இ.தி.ப /சபா ஜெயராசா, கற்றல் இடர்பாடுகளும் தீர்வுகளும்.

••••


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பணியும் வினைத்திறனும்

இரா. சதீஸ்குமார் Dip in Teach (Primary) B.A. PGDE
மமா/வ/ அல்மா கிரேமண்ட் தமிழ் வித்தியாலயம்

இன்றைய உலகில் மாற்றங்களானது ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. நவீன காலத்தில் கல்வித்துறை மாத்திரம் அதற்கு விதிவிலக்கல்ல. மிகவும் வேகமாக மாறி வருகின்ற சமூகத்திற்கு எவ்வாறான கல்வியறிவு வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் தெளிவான கருத்துக்களோ ஒருமித்த தீர்மானங்களோ இல்லாத இந்நிலையில் இம்மாற்றங்கள் அனைத்தும் கல்வியின் பிரதானமானதும் அடிப்படையானதுமான வகுப்பறைகளைச் சென்றடைகின்றனவா? என்பது இன்னும் கேள்விக்குறியே.

மாற்றங்கள் என நாம் குறிப்பிடுகின்ற அந்த மாற்றங்கள் பெரும்பாலும் விடய அறிவுக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன என்பதை நாம் மறந்தாலும் எமது சிறார்களின் கனமான புத்தகப்பைகள் எமது மறுப்பினை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது. விடய அறிவுத் தவிர்ந்த எமது கல்வித்துறை சார் ஏனைய மாற்றங்களைப் பொருத்த வரையில் அவை கொள்கையளவில் முடங்கிக்கிடக்கக் கூடிய ஒரு துரதிஷ்டவசமான நிலமையே இன்று காணப்படுகின்றது. ஆகக் கூடிப்போனால் ஆசிரியர் பயிற்சி வரைக்கும் அவை செல்லும். அதனைத் தாண்டி எமது வகுப்பறை களத்திற்குச் சென்று ஏற்படுத்திய மாற்றங்களை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆயின் அவற்றினை வகுப்பறைகளுக்கு கொண்டு செல்லக்கூடிய வல்லமைப்படைத்தவர் யார்? குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொள்கை வகுப்பவர்களுக்கோ கலைமாணி, முதுமாணி, கலாநிதிப்பட்டம் வரைப் பெற்ற ஆசிரிய கல்வியியலாளர்களுக்கோ இல்லாத சந்தர்ப்பமும் அதிர்ஷ்டமும் எமது ஆசிரிய குலத்திற்கே வாய்த்திருக்கிறது.

கொள்கை வகுப்பாளர்கள் முதல், பெற்றோர் வரை பெரும் எதிர்பார்புக்களை சுமந்து நிற்பதும் இந்த ஆசிரியர்களிடமே. எனவே, ஆசிரியர் நியமனம் என்பது சமூகத்தில் கௌரவமான ஒரு தொழில் கிடைத்து விட்டது என்று சந்தோசசப்படக்கூடிய ஒரு நிலமைப் போன்று மிகவும் பொறுப்பு வாய்ந்த, உயிர்களுடன் செயலாற்ற வேண்டிய ஒரு பணி என்பதை நாம் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும்.

“எனது தலை சுற்றுகின்றது. மாணவர்களின் கொப்பிகளைத் திருத்த வேண்டும், பதிவு புத்தகத்தில் விடயங்களைப் பதிய வேண்டும், அதிபர் கூறுகின்ற பட்டியல்களை தயாரிக்க வேண்டும், பெற்றோர் கூட்டம் நடாத்த வேண்டும், மாணவர்களை கட்டுபாட்டில் வைத்திருக்க வேண்டும்” என ஆசிரியர்கள் அலுத்துக் கொள்வதை நாம் கேட்டிருக்கின்றோம். இன்றைய கல்வி முறை எவ்வளவு சிக்கலானது என்பதை இது படம் பிடித்துக் காட்டுகின்றது. அதாவது எல்லா எதிர்ப்பார்ப்புக்களையும் ஆசிரியரிடம் ஒப்படைத்து விட்டு மாணவர்களுக்காக அவர்கள் ஆற்றவேண்டிய முக்கியப் பணிகள் என்ன? என்பது தொடர்பான தெளிவான உணர்வினை ஏற்படுத்தாதது விடுகின்றோம். சவாலான இப்பணியை எமது ஆசிரியர்கள் இது காலம் வரை பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் மேற்கொண்டு வந்துள்ளனர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. விண்வெளியிலும் சாதனை புரியக்கூடிய விஞ்ஞானிகளும் இவர்களது வெளியீடகளே என்பதிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது சேவை ஒன்றும் குறைத்து மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல என்பது வெள்ளிடை மலை.

ஒவ்வொரு பெற்றோரும் தாம் கொஞ்சிக் குலாவி அன்புக் காட்டி வளர்த்த தமது அருமைக் குழந்தையை அதன் ஆறாம் வயதில் ஒப்படைக்கும் போது எண்ணற்ற கனவுகளுடனேயே ஒப்படைக்கின்றனர். எந்த ஒரு பெற்றோரும் தமது குழந்தை, இடையில் பாடசாலையை விட்டு விலக வேண்டும் என்றோ, அவன் ஒரு கொலைகாரனாக, கள்வனாக வெளியேற வேண்டும் என்ற எண்ணத்திலோ பாசாலைக்கு அனுப்புவதில்லை. ஆசிரியரில் முழு நம்பிக்கை வைத்தே பாடசாலைக்கு அனுப்புகின்றனர். ஆயின் ஒருவரை வைத்தியராகவும் மற்றவரை ஊதாரியாகவும் உருவாக்குவது எந்த வகையில் நியாயம்? எமது பாடசாலைகள் அழகிய பூமரங்களுக்கு மாத்திரம் இடம்கொடுக்கக்கூடிய பேராதனைப் பூங்வாக அன்றி அனைத்து மரஞ்செடிகொடிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் சிங்கராஜ வனங்களாக மாற வேண்டும். அங்கு தான் வெற்றிகரமான கற்பித்தல் நிகழும்.

வெற்றிகரமான கற்பித்தல் எனும் போது ஒரு ஆசிரியர் தான் ஏற்கனவே மேற்கொண்டவை எவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெறுகின்றது? அதனை மேலும் முன்னேற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும்? ஆகிய இரண்டு கேள்விகளுக்குமான விடைகளைப் பெற்றுக்கொண்டு அதன்படி செயலாற்றும் போது வெற்றிகரமான கற்பித்தலை நோக்கி நகரக்கூடியதாக இருக்கும்.

உளவியல் மற்றும் சிறார்களுக்கான கற்பித்தல் நுட்பங்கள் (Pedagogy) தொடர்பில் தேர்ச்சிப் பெற்ற பேராசிரியர் Daniyal Putnam என்பவர் வெற்றிகரமான கற்பித்தலுக்கு அவசியமானவை தொடர்பாக குறிப்பிடும் போது வினைத்திறன் வாய்ந்த ஓர் ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடம் தொடர்பில் சிறந்த தேர்ச்சி, கல்வியின் அடிப்படைத் தத்துவங்கள் மற்றும் பிரயோகம் தொடர்பான அறிவு, வெளிப்படையான ஆளுமை ஆகியவற்றைப் பெற்றிருப்பார் எனக் குறிப்பிடுகின்றார்.

ஆசிரியர் பணியைப் பொறுத்த வரையில் ஆரம்ப வருடங்கள் மிகவும் முக்கியமானவையாகும். சிறந்த ஒரு ஆசிரியராக விளங்குவதற்கே அனைவரும் விரும்புவர். எனினும் சில ஆசிரியர்களைப் பொருத்தவரை தமது ஆரம்ப நாட்கள் எதிர்பார்ப்புகளுக்கு மாற்றமானதாக மகிழ்ச்சி கரமற்றவையாக மாறி விடுகின்றன. இதற்கான காரணம் பாட விடயம் தொடர்பில் ஆசிரியர்கள் தேர்ச்சியற்றவர்களாக இருப்பதே என நாம் கருதினாலும் உண்மையிலே இதற்கான காரணம் அனேகமாகப் பாட விடயம் அல்ல. மாறாக வகுப்பறைச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முகாமை செய்து கொள்ளக்கூடிய திறமையின்மையே ஆரம்ப நாட்களை மகிழ்ச்சிகரமற்றதாக்கி விடுகின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே ஆசிரியர்களைப் பொறுத்தவரை வகுப்பறையில் காலடி எடுத்து வைக்கும் முன்னர் தான் கற்பிக்கப் போகும் பாடம் தொடர்பில் தேர்ச்சிக்கு மேலதிகமாக கற்றல் கற்பித்தல் செயற்பாடு தொடர்பில் குறிப்பிட்டளவு தெளிவு பெற்றிருக்க வேண்டும்.

கற்பித்தல் என்பது இருவழிச் செயற்பாடு என அறிந்து வைத்துள்ளோம். அது ஏன் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது? ஆசிரியரும் மாணவரும் தொடர்பின்றி, மாணவர்களுக்கு கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாத, ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னூட்டல் வழங்காத அதாவது இருவழி செயற்பாடற்ற எந்தவொரு வகுப்பறையும் வெற்றிகரமானதல்ல என்பது தெளிவாகின்றது.

சிறந்த ஆசிரியர் என்பது பிறப்புரிமையல்ல. அவர்கள் எவறாலும் உருவாக்கப்படுபவர்களும் அல்லர். மாறாக அவர்கள் தாமாக தம்மை சிறந்த ஆசான்களாக உருவாக்கிக் கொள்கிறார்கள். எந்த ஒரு ஆசிரியருக்கும் வினைத்திறன் மிக்க ஆசிரியர் ஆவது எட்டா கனியல்ல. நீங்கள் எதற்கும் தயங்காத தைரிசாலியாக அல்லது மிகவும் கூச்சசுபாவமுடையவராக இருந்தாலும் வினைத்திறன் வாய்ந்த ஓர் ஆசிரியராவதற்கு அவை தடைகளல்ல.

நீங்கள் அறிந்திருக்க வேண்டியது, பெறும் வெற்றிகளில் இருந்தும் விடும் தவறுகளில் இருந்தும் எவ்வாறு பாடம் கற்றுக் கொள்வது என்பதேயாகும். வெற்றித் தோல்வி இரண்டின் மூலமும் நாங்கள் கற்றுக்கொள்ள கூடியதாக இருப்பதுடன் எமது சுய அனுபவங்கள் மூலம் மாத்திரம் நாம் கற்பதற்கு காத்திருப்பின் எமது ஆயுட்காலம் அதற்கு அவகாசமளிக்காது. ஒரு முட்டாள் தனது அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்கிறான். ஒரு புத்திசாலி எப்போதும் அடுத்தவர்களின் அனுபவங்களிலிருந்தே கற்கிறான்.

ஒரு செயற்பாட்டில் தொடர்ச்சியாக ஈடுபடுவதன் மூலம் அதாவது ஒரு ஆசிரியரைப் பொருத்தவரையில் கற்பித்தல் நடவடிக்கைகயில் தொடர்ச்சியாக ஈடுபடுவதன் மூலம் அவர் பூரணமடைகின்றார் என நாம் நம்பிக்கொண்டிருந்தாலும் தொடர்ச்சியாக பல வருடங்கள் கற்பித்தல் பணியில் ஈடுபட்டிருந்தாலும் வினைத்திறனான கற்பித்தலை மேற்கொள்ள முடியாத ஆசிரியர்களை நாம் எமது பாடசாலைகள் கட்டமைப்பினுள் காண்கின்றோம். அனுபவங்கள் முக்கியமானவை எனினும் அது மாத்திரம் போதியதன்று.

தெளிவுடனும் உணர்வுடனும் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் போது ஓர் ஆசிரியர் வினைத்திறன் வாய்ந்த ஆசிரியராக மாறுவதற்கு அவை துணை புரியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்தியாவின் முன்னால் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் ஆசிரியர் சமூகத்தை நோக்கி கூறிய பிரபல்யமான அந்த வார்த்தைகள் உங்கள் சிந்தனைக்காக.

"ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு வகையில் தனித்துவமானவன். இந்த உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் ஒவ்வொரு மாணவனுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பக்கத்தை இந்த உலகினையே படிக்க வைப்பது ஆசிரியர்களாகிய உங்கள் கைகளில் தான் தங்கியுள்ளது."

உசாத்துணைகள்

கல்வித் தொழிநுட்பம் (2009) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
கல்வி உளவியல் (2009) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
அகவிழி 2013
அகவிழி 2014

••••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிறிதளவே அதிகமானது போதுமானது"

ஆ.கணேஷ்வரி **B A, PGDE**
**Dip.in.Teaching (Merit)**
**மமா/வ/ கிருஸ்ணன் ஜுனியர் தமிழ் வித்தியாலயம்**

என்ன சிறிதளவு? என்ன அதிகமானது? என்ன போதுமானது? என்று நீங்கள் சிந்திப்பது புரிகின்றது. ம்…….. சிந்தனை மாறவேண்டும் முதலில் நாம் மாற வேண்டும் பின் குழந்தைகளின் எதிர்காலத்தை நாம் மாற்ற வேண்டும்.

"சிறிதளவே அதிகமானது போதுமானது" என்பது பின்லாந்து நாட்டின் கொள்கை. இல்லங்கள் கூட சிறியவை, வசதியானவை, எளிமையானவை. இதையே கல்விப் புலத்திலும் பின்பற்றுகின்றனர். வெற்றியும் கண்டுள்ளனர்.

பின்லாந்து கல்வித்துறையில் சிறந்து விளங்கும் ஒரு கல்வி வல்லரசாக பாராட்டப்படுகின்றது. கல்வித்துறையில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. மிகப்பெரிய பொருளாதார இராணுவ வல்லரசு நாடுகள் அனைத்தும் பின்லாந்து கல்வி முறையில் கற்றுக்கொள்ள வேண்டியவைகளை ஆராய்ந்து வருகின்றன. உலக நாடுகள் பங்கு பற்றும் சர்வதேச பரீட்சையான PISA பரீட்சையில் பின்லாந்து மாணவர்களே தொடர்ச்சியாக முதலாம் இடம் பெற்றுள்ளனர். அத்தோடு சகல மேலைத்தேய மாணவர்களின் சாதனையையும் மிஞ்சியதாக இவர்களின் சாதனை அமைந்துள்ளது.

**அப்படி என்னதான் உள்ளது பின்லாந்து கல்வி முறையில்!**

❖ **பின்லாந்தில் 07 வயதில்தான் ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லத் தொடங்குகின்றது.**

இங்குபோல் பிஞ்சுக் கன்றை அரும்பு வருவதற்குள் வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதில்லை ஏழுவயது வரை இயற்கையை பார்த்து அவனாக கற்றுக்கொள்கின்றான்.

பூக்களின் வண்ணத்தில்
பறவைகளின் ஒலியில்
ஆறுகளின் சலசலப்பில்…..

❖ **குறைந்த கற்றல் நேரம்**

பாடசாலை சென்ற மூன்று ஆண்டுகளில், ஆண்டின் பாதி நாட்கள் தான் பள்ளிக்கூடம். மீதி நாட்கள் விடுமுறை. பள்ளியும் 4 மணித்தியாலங்கள் மாத்திரமே இயங்குகின்றன. அந்நேரத்திலும் இசை, ஓவியம், விளையாட்டு போன்ற பிற கலைகளுக்கே அதி முக்கியத்துவம்.

❖ **தாய் மொழிக் கல்வி**

பிள்ளைகளுக்கு சிந்தனை அறிவு என்பது தாய் மொழியில் வளர்க்கப்படுகின்றது. கௌரவத்திற்காக, ஒழுக்கத்திற்காக, பணத்திற்காக, அங்கு தனியார் பாடசாலைகள் மற்றும் இன்டர் நெசனல் பாடசாலைகள் இயங்குவதில்லை. வேற்று மொழியிலும் கல்வி போதிக்கப்படுவதில்லை.

❖ **பாடசாலைகள் அனைத்தும் அரசுமயமாக்கப்பட்டது.**

கோடீஸ்வரரோ, நடுத்தரவர்க்கமோ ஏழையோ அனைவரின் குழந்தையும் ஒரே பள்ளியில்தான் கற்க வேண்டும். தனியார் கல்விமுறைமை அங்கு இல்லை. டியுசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அருவருப்பான கலாச்சாரம் அங்கு அறிமுகமே இல்லை. (எனவேதான் அங்கு 94% மாணோர் உயர் கல்வி தகுதி பெறுகின்றனர்)

❖ **தரம் பிரிக்கும் கலாசாரம் கிடையாது**

13 வயது வரை தரம் பிரிப்பதில்லை கற்றலில் போட்டி கிடையாது மனவுளைச்சல் கிடையாது பெற்றோரிடம் ரிப்போர்ட் கார்டில் கையொப்பம் இட்டுவரச் சொல்லும் வன்முறை கிடையாது.

❖ **வீட்டுப்பாடம் கிடையாது**

30 நிமிடத்திற்குரிய வீட்டு வேலை மாத்திரம் பிள்ளை செய்துவர வேண்டும். பிள்ளைக்கு எந்த பாடம் பிடிக்கிறதோ அதில் விரும்பியதை அவர்களே செய்துவரலாம். மனனம் செய்து ஒப்புவிக்கும் முறைமையும் இங்கில்லை செயல் முறை கல்விக்கே முக்கிய இடம் (சமைத்தல், சுத்தம் செய்தல்) மாணவர்களுக்குள் போட்டியை உண்டாக்காமால் குழுவாக இணைந்து வெற்றி காணும் வழிமுறைகளே போதிக்கப்படுகின்றன.

❖ **ஓய்வறை ஒழுங்குமுறை**

ஒவ்வொரு பள்ளியிலும் கட்டாயமாக ஒரு ஓய்வறை உள்ளது பிள்ளைக்கு படிக்க விருப்பமின்மை, சோர்வு ஏற்படின் பிள்ளை அங்கு சென்று ஓய்வெடுக்கலாம்.

❖ **பொது பரீட்சை முறை இல்லை**

இலங்கை கல்வி முறையின் நோக்கமே பொது பரீட்சை. பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகள் யாவும் பொது பரீட்சையை நோக்காக கொண்டே ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் கல்வியின் உயர்மட்ட நோக்கங்கள் மறுக்கப்பட்டுள்ளன. அங்கு பாட ஆசிரியர்களே வினா பத்திரங்களை தயாரிக்க வேண்டும்.

பின்லாந்து வெற்றியின் மிக முக்கிய அம்சம்....

❖ **கௌரவமிக்க, அதியுயர் அந்தஸ்த்து மிக்க தொழிலாக ஆசிரியத்துவம் போற்றப்படுகின்றமை.**

இலங்கையில் பிறக்கும் பிள்ளைகளுக்கு வைத்தியர், பொறியியலாளர் ஆவது இலட்சியம் அதுபோல பின்லாந்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் கனவாக ஆசிரியர் தொழில் காணப்படுகின்றது.

உயர் தகுதியுடையோரே ஆசிரியராக நியமிக்கப்படுகின்றனர். குறைந்தது பட்ட மேற்படிப்பை பூர்த்தி செய்திருக்க வேண்டும் ஆசிரியர் பயிற்சியில் 07 வருடங்கள் செலவிட வேண்டும். தேசிய அரசியல் திட்ட சான்று, தீயணைப்பு, தற்காப்பு பயிற்சி, முதலுதவி போன்ற சான்றிதழ்களை பெற்றிருக்க வேண்டும். அனுபவம் முதிர்ச்சி அடிப்படையில் ஆசிரியர்களுக்கு வருமானம் உயரும். நான்கு பாட வேளைகள் மாத்திரமே கற்பித்தலில் ஈடுபட வேண்டும் மிகுதி நேரங்களில் ஆசிரிய வாண்மையை விருத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

பெற்றோர்கள் ஆசிரியர் பணியில் தலையிடுவதில்லை. பரீட்சை புள்ளிகளையும் பெறுபேறுகளையும் வைத்து ஆசிரியர்களையும் பாடசாலைகளையும் மதிப்பிடும் பழக்கம் பின்லாந்தில் இல்லை. சிறந்த பாடசாலை என்ற நோக்கம் எவருக்கும் இல்லை. எல்லா பாடசாலைகளும் உயர்தரமான கல்வியை வழங்குகின்றன.

ஆகவே ஆசிரியர்களே பெற்றோர்களே.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கு நல்ல சிந்தனையை ஏற்படுத்துங்கள். பிள்ளைகளை குறை கூறாதீர்கள். பாராட்டுங்கள். அலட்சியம் செய்யாதீர்கள். யாருடனும் ஒப்பிட்டு பேசாதீர்கள். வாழ்வில் வெற்றி பெற்றவர்களைப் பற்றி அதிகம் பேசுங்கள். எல்லா துறைகளிலும் சிறந்தவர்களைப் பற்றி பேசுங்கள். மலர் நிறைந்த பாதையை காட்டினால் முள் நிறைந்த பாதையை புரிந்து கொள்வார்கள்.

சிறப்பாக கற்பதற்கு அதிக நேரம் செலவிட வேண்டிய அவசியமில்லை. அதிக நேரம் கற்பித்ததால் சித்தி பெற்றார்கள் என்ற எந்த ஆய்வு முடிவுகளும் இல்லை. ஆதாரங்களும் இல்லை. அதிகமான கற்பித்தல் முறைகள், முயற்சிகள், பரீட்சைகள் வீட்டுப் பணிகள், நீண்ட நேர வகுப்புகள் என்பன மன அழுத்தம், விரக்தி என்பவற்றுக்கே இட்டுச் செல்கின்றது எனவே

"சிறிதளவே அதிகமானது போதுமானது"

உசாத்துணை
உலகின் சிறந்த கல்வி முறைகள்
பின்லாந்து கல்வி முறைமை
} கூகுல் தேடல்

••••


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுத் திருட்டின் சில மேற்கோள்கள்

தி. ருசாந்தன் BA, (R) Dip in. Teach
ம.மா.வ எனிக் தமிழ் வித்தியாலயம்.

அறிவுத் திருட்டு (Plagiarism) எனும் சொல் எழுத்துத் துறை சார்ந்த திருட்டுகளை சுட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். இவ்வாறு சொன்னவுடன் எழுத்துக்களைத் திருட முடியுமா என்ற கேள்வி எழலாம். எழுத்து வடிவம்பெறும் ஒவ்வொன்றும் ஒருவரின் அனுபவம், கற்றல் பேறு, சிந்தனையாற்றல் ஆகியவற்றின் வழியாகத் தோன்றிய அறிவுசார்ந்த சொத்தாகும். அதனை பிறர் சுய லாபத்திற்காகப் பயன்படுத்தும்போது திருட்டாகவே கருதப்படுகிறது. இவ்வாறு அறிவுத் திருட்டுக்கு நெருங்கியத் தொடர்புடையத் துறைகளாக கல்வித் துறை மற்றும் பத்திரிக்கை துறை ஆகியவை திகழ்கின்றன. இவ்விரு துறைகளிலேயே அதிக அறிவுத் திருட்டுகள் நிகழ்வதையும் மறுப்பதற்கில்லை..

**அறிவுத் திருட்டு என்றால் என்ன?**

அறிவுத் திருட்டு எனப்படுவது ஒருவரின் கருத்து, மொழி மற்றும் தகவல்களைத் திருடுவதாகும். எல்லாவித ஆய்வுகளுக்கும் மற்றவருடைய கருத்துக்களை படிக்க, மீள்பார்வை செய்ய, தேவைப்படின் சொந்த படைப்பில் பதிவு செய்ய அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், அவ்வாறு மீள்பதிவு செய்யும்போது அம்மூலப் பதிவின் உரிமையாளரின் உழைப்பையும் கண்டுபிடிப்பையும் மதிக்கும் வகையில் மேற்கோள் காட்டுவது அவசியம். அப்படி செய்யத் தவறும் தருணத்தில்தான் அறிவுத் திருட்டு நிகழ்கிறது.

**எவையெல்லாம் அறிவுத் திருட்டு என்று வகைப்படுத்தப் படுகின்றன?**

01. மற்றவருடைய கருத்தை தனது சொந்தக் கருத்து என்று முன்வைப்பது
02. மற்றவருடைய சொற்களை பயன்படுத்திவிட்டு மேற்கோள் காட்டாமல் விடுவது
03. மற்றவருடைய கருத்தைப் பொழிப்புரை செய்து மேற்கோள் காட்டாமல் விடுவது
04. மற்றவருடைய ஆய்வை தன்னுடையதாக காட்டிக் கொள்வது
05. பிறர் செய்த ஆய்வை தான் மேற்கொண்டதாக கூறி பாசாங்கு செய்வது

**அறிவுத் திருட்டினால் ஏற்படும் விளைவுகள்**

அறிவுத், என்பதன் பொருள் விளக்கத்தை தெரிந்து கொண்டவுடன் அதனைச் செய்வதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி விளக்க வேண்டுய முக்கிய கடப்பாடு இங்குள்ளது. குறிப்பாக மாணவ, ஆய்வியலாளர்கள் மட்டுமின்றி, ஆசிரியர்கள், முதுகலை பட்டபடிப்பு மாணவர்கள், விரிவுரையாளர்கள் என பலரும் இந்த அறிவுத் திருட்டில் மூழ்கிப்போய் கிடப்பதால் இதன் விளைவுகளைப் பற்றி முதலில் கூறுவது அவசியமாகும்.

(1) **நன்மதிப்பு கெடும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுத் திருட்டு மேற்கொள்ளப் பட்டிருப்பது உறுதி செய்யப்படும் நிலையில் ஒரு ஆய்வியலாளர் இதுவரை பெற்றிருக்கும் சாதனைகள் அனைத்து கேள்விகுட்படுத்தப்படும். இனி தொடர்ந்து அவர் வேறெந்த ஆய்வுகளை எத்துணை சிறத்தை எடுத்து படைத்தாலும் சந்தேகக் கண்ணுடனேயே பார்க்கப்படும். ஆசிரியர் அல்லது விரிவுரையாளர் போன்ற உயர் பதவிகளில் இருப்பவர்களின் தொழில்சார்ந்த நன்மதிப்பு கெட்டு மாணவர்களிடன் மோசமான கருத்தாக்கத்தை உருவாக்கி விடும். மேலும் தொழில் சார்ந்த உயர்வுகள், பதவிகள் அனைத்தும் கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்படும்.

(2) **அங்கீகாரங்கள் மீட்டுக்கொள்ளப்படும்**

குறிப்பிடத்தக்க ஆய்வுக்கு ஏதேனும் விருதுகள் அல்லது பரிசுகள் வழங்கப்பட்டிருந்தால் அவை உடனடியாக மீட்டுக்கொள்ளப்படும். பல்கலைக் கழக மாணவர்களாக இருந்தால் அவர்களின் இளங்கலை, முதுகலைப் பட்டங்கள் மீட்டுக்கொள்ளப்படும். சோதனை நிமித்தமாக கொடுக்கப்பட்ட ஆய்வில் அறிவுத் திருட்டு மேற்கொள்ளப் பட்டிருப்பது கண்டறியப்பட்டால் உடனடியாக அச்சோதனையிலிருந்து மாணவர்கள் நீக்கப்படுவார்கள்.

(3) **மிகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள்**

அறிவுத் திருட்டு 'கிரிமினல்' வகை சார்ந்த குற்றமாதலால் அதன் சட்ட நடவடிக்கைகள் யாவும் சற்று கடுமையானதாகவே இருக்கும். முதலில் படைப்பாளர் தன் படைப்பின் காப்புரிமையை (copyright) இழந்து விடுகிறார். மூலப் படைப்பின் உரிமையாளர் அறிவுத் திருட்டு செய்தவரின்மீது வழக்கு தொடுத்து தண்டனைப் பெற்றுத் தரவும் இழப்பீட்டுத் தொகை பெறவும் முடியும். பிழைப்புக்காக எழுத்துப் பணியில் ஈடுபடுபவர்கள் (எழுத்தாளர்கள்இ பத்திரிக்கையாளர்கள்) அறிவுத் திருட்டு தொடர்பான செயல்பாடுகளில் சற்று விழிப்புடனே இருப்பது நல்லது.

இனி தொடர்ந்து அறிவுத் திருட்டின் வகைகளைக் காண்போம். பெரும்பாலானவர்கள் தாங்கள் அறிவுத் திருட்டைச் செய்துக் கொண்டிருப்பதை உணராமலேயே தொடர்ந்து அத்தவற்றைச் செய்கிறார்கள். எனவே எவையெல்லாம் அறிவுத் திருட்டாகக் கூறப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதன்மூலம் இனிவரும் காலங்களில் அத்தவறு நிகழாமல் இருப்பதை உறுதி செய்துகொள்ள முடியும்.

ஐந்து வகை அறிவுத் திருட்டுகள்

1. மூலக்கருத்தை அப்படியே தன் படைப்பில் பயன்படுத்துதல்
2. மூலத்திலிருந்து பெறப்பட்ட வாக்கியங்களை மாற்றி அமைத்தல்
3. வடிவத் திருட்டு
4. உருவகத் திருட்டு
5. கருத்து திருட்டு

அறிவுத் திருட்டை தவிர்ப்பதற்கு ஏதுவான சில அடிப்படை அணுகுமுறைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வியலாளர்கள் அல்லது மாணவர்கள் அறிவுத் திருட்டைத் தவிர்ப்பதற்கு சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்கிற புரிதல் முதலில் அவசியமாகிறது. இப்புரிதல் ஏற்படும்போது மட்டுமே எந்தவொரு தடையும் இன்றி அவர்களால் கற்றலில் முழுமையாக ஈடுபட முடியும். இனி தொடர்ந்து, அறிவுத் திருட்டை களைவதற்கும் மேற்கோள் குறிப்புகளை இடும் திறனை வளர்த்துக் கொள்வதற்கும் உதவும் சில அடிப்படை அணுகுமுறைகளைக் காண்போம்.

1. மேற்கோள் செய்வதற்கு பயன்படுத்தும் தரவுகளை ஒழுங்குபடுத்துதல் – முதன்மைத் தரவுகள், தேவையான இதர தரவுகள், தேவையற்ற தரவுகள் என பிரித்து வைப்பது தேவைப்படும்போது அவற்றை சுலபமாக இனங்கான உதவும்.

2. தரவுகளை வாசிக்கத் தொடங்கும்போதே அதன் ஆசிரியர் பெயர், ஆண்டு, தலைப்பு, பதிப்பகம், பக்கம் ஆகியவற்றை அடிக்கோடிட்டு அல்லது வண்ணமிட்டுக் கொள்ள வேண்டும். இணையத்திலிருந்து எடுக்கப்பட்ட தரவுகளுக்கு அதன் இணைய முகவரி, மற்றும் அத்தரவு வாசிக்கப்பட்ட நாள்/பதிவிரக்கம் செய்யப்பட்ட நாள் ஆகியவற்றை அடிக்கோடிடுதல் அவசியம்.

3. எழுதத் துவங்கும் முன் சரியான மேற்கோள் குறிப்பு வடிவத்தை தேர்வு செய்ய வேண்டும்.

4. ஒவ்வொரு முறை எழுதும்போதும் மேற்கோள் குறிப்பு விவரங்களைத் தேர்வு செய்யப்பட்டச் சரியான வடிவில் எழுதுவதை உறுதி செய்ய வேண்டும். (அடிக்கடி சரிபார்த்துக்கொள்ள ஏதுவாக தேர்ந்தெடுத்த வடிவத்தை நகல் எடுத்து வைத்துக்கொள்ளலாம்).

5. ஆதார நூற்பட்டியல் மென்பொருளில் (Bibliographic software) மேற்கோள் குறிப்புகளை உடனுக்குடன் பதிவு செய்து கொள்ளலாம். இவ்வகை மென்பொருள்களை பயன்படுத்தத் தெரியாதவர்கள் தனியாக ஒரு தாளில் முழுமையாக குறிப்பெழுதி வைத்துக் கொள்ளலாம்.

உலகின் மற்ற மொழிகளில் மிகத் திட்டவட்டமாக பயன்படுத்தபட்டுவரும் அல்லது பின்பற்றப்படும் பலவற்றை நாம் இன்னமும் அறிந்து வைத்திருக்காமலே இருப்பதும் அலட்சியம் செய்வதும் நமது பின்னடைவையே காட்டுகின்றது. அவற்றுள் ஒன்றான அறிவுத் திருட்டு தொடர்பாக இதுவரை நமக்கிருக்கும் முன்னறிவையும்இ தெரிந்துகொள்ள நாம் மேற்கொண்ட முயற்சிகளையும் சற்று பரிசோதனைச் செய்து பார்த்தால் நமது நிலை என்னவென்று தெரிந்துவிடும். தரமான படைப்புகளையும் ஆய்வுக் கட்டுரைகளையும் உருவாக்க, அவற்றை பலரும் படிக்க, மீள்பார்வை செய்ய விரும்பும் ஒவ்வொரு ஆய்வியலாளனும் அறிவுத் திருட்டு தொடர்பான விழிப்புணர்வுடன் இருந்து அதை தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

**தரவிறக்கம் (Download)**

••••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால விருத்திக்கான ஆரம்பக்கல்வி

செ.தியாகராஜ் Dip. in teaching, BA (R)
மமா/வ/ பிளேலோமவுண்ட்
தமிழ் வித்தியாலயம் உடப்புசல்லாவ

ஒரு கட்டிடமானது சிறப்பானதாக நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்க வேண்டுமாயின் அக்கட்டிடம் உருவாவதற்கு அடிப்படையாகிய அத்திவாரமானது பலமானதாகவும் சிறப்பானதாகவும் இருக்க வேண்டும். சமூகமானது நல்ல நிலைக்கு வரவேண்டுமானால் ஆரம்பக்கல்வி எனும் அத்திவாரம் உறுதியானதாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் நல்ல தொழில் துறைகளில் பிரகாசிக்க வருகின்ற நாட்டின் முதுகெலும்புகளாகவும் எதிர்கால சிற்பிகளாகவும் விளங்குகின்ற சிறுவர்களுக்கு அவர்களுடைய சிறுவயதிலேயே சிறந்த கல்வியைப் புகட்டுவதனூடாகவே வளமான எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

அந்த வகையில் நமது நாட்டை நேசிக்கும் இளஞ் சந்ததியினரை உருவாக்க வேண்டும். அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையானது வளமானதாக இருக்க வேண்டும். அதற்கு எதிர்கால இளஞ்சமுதாயத்தினரிடம் தேசிய பிணைப்பினையும் தேசிய ஒருமைப்பாட்டினையும் தேசிய முழுமைப்பாட்டினையும் வளர்க்க வேண்டும். எதிர்காலத்தில் வியாகப்பாங்குடைய சமூக நீதியை நிலை நிறுத்த வேண்டும். கண்ணியமும் சுய நிறைவம் ஏக காலத்தில் கொண்டமைந்த தொழில் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். எதிர்காலத்தில் மனித வள விருத்தியில் யாவரும் பங்கு கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் காம்பு உணர்வையும் உறுதிப்பாட்டு உணர்வையும் எய்தும் வகையில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமையைச் சமாளிக்கும் தகைமைகளை வளர்க்க வேண்டும் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருப்பதைப் போன்றதொரு விரைவாக மாறிவரும் உலகில் மாறுகின்ற நிலைமைகளுக்கு இணங்க வாழக்கற்றல் வேண்டும்.

எனவே இவ்வாறு வாழ்க்கையின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குச் சிறந்த ஆளுமை மிக்க பிரஜைகளை உருவாக்குவதற்கு அடித்தளமிடுவது ஆரம்பக்கல்வியாகும். ஆரம்பக் கல்வியானது தரம் 1-5 வரை வியாபித்துச் செல்கின்றது. ஐந்து ஆண்டுகளைக் கொண்ட ஆரம்பக் கல்விப் புலமானது பாடவிருத்தியினதும் ஒழுங்கமைப்பு நடவடிக்கையினதும் வசதி கருதியும் முதன்மை நிலை I, முதன்மை நிலை II, முதன்மை நிலை III, என பிரிக்கப்பட்டுள்ளது. முதன்மை நிலை I இல் தரம் 01 உம் தரம் 02 உம், முதன்மை நிலை II இல் தரம் 03 உம் தரம் 04 உம், முதன்மை நிலை III இல் தரம் 05 உம் உள்ளடங்குகின்றன.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பார்கள் எனவே நாம் இளமையிலே மாணவர்களுக்கு புகட்டுகின்ற கல்வியும் அகக்கல்வியின் மூலம் ஊட்டுகின்ற நல்லொழுக்கமும் பசுமரத்தாணி போல அவர்களது மனதில் அழியாது பதிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மட்டுமன்றி எல்லா நாடுகளிலும் ஆரம்ப கல்வியானது ஒரு கட்டாயக்கல்வியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பக்கல்வி ஆசிரியரானவர் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். அதாவது திட்டமிடப்பட்ட விளையாட்டுக்கள், ஆடல்பாடல்கள் மற்றும் செயற்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்கிய கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர் பாடசாலையில் பிரவேசிக்கும் பிள்ளையைச் சரியாக இனங்கண்டு அதற்கேற்ப கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிட வேண்டும். மேலும் பிள்ளையை சிந்திப்பதற்கு கேள்வி கேட்பதற்கு, தீர்வுகளை கண்டறிவதற்கு, உற்று நோக்குவதற்கு, வெளிப்படுத்துவதற்கு, ஆக்குவதற்கு, இரசிப்பதற்கு, வழிப்படுத்திக் குதூகலமாகவும், ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடனும் கற்பதற்கான சந்தர்ப்பங்களைத் திட்டமிட வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்களைப் பின்பற்றுவதற்கும் கலாசாரப் பண்புகளை மதிப்பதற்கும் தேவையான சமூகத்திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நமது கலாசாரத்திற்கு அப்பாற்பட்ட கலாசாரங்கள் கருத்துக்களைக் கொண்டவர்களோடு முரண்படாது மதிப்புக் கொடுத்து அந்நியோன்னியமாக வாழ்வதற்கும் இலங்கையர் என்ற உயரிய மனப்பாங்கையும் வளர்த்துக் கொள்வதற்கும் வழிப்படுத்த வேண்டும்.

எனவே இத்தகைய பண்புகளை அல்லது அடைவுகளை அடிப்படையாக வைத்து ஒரு பிள்ளையின் வாழ்வில் உறுதியான அடித்தளம் ஒன்றை இடுவதற்கு ஆரம்பக்கல்வியே துணைப்புரிகின்றது எனலாம். இத்தகைய சிறந்த கல்வியினூடாக மாணவர்களை சிறுவயதிலேயே பக்குவப்படுத்தி அவர்களுக்கு நல்ல விழுமியப் பண்புகளையும் நாட்டின் மீது பற்றினையும் வளர்க்கச் செய்து நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்குவதன் மூலம் சிறந்த ஓர் வளமான எதிர்காலத்தையும் அபிவிருத்தியினையும் நாட்டின் முன்னேற்றத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வோம்.

ஆரம்பப் பருவத்தில் தாய்மொழி, கணிதம், சுற்றாடல் சார் செயற்பாடுகள் போன்ற பிரதான பாடங்கள் ஊடாக பிள்ளைகளுக்கு வேண்டிய அறிவுடன், செயன்முறைத்திறன்களும் குறைவின்றி விருத்தி செய்யப்படும். அறிவை கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் அமைக்கும் வகையில் விடயங்களை திரட்டுதல், விடயங்களை தெரிவு செய்தல், அவற்றை வகைப்படுத்தல்,, உயரிய சந்தர்ப்பத்தில் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கான பயிற்சியும் ஆரம்ப வகுப்புகளில் வழங்கப்படுகின்றது. சமூக வளர்ச்சிக்குரிய அடித்தளமும் ஆரம்ப வகுப்புகளிலே உருவாக்கப்படுகின்றது. பொதுமையை ஏற்றுக்கொள்ளல், பகிர்ந்துக்கொள்ளல், நற்புணர்வு, கருணை, பரிவு போன்ற பண்புகள் குழுச் செயற்பாடுகள் மூலம் வளர்ச்சியடையும், சித்திர ஆற்றல், பேச்சாற்றல், அபிநயங்கள், மூலம் கருத்துத் தெரிவிக்கும் ஆற்றல் போன்ற உள்ளார்ந்த ஆற்றல்கள் விருத்தி செய்து கொள்ளும் வாய்ப்பு ஆரம்ப கல்வியினூடாகக் கிடைக்கின்றது.

எனவே அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், சகவாழ்வு, உள்ளார்ந்த, ஆற்றல்கள், அனைத்தையும் வளர்க்கத்தக்க வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையை மாற்றி அமைத்தல் ஒவ்வோர் ஆரம்பப் பாடசாலையினதும், ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களினதும் கட்டாயக் கடமையாகும். எனவே அர்ப்பணிப்பு மிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களிடம் கற்பதற்கு வாய்ப்பு பெற்றவர்களே இவ்வுலகின் பெரும் பாக்கியசாலிகளாவர்.

"சரியான ஆரம்பம் சிறப்பான முடிவு"

**உசாத்துணைகள்**


- கல்வி உயர்கல்வி அமைச்சு (2000) ஆரம்பக் கல்விக்காய் ஐந்து வருடத்திட்டம் இலங்கை 2000-2004, பத்தரமுல்ல
- பொதுக்கல்விக்குரிய ஜனாதிபதி அரசு செயற்குழு (1997)


• • • •


No.53/A, Police Road
Bazaar
Nelgamoya.
Tel:052-2265777,072-4554955



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ampiga Jewels

**Jewels Manufactures & Designers**



**No.53/A,Police Road**
**Ragala Bazaar**
**Halgranoya.**
**Tel:052-2265777,072-4554955**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்டத்துறை ஆசிரியர் நியமனங்களும் பட்டப்படிப்பும் ஒருபார்வை....

**மா. சிவபாலன்,**
**ம.மா/வ/மகாஊவா.த.வி,**
**வலப்பனை.**

ஆசிரியம் என்ற பதம் மிகவும் போற்றுதற்குரியதும் மேலானதுமான ஒரு பணியென எல்லோராலும் கூறப்படுகின்றது. தத்தம் கருத்துக்களுக்கேற்ப ஆசிரிய பணியினைப் பற்றி பல்வேறு சஞ்சிகைகளின் மூலமாகவும் பத்திரிக்கைகளின் வாயிலாகவும் கட்டுரைகள் தொடர்ந்து வந்தவண்ணமுள்ளன. அவற்றின் தலையான ஒன்றாக குறிப்பிடக்கூடியது ஆசிரியர் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தாகும். வளர்த்துக்கொள்ளல் என்பது பரவலான ஒருவிடயமாக இருந்தாலும் இதில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயம் என்னவெனில் கல்விமட்டத்தில் தன்னை வளர்த்துக்கொள்ளல் என்பதாகும். இதனை பட்டப்படிப்பின் மூலமாகவே அடைந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

பட்டப்படிப்பெனும் போது குறித்ததுறையில் பட்டதாரியாக தொழிற்படல் என்பதாகும். இலங்கைகல்வித் திட்டத்தின்படி கலைமாணி (BA), வணிகமாணி (B.Com), விஞ்ஞானமாணி (B.sc), கலைமுதுமாணி (MA), கல்விமாணி (B.ed), கல்விமுதுமாணி (M.ed), விஞ்ஞானமுதுமாணி (M.sc) போன்றதுறைகளைக் குறிப்பிடலாம்.

இலங்கையின் பெருந்தோட்டத்துறை ஆசிரிய நியமனங்களுக்கும் பட்டப்படிப்பின் பாடநெறிகளுக்கும் பாரியளவான வித்தியாசங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக நோக்குமிடத்து துறைசார் கல்விக்கான வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுவதாகவே அறியமுடிகின்றது. அதுமட்டுமன்றி ஒரு குறித்த இலக்கினை அடைந்து கொள்வதற்கு அதிகளவான கால எல்லைகள் தேவைப்படுகின்றன. இதுமட்டுமன்றி ஒரு குறித்த ஆசிரியர் பட்டப்படிப்பினை நிறைவுசெய்து கொள்வதில் பல்வேறு சுமைகளை தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. வயது, வாழ்க்கைச்சுமை, நிதிநெருக்கடி கடமையாற்றுகின்ற பாடசாலைக்கும் வாழ்விடத்துக்கு மிடையிலான தூரம் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதனை ஒரு சிறு கண்ணோட்டத்தில் நோக்குவோமாயின் பெருந்தோட்டத்துறை பாடசாலைகளில் ஏறத்தாழ 30000 த்திற்கும் 32000 த்திற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையுடைய ஆசிரியர்கள் தமிழ் மொழி பாடசாலைகளில் சேவை புரிவது அண்மைக்கால தகவல்களிலிருந்து அறியமுடிகின்றது. இவற்றில் சுமார் 28000 த்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பெருந்தோட்டதுறை ஆசிரிய நியமனங்களுக்குட்பட்டவர்களாக உள்ளனர். இவ்வெண்ணிக்கையில் பல்வேறுபிரிவுகள் உள்ளடங்கியிருந்தாலும் சுமார் கணக்கிட்டுக் கூறக்கூடியவர்கள் மட்டுமே பட்டதாரி ஆசிரியர்களாக உருவாகியுள்ளனர். ஏனையோருக்கு இதனை ஏன் அடையமுடியவில்லை? என ஆராய்கையில் முயற்சியின்மை, அக்கறையின்மை போன்றவைதான் காரணமென விமர்சகர்கள் தத்தம் கருத்துக்களை முன்வைத்தாலும் அதனையும் தாண்டி இந்த மைல்கல்லைத் தாண்டுவதற்கு தடைகளாக பல்வேறு காரணிகள் உள்ளதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான பெருந்தோட்டத்துறை ஆசிரிய நியமனங்கள் க.பொ.த(சா/த) பரீட்சை பெறுபேறுகளின் படியே வழங்கப்பட்டது மட்டுமல்லாது அந்நியமனங்கள் யாவும் குறிப்பிட்ட பாடநெறியினை முதன்மைப்படுத்தியதாக அமைந்திருக்கவில்லை. இதனால் அந்நியமனங்களுக்கு உட்பட்டவர்களால் குறிப்பிட்ட பாடநெறியினை முதன்மைப்படுத்தி பட்டக்கல்வியினை நிறைவு செய்து கொள்ளமுடியுமான சூழலும் இருக்கவில்லை அத்தோடு 2007ம் ஆண்டு வழங்கப்பட்ட 3179 பெருந்தோட்ட ஆசிரிய நியமனங்கள் க.பொ.த(உ/த) பெறுபேறுகளை மையப்படுத்தி வழங்கியதோடு முதன்முறையாக குறிப்பிட்ட பாடநெறிகளை மையப்படுத்தி வழங்கிய நியமனமாக கருதப்பட்டபோதிலும் நியமித்த பாடநெறிகள் க.பொ.த(சா/த) பெறுபேறுகளைக்கொண்டு வழங்கப்பட்டமையும் பட்டப்படிப்பினைத் தொடர முடியாமைக்கான காரணமெனலாம். நடைமுறையில் ஏற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்குறிப்பிட்ட ஆசிரியநியமனங்களாகவும் காலத்தின் கட்டாய தேவைக்கருதி எடுத்த முடிவாகி இருந்தாலும் அக் குறிப்பிட்டக் காலக் கட்டத்தில் அதற்குமேலான உயர்கல்விநெறியினை மேற்கொண்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தமையும் இவ்வாறான நியமன வழங்கல்களுக்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

இவ்வாசிரியர் சேவைகளுக்குள் புதிதாக இணைந்துக் கொண்ட கல்வியற்கல்லூரிகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சிப்பெற்ற ஆசிரியர்களும் தங்களுடைய சேவைக்கு இப்பயிற்சிநெறிகள் போதுமானது என்ற குறுகிய சிந்தனையுடன் செயற்பட்டதுமட்டுமல்லாமல் தொடர்ந்து கல்வி கற்பதற்கான ஆர்வத்தினை மேற்கொள்ளாததும் கவலையளிக்கின்ற விடயமாக உள்ளது. இவர்கள் இனிவரும் காலங்களில் தங்களது குறுகிய சிந்தனையிலிருந்து விலகி பட்டக்கல்வியினைத் தொடர்வார்களாயின் அது வரவேற்கத்தக்க விடயமாக அமையும்.

பெரும்பாலான பெருந்தோட்டத்துறை ஆசிரியர்கள் தங்கள் வதிவிடத்திலிருந்து மிகத்தொலைவில் சென்று கடமையாற்றுகின்றனர். இதனால் இவர்கள் போக்குவரத்திற்காக பெரும்பாலான நேரத்தினை செலவிடவேண்டிய தேவையுள்ளது. அத்தோடு அவர்கள் கடமையாற்றுகின்ற பாடசாலைகளில் மாணவர் நலன் கருதி முழுநேர கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் தம்மைப்பற்றியும் தம் உயர்கல்வியைப் பற்றியதுமான சிந்தனை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே உள்ளது. சில ஆசிரியர்கள் போக்குவரத்து அசௌகரியங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காக தற்கால வதிவிடங்களில் வசித்து வந்தாலும் அவ்வசிப்பிடங்கள் கற்றல் சூழலுக்கு ஏதுவானதாக அமையாததும் இவர்களின் தொடர் கல்வி வளர்ச்சிக்கு தடையான காரணிகளாக அமைகின்றன.

மேலும் துறைசார் கல்விநெறிகளும் ஒரு தடையான காரணியாக அமைகிறதெனலாம். குறிப்பாக நோக்குமிடத்து கணித, விஞ்ஞான, ஆங்கில பாடநெறிகளை நியமனங்களாக பெற்ற ஆசிரியர்களே அதிகளவான சிரமத்தினை மேற்கொள்கின்றனர். அவர்கள் தத்தம் துறைகளிலேயே பட்டப்படிப்பினைத் தொடரவேண்டிய நிலையுள்ளது. அவ்வாறு அதனை அடைவதற்கான முயற்சிகளில் ஈடுப்பட்டாலும் இதற்கு முன்னர் அத் துறைசார் கல்வியினை மேற்கொண்டு வெற்றிப் பெற்றவர்களின் எண்ணிக்கை மிக அரிதாக காணப்படுவதாகவும் அது வீண் முயற்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பலதரப்பினர்களினால் கருத்துக்கள் வெளியேறும் போது அந்நெறியினைத் தொடர்வதில் ஒரு அச்சம் உருவாகின்றது. அத்துறைசார் கல்வி நெறியினை விடுத்து பிறிதொரு துறையில் பட்டப்படிப்பினைத் தொடரமுற்பட்டால் அது தனது எதிர்கால சேவையில் எந்தவிதமான தாக்கத்தினை ஏற்படுத்துமென்பது விடைக்காணா வினாவாகவே உள்ளது.

வேறு கண்ணோட்டத்தில் உற்றுநோக்கும் போது தற்கால கல்விமுறை ஒரு வியாபாரத்தினை நோக்காகக்கொண்ட ஒரு கல்வி முறையானதாகவே அமைகின்றது. சாதாரணமாக ஒரு பட்டப்படிப்பினை நிறைவு செய்வதற்கு இலட்சக்கணக்கான பணத்தினை செலவு செய்ய வேண்டியுள்ளது. தற்கால வாழ்க்கைச் சுமையினை தாங்கிக் கொள்ள தத்தளிக்கும் தருவாயில் இவ்வளவு பாரியளவான பணத்தினை செலவிட்டு இறுதியில் அது வெற்றியடையுமா என்ற ஐயத்துடனேயே பலர் இக் கல்வி நெறியினைத் தொடர வேண்டிய துர்பாக்கிய நிலையுள்ளது.அதுமட்டுமன்றி தன் வாழ்விட பிரதேசத்திலிருந்து மிகத் தொலைத்தூரம் சென்றே இந் நெறியினை தொடரக்கூடிய துர்பாக்கிய நிலையுமுள்ளது. இவ்வனைத்துப் பிரச்சினைகளையும் எண்ணி இறுதிவரை ஒரு சாதாரண ஆசிரியராகவே கடமையாற்றி இளைப்பாரிய ஆசிரியர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்கா, இது இன்னும் ஒரு குறித்த காலத்தின் பின்னர் நோக்குகையில் இவ் எண்ணிக்கையில் எந்தவிதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை பொறுத்திருந்தே நோக்கவேண்டும். இதற்கான தீர்வுதான் என்ன? அல்லது இந்நிலை ஏற்படுவதற்கான காரணங்களிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் தான் என்ன? என்பதினை எம்மால் இனங்காண முடியுமாயின் எதிர்கால சமூகத்திற்கு சிறந்த கல்விமான்களை உருவாக்க முடியும்.

மறுப்பக்கத்தில் இம் மாற்றுக் கருத்துக்களுக்கு அப்பாற்பட்டு தங்களை வளர்த்துக் கொண்டவர்களை அதாவது பட்டப்படிப்பினை மேற்கொண்டு தம்மை பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றிக் கொண்ட கல்விமான்கள் பெரும்பாலும் ஆரம்பக்கல்வி, தமிழ், சமயம், வரலாறு போன்ற துறைகளை சார்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். நடைமுறை கல்விசார் கொள்கைகளும் அதற்கான நெறிமுறைகளும் இத்துறையினருக்கான வாய்ப்பாக அமைகின்றன. ஒருபக்கத்தில் அவர்களை வாழ்த்தி போற்றுகின்ற தேவை நமக்கேற்பட்டாலும் மறுப்பக்கத்தில் ஏனைய துறைகளை சார்ந்தவர்களுக்கு எவ்வாறான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் எந்தக்கல்விசார் சமூகத்திடமிருந்து பெற்றுக் கொள்வதென்பது ஒரு புதிராகவே காணப்படுகின்றது.

இவ்வாறு பட்டதாரி ஆசிரியர்களாக தம்மை உருவாக்கிக் கொள்வதில் பாரிய சவால்களை எதிர் நோக்குகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை பரவலாக காணப்படுகின்ற அதேவேளை தம்மை பட்டதாரி ஆசிரியராக உருவாக்கிக் கொண்டவர்களின் அண்மைக்கால தகவல்களை நோக்கும் போது பெரும்பாலான பட்டதாரி ஆசிரியர்களாக தங்களை உருவாக்கிக் கொணடவர்களில் பெரும்பாலானோர் ஆரம்பக்கல்வி நெறியினை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்கள் இக் கல்விநெறியினை பூர்த்திசெய்துக் கொள்வதற்கு ஏறத்தாழ 6-7 ஆண்டுகளையாவது கடத்தியிருக்கவேண்டும். இந்த இடைப்பட்ட காலத்திற்குள் இவர்களின் சேவையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதனை அக் குறித்த ஆசிரியர்களின் அண்மைக்கால புலமைப் பரீட்சையின் பெறுபேறுகளின் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது. இதில் கவலையளிக்கின்ற விடயம் என்னவெனில் இப்பிரிவுகளிலிருந்து பட்டதாரி ஆசிரிய நியமனத்தினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொண்ட பின்னர் இவர்கள் பதவி உயர்வினை எதிர்பார்க்கின்ற அதேவேளை மீண்டும் ஆரம்பகல்வி கற்பித்தலுக்கு தம்மை ஈடுபடுத்திக் கொள்வதில் தயக்கம் காட்டுவதேயாகும். இவ்வகையான செயற்பாடுகள் வெறுமனே பதவி உயர்விற்காக மட்டும் பட்டப்படிப்பினை தொடரவேண்டிய நிலை ஏற்படுவதற்கான வழிமுறையாக அமைகிறதோ என எண்ணத் தோன்றுகின்றது.

மறுபுறம் நோக்குகையில் அண்மைக்கால தகவல்களின்படி இடைநிலை பிரிவுகளைச் சார்ந்த க.பொ.த(சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின் எண்ணிக்கையில் பாரியளவிலான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக புள்ளி விபரங்களிலிருந்து அறிய கூடியதாக உள்ளது இப்பிரிவிற்குள் கற்பித்த ஆசிரியர்கள் தங்களது முழுநேர அர்ப்பணிப்பினை மேற்கொண்டதாகவே உணரமுடிகின்றது. இவ்வாறு பாடசாலை பெறுபேற்றினை அதிகரிப்பதற்காக தங்களை முழுநேர கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொண்ட இவ்வாசிரியர்கள் தங்களது கல்வி மட்டத்தினை அதிகரித்துக் கொள்வதில் சிரமபடுகின்றனர். பாடசாலை பெறுபேறுகள் அதிகரித்தவுடன் பல்வேறு பாராட்டுக்களைத் தெரிவிக்கின்ற இக் கல்விசமூகம் அவ்வாசிரியர்களின் வளர்ச்சி நிலையினை எண்ணாதுள்ளமை கவலைக்கிடமான விடயமாகவே உள்ளது. இக்காரணிகள் இடைநிலை வகுப்புகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களினுடைய பட்டப்படிப்பிற்கு தடையான காரணிகளாக அமைகின்றது. எனவே இடைநிலை பிரிவுகளிலிருந்து மிகக் குறைவான பட்டதாரி ஆசிரியர்கள் உருவாகுவதற்கு மேற்போன்றவைகள் காரணங்களாக அமைகின்றன.

தற்காலத்தில் பெருந்தொகையான ஆசிரியர்கள் பட்டப்படிப்பினை பல்வேறு பல்கலைக்கழகங்களை மையப்படுத்தி தொடர்கின்றமை வரவேற்கத்தக்கது. இது உள்நாட்டு பல்கலைக்கழகங்களை மட்டுப்படுத்தியதாக அல்லாமல் அதனது விரிவாக்கம் இந்திய பல்கலைக்கழகங்களை மையப்படுத்தியதாகவும் அமைந்துள்ளமை வரவேற்கத்தக்கதும் நன்றிபாராட்டக் கூடியதுமாகும்.

எனவே ஒப்பிட்டு நோக்குகையில் பெருந்தோட்டத்துறை ஆசிரிய நியமனங்களுக்கும் பட்டப்படிப்பினைக்கும் இடையே பாரிய விரிசல் காணப்படுவதாகவே உணரக் கூடியதாகவுள்ளது. எது எவ்வாறாக இருந்தாலும் காலத்தின் தேவைக் கருதி இத் துறைசார் கல்வியினை மேற்கொள்பவர்களின் நிலையில் ஒரு மாற்றம் ஏற்படவேண்டும். அவர்களின் ஏதுவான வழிமுறைகளை கல்விச்சமூகம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பது காலத்தின் தேவையாக உள்ளது என்பதை இத் துறைசார் சகலதரப்பினரும் கவனத்தில் கொள்ளுதல் உசிதமாக அமையலாமெனக் கருதக்கிடக்கின்றது.

••••


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகள் எதிர்நோக்கும் குடித்தொகை வயது முதிர்தலின் சமூகப் பொருளாதார தாக்கங்கள்

திரு க. பிரதீபன் BA (Econ special)
ஆசிரியர்
ம.மா/வ ஹைபொரஸ்ட் இல-3 த.வி

குடித்தொகை என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியில் வாழந்து வருகின்ற மக்கள் தொகையின் ஒட்டுமொத்தமாகும். சனத்தொகையை தீரமானிக்கும் பிரதான காரணிகளாக பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு என்பன காணப்படுகின்றன. உலகின் ஒட்டுமொத்த சனத்தொகை இன்று 7 பில்லியனையும் தாண்டியுள்ளது. இந்த சனத்தொகைக்கு சீனா, இந்தியா போன்ற நாடுகள் தங்களது பாரிய பங்களிப்பினை ஆற்றியுள்ளன.

ஆரம்பத்தில் உலகில் சனத்தொகை அதிகரிப்பு என்பது ஒரு பிரச்சினையாக கருதப்படாவிட்டாலும் டேவிட் றிக்காடோ, மால்தூஸ் போன்றவர்களின் சிந்தனைகள் பெரும்பாலும் சனத்தொகை பெருக்கத்தின் பிரதிகூலங்களையே உலகுக்கு வெளிப்படுத்தியிருந்தன. இருப்பினும் பின்வந்த கோட்பாட்டாளர்கள் ஒரு அரசுக்கு குறிப்பிட்டளவு சனத்தொகை கட்டாயம் தேவையானதென்றே கருதினர். இது இவ்வாறிருக்க சனத்தொகைப் பற்றிய அறிவை ஏற்படுத்திக் கொண்ட நவீன உலகின் அரசுகள் சனத்தொகையை முடியுமானவரை கட்டுப்படுத்தி வருகின்றன. அந்த வகையில் இன்று உலகின் பல நாடுகளின் குடித்தொகை வளர்ச்சி வீதம் 2 க்கு உட்பட்டதாக இருக்கும் அதேவேளை விதவிலக்காக சில நாடுகளின் குடித்தொகை வளர்ச்சி வீதம் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. (கட்டார் 6.1, ஷாம்பியா 4.2)

இன்றைய உலகில் சனத்தொகைப் பற்றிய பிரச்சினைகள் மற்றொரு கோணத்தில் பயணிப்பதாக குடித்தொகை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அதாவது ஆரம்பத்தில் பிறப்புவீதம், இறப்புவீதம் இரண்டுமே உயர்வாக இருந்தது. ஆனால் தற்போது பிறப்பு வீதமும், இறப்பு வீதமும் குறைவடைந்து வருகின்ற நிலையில் முதியோரின் எண்ணிக்கையில் ஏற்பட்டுவரும் பாரிய அதிகரிப்பே குடித்தொகைப் பற்றிய இன்றைய பிரச்சினையாகும். இதற்கு பிரதான காரணங்களாக உலகில் நவீன மருத்துவ வசதிகளின் பெருக்கமும் அதனால் ஏற்பட்ட ஆயுள் அதிகரிப்பும், பெண்களின் கல்வி மேம்பாடும் தொழிற்படையில் அவர்களின் பங்களிப்பும், சனத்தொகைப் பற்றிய விழிப்புணர்வு, குடும்ப மெய்வருமான மட்டமும் குழந்தை வளர்ப்பில் செலவுகளும் போன்றன செல்வாக்கு செலுத்தியுள்ளன.

இன்று உலகின் பல நாடுகள் சனத்தொகையில் முதியோரின் அதிகரிப்பினால் பல சமூகப் பொருளாதார தாக்கங்களை எதிர்கொள்கின்றன. இவற்றுள் ஜப்பான் 23மூ, சீனா 8மூ, ஐக்கிய இராச்சியம் 17மூ, இந்தியா 5மூ, இலங்கை 8மூ, ஜேர்மனி 21மூ, பிரான்ஸ் 17மூ, பின்லாந்து 18மூ, ஹங்கேரி 17மூ, இத்தாலி 21மூ, சுவீடன் 19மூ ஐக்கிய அமெரிக்கா 13மூ என்பன முக்கியமான நாடுகளாகும். இவற்றில் சில நாடுகளை இங்கு நாம் ஆராய்வோம்.

உலகிலேயே முதியவர்கள் தொடர்பில் அதிக பிரச்சினையை எதிர்நோக்கும் நாடாக ஜப்பான் கருதப்படுகிறது. 2011ம் ஆண்டில் அதன் மொத்த சனத் தொகையில் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதமான மக்கள் 65 வயதை தாண்டியவர்களாக உள்ளதாக உலக வங்கியின் தரவுத்தளம் குறிப்பிடுகின்றது. இச்சதவீதம் உலகின் எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவு மிகவும் உயர்வானதாகும். 2011 ம் ஆண்டு தரவுகளின்படி 127.8 மில்லியன் சனத்தொகையில் 63 வீதத்தினர் 15-64 வயதுக்குட்பட்டவர்களாகவும், 13 சதவீதத்தினர் மட்டுமே 14 வயதுக்குட்பட்டவர்களாகவும் காணப்பட்டனர். 1989 ம் ஆண்டு 11.6 வீதமாக காணப்பட்ட முதியோரின் எண்ணிக்கை 2030 ம் ஆண்டளவில் 25.6 வீதமாக மாறும் என ஐ.நா எதிர்வுகூறியுள்ளது. அதிலும் குறிப்பாக 75 வயதை தாண்டியவர்களின் எண்ணிக்கையானது 2011 ல் 11.4 வீதமாக உள்ளது. மொத்தமாக 2011 ம் ஆண்டில் 29.47 மில்லியன் மக்கள் 65 வயதை தாண்டியவர்களாக காணப்பட்டனர்.

ஜப்பானின் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி 2050ம் ஆண்டளவில் ஜப்பானின் மொத்த சனத்தொகை 25 வீத வீழ்ச்சி கண்டு 95.2 மில்லியனாக காணப்படுமென எதிர்வுகூறியுள்ளது. அத்துடன் 2011ம் ஆண்டு 23.1 வீதமாக காணப்பட்ட முதியோரின் வீதாசாரம் 2055 ம் ஆண்டளவில் 38 வீதமாக மாற்றமடையும் எனவும் அஞ்சப்படுகிறது.

உலகின் வல்லரசுகளுள் ஒன்றாக கருதப்படும் ஜப்பானிய பொருளாதாரமானது இப்பிரச்சினையால் பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது. குடித்தொகை கட்டமைப்பில் ஏற்பட்ட இந்த மாற்றமானது ஜப்பானின் நலனோம்பல் செலவை அதிகரித்துவிட்டுள்ளது. 1992 ம் ஆண்டில் 18 சதவீதமாக இருந்த நலனோம்பல் செலவு 2025ம் ஆண்டளவில் 27 சதவீதமாக காணப்படுமெனவும் எறியமிடப்பட்டுள்ளது. அத்துடன் ஜப்பானின் முதிர்ந்த சனத்தொகையில் 75 வயதுக்கு மேற்பட்டவர்களின் வீதாசாரம் உயர்வாக காணப்படுகின்றது. 65-75 வயதுக்குட்பட்டவர்களைவிட 75வயதுக்கும் மேற்பட்டவர்களின் மருத்துவ செலவுகள் மும்மடங்கு அதிகம் என ஜப்பானின் சுகாதார திணைக்களம் தெரிவிக்கின்றது. 1980களுக்கு பிறகு முதியவர்களின் சராசரி வயது எழுச்சியடைந்து வருவதால், சுகாதார மற்றும் ஓய்வூதிய அமைப்புகள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகலாம் எனவும் அறியப்படுகிறது.

ஜப்பானில் 65 வயதுக்கு மேற்பட்டவர்களில் குறிப்பிட்ட சதவீதத்தினர் இன்னும் தொழிலை எதிர்பார்ப்பவர்களாக காணப்படுவதால் அது ஜப்பானின் வேலையின்மை சதவீதத்தையும் வலுப்படுத்துவதாக அமைகின்றது.
அந்த வகையில் மொத்த தேசிய வருமானத்தில் குறிப்பிடக்கூடியளவு தொகையை முதியோர் நலனுக்காக செலவிடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இது மென்மேலும் அதிகரிக்குமாயின் அது நிச்சயமாக ஜப்பானின் பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும். இருப்பினும் ஒரு வல்லரசு என்ற வகையில் இவ்வாறான சவால்களை வெற்றிகரமாக முறியடிக்கும் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்திருக்குமென்பதில் சந்தேகமில்லை.

சீனா 1.34 பில்லியன் சனத் தொகையையும், 0.5 சதவீத வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதத்தையும் கொண்டுள்ளது. ஜப்பானைப் போன்றே சீனாவும் முதியோர் அதிகரிப்பு பிரச்சினையை ஓரளவுக்கு எதிர்கொண்டு வருகின்றது. சீனாவின் மொத்த சனத்தொகையில் 8 சதவீதமானவர்கள் அதாவது 110 மில்லியன் மக்கள் 65 வயதை தாண்டியவர்களாக உள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ம் ஆண்டு சீனாவில் ஒரு குழந்தை திட்டம் அமுல்படுத்தப்பட்டதை தொடர்ந்து அங்கு படிப்படியாக சனத்தொகை வளர்ச்சி வீதம் கட்டுப்படுத்தப்பட்டது.

சீனாவின் 65 வயதுக்கு மேற்பட்ட மக்களின் சதவீதம் குறைவாக இருப்பினும் அது 110 மில்லியன் என்ற பாரியளவு தொகையாக காணப்படுவதால் பல்வேறு பொருளாதார பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது. ஆசியாவின் வல்லரசாக மாறி வரும் சீனாவுக்கு இது பெரும் சவாலாக காணப்படுகின்றது. 2050ம் ஆண்டளவில் சீன மக்களில் நான்கில் ஒருவர் 65 வயதுக்கு மேற்பட்டவராக காணப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனா பாரியளவில் வளர்ச்சியடைந்துவரும் நாடு என்றவகையில் அங்கு விருத்தியடைந்த மருத்துவ விஞ்ஞான வளர்ச்சி மற்றும் பிறப்பு வீதத்தில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி என்பனவே முதியோரின் அதிகரிப்புக்கு காரணம் என கூறப்படுகின்றது. ஜப்பானைப் போலவே சீனாவும் முதியோர் நலன்களுக்காகவும் அவர்களுக்கான ஓய்வூதியத்துக்காகவும் பரியளவு தொகையை செலவிடுகின்றது. இது அந்நாட்டின் அபிவிருத்திக்கான வாய்ப்பை கனிசமானளவு குறைத்துவிடுகின்றது. அத்துடன் ஓய்வூதியம், காப்புறுதி என்றவகையில் தனியார்துறையிலும் இது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

பிரித்தானியாவிலும் சனத்தொகையில் வயது முதிர்ந்தவர்களின் தாக்கம் அதிகமாக உணரப்படுகிறது. பிரித்தானியாவின் மொத்த சனத்தொகையில் 17 சதவீதமானவர்கள் 65 வயதை தாண்டியவர்களாக காணப்படுகின்றனர். இது மொத்தம் 10 மில்லியன் ஆகும். இதில் மிக வயதான அதாவது 80 வயதை தாண்டியவர்கள் 3 மில்லயன் பேர் 2011 ம் ஆண்டில் காணப்பட்டிருந்தனர். இது 2030 இருமடங்காகவும், 2050 ல் இவ்வெண்ணிக்கை 8 மில்லியனாகவும் உயரும் என எதிர்வுகூறப்படுகிறது. இது தற்போதைய 6 இல் 1 என்ற வீதாசாரத்தை 4 இல் 1ஆக மாற்றும் எனவும் கூறப்படுகிறது.

பிரித்தானியாவின் இன்றைய பொதுச் செலவு அதிகமான முதியவர்களையே மையப்படுத்துகிறது. பிரித்தானியாவின் பணி மற்றும் ஓய்வூதிய பலன்கள் செலவுத்துறையானது 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 2011 ல் 100 பில்லியன் பவுண்களை செலவிட்டுள்ளது. இது பொதுச் செலவில் ஏழாவது பெரிய செலவாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இன்று சராசரியாக ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மில்லியன் மக்கள் ஓய்வூதிய வயதை எட்டுபவர்களாக காணப்படுவதால் அரசாங்கத்தின் சலுகைகள் மற்றும் ஓய்வூதிய செலவு வருடாவருடம் 10 மில்லியன் பவுண்கள் அதிகரித்து செல்வதாக காணப்படுகிறது.

2007, 2008ம் ஆண்டுகளில் ஓய்வுபெற்ற வீட்டுத்துறையினரின் செலவானது ஓய்வு பெறாத வீட்டுத்துறையினரின் செலவைவிட இரு மடங்காகும். அதிலும் குறிப்பாக இளைய வயது முதிர்ந்தவர்களைவிட மிக வயதானவர்களின் செலவே அதிகமாக காணப்படுகிறது. இச்செலவானது இளைய வயது முதிர்ந்தவர்களின் செலவைவிட மும்மடங்காகும். அரசின் மொத்த செலவினத்தில் இவ்வாறான நலன்புரிகளுக்கான செலவினம் கீழ் பாதியாக இருந்து வருகிறது. இளைய வயது முதிர்ந்தவர்களுக்கு அரசு சேவை வாய்ப்புகளை வழங்கி வருகின்றதனால் அவர்களுக்கான செலவினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக இவ் வயது முதிர்ந்தவர்களின் அதிகரிப்பினால் அரச செலவினம் பெரும் சவாலை எதிர்காலத்தில் எதிர்நோக்கக்கூடும்.

ஒரு வளர்முக நாடு என்ற வகையில் இலங்கை தெற்காசியாவிலேயே சதவீத ரீதியில் அதிக முதியோர்களைக் கொண்ட நாடாக காணப்படுகின்றது. தெற்காசியாவை பொறுத்தவரை இலங்கை நாட்டவரின் ஆயுட்காலம் அதிகமாக காணப்படுகின்றது.

மேலைநாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் குறைந்த பொருளாதார அபிவிருத்திக் கொண்ட குடும்பங்களுக்கிடையில் வயது முதிர்தல் தொடர்பான பிரச்சினை ஏற்பட்டுவருகின்றது இலங்கையில் அண்மையில் ஏற்பட்டுள்ள நகரமயமாக்கள் மற்றும் குடியகழ்வு, ஊழியர் படையில் பெண்களின் அதிகரித்த அளவிலான பங்கேற்பு போன்ற சமூகப் பொருளாதார மாற்றங்களுடன் இணைந்த விதத்தில் வயது முதிர்ந்தவர்களுக்கு ஆதரவும் ஒத்தாசையும் வழங்கக்கூடிய குடும்பங்களின் ஆற்றல் குன்றி வருகின்றது. 1996ல் இலங்கையின் குடித்தொகையில் பெண்களில் 9 வீதத்தினரும், ஆண்களில் 9.1 வீதத்தினரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்து வநததுடன் இது ஒரு வளர்முக நாட்டை பொறுத்தவரையில் சார்புரீதியில் உயரளவிலான வயது முதிர்ந்தோர் குடித்தொகையாக காணப்படுகின்றது. ஏனைய நாடுகளைப் போலன்றி இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களே வயது முதிர்ந்தவர்களாக கருதப்படுகின்றனர். இலங்கையில் அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் ஓய்வு பெறும் வயது 55—60 க்கும் இடையில் தீர்மாணிக்கப்பட்டு வருவதனால் 60 வயது என்பது வெட்டுப்புள்ளியாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

இலங்கையில் 2006ம் ஆண்டு 22 இலட்சம் முதியவர்களும் 2011ம் ஆண்டில் இது 27 இலட்சமாகவும் காணப்பட்டது. 2031ல் இது 50 இலட்சமாக மாறும் எனவும் இது மொத்த சனத்தொகையில் 13 சதவீதமாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 60 வயதுக்கு மேற்பட்ட குடித்தொகையினரின் வீதாசாரம் 1946 ல் 5.4 ஆக இருந்தது. 1991 ல் 8.1 ஆக அதிகரித்தது. 2011ம் ஆண்டிலும் கிட்டத்தட்ட 8.1 சதவீதமாகவே காணப்பட்டிருந்தது. பிரசவம், மரணம், மற்றும் சர்வதேச குடியகழ்வு போக்கு என்பவற்றின் கூட்டு விளைவின் காரணமாகவே இவ் அதிகரிப்பு ஏற்பட்டு இருந்தது. அண்மை காலத்தில் பிரசவங்களில் ஏற்பட்ட தீவிரமான வீழ்ச்சியுடன் இணைந்த விதத்தில் வயது முதிர்தல் நிகழ்வு போக்கு தீவிரமடைந்துள்ளது.

இலங்கையில் வயது முதிர்ந்த சனத்தொகையில் பெண்களின் வீதாசாரம் உயர்வாக காணப்படுகின்றது. குறிப்பாக பெண்களைவிட ஆண்களின் ஆயட்காலம் குவைாக காணப்படுதல் இதற்கு பிரதான காரணமாக கருதப்படுவதுடன் முதிர்ந்த வயதில் அதிகமான பெண்கள் விதவைகளாக்கப்படுகின்றனர். இந்தவகையில் இலங்கையை சேர்ந்த மகளிர் தமது வயது முதிர்ந்த பருவத்தில் பல்வேறு சமூகப் பொருளாதார காரணிகளினால் வாழ்க்கை துணையின்றி அல்லலுறும் நிலமையை காணமுடிகின்றது.

குடியகழ்வு நகரமயமாக்கல் மற்றும் ஊழியர் படையில் அதிகரித்த அளவிலான மகளிரின் பங்களிப்பு போன்ற சமூக மாற்றங்கள் காரணமாக பல தலைமுறைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த குடும்ப உறுப்பினர்களை பேணிப் பராமரித்து வருவது பெரும்பாலான குடும்பங்களை பொருத்தவரையில் இயலாத ஒரு காரியமாக இருந்துவருகின்றது. வயது முதிர்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு துணைநின்று அவர்களை பராமரித்து வருவது குடும்பத்தை சேர்ந்த ஏனைய உறுப்பினர்களின் ஒரு பொறுப்பாக இருந்துவருகிறதென பெரும்பாலான இலங்கையர்கள் நம்புகின்றனர். ஆனால் அந்த நம்பிக்கை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நடைமுறை சாத்தியமாவதில்லை. அதேவேளையில் வயது முதிர்ந்தவர்களைப் பராமரிக்கும் விடயத்தில் பொதுமக்கள் அதிகளவில் அரசாங்கத்தில் தங்கியிருந்து வருகின்றனர். ஏற்கனவே அரசாங்க அனுசரணையுடன் இதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் 70 வயதை தாண்டியவர்களுக்கான கொடுப்பனவை தற்போது அதிகரித்துள்ளதுடன் முதியோர் சங்கங்களுக்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரை தெற்காசியாவிலேயே குறிப்பிட்டுக்கூறக்கூடியளவு சிறப்பான இலவச மருத்துவ வசதிகள் மக்களுக்கு கிடைப்பதாலும், பெண் கல்வி வளர்ச்சி பெண்களின் தொழில்வாய்ப்பு போன்ற காரணிகளால் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து எதிர்காலத்தில் மேலும் முதியோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என கருதப்படுகின்றது. அத்துடன் முதியோர் அனுபவித்துவரும் வறுமைநிலையானது பல்வேறு சமூகப்பொருளாதார பிரச்சிகைளை ஏற்படுத்துகின்றது. சேமலாப நிதியங்கள், ஓய்வூதியங்கள் அல்லது காப்புறுதி கொடுப்பனவுகள் முதலிய ஓய்வுதிய திட்டங்கள் வயது முதிர்ந்தவரகளில் ஒரு சிறு தொகையினருக்கு மட்டுமே போதிய அளவிலான நிதிசார் பாதுகாப்பை அளித்துவருகின்றது. குறிப்பாக வயது முதிர்ந்த பெண்கள் குறைந்த அளவிலான கல்வி மற்றும், ஊழியர்படை பங்கேற்பு வீதங்கள் என்பவற்றின் காரணமாக வயது முதிர்ந்த ஆண்களிலும் பார்க்க மிக மோசமான நிதி நிலமையை அனுபவித்து வருகின்றனர். மலைநாட்டில் தேயிலைத்தோட்டங்களில் தொழில்புரியும் அதிகமான வயதுமுதிர்ந்த பெண்கள் இந்நிலையை அனுபவிக்கின்றனர். அரசாங்கத்தினால் வழங்கப்படும் முதியோர் கொடுப்பனவுகளும் இவர்களை சென்று சேர்வதில்லை.

முதியோர் தொகையில் ஏற்படும் அதிகரிப்பானது தலாவருமானம் குறைவடைதல் மருத்துவ செலவுகள் அதிகரித்தல், தொழிற்படையின் எண்ணிக்கை குறைவடைதல், முதியோர் கொடுப்பனவுகள் அதிகரித்தல், வீதி விபத்துகள் அதிகரித்தல் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றது.

ஏனவே இலங்கை மக்கள் அதிகமான நலன்புரி விடயங்களில் அரசாங்கத்திடம் எதிர்பார்ப்பவர்களாக இருப்பதனால் தேசிய வருமானத்தின் குறிப்பிட்டதொரு பங்கை எதிர்காலத்தில் இழக்க நேரிடலாம்.

பொதுவாக நோக்கும்போது உலகின் பல்வேறுபட்ட வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சியடையாத நாடுகளில் இப்பிரச்சினையானது பொதுவாக பாதிப்பை எற்படுத்துவதையே மேற்படி விளக்கங்களில் இருந்து காணமுடிகின்றது இருப்பினும் ஆசியாவின் பெரும்பாலான வளர்முக நாடுகளில் தொழில்சார், தொழில்நுட்ப மற்றும் நிர்வாக துறைகளில் பணியாற்றிவரும் வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதுடன் சீனாவின் விவசாயத்துறையில் 80 சதவீதத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பதனை 1982 ன் தொகைமதிப்பு புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத்தேய சமூகங்களுடன் ஒப்பிடும்போது ஆசிய சமூகங்களில் அதிக அளவிலான வயது முதிர்ந்தவர்கள் உழைப்பில் ஈடுபட்டு வருகிறார்கள் என (டான் 1995) குறிப்பிடப்படுவதும் நோக்கத்தக்கதாகும்.

உசாத்துணைகள்

- இந்திரலால் டி சில்வா தர்ஷனி சமரசேகர, குடித்தொகை வயது முதிர்தல்: இலங்கையில் எழுச்சி கண்டுவரும் பிரச்சினைகள், பொருளியல் நோக்கு ஏப்ரல்.־.மே 1999
- உலக வங்கி தரவு தளம்
- http://www.parliament.uk/business/publications/research/key-issues-for-the-new-parliament/value-for-money-in-public-services/the-ageing-population/http://data.worldbank.org/indicator/SP.POP.65UP.TO.ZS
- http://search.worldbank.org/data?qterm=about+most+population+is+up+to+65+and+above+of+india+in+the+world&language=EN&format=&os=30

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முகாமைத்துவமும் ஆசிரியர் வகிபாகமும்

**K.ஞானப்பிரகாசம் B Ed,SLPS 3, Dip in Teaching**
**பிரதி அதிபர்**
**மமா/வ/லிடஸ்டேல் தமிழ் வித்தியாலயம்.**

பாடசாலை முகாமைத்துவம் தொடர்பாக காலத்திற்குக் காலம் தேவைக்கேற்ப பல்வேறு மாற்றங்களும் சீர்திருத்தங்களும் அறிமுகம் செய்யப்பட்டு வருவது நாம் அறிந்த உண்மையாகும். என்ற போதும் பாடசாலைகளை முகாமைத்துவம் செய்வதில் பல்வேறு இடர்பாடுகளும் இருந்து கொண்டே இருப்பதனை நாம் மறுதலிக்க முடியாமல் உள்ளது. எனவே பாடசாலை முகாமைத்துவமும் ஆசிரியரின் பங்களிப்பும் எவ்வாறு காணப்படுகின்றது, எவ்வாறு காணப்படல் வேண்டும் என்பது பற்றி நாம் தெளிவான சிந்தனையைக் கவனத்தில் எடுப்பது அத்தியாவசியமாக காணப்படுகின்றது. பாடசாலை முகாமைத்துவம் எனும் போது பாடசாலை சமூகம் மற்றும் பாடசாலை சூழல் வளங்கள் என்பன அதில் முக்கியத்துவம் பெறுகின்றது.

முகாமைத்துவம் என்பது தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்காக ஒன்றுபட்ட குழு வரையறைக்குட்பட்ட வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தி சிறப்பான விளைதிறனை பெற்றுக் கொள்ளும் செயல்முறை என இலகுவாக வறையரை செய்ய முடியும். எனவே சரியான நோக்கங்களை தீர்மானித்துக்கொண்டு வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தி சிறப்பான விளைத்திறனை பெற்றுக் கொள்ள எத்தனிக்கும் பிரயத்தனம் முகாமைத்துவம் எனப்படுகின்றது.

இங்கு முகாமைத்துவம் என்பது பரந்த ஒரு பொருளாக காணப்பட்ட போதிலும் பாடசாலை முகாமைத்துவத்திற்கும் ஏனைய நிறுவனம் சார் முகாமைத்துவத்திற்கும் இடையில் மிக பிரதானமான வேறுபாடு காணப்படுகின்றது. முகாமைத்துவ செயன்முறை என்று கூறப்படும் போது அதன் அடிப்படை அம்சங்களாக கீழ்வருவனவற்றை குறிப்பிட்டுக் காட்டலாம்.

1. திட்டமிடல்
2. ஒழுங்கமைத்தல்
3. நெறிப்படுத்தல்
4. கட்டுப்படுத்தல்

மேற்கண்ட படிமுறை முகாமைத்துவ விருத்தியாக அமைந்த போதும் தொழிற்சாலைசார் நிறுவனங்களில் அவை வெறுமனே உற்பத்தி பொருட்களை உருவாக்கும் செயன்முறையாகவே காணப்படுகின்றது. அதாவது முதலீடுகளாக (உள்ளீடுகளாக) மூலப்பொருட்களை செயன்முறைக்கு உட்படுத்தி வெளியீடுகளாக சடப்பொருட்களை உற்பத்தி செய்கின்றன. ஆனால் கல்வி அமைப்பில் முகாமைத்துவத்தில் உள்ளீடுகளாக மாணவர்களுக்காக வளங்களை பயன்படுத்தி வெளியீடுகளாக மனித வளத்தை தோற்றுவித்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் நாட்டின் பல்வேறுப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டிற்கு பெறுமதி சேர்க்கும் மனித வளம் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது, ஆகையால் பாடசாலை முகாமைத்துவம் என்பது சடப்பொருள் அல்லாத உயிர்களுடன் உயிர்கள் ஒன்றிணைந்து உள்ளங்களை உருவாக்கும் செயன்முறையாக பரிணாமம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி முகாமைத்துவத்தில் பல்வேறு கோட்பாடுகள் எழுந்துள்ளதை நாம் அறிவோம். அதன்படி மிகப்பிரதானமாக

1. பழமையான ஒழுங்கமைப்பு கோட்பாடு
2. மானிட உறவு கோட்பாடு
3. முறைமைசார் கோட்பாடு
4. பணித்துறை ஆட்சி
5. குறிக்கோள் சார்ந்த முகாமைத்துவம்

என பல்வேறு வகையான கோட்பாடுகள் வளர்ச்சியுற்று வந்த போதிலும் பெரும்பாலும் எல்லா கோட்பாடுகளுமே முகாமைத்துவ செயன்முறை கட்டங்களான திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் என்ற அமைப்புகளாகவே வளர்ச்சி பெற்றவையே. நவீன முகாமைத்துவ செயன்முறையில் பெயோலின் முகாமைத்துவ கோட்பாடு மேற்கண்ட அமைப்பு ரீதியாக ஒன்றிணைந்து நிற்பதனை பாடசாலை திட்டமிடல் வழிகாட்டி கைநூல் மூலம் நாம் விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது. (கல்வி அமைச்சு) எனவே முகாமைத்துவத்தின் முதற்படியாக திட்டமிடல் கல்வி அமைச்சின் வழிகாட்டல் கைநூலுக்கமைய சூழ்நிலை பகுப்பாய்வு என்ற அடிப்படையில் ஆரம்பித்து ஐந்தாண்டுத் திட்டம், ஓராண்டு திட்டம் மற்றும் வரவு செலவு திட்டம் தயார் செய்யும் வரை பாடசாலையினுள் முகாமைத்துவத்திற்கு பெரும் பங்களிப்பினை செய்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டமிடலானது ஒரு சுழற்சி முறை திட்டம் என்பதுடன் பாடசாலையில் மாணவர் அபிவிருத்தி, ஆசிரியர் அபிவிருத்தி, பாடசாலை சமூக அபிவிருத்தி மற்றும் பாடசாலை வளங்களை பராமரித்தல் மேற்பார்வை போன்ற எல்லா துறைகளிலும் செல்வாக்கு செலுத்துவதுடன் வலயக்கல்விப் பணிமனை மற்றும் மாகாண கல்வி அமைப்பின் கீழ் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும் செயற்திட்டமாகும். பாடசாலை சமூகத்தினது நேரடியான பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் திட்டமாக அமைந்திருப்பது பாடசாலைக்கு மேலும் விருத்தியை தரக்கூடிய ஒன்றாக காணப்படுகின்றது.

இன்னும் கல்வி அமைச்சின் 07/2013 சுற்றறிக்கையும் பாடசாலை முகாமைத்துவத்தினை வழிப்படுத்தும், இலகுப்படுத்தும் ஒரு பிரதான வழிகாட்டியாகவே காணப்படுகின்றது. இதன் பிரதான அம்சங்களாக

1. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
2. பாடசாலை அபிவிருத்திக் குழு
3. பாடசாலை முகாமைத்துவக் குழு
4. பாடசாலை பெறுகைக் குழு
5. பாடசாலை தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு

போன்ற குழுக்கள் தொடர்பான அங்கத்துவம், செயற்பாடுகள் உறுப்புரிமை காலம் போன்றவற்றை மாணவர் தொகைக் கேற்ப வரையறை செய்துள்ளதுடன் பாடசாலை பெறுகை செயற்பாடுகளின் போது நிதி எல்லைகள் கொள்வனவு தொடர்பான நியதிகள் மற்றும் விதிமுறைகளையும் தெளிவாக பரிந்துரை செய்கின்றது. மேலும் இவ் சுற்றறிக்கையில் பாடசாலையில் நிதி தொடர்பாகப் பேணப்பட வேண்டிய 23 பதிவேடுகள், ஆவணங்கள் தொடர்பாகவும் தெளிவான மாதிரிகள் இணைப்புகளுடன் கூடிய தகவல்களும் எமக்கு கட்டமைப்பு ரீதியான முகாமைத்துவத்தினை கொண்டு செல்ல உறுதியான திட்டமாக அமைகின்றது. இன்னும் பாடசாலை முகாமைத்துவத்தினை இலகுவாக்கக் கூடிய **"எமது பாடசாலை எந்த அளவில் தரமானது"** என்று (விளக்கம் தரக்கூடிய) பண்பு ரீதியாக அளவிடக்கூடிய எட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளை அடிப்படையாகக் கொண்ட பண்பு தர வேலைத்திட்ட கைநூலும் எமக்கு உறுதுணையாக அமைக்கின்றது. இவ் வேலைத்திட்டத்தினை மட்டும் சிறப்பாக முன்னெடுக்கும் போது அதாவது இவ் வழிகாட்டல் நூலுக்கு அமைய எமது பாடசாலையில் நிர்ணயிக்க கூடிய சகல சுட்டிகளையும் முறையாகவும் உச்சமாகவும் செயற்படுத்தும் போது பாடசாலை உயர்ந்த விளைதிறன் கொண்ட பாடசாலையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஆரம்ப காலத்தினுடன் ஒப்பிடும் பாடசாலை முகாமைத்துவம் என்பது மிகவும் இலகுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. தகவல் தொழிநுட்பம் மேலோங்கி காணப்படுவதனால் முகாமைத்துவம் தொடர்பான கற்கைகள் மற்றும் தகவல்களை நாம் பெற்றுக் கொள்வது ஒரு கடினமான காரியம் ஆகாது. தற்போது இணையத்தள வசதிகளுடாக சுற்றறிக்கைகள் சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகள் போன்றவற்றை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள கூடியதாய் உள்ளது. எனவே புதிதாக வரும் தகவல்கள் மாற்றங்களை உடனுக்குடன் தேடி அறிந்து அதனை நம்முடன் இணைத்துக் கொண்டு செயலாற்றுவது காலத்தின் தேவையாக உள்ளது.

எனவே அதிபர்கள் என்றவகையில் பல்வேறு வேலைப் பளுக்களுக்கிடையில் பாடசாலைகளை முகாமைத்துவம் செய்வது மிகவும் அர்ப்பணிப்பான செயற்பாடாகவே காணப்படுகின்றது. இப்பாடசாலை அமைப்பில் காணப்படும் பல்வேறுப்பட்ட வேலைத்திட்டங்களை ஆசிரியர்களிடையே கட்டாயம் வேலைப்பகிர்வு என்ற ரீதியில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய கட்டாய நிலை காணப்படுகின்றது.

பொதுவாக பாரம்பரிய செயற்பாடுகளில் உள்வாங்கப்பட்ட எமது ஆசிரியர்களுக்கு ஆசிரியர் வளம் மற்றும் பாடசாலையில் காணப்படும் வளங்களை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தில் பல்வேறுப்பட்ட ரீதியில் பங்கு கொள்ளும் இக்கட்டான சூழ்நிலை காணப்படுகின்றது. அதனடிப்படையில் முகாமைத்துவ வேலைப் பகிர்வோடு இணைப்பாட விதானம், பண்புதர விருத்தி, கணிப்பீட்டு வேலைத்திட்டங்கள் மாணவர் நலன்புரி வேலைத்திட்டங்கள் என்பன மேலதிக வேலையாக எதிர்நோக்கி பார்க்கும் மனப்பான்மை வளந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்னும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது பாடத்திட்டம் பாடக்குறிப்பு கற்றல் கற்பித்தல் சாதனங்கள் போன்றவற்றை தயார் செய்தல் கணிப்பீட்டு அறிக்கைகளைப் பேணல், மாணவர் சுகாதாரம், ஒழுக்கம் போன்ற விடங்களில் கவனம் செலுத்துவதிலும் ஆசிரியர்களுக்கு அதிக வேலைப்பளு காரணமாக மன அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எனவே பாடசாலை முகாமைத்துவத்தில் தர்க்க ரீதியாக சிந்தித்து அதிபர் ஆசிரியர்களுக்கிடையில் மிக அந்நியோன்னியமான முறையில் கலந்து ஆலோசித்து பாடசாலை செயற்பாடுகளை திட்டமிட்டு, பகிர்ந்தளித்து, பங்கு கொண்டு செயற்படும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் அதிபர்கள் ஆசிரியர்கள் பாடசாலை என்ற ரீதியில் குறிக்கோள் நோக்கம் என்பவற்றினூடாக ஆளுமை மிக்க மனித சமுதாயத்தை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட எத்தனிக்கும் போது எமக்கு ஏற்படும் இன்னல்களும் மன அழுத்தங்களும் அடுத்த நொடியில் எமது மன அமைதிக்கும் வெற்றிக்கும் உறுதுணையாய் அமையும் என்பது திண்ணம்.

●●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முகாமைத்துவத்தின் மதிநுட்பம்

**P.சிவானந்தகுமார்**
**மமா/வ/இராகலை தமிழ் மகா வித்தியாலயம்.**
**ஹல்கரனோயா**

இன்று பாடசாலைகள் வினைத்திறன் மிக்கதாக விளங்க வேண்டுமானால் சிறந்த முகாமைத்துவ திறன் அவசியமாகும். இன்று பாடசாலைகளில் பாடசாலை முகாமைத்துவம் பற்றி அதிக அக்கறை காட்டப்படுகின்றது. பாடசாலை முகாமைத்துவத்தில் அடிப்படைகள் பேணப்படுகின்றது.

பாடசாலைக் கட்டமைப்பு அதன் நோக்கம் குறிக்கோள்கள் என்பனவற்றிற்கு அமைய நிறுவனத் தலைவர் தொடக்கம் பெற்றோர் வரை சேவையாற்ற வேண்டும். அவ்வாறு சேவையாற்றும் போது திட்டமிடல் தொடக்கம் பாடசாலை தரம் வரை முகாமைத்துவ செயற்பாடுகள் அமைகின்றன. ஒரு பாடசாலையின் நிறுவனத் தலைவர் தொடக்கம் கல்விசாரா ஊழியர் வரை பரந்த ஒரு மனிதவளத் தொகுதி காணப்படுகிறது. பௌதீக வளத்தை முறையாகத் திட்டமிட்டு. அதற்கேற்ப மனித வளத்தைப் பயனுறுதி வாய்ந்த வகையில் பயன்படுத்துவது நிறுவனத் தலைவரின் முகாமைத்துவ திறனில் உள்ளடங்கும் விடயமாகும்.

**பாடசாலை முகாமைத்துவ அடிப்படைகள்**

பாடசாலைக்குரிய கல்விக் குறிக்கோள்களை நிறைவேற்றும் ஆளணி
⇩
நிறுவனத் தலைவர்
⇩
பகுதித்தலைவர்
⇩
ஆசிரியர்கள்
⇩
மாணவர்கள்
⇩
கல்விசாரா ஊழியர்கள்
⇩
பெற்றோர்கள்

நிறுவனத் திட்டமிடல்
⇩
வளங்களை ஒழுங்கமைத்தல்
⇩
நடைமுறைப்படுத்தல்
⇩
கட்டுப்படுத்தலும் நெறிப்படுத்தலும்
⇩
மதிப்பிடல்

இலங்கையில் அண்மையில் மறுசீரமைக்கப்பட்ட கல்விக் கொள்கையின் பிரகாரம் நிறுவனத் தலைவர் என்ற வகையில் அதிபர் முக்கிய கடமைகளை நிறைவேற்ற வேண்டும்மென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதிபரின் ஆற்றுகையானது அவரது வகிபங்கை விரிவுபடுத்தியள்ளது. அதாவது தமது நிறுவன நோக்கம் குறிக்கோள் திட்டங்கள் என்பனவற்றைத் தாமாகவே மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலையின் அதிபரே பொறுப்புவாய்ந்தவராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகளை எடுக்கக்கூடியவராகவும் வகை கூறுபவராகவும் இருக்க வேண்டுமென புதிய பாடசாலை மறுசீரமைப்புக் கொள்கை எடுத்தியம்புகின்றது. தமது பாடசாலையில் முக்கிய முடிவுகளை எடுப்பவராகவும் முகாமைத்துவ தர நிலை உயர்வான வழிவகைகளை செய்வதுடன் பாடசாலையின் அடைவு நிலை ஆற்றுகை வகிபங்கினையும் எடுத்துக் காட்டுகிறது. இந்நிலை பயனுறுதிவாய்ந்த பாடசாலைத் தொகுதியினை கட்டியெழுப்பும் என்ற நிலையும் கல்வி முகாமைதுவ நிலையிலும் நிறுவனத் தலைவர் என்ற வகையில் உணர்வு பூர்வமான மதிநுட்பம் முக்கியத்துவம் பெறுகின்றது.

உணர்வு பூர்வமான மதிநுட்பம் என்பது உடல் உளம் சார்ந்த ஒரு விடயமாகும். நுண்ணறிவு (IQ) என்பது சாமர்த்தியமாக உடனடியான முடிவுகளை எடுக்கக்கூடிய நிலையினைக் காட்டும் உணர்வு பூர்வமான மதிநுட்பமாகும். மதிநுட்பம் கொண்ட ஆளணி முகாமை நிறுவனத்தில் மேலிருந்து கீழாக ஊழியர்களைக் கையாளும் வழிமுறைகளைப்பற்றி குறிப்பிடுவதாகும். உணர்வுகளால் தூண்டப்படும் கலக்கம், ஏமாற்றம், முரண்பாடுகள, தாழ்வுமனப்பாண்மை, மனச்சோர்வு என்பவற்றைச் சமாளிக்கும் வழிவகைகளைக் காட்டும் சமிஞ்ஞையாக உணர்வு பூர்வமான மதிநுட்பம் அமைகிறது.

கல்வி முகாமையாளர் என்ற வகையில் ஒரு நிறுவனத் தலைவருக்கு உணர்வு பூர்வமான நுட்பத்தைப் பயன்படுத்தும் ஆற்றல், ஆளுமை இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சவால்களையும், பிரச்சனைகளையும் சமாளிப்பதற்கு ஏற்ற மன ஆற்றலைப் பெற்றிருப்பதும் ஒரு உணர்வு பூர்வமான மதிநுட்பமாகும். சோர்வு மனப்பான்மையும் பிரச்சினையிலிருந்து ஒதுங்கிவிடுவதுமான மனநிலையைத் தவிர்த்து சவால்களை எதிர்நோக்குகின்ற வாய்ப்புகளை தன்னகத்தே கொண்டு செயற்படுவது முக்கிய விடயமாகின்றது. பாடசாலை முகாமையாளர் என்ற வகையில் பாடசாலை உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் அறிவுபூர்வமான அறிவுபூர்வமற்ற முறையில் பிரச்சினைகள் சவால்கள் வருவது என்பது இயற்கையானதே. இத்தகைய சூழ்நிலைகளில் அதனை எதிர்த்து வெற்றி காணுகின்ற நுட்பங்களை வாய்ப்புக்களை வெளிப்படுத்த வேண்டும் .உணர்வு பூர்வமான மதிநுட்பமானது உணர்வு பூர்வமான தூண்டலுக்கான சமயோசிதமான பிரதிபலிப்பை வெளிப்படுத்துவதாகும். தமது மனநிலைக்கும் சுற்றாடலுக்கும் ஆக்கபூர்வமான திறனையும் செயல்முறையையும் வெளிப்படுத்துவதாகும்.

புத்திக் கூர்மையான தொழிற்பாடுகளினால் சுற்றாடலை தமக்குச் சார்பாக பயன்படுத்திக்கொள்ள முடியும். இங்கு பாடசாலை முகாமையாளர் ஒருவர் ஒரு செயலை வெற்றிகரமாக செய்வதற்கும் தனது உணர்வு பூர்வமான மதிநுட்பத்தினை பல்வேறு சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப வெளிப்படுத்த முடியும். எமது நாட்டில் காணப்படும் பல்வேறு சூழ்நிலை, சமூக முரண்பாடு, இனவர்க்க முரண்பாடு, சமவாய்ப்பு, கல்வி இன்மை போன்ற அம்சங்களுடன் காலநிலையையும் ஒரு நெருக்கடியாகக் கொள்ளலாம். இவ்வாறான சூழ்நிலையில் சுற்றாடலை தமக்கு சார்பாக பயன்படுத்தி கல்வி முகாமையாளர் என்ற நிலையில் நிறுவனத் தலைவர் புத்தி சாதுர்யத் தன்மையை வெளிப்படத்த வேண்டும் என உணர்வு பூர்வமான மதிநுட்பம் வெளிப்படுத்துகின்றது. தற்பெருமையைக் கையாள்வதும் ஒரு உணர்வு பூர்வமான மதிநுட்பமாகும். தற்பெருமையில் சுயநலம் இருக்கும் என்ற அபிப்பிராயம் தோன்றலாம். அது உண்மையாகவும் இருக்கக்கூடும். அதனையும் புத்திக்கூர்மையுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்த வேண்டும். ஒருவர் ஒரு செயலை வெற்றிகரமாக செய்வதற்கும் வினைத்திறனுடன் செய்து அதில் வெற்றிகண்டு அதனைத் தற்பெருமையாகக் கூறலாம். அவர் வெற்றி கண்ட நுட்பமானது மற்றொரு செயலை வெற்றிகரமாக செய்வதற்கு வாய்ப்பாக அமையலாம். பாடசாலை முகாமையாளர் வெற்றிகண்ட முறைபற்றிய அறிவு பூர்வமான தற்பெருமையானது அடுத்து வரவிருக்கும் கல்வி முகாமையாளர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாகவும் அனுபவமாகவும் அமையும். எனவே தற்பெருமை ஒரு மனித நிகழ்வின் வெளிப்பாடு எனினும் அதனைப் பெற்று மனித போத்தலாக பயன்படுத்தாது விஞ்ஞான பூர்வமாக பிரதிபலிக்கும் தன்மையை வெளிப்படுத்த வேண்டும்.

உணர்வு பூர்வ முதிர்ச்சியும் ஒரு மதிநுட்பமாகும். மனிதனில் வரும் பல்வேறு உணர்வுகளையும் எண்ணங்களையம் இனங்கண்டு அடையாளப்படுத்துதல் அதனைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல் என்பது ஒருவகையான திறமையாகும். தனது மன உணர்வுகளையும் எண்ணங்களையும் அடையாளம் காணத்தவறுபவர்கள் ஏனையோருடன் முரண்படுவதையும் அவதானிக்கலாம். பாடசாலையில் மனித பௌதிக வளங்களை பயன்படுத்தும்போது இவ்வாறான மதிநுட்பம் அவசியமாகும். ஒரு செயலை செய்வதற்கான மனநிலையானது அச் செயல் செவ்வனே நிறை வேறும் என்பது உளவியல் ரீதியான கருத்தாகும். பாடசாலை முகாமைத்துவ தொகுதியில் மேலிருந்து கீழ் நிலைவரையான ஊழியர்களை வழிநடத்தும் போது ஆரோக்கியமான சூழ்நிலையிலிருந்து முடிவுகளை எடுக்க வேண்டிய நிலை நிறுவனத் தலைவருக்கு அவசியமாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் உணர்வு பூர்வ மதிநுட்ப முதிர்ச்சிநிலை கை கொடுக்கும் என நம்பலாம்.

மற்றவர்களை முன்னேற்றுதல் என்ற மனநிலையை உண்மையாக வைத்திருப்பது உணர்வு பூர்வமான மதிநுட்பமாகும். ஒரு நிறுவனத்தில் உள்ளவர்களின் பெருமதிப்பினையும் அவர்களை அடையாளம் காணவும் பயனுறுதிவாய்ந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள அவர்களை அடுத்த நகர்விற்காக பயன்படுத்துவது மகிழ்ச்சிப்படுத்தல் தாமதப்படுத்தல் குறிப்பிட்டசந்தர்ப் பங்களில் உடனடியாக சந்தோஷப்படுத்தல் நடவடிக்கைகளைப் பிற்போடுதல் ஓத்துப்போதல் வளைந்து கொடுத்தல் சகிப்புத்தன்மையும் பின்வாங்குதலும் ஆக்கநட்பு மற்றும் பிரச்சினைகள் சவால்கள் ஏற்படும் போது ஆக்கிரமிப்புத் தன்மையையும் பிரதிபலிக்கும் வகையில் முகாமையாளர் மதிநுட்பத்தோடு செயற்படுதல் வேண்டும். இவ்வாறு பாடசாலை முகாமைத்தவத்தின் உணர்வு பூர்வமான மதிநுட்பம் வகைப்படுத்தப்படுகின்றது. சமகால கல்வித் தேவைகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கு நவீன நுட்ப முறைகளை பயன்படுத்துவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். எனவே உணர்வு பூர்வமான மதிநுட்பத்தை பாடசாலை முகாமைத்துவத்திற்கு ஏற்ப பயன்படுத்துவது உசிதமாகும்.

• • • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை

சி. மேரி கிறிஸ்டினா BA (R)
ம.மா/வ/டலோஸ்.த.ம.வி
உடப்புசல்லாவ.

உளவியலில் காணப்படும் கலைச்சொற்களிலேயே மிகவும் ஆழமான விரிவான பொருள் கொண்ட சொல் ஆளுமையெனும் சொல்லே. எனினும் இச்சொல்லுக்கு எளிய தெளிவான ஒரு விளக்கம் தருவது அருமையான காரியமாகும்.

ஆளுமை எனப்படுவது ஒருவன் பெற்றுள்ள உடற்பண்புகள், மனப்பண்புகள், மனப்பான்மைகள், சமூக அறநெறிப்பண்புகள் ஆகியன யாவும் ஒன்று சேர்வதால் எழும் கலவையைக் குறிப்பதாகும். ஆளுமையில் உடற்தோற்றம், அனுபவம், பற்றுக்கள், நினைவுகள், கற்பனைகள், பழக்கவழக்கங்கள், ஆர்வங்கள், நடையுடை பாவனை, வாழ்க்கைமுறை ஆகியனயாவும் அடங்கியுள்ளன. " உடல், மனப்பண்புகளின் தனிப்பட்ட அமைப்பு ஆளுமையாகும்". என்று ஆல்போர்ட் (Allport) என்னும் உளவியலறிஞர் கூறுகிறார். மேலும் சில உளவியலறிஞர்கள் ஆளுமை தொடர்பாக கூறும் கருத்துக்களாவன.

**கில்போட்** :- ஆளுமை என்பது ஏதோ ஒரு சமுதாய சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒருவர் துலங்கும் போது அவர் வெளிப்படுத்தும் உடல் உளச்செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பாகும்.
**ஆர்னஸ்ட் சில்காட்** :- சூழலுக்கான தனிப்பட்டவர்களின் சீராக்கத்தைத் தீர்மானிக்கும் நடத்தைப் போக்குகளினதும் சிந்தனை முறைகளினதும் இணைப்பே ஆளுமையாகும்.
**வாட்சன்** :-ஆளுமை என்பது நம்பத்தகுந்த செய்திகளை நீண்டதொரு காலத்திற்கு உற்று நோக்கல் வழியே காணக்கூடிய செயல்களின் கூட்டுத்தொகுப்பேயாகும்.

இவர்களுள் ஆல்போர்ட் என்பவர் தரும் விளக்கமாகத் தெரிகிறது.

**ஆளுமைபண்புக்கூறுகள்**

ஆளுமைப்பண்புக்கூறுகள் இருவகைப்படும்.

**மேற்பரப்பு பண்புக்கூறுகள்**

இவை நேரான செயல்களில் அவதானிக்கக்கூடியவை. சிநேக மனப்பான்மை, சமூக இயல்பு, மனவுறுதி, மனவெழுச்சி, நடையுடை பாவனை முதலிய இவ்வகையுள் அடங்கும்.

**அக ஆளுமைக்கூறுகள்**

இவற்றை நேரடியாக அவதானிக்க முடியாது. இவற்றுள் ஒருவனது பயங்கள் பதகளிப்புகள், அவாக்கள், தன்னைப்பற்றிய கருத்து, கற்பனைகள் ஆகியன அடங்கும். இவை மேற்பரப்புப் பண்புக்கூறுகளில் செல்வாக்குச் செலுத்துவன. இவை ஆளுமைக்காரணிகள் எனப்படும்.

**ஆளுமை வகைகள்**

உளவியலாளர்கள் உடலியல் இயல்புகளையும் உளவியல் இயல்புகளையும் கொண்டு ஆளுமை அடிப்படையில் ஆட்களைப் பலவகையாக வகுத்துள்ளனர்.

**1.புறமுகி-அகமுகி**

கால்யுங் என்ற உளமருத்துவர் பிறருடன் ஏற்படுத்தும் தொடர்புகளில் ஆட்கள் வேறுபடுகின்றனர் எனக்கண்டார். புறமுகி எனும்போது கலகலப்பாகக் கதைத்தல், கவலையின்மை, கூச்சப்படாமை, சிநேகமுடைமை, பிறருடன் செயலாற்ற விருப்பு என்பவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமுகி எனும் போது கதைப்பது குறைவு, கவலைப்படல், தனிமை, கூச்சப்படல் தனது உடைமைகளில் அதிக கவனம் என்பவைகளாகும்.

இவ்விரு இயல்புகளையும் கொண்டவர்கள் இருமுகிகள் என அழைக்கப்படுவர் ஒரு சிலரே அதிகளவு புறமுகிகளாகவும் அதிகளவு அகமுகிகளாகவும் உள்ளனர்.

**2. உடல்சார் வகைகள்**

உடலமைப்பின் வேறுபாடுகளுக்கு இணங்க ஆளுமையை "கிறச்மர்" என்பவர் மூன்று வகைகளுள் வகுத்தார்.

1. கட்டையானதும் கொழுத்ததுமான உடல் உடையோர், இவர்கள் புறமுகிகள் பிறரால் விரும்பப்படுவர்.
2. பருத்ததசைஇ எலும்புடையோர் அதிக சக்தியும், எதிர்க்கும் இயல்பும் உடையவர்.
3. உயரம், ஒல்லி இவர்கள் பிறரில் பிழைகாண்போர் கட்டளைகளுக்கு உணர்ச்சி வசப்படுவோர்

**3.உடற்கூற்று வகைகள்**

"செல்டன்" என்பவர், உடல் ஆளுமைத்தொடர்பை வேறுமுறையில் வகுத்துள்ளார்.

1. வயிற்றுப் பகுதிகளின் அமைப்பு அடிப்படையில் மெதுமையான வட்டமான உடலுடையோர்.
2. கட்டான தடித்த தோலுடைய கனமான உடற்தோற்றமுடையோர்.
3. மெலிவான உடலும் உணர்ச்சியான தோலும் உடையோர்

**4.சுபாவ வகைகள்**

ஸ்பாங்கர் என்பவர், ஒருவரின் உடற்கட்டுக்கும் சுபாவத்துக்கும் இடையே உள்ள இணைவைக் கொண்டு ஆட்களை ஆறு தொகுதிக்குள் வகுத்துள்ளார்.

1. கொள்கைவகை – கருத்து நிலையில் சிந்திப்போர், அறிஞர், விஞ்ஞானிகள் இவ்வகையில் அடங்குவர்.
2. பொருளாதார வகை – வியாபாரிகள் பணம் பற்றி சிந்திப்போர் இவ்வகையில் அடங்குவர்.
3. அழகுணர்ச்சி வகை – கலைஞர், நடிகன், கவிஞர், சிற்பிகள் போன்றோர் இவ்வகையிலடங்குவர்.
4. சமூக வகை – சமூகத்தொண்டு செய்வோர், பிறர் நலன் கருதுவோர் இவ்வகையில் அடங்குவர்.
5. அரசியல்வகை – பிறரில் ஆதிக்கம் செலுத்துவோர், அரசியல் வாதிகள் இவ்வகையில் அடங்குவர்.
6. சமய வகை – சமயத்தொண்டர், மதகுருமார் முதலியோர் இவ்வகையில் அடங்குவர்.

**5.பிரொய்டின் ஆளுமைக்கொள்கை**

பிராய்ட் (Freud) என்பவர் நனவிலி உள்ளம் பற்றிய ஆய்வுகளின் விளைவாக இட் (Id), அகம் (Ego) , அதியகம் கூறுகள் (Superego) என்னும் நிலையினை மூன்று ஆளுமைக்கூறுகள் பற்றிய கோட்பாட்டை விடுத்தார். இவை ஆளுமையின் ஆழக்காரணிகள் என்றும், உள்ளார்ந்த தூண்டு விசைகள் என்றும் கருதுகின்றார். இட் என்பது நனவிலி உள்ளத்தினுள் உள்ள கூறாகும். இது இயல்பூக்கத்தை ஒத்தது. உடனடியாகத் தேவையைப் பூர்த்தி செய்ய விரும்புவது நீதி, நியாயமற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம் என்பது நனவுநிலைச் செயல்களை அடக்கும் கூறாகும். அதியகம் என்பது மனச்சாட்சி, விழுமியம் ஆகியனவற்றைக்கொண்ட கூறாகும்.

பிராய்டின் கருத்துப்படி, இட், அதியகம் ஆகியவற்றின் வெவ்வேறு முரண்பாடான தேவைகளை அகம் நடு நிலைப்படுத்தியே ஆளுமை விருத்தியாக்குகின்றது. நியாயங்காணல், புறத்தோற்றம் போன்ற பொருத்தப்பாட்டு முறைகளை அகம் பயன்படுத்தி முரண்பாடுகளைத் தவிர்க்கும். ஒரு பிள்ளையின் உள, பாலியல் வளர்ச்சியில் உள்ள படிகளில் பிள்ளையின் இன்பத்துக்கு தடை உண்டானால் மனமுறிவு ஏற்பட்டு பாதிக்கப்பட்டு ஆளுமை வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதாகும்.

**ஆளுமையின் சிறப்பியல்புகள்**

1. தனித்தன்மை வாய்ந்தது. தீர்க்கமான வெற்றிகரமான முகாமைத்துவப்பண்பாகவுள்ளது.
2. சூழ்நிலைக்குத் தக்கபடியாக சரியான முடிவுகளை எடுக்க வழிகாட்டுவது சமூகச் சூழ்நிலைகளினால் உருவாக்கப்படுகின்றது.
3. ஆளுமை என்பது தொடர்ந்து வளர்ச்சியடைவதாகும். இவ்வளர்ச்சி சூழலுடன் ஏற்படும் மோதுகை இடைத்தொடராகும்.
4. ஆளுமை என்பது குறுகிய நிலைத்தன்மையானதல்லஇ சூழலுக்கு தக்கபடி சிறிதேனும் மாறக்கூடியது.
5. ஆளுமை நடத்தைக்கு ஒருமைப்பாட்டையும் சில சந்தர்ப்பங்களில் முரண்பாட்டையும் தரும்.
6. இருவரது ஆளுமை ஒரே மாதிரி இருப்பதில்லை.அவர்களது இலக்குகள் நோக்கங்களுக்கேற்ப வேறுபடும்.

“ஆளுமை பல்வேறான பண்புக்கூறுகளின் ஒருமித்த திரட்டு” என்கிற கருத்து இறுதி நிலைப்பட்ட தொன்றாய்ப் பெறப்பட்டது. எனினும் சமகாலக்கொள்கைகள் ஆளுமை உருவாக்கத்தில் சமூகச்சூழல் காரணிகளுக்கு முதன்மை, கொடுக்கின்ற போக்கு, பரந்துபட்ட வியூகத்தில் ஆளுமை குறித்த பார்வை, பரிணாமப்படுகிறதென்பதை எடுத்துக்காட்டும் வகையில் அமைகின்றது. ஆளுமைக்குணவியல்பு தனிப்பட்டரீதியிலும் சமூகவாழ்விலும் முதன்மை பெற்றுக்காணப்படுகின்றது. மகிழ்வான ஆளுமையுடையோர் அனைத்து மானிடனாலும் விரும்பப்படுகின்றான். வரவேற்கப்படுகின்றான். எதிர்கால ஆய்வுகள் ஆளுமை குறித்ததோர் தனித்துவ கொள்கைகளை உருவாக்க முயன்றால் அது வரவேற்கத்தக்கது.

**உசாத்துணை:-**


1. கல்வி உளவியல் எஸ் சந்தானம் வி.கணபதி
2. கல்வி உளவியல் அடிப்படைகள் யோ.பெனடிக் பாலன்
3. கல்வி உளவியல் இ.பா.வேணு கோபால்
4. பிரயோக உளவியல் கை பாலசுப்பிரமணியம் தனபாலன்
5. உளவியல் ஓர் அறிமுகம் கை கனகசபை சிவானந்தமூர்த்தி


••••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அம்மாவுக்கு.....!

-மல்லிகை ஆனந்த்-
மமா/வ/மகாஊவா தமிழ் வித்தியாலயம்

அன்புள்ள அம்மாவுக்கு
அருமை மகளெழுதுவது
நலம் நலமிங்கே
நாடுவதும் அஃதே

எண்ணியிருந்தேன் எழுத
ஆசை ஆசையாய் கடித முனக்கு
ஆனால்.....
எழுதுகிறே னிப்போ
அவசர அவசரமாய்
பிணக்கு...

இங்கேயே நீ இருந்திருந்தால்
என்றோ ஆகியிருப்பாள்
அவளுனக்குச் சக்களத்தி
அப்பனே அழைத்து வந்ததால்
ஆகியிருக்கிறாள்
அவளெனக்கிப்போ சித்தி

சித்தியாய் வந்தவளின்
சிலுக்குச் சுடிதாரை
சீராய் துவைப்பதிப்போ
சின்னவ ளெனது சேவை
சீவிமுடித்து சிங்காரித்து
சீராட்டிப் பாராட்ட வேண்டும்
தங்கச்சிப் பாப்பாவை

அவ்வப்போது
அப்பனவனும் தருகின்றான்
சித்தியுடன் சேர்ந்து தொல்லை
கணக்கு
வெளிநாட்டுக்கு நீ போனதால்
வீட்டு வேலைக்காரி
பதவியிப்போ எனக்கு

மறந்தே போனது
பள்ளிக்கூடப் பாதை
பள்ளிப்பக்கம்
திரும்பினாலே போதும்
திருகி யெடுக்குது
சித்தி யெனது காதை

படிப்பதிலே நான்
கெட்டிக்காரி ஆதலினால்
பள்ளிக்கு அழைத்து செல்ல
வந்தாரெனது வகுப்பாசிரியர்
நம்வீடு தேடி
பலமுறை

வந்தவரைச் சமாளித்து
பாசாங்கு பண்ணி
பல்லையிலித்து
அனுப்பிவிட்டாள்
வந்த வழியே
அவரை

தொட்டால் போதும்
புத்தகத்தை
பத்திரகாளியாய் மாறி
சித்தி தருகிறாளெனக்குச்
சித்திரவதை

பகலெல்லாம் இரவாகி
சித்திக்கோ தூக்கம்
சில சமயம் சித்தி
"டி வி" யும் பார்க்கும்
பசியுடன் நிசியிலே
நாங்கள்
பாதி மயக்கம்
பட்ட சாராயப் போதையிலே
அப்பனோ முழு மயக்கம்

அப்பாவின் போதை
மயக்கத்திலும்
சித்தியின்
சிணுங்கள் கேட்கும்
சொல்லமுடியாத
அகவையெனக்கும்
ஆனாலும்
சொல்லியே
ஆகவேண்டும்
உனக்கும்

சல்லியும் பணமும்
சம்பாதிக்க
சவூதியில் நீ
பட்டது போதும் பாடு
சாணக்கியமாய் நீ

ஊர் வந்து சேரு
உன்னிரு பிள்ளைகளெங்களை
நிம்மதியாய் வாழ
வழிசமைத்திடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் நூலக பயன்பாடும் வாசிப்பின் முக்கியத்துவம்

S.பிரியதர்ஷினி
மமா/வ/டலோஸ் தமிழ் மகா வித்தியாலயம் (Dip in teach) Maths

தகவல் புரட்சி அசுரவேகத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் உலகில் அன்றாட நிகழ்வுகளில் இருந்து ஆழமான ஆய்வுகள் வரை பல்வேறு தகவல்களை அறியவும், அறிவை அபிவிருத்தி செய்யவும், நல்ல பண்புகளை வளர்த்து உன்னதமான மனிதனாக மாறவும், தன்னம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளிப்பதிலும் நூலகங்கள் பெரும் பங்கை வகிக்கின்றன. இக்காலகட்டத்தில் இணையம் தொலைபேசி என நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் நமது தகவல் பரிமாற்றம் பெரிதும் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது.

முற்காலத்தில் அன்றாட செய்திகளை படிக்கவும், தெரிந்துக்கொள்ளவும் நூலகத்தையே நாடிச்செல்வார்கள். நூலகத்தின் மூலமே அன்றைய அரசியல் பணிகளில் இருந்து ஆட்சி அதிகாரம் வரையான அத்தனை விடயங்களையும் தெரிந்துகொள்ள முடியும். இன்று நூலக பயன்பாடு என்பது அரிதாகிவிட்டது இதற்கு பிரதான காரணம் இன்றைய இளைஞர்களிடம் வாசிக்கும் பழக்கம் குறைந்துவிட்டதன் எதிரொலியே. வாசிப்பு பழக்கம் குறைவடைந்த நிலையில் நூலகங்கள் மூடப்பட்டு சமூகத்தில் குழப்பங்களும் பிரச்சினைகளும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பது உண்மையே.

வளரும் இளம் தலைமுறையினரும் எந்தவித இலக்கும் இல்லாமல் பயணித்துக்கொண்டிருக்கின்றனர். தமது எதிர்காலம் குறித்த சிந்தனையும் சமூகத்தை பற்றிய அக்கறையும் வெகுவாக குறைந்துள்ளது. கல்வியிலிருந்த வேகம் தற்போதுள்ள விஞ்ஞான வளர்ச்சியை பயன்படுத்தாததனால் குறைந்து செல்கின்றது. அனைவரும் நல்ல தொலைபேசியினூடாக சமூக வலைத்தளங்களில் பிரவேசித்து தங்களது பொன்னான நேரங்களை செலவழிக்கின்றனர். மற்றும் பல்வேறு அரிய புத்தகங்களை வாசித்து "உன் நண்பனை சொல் நீ யாரென்று சொல்கின்றேன்." என்ற கருத்து புத்தகங்கள் நண்பனாக இருந்து எம்மில் மறைந்து இருக்கும் ஆற்றல்களை கண்டுபிடித்து கொடுப்பதற்கும் தெளிவு மற்றும் சிறந்த அறிவைப் பெருக்குவதற்கும் அவசியமாகின்றது.

வாசிப்பு என்பது ஒரு பிள்ளை கருவறையில் இருக்கும் போதே ஆரம்பிக்கப்பட வேண்டும். அதாவது கருவுற்றத்தாய் நல்ல நூல்களை வாசிப்பதன் மூலம் பிள்ளைகளின் மூளை விருத்தி சிறப்பாக வளர்ச்சியடையும் என்பது பல அறிஞர்களின் கருத்தாகும். "வீட்டுக்கு வெளிச்சம் தருவது சாளரம் புத்தகங்கள் இல்லாத வீடு சாளரங்கள் இல்லாத சத்திரம் போன்றது". நம்மை ஏமாற்றாத ஒரு சிறந்த நண்பன் புத்தகம் தான்."அடிமைகளின் சூரியன் என போற்றப்பட்ட ஆபிரகாம் லிங்கன் புத்தகங்கள் படித்தே உயர்ந்தான். அவர் ஒரு தச்சுத்தொழிலாளியின் மகனாக பிறந்து அவரது தீவிரப்படிப்பினால் தேசம் புகழ திகழ்ந்தார். ஜோர்ஜ் வாசிங்டன் வரலாறு எனும் நூலை இரவல் வாங்கிப்படித்தார். அந்நூல் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் தான் எதிர்காலத்தில் அமெரிக்காவின் குடியரசு தலைவராக வரவேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையை உருவாக்கியது. இது வரலாறு நமக்கு கூறும் செய்தி.

லண்டன் நூலகத்தில் இருபது ஆண்டுகள் படித்து ஆய்வு செய்த கால்மாக்ஸ் உலகின் பொதுவுடமை தந்தையாக திகழ்ந்தார். இவ்வாறு வரலாற்றில் பின்நோக்கி நகர்ந்தால் வாசிப்பு ஒருவனை உயர்ந்த மனிதனாகவும், வாசிப்பு என்பது ஒரு எரிச்சலூட்டும் அலுப்பூட்டும் விடயமல்ல என்றும் அதுவே எதிர்கால வெற்றிக்கு ஒரு திறவுகோல் என்றும் பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். வாசிப்பு என்பதை புத்தகம் அல்லது பத்திரிகை மூலமே கட்டியெழுப்பப்படவேண்டும்.

அப்போதுதான் எதிர்காலத்தில் பாவிக்கும் இலத்திரனியல் ஊடகங்களின் தகவல்கள் இனையச்செய்திகள் புலமைசார் கட்டுரைகள் போன்றவற்றை வாசிப்பதற்கும் பாவிப்பதற்கும் பழகிக்கொள்வார்கள். எனவே தகவல் பெறுவதற்கு முக்கியமான வழி வாசிப்பாகும். ஏனைய அனைத்து கல்விசார் திறன்களுக்கும் அடிப்படை வாசிப்பது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

விசேடமாக வாசிப்பதன் மூலம் பலநன்மைகளை பெறலாம் மொழித்திறன் விருத்தி, சொல் வாண்மை, சொல்லாட்சி என்பன விருத்தி அடைகின்றது. அத்துடன் பொதுஅறிவு வளர்ச்சியும் ஏனையவர்களின் கலாச்சாரம் பாரம்பரியம் என்பவற்றை அறியும் வாய்ப்பு கிடைக்கின்றது.
தன்னம்பிக்கை, ஆளுமைச்சக்தி அதிகரிப்பு, கிரகித்தல் திறன் என்பன அதிகரிக்கின்றது. நல்ல புத்தகங்களை படிப்பதால் உயர்ந்த சிந்தனைகள் பிறக்கும், அறிவு வளரும், எண்ணங்கள் நேர்படும் திறமைகள் மிளிரும். உற்சாகம் ஊற்றெடுக்கும் முடிவுகள் எடுக்க நூல்கள் துணைப்புரியும். மாணவர்கள் ஒரு நாட்டின் சிறந்த மனித வளம் அப்படிப்பட்ட மாணவச்செல்வங்களை கொண்டு புதியதொரு உலகம் செய்ய இவ்வாசிப்பு பழக்கமானது சிறந்த பாதையில் இட்டுச்செல்கின்றது.

ஆகவே இன்றைய கல்வி வளர்ச்சியிலும் முக்கிய பங்காக அமைவதோடு அதற்கு அடித்தளமாக அமைவது நூலகமாகும் உலகநாடுகளில் உள்ள பாடசாலை நூலகங்களின் அடிப்படை நோக்கம் மாணவர்களிடையே நூலக பயன்பாட்டினை வளர்ப்பதோடு வாசிப்பு பழக்கத்தை தூண்டுவதாகும் நூலகம் என்பது பொது அமைப்புக்களோ நிறுவனங்கள் அல்லது அமைப்புகளில் தனிநபர்களால் உருவாக்கப்பட்டு பேணப்படுகின்றது. தகவல் மூலங்களில் அல்லது சேவைகளில் ஒரு சேமிப்பாகும். மரபுவழியான நோக்கில் இது நூல்களின் சேமிப்பாகும்.

நூல்கள் தவிர தககவல் தொழிநுட்பத்தின் பிறஊடகங்கள் சேமித்து வைத்திருப்பதுடன் பல நூலகங்கள் நுண்படலம் {Micro Fiche) நுண்சுருள் தகடு (Micro Film) ஒலிநாடாக்கள் இருவட்டுக்கள் என்பனவற்றில் பதியப்பட்ட நிழற்படங்கள் ஓவியங்கள் வேறு ஆவணங்கள் என்பவற்றை சேமித்துவைக்கும் இடங்களாகவும் உள்ளன. இவைத்தவிர தனியாள் தரவுத்தளங்களான அணுக்கம் மற்றும் இணைய அணுக்கம் என்பன முதலியவற்றையும் வழங்குகின்றன.

இன்றையநவீன நூலகங்களில் பல மூலங்களிலிருந்து பல்வேறு வடிவங்களில் தகவல்களை தடையின்றி பெற்றுக்கொள்வதற்கான இடங்களாக திகழ்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு” என்று ஔவையார் கூறியுள்ளார். எனவே வளரும் இளம்பராயத்தினர் எந்தவித ஆர்வமும் இன்றி பயணித்துக்கொண்டிருக்கின்றனர். “இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள்” என்ற கூற்றுக்கேற்ப மாணவர்கள் இந்த வாசிப்பு பழக்கத்தை கூட்டி கொள்ள முயற்சிக்க வேண்டும்.

“வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது” எனவே இவ்வுலகிவுள்ள அனைவரும் ஓய்வுநேரங்களிலும் வாசிப்புப் பழக்கத்தை உண்டாக்கிக்கொள்வதன் மூலம் நாமும் ஒரு பூரண மனிதராக வாழ முடியும். இதனால் ஒவ்வொருவரும் தங்களது வீடுகளை வாசிப்பிற்கு ஏற்ற இடமாக மாற்றி நூலகம் பற்றிய அவசியத்தை ஏற்படுத்தி எதிர்கால சமூகத்தை வாசிப்பு மிகுந்த சமூகமாக கட்டியெழுப்புவோம்.

●●●●

With best compliments from

**SRI KATHIRESANSS**

***News papers agent, stationery, school items & fancy goods etc...***

**முள்ளுக்கு இடையே முரட்டு
இலைகளுக்கு நடுவே மெல்லிய
மலரைத்தேடுகிறது தேனீ.
அதுதான் ஆசிரியம்.
ஆசிரியர் பணி சிறக்க
வாழ்த்துகிறோம்.**

***No .52, main street,
udapussallawa***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் குறைபாடு Learning Desability.

**Miss. அபிநயா ராமகிருஷ்ணன்**
**விஷேட கல்வி**
**மமா/வ/இராகலை தமிழ் மகா வித்தியாலயம்**

விஷேட தேவையுடையோரை பல பிரிவுகளில் வகைப்படுத்துகின்றனர் அவ்வகையினாள் ஒரு வகையினரே கற்றல் குறைபாடு உடையோர் கற்றல் குறைபாடு என்பது ஒன்றை கற்பதில் ஏற்படும் மிகுதியான இடர்பாடு எனலாம் இதனை நாம் இரண்டு வகையாக நோக்கலாம்

1. முதன்மையான கற்றல் இடர்பாடு
2. சிறப்பான கற்றல் இடர்பாடு
3.

முதன்மையான கற்றல் இடர்பாடு எனும் போது பிள்ளை குறிப்பிட்ட ஒரு தேர்ச்சியை அடைவதற்கு சீரான வழிகாட்டல் இன்மையை கருதலாம் அதாவது பிள்ளையிடம் கற்றலுக்கான திறன்கள் காணப்படினும் ஆசிரியரின் வழிகாட்டல் கிடைக்காமை, பாடசாலைக்கு வராமையால் திறன்களை வெளிபடுத்த முடியாமை போன்றவற்றை கூறலாம் இவர்களை பொருத்தமான கற்றல் சூழலின் பால் வழிப்படுத்துவதன் மூலம் தீர்க்கலாம்.

சிறப்பான கற்றல் குறைபாடு எனும் போது செவிமடுத்த, பேசுதல், வாசித்தல், கணக்கிடுதல், தர்க்கித்தல் என்பவற்றில் காணப்படும். வெளிவாக அவதானிக்கக் கூடிய குறைபாடுகள் இதற்கு காரணங்களாக பார்வை, கேட்டல் இயக்கத்திறன் குறைபாடு நுண்மதி குறைவு காரணமாக ஏற்படும் மெதுவான உளவளர்ச்சி மற்றும் சூழல் இடர்பாடு என்பவற்றை கருத இயலாது மாறாக கேட்டல், பார்வை, சூழல், பொருளாதார ரீதியான அனைத்து திறமையும் இருந்தும் எழுத்து, வாசிப்பு, கணக்கிடுதல், தர்க்கித்தல் கிரகித்தல் என்பவற்றில் ஏற்படும் குறைபாடு ஆகும் இது வாழ்நாள் முழுவதும் தொடரக் கூடிய நிலையும் காணப்படும்.

ஈது தனிநபர் குறைபாடு பிறப்பிலும் இடையிலும் இந்தநிலை ஏற்படும் மூளையில் ஏற்படும் பாதிப்பு முளை முந்த இயக்கம் புலக்காட்சியின் ஒழுங்கீனம் என்பவற்றல் காரணங்களாக கூறலாம் இது வெளியே தெரிவதில்லை நபருக்கு நபர் வேறுபடும் பிறப்பிலேயே கூட காணப்படினும் பிரதானமாக,

1. வாசிப்பதில் குழப்பம் - Dysiexia
2. மொழி சொல் சார் குழப்பம் -Aphasia
3. எழுத்துக் குழப்பம் - Dysgrsphia
4. கணக்கிடல் குழப்பம் - Discal culia

டிஸ்லெக்ஸியா - வாசிப்பதில் குழப்பம்

பார்வை கேட்டலில் குறைபாடு இல்லாத போதும் வாசிப்பதில் இடர்படுதலை இவ்வகையில் அடக்கலாம் எழுத்துக்களை இணைத்து வரியாக வாசிக்க முடியாமல் முன்பின்னாக மாற்றி வாசித்தல் ஒலிக்கு சரியான உச்சரிப்பின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிகளை/எழுத்துக்களை விட்டு விட்டு வாசித்தல் மிண்டும் மீண்டும் ஒரே வரியை வாசித்தல் எழுத்துக்களை சரியாக இனங்கான முடியாமை என்பவற்றை இவர்களின் இயல்புகளாக கூறலாம்.

இவற்றை நிவர்த்திக்கும் வழிகளாக

1. மாணவர்களை கொண்டே சொற்பட்டியலை தயாரித்தல் அதனை வாசிக்க செய்தல் ஒரு பந்தியை திரும்ப திரும்ப வாசிக்க செய்தல் மறைத்து வாசித்தல் போன்ற செயற்பாடுகளை மேற் கொள்ளலாம்

அபாசியா- மொழி, சொல், சார குழப்பம்,

பார்வை கேட்டலில் குறை வில்லாத போதும் மூளையில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக மொழி சொல் சார் செயற்பாடுகளில் ஏற்படும் பாதிப்பு ஆகும்

இவர்கள் கிரகிக்க முடியாதவர்களாகவும் விளங்கிக் கொள்ள முடியாதவர்களாகவும் வினாக்களுக்கு விடை கூற முடியாதவர்களாகவும் தெளிவாக உச்சரித்து பேச தெரியாதவர்களாகவும் இருப்பர் உயிர்க்குறிகளை அனுசரித்து எழுத்து கூட்டி வாசிக்கவோ நிறுத்தற் குறிகளை அனுசரித்து கருத்து வெளிப்படுத்தவோ முடிவதில்லை இதற்கா பரிகார நடவடிக்கைகளாக உச்சரிப்பை பரீட்சயப்படுத்தும் பேச்சு பயிற்சிகளில் ஈடுபடுத்தல் உச்சரிப்புக்காக உள்ளார்ந்த ஊக்கலை ஏற்படுத்த தூண்டுதல் என்பவற்றை கூறலாம்.

**டிஸ்கிராம்பியா- எழுத்துக் குழப்பம்**

மூளையில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக எழுத்து தொடர்பான செயற்பாடுகளில் ஏற்படும் பாதிப்ப ஆகும் இவர்களால் உரிய முறையில் எழுத்துக்களை உரிய அளவில் உரிய இடத்தில் எழுத வைத்தாலும் சரியாக எழுத முடிவதில்லை பல முறையில் எழுத வைத்தாலும் சரியாக எழுத சிரமப்படுவர் எழுத்துக்களை தெளிவற்றதாகவும், பக்கம் மாறியும், தலை கீழாகவும் சத்தம் வெளியில் கேட்கும்வகையில் உச்சரித்தவாறும் எழுதுவர் பொறிமுறை அனுகரிக்காமலும், சொல் வாக்கிய இடைவெளி இன்றியும் எழுதுவர் வாக்கியங்களை எழுதவோ வினாக்களுக்கு விடை எழுதவும் இடர்படுத்த உயிர்க்குறிகளை வேறுபடுத்த முடியாது. உயிர்க்குறிகளை மாற்றி எழுதுபவராகவும் காணப்படுவர். நன்கு பரீட்சையமான சொற்களை எழுத விடல் பிழைகளை அலட்சியப்படுத்தி எழுதுவதற்கு ஊக்குவித்தல், தவறுகளை தானே திருத்த வழிப்படுத்தல் என்பன பரிகார செயற்பாடுகள் காணப்படுகிறது.

**டிஸ்கல் கூலியா - கணக்கிடல் குழப்பம்**

எண் சார் செயற்பாடுகளில் ஏற்படும் குறைபாடு எண்களை இனங்காணல் தொடராக கூறுதல், எழுதுதல் எண் பெயர்களை வரிசைப்படுத்தல்,கொண்டு செல்லலுடன் கூட்டல், கழித்தல், பணக் கொடுத்தல், நீள, அகல, உயரம், வாய்ப்பாடு, என்கோலங்களை விளங்கிகொள்ளல் என்பவற்றில் மிகுதியாக இடர்படுவர் முன்வரும் பூச்சியம், பின்வரும் பூச்சியம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு பற்றிய அறிவை பெற்றிருக்க மாட்டார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவர்த்தி செய்யும் வழிகளாக படிமுறைகளை எளிதாக் செயற்பாடுகளுடன் கூடிய கற்பித்தல் யதார்த்த சந்தர்ப்பங்களை பெற்று கொடுத்தல், விளையாட்டினூடாக கலந்து செயற்பாடுகளை மேற்கொள்ளல் என்பவற்றை கூறலாம்.

இவ்வாறு கற்றல் இயலாமையுடையோர் வேறு விஷேட திறன்களைக் கொண்டிருப்பர் மேற்குறிப்பிட்டவை தவிர விளையாட்டிலும் இடர்படக் கூடும். இவர்களுக்கு தேவைகளை சந்தர்ப்பத்தில் சரியான வழிகாட்டல்களையும் ஊக்கத்திலேயும் நம்பிக்கையும் வழங்கும் அவர்களின் திறன்களை வெளிக் கொண்டு வருவது ஆசிரியர்களின் கடமையாக காணப்படுகின்றது.

••••


# PRASADI COMMUNICATION



No: 4, Post Office Road,
Udapussellawa.
Tp:0522269365




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப்பாடசாலையும் இன்றைய மாணவர்களும்

திருமதி சுபலக்ஷ்மி சுந்தரமூர்த்தி
மமா/வ/இராகலை த.ம.வி
ஹல்கரனோயா

இன்று மாணவர்களாக காணப்படுபவர்களே, வருங்காலத்தில் நாட்டின் சகல வளர்ச்சிகளிலும் பங்குபற்றி நாட்டை கட்டியாள்பவர்களாக காணப்படுவார்கள். எனவே இவர்களை சரியான முறையில் பராமரித்து சிறந்த பிரஜைகளாக உருவாக்குவது எமது சமூகத்தின் பொறுப்பாகும்.

இந்த வகையில் மாணவர்களை சறந்த முறையில் உருவாக்குவதற்கு எமது முறைசார் கல்வித்திட்டத்தல் ஏறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன்பாகவே சமயப்பாடம் கட்டாய பாடமாக்கப்பட்முள்ளது. இதன் மூலம் மாணவர்களிடையே சிறந்த விழும்யப் பண்புகளையும், ஒழுக்கத்தையும், பேறுவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. இருந்த போதிலும் இன்றைய மாணவர்களிடையே சமய பாடமீதான அக்கறை குறைந்தே காணப்படுகின்றது. இதற்கு நாம் பலவிதமான காரணங்களை கூறலாம். இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இந்து கலாச்சார அமைச்சானது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக அறநெறி பாடசாலை திட்டத்தினை தொடங்கியது இம்முறைமை சமய வாழ்வினை மையமாகக் கொண்ட பயிற்சியை செயல் அனுபவங்களாக கொடுத்து அகவயமான மாற்றங்களைத் தோற்றுவிப்பதனையே நோக்கமாகக் கொண்டது. இதன் மூலம் நெறிமுறையான வாழ்க்கை முறைக்கு அத்திவாரம் இடப்படும் என்ற சிந்தனையும் இருந்தது. இந்த நோக்கங்களை அடைவதற்காக இந்த கலாச்சார அமைச்சு ஓர் சிறந்த பாடத்திட்டத்தினை வகுத்தது மேலும் பாடநூல்களையும், இசைக் கருவிகளையும் காலத்திற்கு காலம் இலவசமாக விநியோகித்து அத்தோடு நில்லாது சங்கீத வகுப்புகளையும், தியான வகுப்புகளையும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளையும் ஒழுங்கு செய்தது அற நெறிப் பாடசாலைகளை அமைத்து நடாத்தும் பெறுப்பு சமய நிறுவனங்களுக்கும் ஆலய நிர்வாகிகளுக்கும், சார்ந்தது இப்பாடசாலைகள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன.

வாரத்தில் ஒரு நாள் மட்டும் இயங்கும் இப்பாடசாலைகள் மாணவர்களுக்கு இளம் பராயத்திலிருந்தே இறை நம்பிக்கை அறநெறிப் பண்புகள், என்பன வளர்த் கெடுக்கப்படுகின்றன அது மட்டுமின்றி அன்பு, பக்தி, கருணை, கடமையுணர்ச்சி, பெரியோரைமதித்தல், தாய், தந்தையரைப் பேணல் , பிறர் பொருள் விரும்பாமை, பஞ்சமா பாதகங்களை விலக்குதல் , பசித்தோர் முகம் பார்த்தல், நட்பைப் பேனுதல், நன்மை, தீமைகளை ஆராய்ந்து நன்மைகளைச் செய்தல் போன்ற உயரிய பண்புகளை மாணவர்களிடையே வளர்ப்பது அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் தார்மீகப் கடமையாகும்.

இன்றைய மாணவர்களின் போக்கினை அவதானிக்கும் போது சமயம் வேறு வாழ்க்கை வேறு என்ற எண்ணத்துடனே கல்வி கற்கின்றனர் சமயப் பாடத்தை கற்று அப்பாடத்தில் விஷேட சித்தியை பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் மாத்திரமே சமய பாடத்தை கற்கின்றனர். அதனை தமது வாழ்வில் கடைப்படிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புவதில்லை அதற்கு காரணமாக தொலைத் தொடர்பு சாதனங்களை குறிப்பிடலாம் அவற்றில் அவதானிக்கும் விடயங்களையே பினபற்ற விரும்புகின்றனர் இன்றைய மாணவர்களிடையே காணப்படுகின்ற இவ்வாறான பிரச்சினைகளுக்கு இன்றைய சமூகமும் பெறுப் பெருக்க வேண்டும்.

சகமாணவர்களிடையே அன்பாக பழகுதல், தலைமைத்துவ பண்பை ஏற்று நடாத்துதல் சமாதானத்துடன் வாழ்தல், சகிப்புத்தன்மையை கடைப்பிடித்தல், சைவ கலாச்சாரத்தை பின்பற்றுதல், நெற்றியில் திருநீறு அணிதல், போன்ற சைவ நற்பண்புகளை மாணவர்களிடையே வளர்க்கக் கூடிய சிறந்த நிறுவயமாக திகழ்வது அறநெறிப் பாடசாலையாகும். ஒவ்வொரு மாணவனையும் அவ் அறநெறிப் பாடசாலையில் இனைவதற்கு சரியான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவது எமது ஆசிரிய சமூகத்தின் கடமையாகும் ஒவ்வொரு மாணவனும் இந்நாட்டின் சிறந்த பிரஜையாக வாழ்வதுடன் மாணவன் ஒருவன்தான் பெற்ற துணைக்கொண்டு மூளைசாலியாகக் தன்னை உயர்த்திக் கொண்டலும் இறை நம்பிக்கையே அவனைக் காப்பற்றுகின்றது. என்பதை உணர்த்துவது சமயக்கல்வியே உண்மை அறிவையும் தன்னம்பிக்கையையும், ஞானத்தையும், அளிக்கக் கூடியதும் ஆளுமையை வளர்க்க கூடியதுமான அன்பு நெறியை ஒரு மாணவனுக்கு ஊட்டி அவனைச் சான்றோன் ஈக்கக் கூடிய பாரிய தொண்டை அறநெறி பாடசாலைகளுக் கூடாகவே சிறப்புற ஈற்ற முடியும் என்பதில் மருப்பேதும் இல்லை இதுவே உண்மை

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடியோ விளையாட்டும் பிள்ளைகளும்.

ரேகா- சிவப்பிரகாசம்
மமா/வ/எனிக் த.வி, உடப்புஸ்ஸல்லாவ.

மண் பிசைந்து, சட்டிப் பானை செய்து விளையாடிய காலம் போக இப்போதெல்லாம் மணிக் கணக்காய் கைப்பேசியிலும் கணிணியிலும் பிள்ளைகள் விளையாடுகின்றனர்.முன்னரெல்லாம் குழு வாகச் சேர்ந்து துரத்திப் பிடித்து, ஆடித்திரிந்து விளையாடினர். அந்த நிலையில் சற்று மாற்றம் ஏற்பட்டுத்தான் இருக்கிறது. கிராமத்தைப் பொறுத்தவரையில் பிள்ளைகள் ஓடித்திரிந்து விளையாட வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகிறது. நகரத்தைப் பொறுத்தவரையில் இந்த வாய்ப்பகள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. சிறுவர்கள் தொடக்கம் வளர்ந்த பிள்ளைகள் அனைவருமே விளையாட்டில் அதிக ஈடுபாடுடையவர்களாகவே காணப்படுவர்.

சமகாலத்தைப் பொறுத்தவரையில் பிள்ளைகள் மத்தியில் மிகவும் பிரபல்யமாக இருக்கும் விளையாட்டு என்றால் அது வீடியோ விளையாட்டுக்கள் (VIDIO GAMES) தான். நவீன தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக இத்தகைய மாற்றங்கள் வரவேற்கத்தக்கனவாக இருந்த போதிலும் துள்ளித் திரிந்து,ஆடிப்பாடி விளையாடித் திரியும் சந்தோஷமான பொழுதுகளை, வாய்ப்புக்களை பிள்ளைகள் இழக்க நேரிடுகிறது. தனியறையில் குறிப்பிட்ட இயந்திரத்திற்குள் மட்டுமே அடைந்து கிடக்கும் நிலை ஏற்படுகிறது. பிள்ளைகள் சிறந்த சமூகத் திறன்களைக் கொண்டு வளரவேண்டும் வழிநடத்தப்படவேண்டும் என்ற தேவைப்பாடு அண்மைக் காலத்தில் பேசப்படுகிறது.

பிள்ளைகள் ஏனையவர்களை மதித்தல், விட்டுக்கொடுத்தல், வெற்றிதோல்விகளை சமமாக ஏற்றுககொள்ளுதல் போன்ற சமூக திறன்களை வளர்க்கும் ஒரு ஆற்றல் மிக்க செயற்பாடாக விளையாட்டு அமைகிறது. அத்தகைய விளையாட்டு குழுவாக அமைந்தால் சிறப்பாக அமையும். தலைமைத்துவ பண்புகளை வளர்க்க விளையாட்டு ஒரு உந்து சக்தியாக அமைகிறது. குழுக்களாக விளையாட்டில் ஈடுபடும் போது பரந்த அளவில் சிந்திக்கும் வாய்ப்பு அதிகம். தனித்து விளையாடும் போது குறுகிய சிந்தனை வட்டத்திற்குள் தான் சுழல வேண்டியிருக்கும். சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய ஆளுமைப் பண்புகளை வளர்த்துக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்படுகின்றது. வாலிபப் பருவத்தினரும்கூட வீடியோ விளையாட்டிற்கு அடிமைகளாகி உள்ளனர். அதிலும் வலையமைப்பினூடாக தமது தகவல்களைப் பதிந்து நண்பர்களைத் தேடுவது வாடிக்கையாகிவிட்டது. தமது புகைப்படங்களையும் பதிவு செய்து விட்டு லைக் வருமா? கேமென்ட் வருமா என கணினியிலும் கைபேசியிலும் தவம் கிடந்து காத்திருக்கிறார்கள்.பின்னர் காதல் வலையில் விழுந்து இறுதியில் தற்கொலை செய்து கொள்ளுமளவிற்கு பரிதாப நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

பிள்ளைகள் எப்போதும் தாம் வாழ்க்கையில் உயர்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். நேர காலத்தை வீணடிக்காது மேலதிக கற்றல் பயிற்சிகள், கராத்தே, தையல் மற்றும் இயந்திரவியல் போன்ற துறைகளில் ஈடுபட்டால் எதிர்காலத்தில் இது இவர்களுக்கு உதவியாக இருக்கும். இதற்காக முகநூல் வீடியோ விளையாட்டு என்பன அவசியமில்லையெனக் கூறவில்லை. இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானதும் கட்டாயத் தேவையாகவும் உள்ளது. இதனை நாம் எமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதன் நன்மை தீமை பற்றித் தெரிந்திருப்பதுடன் அதனை செம்மையாகக் கையாண்டு நன்மை பயக்கும் விதத்தில் பயன்படுத்த வேண்டும். வெறுமனே இயந்திரத்துடன் பலமணி நேரம் விளையாடிக் கொண்டிருப்பதால் பிள்ளையின் செயற்பாடுகள் முடக்கப்படுகின்றன. இது பிள்ளை சமூகமயமாதலை குறைக்கத் தொடங்கிவிடும். இதனால் எதிர்காலத்தில் பிறருடன் பேசமுடியாமல் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டுவிடும்.

ஆகவே எந்த விளையாட்டாக இருந்தாலும் அளவுக்கு அதிகமாக இல்லாமல் அளவுடன் பொழுது போக்காக மட்டுமே கொண்டு செயற்படுவது நல்லது. சமகாலத்தில் ப்ளுவேல் போன்ற வீடியோ விளையாட்டுக்கள் பல மனித உயிர்களைக் காவு கொண்ட விடயம் யாவரும் அறிந்ததே.வீடியோ விளையாட்டின் மூலம் பிள்ளையின் சிந்தனைக் கிளர்வு ஏற்படுவதால் கணிதம் மற்றும் நுண்ணறிவுத் திறன் விருத்தியடையும். ஆகவே நன்மைகளும் தீமைகளும் குவிந்து கிடக்கின்ற நவீன தொழில்நுட்பத்தின் நன்மைகளை மட்டும் அள்ளிக்கொண்டு எமக்கு சாதகமாக மாற்றி சிறுவர் உலகுக்குக் கொடுப்போம்.

• • • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org